793

[illegible]

[illegible]

[illegible] - 1909

QbwM83
N09
||7681|

# MARTIN LUTHER

THE

GREAT EUROPEAN REFORMER

# மார்டின் லூதரின் சரித்திரம்



[illegible]


THE CHRISTIAN LITERATURE SOCIETY

MADRAS, COLOMBO AND LONDON

1909

N09



லூதர் சன்னியாசி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
23 DEC 1910
MADRAS.

123
3

# மார்ட்டின் லூதரின் சரித்திரம்

## MARTIN LUTHER

**THE GREAT EUROPEAN REFORMER**

TRANSLATED BY

[TH]E REV. J. S. PETER, B.A.

793
IV—1910

CHRISTIAN LITERATURE SOCIETY
LONDON, MADRAS AND COLOMBO.
1909.

# பொருள் அட்டவணை


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | முகவுரை ... ... ... ... ... | 1 |
| 2. | லூதரின் காலத்தில் மார்க்க நிலைமை ... ... | 3 |
| 3. | லூதரின் இளமைப் பருவம் ... ... ... | 8 |
| 4. | எர்வர்த் என்னும் இடத்தில் மாணாக்கராயிருந்தது ... | 11 |
| 5. | லூதர் சன்னியாசியாயிருந்தது ... ... ... | 15 |
| 6. | லூதர் உவிற்றன்பேர்க் நகரத்திற்குச் சென்றது ... | 19 |
| 7. | ரோமாபுரிக்கு யாத்திரைபோனது ... ... | 21 |
| 8. | மார்க்க சீர்திருத்தத்தின் அருணோதயம் ... ... | 24 |
| 9. | பாவமன்னிப்புச் சீட்டுகள் ... ... ... ... | 28 |
| 10. | லூதர் பாவமன்னிப்புச் சீட்டுகள் விற்பது அக்கிரமம் என்று காட்டியது ... ... ... ... | 37 |
| 11. | ரோமாபுரியில் சதி ... ... ... ... | 42 |
| 12. | லூதர் ஆக்ஸ்பர்க் நகரத்துக்குப் போனது ... ... | 47 |
| 13. | சமாதானப் பிரயத்தனங்கள் ... ... ... | 54 |
| 14. | பாப்புவின் முத்திரைப் பத்திரம் ... ... ... | 61 |
| 15. | ஓர்ம்ஸ் நகரத்து ஆலோசனைச் சங்கம் ... ... | 67 |
| 16. | வார்ற்பர்க் கோட்டை ... ... ... ... | 79 |
| 17. | உவிற்றன்பேர்க் நகரத்திற்குத் திரும்பிவந்தது ... | 84 |
| 18. | லூதரின் இல்லற வாழ்க்கை ... ... ... | 90 |
| 19. | ஸ்பயர்ஸ் பட்டணத்து அறிக்கை ... ... ... | 98 |
| 20. | கடைசி நாட்கள் ... ... ... ... ... | 103 |
| 21. | லூதரில் காணப்பட்ட லட்சணங்கள், அவர் கிரியைகள் | 106 |
| 22. | இந்தியாவில் சீர்திருத்தம் அவசியம் ... ... | 113 |
| 23. | இந்தியாவில் சீர்திருத்தம் செய்வதற்கு வழி வகைகள் | 121 |


# LUTHER THE GREAT REFORMER

# மார்ட்டின் லூதரின் சரித்திரம்

## 1. முகவுரை.

இந்தியா பலவகையில் சீர்திருத்தம் அடையவேண்டுமென்பது யாவரும் நன்றாய் அறிந்த சத்தியம். ஜனங்களின் சுகத்துக்கடுத்த ஏதுக்கள் அதிகப்படவும், விஷவியாதிமுதலான நோய்களினால் மாண்டு போகிறவர்களின் தொகை குறையவும், எளிய ஜனங்களின் வருத்தங்கள் நிவிர்த்தியாகவும் ஏற்ற பிரயத்தனங்கள் நடந்தேற வேண்டும். இது தவிர, கலியாணமுதலிய சடங்குகளில் இன்னும் அநேக மாறுதல்களும், பெண்கல்வியில் முன்னிலும் அதிக அபிவிர்த்தியும், சன்மார்க்கவிஷயங்களில் அதிக தேர்ச்சியும் காணப்படவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக மார்க்கவிஷயமாய் அநேக சீர்திருத்தங்கள் நடக்கவேண்டும். இத்தேசத்து ஜனங்கள், உயிரற்ற கல் கட்டைகளையும் புத்திசித்தமற்ற மிருகங்களையும் அசுத்தமும் துன்மார்க்கமும் நிறைந்த தேவர்களையும் வணங்குவதை விட்டு, இவ்வுலகனைத்தையும் சிருஷ்டித்து, மாசில்லாத பரிசுத்தராய், அளவற்ற அன்புடையவராய் விளங்கிநிற்கும் தங்கள் பரமபிதாவாகிய மெய்க்கடவுளை நமஸ்கரிக்கப் பழகவேண்டும்.

இவ்வித மாறுதல்கள் நடந்தேறுவதெப்படி? சாதாரண ஜனங்களெல்லாரும் ஜாதிபேதம் வழக்கம் என்னும் கட்டுப்பாடுகளினால் கட்டப்பட்டிருக்கிறார்கள். தங்கள் அறிவீனப்பெருக்கினால், ஒரு காரியத்திலும் மாறுதல் செய்யாது, தாங்கள் இருந்த நிலைமையிலேயே இருக்கிறார்கள். தங்கள் தேர்ச்சியை விரும்பித் தங்களுக்கு நன்மை செய்கிறவர்களை மிகவும் துன்பப்படுத்தி இவ்விதமாய்த் தங்கள் நன்றிகேட்டைக் காண்பிக்கிறார்கள். உலகசரித்திரத்தை நாம்

கவனித்துப்பார்க்கும்போது பெரிய சீர்திருத்தங்கள் கொஞ்சப்பேராலும் சில சமயங்களில் ஒரே ஒரு மனுஷனாலும் ஆரம்பிக்கப்பட்டவையென்று காண்கிறோம். இப்படிச் சீர்திருத்தம் செய்தவர்கள், தங்கள் காலங்களிலிருந்த மற்றவர்களைப்பார்க்கிலும் ஞானிகளாயிருந்ததனால் மிகுந்த துன்பத்தை அனுபவித்தார்கள். ஆனால் தாங் கொண்ட பிடியைவிடாமல் தங்கள் சாதனையைச் செலுத்தினதினாலே படிப்படியாய் அவர்கள் கொள்கைகள் பரவின. அவர்கள் எடுத்துக்காட்டிய நியாயங்களை உணர்ந்த சிலர் மூலமாய் மற்றவர்களுக்குள்ளும் அவர்கள் கொள்கைகள் கொஞ்சங்கொஞ்சமாய்ப் பரவி கடைசியில் எல்லாராலும் முற்றிலும் ஒப்புக்கொள்ளப்பட்டன. இப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டபின், முன்னே அவதிக்கப்பட்ட இப் பெரியோரை யாவரும் பரம பரோபகாரிகளென்று கனஞ்செய்தார்கள்.

மெய்யான சீர்திருத்தஞ் செய்பவன் மிகுந்த கனத்திற்குப் பாத்திரன். ஆனால் அநேகர் சீர்திருத்தஞ் செய்கிறோமென்று பேருக்கு மாத்திரம் சொல்லுகிறார்கள். சீர்திருத்தஞ் செய்கிறவர்களிற் காணப்படவேண்டிய சிறந்த லட்சணம் வாக்குக்கேற்ற நடத்தை. ஓர் பொய்யன் எல்லாரும் சத்தியத்தையே பேசவேண்டுமென்று போதிக்கவும், ஓர் திருடன் சகலரும் யோக்கியமாய் நடந்துகொள்ள வேண்டுமென்று பிரசங்கிக்கவும் தொடங்கினால், யோக்கியர் அவர்களைப் பின்செல்வார்களா? அப்படியே பிள்ளைகளைச் சிறுவயதிலே விவாகம் செய்து கொடுக்கக்கூடாதென்று பிறருக்குப் போதித்து, தன் பிள்ளையைச் சிறுவயதில் விவாகம் செய்துகொடுக்கிறவனையும் ஒருவரும் நம்பமாட்டார்கள்.

மெய்யாய்ச் சீர்திருத்தஞ் செய்ய நாடுகிறவர்களின் தொகை அதிகப்படவேண்டுமானால் முற்காலத்தில் மெய்யாய்ச் சீர்திருத்தஞ் செய்தவர்களின் ஜீவியசரித்திரங்களை யாவரும் வாசிக்கவேண்டும். உலக மக்கள் சன்மார்க்கரைவிடத் துன்மார்க்கரைநாடி அவர்கள் பின் செல்ல விரும்பினாலும், சன்மார்க்கனின் மேன்மாதிரி பலரையும் ஆட்கொள்ளுமென்று நாமெல்லாரும் அறிவோம். மார்ட்டின் லூதர் உலகத்தில் மெய்யான சீர்திருத்தஞ் செய்த மேன்மக்களில் சிறந்தவர். ஐரோப்பாதேசத்திலே மார்க்கவிஷயத்தில் அவரைவிட அநேக மாறுதல்கள் செய்தவர் ஒருவருமில்லை. மற்றெல்லா மனிதரைப் போலவும் அவரிடத்திலும் குறைவுகளிருந்தாலும் அவர் சிறந்த குணாதிசய முடையவரா யிருந்தார்.

லூதர் தற்காலத்திலிருக்கும் இந்துக்களுக்கு ஓர் சிறந்த முன்மாதிரியாயிருக்கிறார். அவர் காலத்தில் அவருக்கிருந்த தடைகள் இந்தியாவில் தற்காலத்தில் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறவர்களுக்கிருக்



கும் தடைகளை ஒத்திருந்தது. அவர் இந்துக்களில் மிகவும் அபூர்வமாய்க் காணப்படும் ஓர் சிறந்த லட்சணத்தை உடையவராயிருந்தார். தான் சரியென்று அறிந்ததை எவ்வளவு தடைகளிருந்தாலும் செய்யாமல்விடார். இவ்விடத்தில் நாம் எழுதும் அவருடைய சரித்திரத்தை வாசிக்கும் எம் நண்பர்கள் அவரிடத்திற் காணப்பட்ட சிறந்த லட்சணங்களைப் பின்பற்றி அவரைப்போலத் தைரிய புருஷராய்க் காணப்படுவார்களென்று நம்புகிறோம்.

## 2. லூதரின் காலத்தில் மார்க்க நிலைமை.

இந்துமார்க்கம், புராணங்கள் எழுதப்பட்ட காலத்திலிருந்ததைவிட வேதங்கள் எழுதப்பட்டகாலத்தில் அதிக சிறந்ததாயிருந்ததென்று எல்லோருக்குந் தெரியும். மெல்ல இந்துமார்க்கம் கெட்டுப்போயிற்று. அப்படியே உலக ரட்சகராகிய எம்பெருமான் இயேசுநாதர் அருளிச்செய்த சுத்த சுவிசேஷமார்க்கம் கொஞ்சகாலத்திற்குப் பின் அஞ்ஞானச் சடங்குகளினாலும், துன்மார்க்கரின் கள்ளப்போதகத்தினாலும் கறைப்பட்டுப்போயிற்று. பிராமணர் தாங்கள் பெரியவர்களென்று கள்ளத்தனமாய்ச் சாதித்ததுபோலக் கிறிஸ்துமார்க்க குருக்களும், தாங்கள் மற்றவர்களிலும் பெரியவர்களென்று போதித்து வந்தார்கள். மற்றவர்களுக்கு முன் மாதிரிகளாயிருக்கிறதை விட்டு விட்டு அவர்களை ஆளும் எஜமான்களாயிருக்க விரும்பினார்கள். லூதர் மார்க்க சீர்திருத்தம் செய்யத் தொடங்குமுன் ஐரோப்பாக் கண்டத்தில் கிறிஸ்துமார்க்கமிருந்த நிலைமையைச் சுருக்கமாய் அடியில் எடுத்துக்காட்டுவோம்.

மனுஷன் தன்னுடைய பரிசுத்த நிலைமையிலிருந்து விழுந்த மாத்திரத்திலேயே கடவுள் அவனுக்கு ஓர் ரட்சகரைக் கட்டளையிடுவோமென்று அருமையான வாக்களித்தார். அவ்வுலகரட்சகர் சுமார் 1900-வருஷங்களுக்குமுன்னே அவதாரம் பண்ணும்வரையில் கடவுள் தாம் பண்ணிய வாக்குத்தத்தத்தை மேன்மேலும் உறுதிப்படுத்தினார். சத்திய வேதத்தின் முதற்பாகமாகிய பழைய ஏற்பாட்டிலே இவ்வாக்குத்தத்தங்கள் அடங்கியிருக்கின்றன. புதிய ஏற்பாடு என்று சொல்லப்படும் இரண்டாம் பாகத்தில், நாலு சுவிசேஷங்களில் எம்பெருமான் இயேசு கிறிஸ்துநாதரின் ஜீவியமும் போதகமும், அப்போஸ்தலர் நடபடிகளில் கிறிஸ்து சபை பரம்பிய சரித்திரமும், நிருபங்களில் கிறிஸ்து மார்க்க போதனைகளும் கடமைகளும் அடங்கியிருக்கின்றன.

கிறிஸ்துவுக்குப்பின் மூன்று நூற்றாண்டுகளாய் கிறிஸ்தவர்களுக்கு நேரிட்ட துன்பம் மிகுதி. லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் விக்கிரகங்களை வணங்கமாட்டோம் என்று சாதித்ததினால் மரண ஆக்கினைக்குட்பட்டார்கள். கிறிஸ்தவர்களுக்கு இவ்வித துன்பங்களிருந்ததினால், துன்மார்க்கர் இம்மார்க்கத்திற் சேர ஆசைப்படவில்லை. கிறிஸ்துமார்க்கம் சுத்த மார்க்கமாயிருந்துவந்தது. கி. பி. 313-ம் வருஷத்தில் அரசாண்ட கொன்ஸ்தாந்தீனு என்னும் ரோம சக்கரவர்த்தி கிறிஸ்தவர்களுக்கிருந்த துன்பங்களை நீக்கினான். சொற்ப காலத்திற்குப் பின் தானும் கிறிஸ்தவனானான்.

கிறிஸ்தவ போதகர்களில் சிறந்தவரான பவுல் அப்போஸ்தலன் கூடாரம்செய்து விற்று அதினாலுண்டான வருமானத்தினால் ஜீவனஞ் செய்துவந்தார். ரோம சக்கரவர்த்திகள் கிறிஸ்தவர்களானபோது கிறிஸ்து சபையின் கண்காணிமாரைப் பிரபுக்களைப்போல் நடத்தி அவர்களுக்குத் திரண்டசெல்வம் அளித்தார்கள். சிரேஷ்ட கண்காணிமார் மாளிகைகளில் வசித்து எல்லா விஷயங்களிலும் அரசருக்கு ஒத்த ஸ்திதிவந்தராயிருந்தார்கள்.

பிராமணர் சமஸ்கிருதத்தில் மந்திரம் முதலியவைகளைச் சொல்லி, வேதங்களை நாட்டில் வழங்கும் பாஷையில் மொழிபெயர்க்காமல், ஜனங்களை அஞ்ஞானத்தில் வைத்திருந்ததுபோல, கிறிஸ்தவ குருக்களும் லத்தீனில் சகல பூசைகளையும் நடப்பித்து, சத்திய வேதாகமத்தை மொழிபெயர்க்காமல் ஜனங்களுக்கு மறைத்து வந்தார்கள்.

இதுவுமன்றி, இக்குருமார் தாங்கள் அற்புத வல்லமையுள்ளவர்களென்றும், ஜனங்களின் பாவங்களை மன்னிக்க வரம்பெற்றவர்களென்றும் விருதுப் பிதற்றிவந்தார்கள். எவனாவது கடவுளுக்கு ஏற்காத ஓர் பாவத்தைச் செய்தால் அவன் இந்தக் குருமாரிலொருவனிடத்திற் போய்ச் சொல்வான். அந்தக் குரு இவனுடைய பாவங்களை மன்னித்துவிடுமுன் அவனைச் சில காரியங்களைச் செய்யச் சொல்வார். பாவவிமோசனமுண்டாகச் சிலர் ஸ்தல யாத்திரை போகவேண்டியதாயிருக்கும்; சிலர் முழங்காலிலேயே மலையேற வேண்டியதாயிருக்கும்; சிலர் ஒரு லத்தீன் மந்திரத்தை 50-தரம் உச்சரிக்கவேண்டியதாயிருக்கும். வேறு சிலர் கன்னிமரியாளின் விக்கிரகத்திற்கு முன் 20-மெழுகுவர்த்தி ஏற்றவேண்டியதாயிருக்கும். இப்படித் தபசுசெய்பவன் ஐசுவரியவானாயிருந்தால் ஒரு எளியவனுக்குக் கூலிகொடுத்துத் தனக்குப் பதிலாய் மலை ஏறவைக்கலாம். அல்லது குருக்களுக்குப் பணங்கொடுத்தால் அவர்கள் அவனுக்குப் பதிலாய் லத்தீன்பாஷையில் ஜெபம் சொல்லுவார்கள்.



பிராமணர் சரிதை என்றேற்படுத்தி ஜனங்களிடமிருக்கும் பணங்களை ஏமாற்றிப் பிடுங்கித் தின்னுவதுபோல, கிறிஸ்தவ குருக்கள் உத்தரிக்கும் ஸ்தலமென்றோர் ஸ்தலமிருக்கிறதென்றும், மனுஷர் இறந்தபின் அவ்விடத்திற்குச்சென்று தாங்கள் இவ்வுலகத்தில் செய்த பாவங்களுக்காகத் * தண்டனை அடைகிறார்களென்றும், அப்படித் தண்டனை அடையும் ஆத்துமாக்களுக்காக யாராவது பணங்கொடுத்தால் அந்த ஆத்துமாக்கள் உத்தரிக்கும் ஸ்தலத்தைவிட்டு நல்ல பதவி அடையுமென்றும் போதித்துவந்தார்கள். இவ்வித போதனையைக் கேட்டுப் பயந்த ஜனங்கள், சாகுந்தருணத்தில், தங்கள் ஆஸ்தியில் ஓர் பாகத்தைத் தங்கள் ஆத்துமாக்கள் உத்தரிக்கும் ஸ்தலத்திலிருந்து சீக்கிரம் விடுபடும்படி கொடுப்பதுண்டு. அநேக பிள்ளைகள் தங்கள் அருமைப் பெற்றோரின் ஆத்துமாக்களை உத்தரிக்கும் ஸ்தலத்தினின்றும் விடுவிக்கும்படி தங்கள் வயிற்றை ஒறுத்துப் பணம் சேர்த்து இக்கள்ளக் குருமாரிடம் கொடுப்பார்கள்.

பூர்வகாலங்களில் ரோமாபுரி உலகத்திலிருந்த பட்டணங்களில் எல்லாவற்றிலும் சிறந்ததாயிருந்தது. ரோமாபுரியிலிருந்த கண்காணியார் தான் கிறிஸ்துவின் சபைக்குத் தலைவரென்றும், உலகத்தில் தான் கிறிஸ்துவின் ஸ்தானத்திலிருப்பவரென்றும், கிறிஸ்துவின் வல்லமை தன்னில் உறைந்திருக்கிறதென்றும் சொல்லத்தொடங்கினார். தகப்பன் என்றர்த்தங்கொள்ளும் பாப்பு என்னும் பட்டப்பெயரைத் தரித்துக்கொண்டார். ஹில்டிபிராண்ட் என்னும் பாப்பு அரசர்களிடமிருந்து அவர்கள் தேசங்களைப் பிடுங்குவதற்குத் தமக்கு அதிகாரமிருக்கிறதென்று வீம்பு பாராட்டினார். இன்னொரு பாப்பு ஸ்பானியா தேசத்தார் மேற்கிலும், போர்த்துகல் தேசத்தார் கிழக்கிலும் தாங்கள் கண்டுபிடிக்கும் தேசங்களையெல்லாம் ஆண்டு கொள்ளலாம் என்று உத்தரவு கொடுத்தார். இற்றைவரைக்கும் ரோமானித்தார் பாப்புவின் பாதத்தை முத்திமிட்டு வருகிறார்கள்.

குருமார் முற்றிலும் பாப்புவின் அதிகாரத்துக் குட்பட்டிருக்கும்படி அவர்கள் விவாகம் செய்யக்கூடாதென்று கட்டுப்பாடிருந்தது. ஆனால் சத்தியவேதத்தில் இப்படிப்பட்ட கட்டு ஒன்றுமில்லை. அநேகர் சன்னியாசிகளாய்த் தனித்து வசித்துவந்தார்கள். சிலர் மடங்களில் கூட்டமாய் வசித்துவந்தார்கள். இப்படி அவர்கள் வசித்து வந்தது அதிக துன்மார்க்கத்துக்குக் காரணமாயிருந்தது. அநேக குருமார் வைப்பாட்டிகளை வைத்துக்கொண் டிருந்தார்கள். இன்னும் சிலர் வேறுவகையாய் விபசாரிகளாயிருந்தார்கள். சில சன்னியாசிமடங்கள் அக்கிரமம் நிறைந்த நரகக்குழிகளாக விருந்தன.

பின்வரும் சரித்திரத்தில் அக்காலத்திலிருந்த சீர்கேடுகள் தெளிவாய் விளங்கும்.

## 3. லூதரின் இளமைப் பருவம்.

மார்ட்டின் லூதர் ஜர்மானியா தேசத்திலிருக்கும் ஐஸ்லபன் என்னும் பட்டணத்தில் 1843-ம் வருஷம் நவம்பர்மாதம் 10-ம் தேதி பிறந்தார். அவர் பிறந்தவுடன் அவர் தகப்பனார் அவரைக் கிடத்தியிருக்கும் கட்டிலினண்டையில் முழங்காற்படியிட்டுத் தன்னுடைய குமாரன் பரிசுத்தமும் நன்னடத்தையு முடையவனாய் விளங்கிச் சத்தியத்தின் அறிவைப் பரம்பச்செய்யும் கருவியாயிருக்கவேண்டுமென்று ஜெபித்தாராம். மார்ட்டின் என்னும் மகாத்துமாவின் திருநாளுக்கு



ஹான்ஸ் லூதர்.

முந்தினநாள் சாயங்காலத்தில் அவர் பிறந்ததினால் அவருக்கு மார்ட்டின் என்று பெயர் கொடுத்தார்கள். அவர் தகப்பனாருக்கு ஹான்ஸ் என்று பெயர். லூதரின் மூதாக்கள் சமுசாரிகளாயிருந்தும் காலபேதத்தினால் ஹான்ஸ் என்பவர் வறுமையடைந்து விறகுவெட்டி ஜீவ



னம் செய்துவந்தார். "என் தாயார் பிள்ளைகளாகிய எங்களை வளர்க்கிறதற்குப் பணமில்லாததினால் விறகு கட்டுகளைக் காட்டிலிருந்து சுமந்துவந்து விற்று அவ்விதமாய் எங்களை வளர்ப்பார்கள்" என்று லூதர் எழுதியிருக்கிறார். வியாபாரிகள் இரும்புச்சாமான்கள் செய்யும் யந்திரசாலைகளில் வழங்கும் கரிக்காக இந்த விறகுகட்டைகளை வாங்குவார்கள்.



லூதருடைய தாயார்.

ஹான்ஸ் லூதர் மிகவும் விவேகி; தேர்ந்த புத்திசாலி. அவர் சற்றே கண்டிப்பும் கடினமுமுடையவராயிருந்தாலும், தான் வளர்க்கப்பட்ட மார்க்கத்தில் பக்தியும் நீதியுமுள்ளவராயிருந்தார். அவருடைய பெண்சாதியாகிய மார்கரற்றம்மாள் பெண்களில் காணப்படவேண்டிய சிறந்த லட்சணங்களெல்லாம் ஓர் உறைவிடமாயிருந்தாள். தன் குடும்பத்தை ஒழுங்காய் நடத்துவதிலும், ஜெபதவ முயற்சியிலும் மிகவும் பேர்பெற்றவள்.

லூதர் சிறுவயதாயிருந்தபோது அதிக பதஷ்ட குணமுடையவராயிருந்தார். இதினால் அவர் பலமுறை அநேக குற்றங்களுக்குட்படுவதுண்டு. சில பெற்றோர் தங்கள் பிள்ளைகள் என்ன தப்பிதம் செய்தாலும் அவர்களைத் தண்டியாமல் விட்டுவிடுவது வழக்கம். லூதருடைய தாயார் அவர் நினைத்தபடி செய்ய அவரை விட்டுவிடாமல் அவர் தப்பிதம் செய்யும்போதெல்லாம் நன்றாய்த் தண்டித்துவந்தார்கள். ஒருமுறை அவர் தாயார் அவரை இரத்தம் வருமட்டும் அடித்தார்களாம்.

லூதர் சிறுபிள்ளையாயிருந்தபோதே அவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார்கள். அவர் தகப்பனார் அடிக்கடி அவரைத் தன் தோளில் தூக்கிக்கொண்டுபோவார். அக்காலத்து உபாத்திமார் பிள்ளைகளை மிகவும் குரூரமாய் நடத்திவருவது வழக்கம். ஒருநாட் காலையில் மார்ட்டின் லூதர் பள்ளிக்கூடத்தில் 15-தரம் அடிபட்டாராம்.

ஹான்ஸ் லூதர் சுறுசுறுப்பாய் வேலை செய்து பணஞ்சேர்த்து, இரும்பு உருக்கும் இரண்டு சிறு குளைகளை ஏற்படுத்தினார். அதன் பின் அவர் காரியங்கள் க்ஷேமமாயிருந்தன. ஐஸ்லபன் நகரத்தை விட்டு மான்ஸ்பீல்ட் நகரத்தில் வந்து குடியிருந்தார். அவர் அந்நகரத்து அதிகார சபையில் ஓர் அவயவமாயிருந்தார். அவர் புஸ்தகங்களை வாசிப்பதிலும் கற்றோருடன் சவகாசஞ்செய்வதிலும் வெகு பிரீதியுடையவர். அவ்விடத்திலுள்ள குருமார் உபாத்திமார் முதலியவர்களை அவர் அடிக்கடி தம்முடைய வீட்டுக்கு வரவழைத்து அவர்களுக்கு விருந்து செய்வதுண்டு. அவர்கள் அவருடன் பேசிக்கொண்டிருக்கும்போது மார்ட்டின் லூதரும் கூடஇருப்பார். இவ்விதமாய் மார்ட்டின் லூதருக்கு நன்றாய்ப் படித்து உபாத்தியாயராக வேண்டுமென்னும் ஆசை உண்டாயிற்று.

மார்ட்டின் 14-வயதாயிருக்கும்போது மாக்டிபர்க் என்னும் பட்டணத்திலுள்ள ஒரு உயர்தரப்பாடசாலைக்கு அவரை அனுப்புவித்தார்கள். வீட்டுக்குத் தூரமாயும் சிநேகிதர் ஒருவருமில்லாமலுமிருந்த அந்த இடத்திலே, அவர் உபாத்திமாருக்குப் பயந்து நடுங்குவார். அவருடைய தகப்பனார் தமக்கு இன்னும் அநேக பிள்ளைகளிருந்ததினால் அவருடைய படிப்பு சாப்பாட்டு விஷயங்களுக்குப் போதுமான பணம் கொடுத்து உதவிசெய்யக்கூடாதவராயிருந்தார். ஜர்மானியா தேசத்தில் எளிய மாணாக்கர் பிச்சை எடுத்துச் சாப்பிடுகிறதுண்டு. மார்ட்டின் இனிய குரலோசையுடையவரும் அநேக பாட்டுக்களைக் கற்றவருமாயிருந்தால் அடிக்கடி வீட்டுக்கு வீடு சென்று பாடிப் பிச்சை கேட்பார். அவர் தாம் அக்காலத்திலிருந்த நிலைமையைப்பற்றி அடியிற் கண்டவாறு எழுதுகிறார்:—





லூதர் கீதம்பாடுதல்.

“நாங்கள் கிறிஸ்து பிறந்த பண்டிகைகாலத்தில் ஒரு நாள் மாக்டிபர்கு என்னும் பட்டணத்திற்கருகான கிராமங்களில், பெத்லெஹேமில் பிறந்த யேசுபாலனைப் புகழும் கீதங்களை வீட்டுக்குவீடு பாடிக்கொண்டுபோனோம். அந்தக் கிராமத்தின் ஓர் மூலையில் மற்ற வீடுகளிலிருந்து சற்றே தூரத்தில் கட்டப்பட்டிருக்கும் ஓர் சமுசாரி வீட்டில் நின்று பாடினோம். அந்தச் சமுசாரி கிறிஸ்து பிறந்த பண்டிகைக்குரிய பாடல்களை நாங்கள் பாடினதைக் கேட்டவுடன் கொஞ்சம் போஜனத்தைக் கையில் எடுத்து வெளியேவந்து “அந்தப் பையன்கள் எங்கே?” என்று கூப்பிட்டான். அவனுக்கு முரட்டுச்சத்தமிருந்ததால் நாங்கள் பயந்து ஒரே ஓட்டமாய் ஓடினோம். அவன் எங்களுக்குச் சாப்பாடு கொண்டுவந்து கூப்பிட்டா

னும் அவன் சத்தத்திற்கு பயந்து நாங்கள் ஓடிப்போனோம். எங்கள் உபாத்தியாயர் எங்களைக் குரூரமாய் நடத்திப் பயமுறுத்தி அடிமைத் தனத்துக்குட்படுத்தி யிருந்ததினால் இந்த சமூசாரியின் நல்லெண்ணத்தையும்பற்றிச் சந்தேகங்கொண்டோம். கடைசியில் இந்த நல்ல மனிதன் பலதரம் எங்களைக் கூவி அழைத்ததையும், அவன் கைகளிலிருந்த போஜனத்தையும் கண்டு பயந்தெளிந்து அவனிடம் ஓடி வந்து அவன் கொடுத்த போஜனத்தைச் சந்தோஷத்துடன் பெற்று நன்றியறிந்த வுள்ளவர்களா யிருந்தோம்.''

அநேக வருஷங்களுக்குப்பின், லூதர் ஜர்மானியா தேசத்திலுள்ள ஐசுவரியவான்களைப் பார்த்து "உங்கள் வாசல்களுக்கு முன்னின்று கடவுளுக்குப் பிச்சை என்று கேட்டுத் தங்கள் வயிறு வளர்க்கும் எளிய மாணாக்கரை அலட்சியம் செய்யாதிருங்கள். நானும் அப்படிப் பிச்சை கேட்டிருக்கிறேன்" என்றார்.

லூதருடைய பெற்றோர் அவர் மாக்டிபர்கு என்னும்பட்டணத்தில் அனுபவித்த வருத்தங்களைப்பார்த்து தங்கள் இனத்தவரிற் சிலரிருந்த ஐஸெனாக் என்னும் பட்டணத்திலிருந்த ஓர் பேர்போன கல்விச்சாலைக்கு அவரை அனுப்பினார்கள். அங்கேயும் அவர் வருத்தத்தைச் சகித்தார். அவருடைய இனத்தார் தங்கள் வறுமையினாலேயோ, வேறு குணத்தினாலேயோ அவருக்கு உதவிசெய்யவில்லை. அவர் மாக்டிபர்கு பட்டணத்தின் தெருவழியேபோய்ப் பாடி வீட்டுக்கு வீடாய்ப் பிச்சை வாங்கினதுபோல இங்கேயும் செய்ய வேண்டியதா யிருந்தது.

ஒருநாள் மூன்று வீடுகளில் பிச்சை கிடையாமல் பசியினால் வருந்தி தன் இருப்பிடத்திற்குத் துக்கமுகத்தோடு திரும்பி வரும்வழியில், ஒரு வீட்டின்முன் நின்று தன் படிப்புகளை விட்டுவிட்டு மான்ஸ்பீல் நகரத்திலிருக்கும் சுரங்கங்களில் தன் தகப்பனோடு போய் வேலை செய்யலாமோவென்று யோசித்துக்கொண்டு நின்றார். அவர் அப்படி நிற்கும்போது அந்த வீட்டுக்கார அம்மாள் கதவைத்திறந்து வெளியே வந்தாள். அந்த அம்மாள் பெயர் அர்சலா காட்டா. அவள் புருஷன் பெயர் கான்ராட் காட்டா. அவள் மார்ட்டின் லூதரைக் கோவிலில் அடிக்கடி பார்த்தும், அவர் பக்தி விநயத்தைக்குறித்தும் அவருடைய இனிமையான குரலோசையைக் குறித்தும் கேள்விப்பட்டு மிருந்தாள். அத்தருணத்தில் அவர் நின்ற நிலைமையைப்பார்த்து அந்த அம்மாள் மனதுருகி அவரைக் கிட்ட வரச்சொல்லி அவர் சரித்திரத்தைக்கேட்டு, வேறே வீடுகளில் அவருக்குப் போஜனம் கிடையாததைக் கேள்வியுற்று, அவருக்கு உண்டியளித்து அவருடைய குறைகளையெல்லாம் நீக்கினாள். அதன் பின் லூதரை தன் புருஷன் வீட்டிலிருக்கும்போது வரும்படி



சொன்னாள். அந்த அம்மாள் புருஷனாகிய கான்ராட் என்பவர் லூதர்மேல் மிகவும் பிரியமுற்று அவரைத் தன் வீட்டிலேயே இருக்கும்படி கேட்டுக்கொண்டார். லூதர் அந்த வீட்டில் 3-வருஷக் காலமாய் இருந்தார்.

இப்போது லூதர் கவலையற்றிருந்தார். அவர் மனதில் சந்தோஷமுண்டாயிற்று; ஜெபத்தில் மிகவும் ஊக்கமுள்ளவரானார். இது தவிர அவருக்குப் படிப்பின்மேல் அதிக ஆவலுண்டாகி, கல்வியில் அதிக தேர்ச்சியடைந்தார். அவர் உதாரமும் அன்பும் நிறைந்தவராயிருந்ததினால் அவருடைய தோழர் அவரை நேசித்தும், அவர் உபாத்தியாயர் அவரை மதித்தும்வந்தார்கள். அவர் பூங்குழல் ஊதுவதிலும் வீணை வாசிப்பதிலும் தேர்ச்சியடைந்து தனக்குத் தாயைப் போலிருந்த அர்சுலா அம்மாளுக்குச் சந்தோஷமுண்டாக இனிமையாய்ப் பாடிவருவார். லூதர் வயதுசென்றகாலத்திலும் அவருக்குப் பாட்டுகளின்பேரில் அதிக பிரீதி இருந்தது. ஜர்மானிய பாஷையிலிருக்கும் மிகவும் இனிமையான சில கீதங்கள் இவர் உண்டாக்கி ராகம் சமர்ப்பித்தவைகளே. லூதர் அர்சுலா அம்மாள் தனக்கு செய்த உபகாரத்தை ஒருநாளும் மறக்கவில்லை. வெகு காலத்திற்குப் பின் அவர், "ஒரு பக்தியுள்ள பெண்பிள்ளையின் இருதயத்தைவிட இனிமையானதொன்றும் உலகத்திலில்லை" என்றெழுதி யிருக்கிறார்.

## 4. எர்வர்ற் என்னும் இடத்தில் மாணாக்கரா யிருந்தது.

லூதருக்கு 18-வயதாயிருந்தபோது, அவர் தகப்பனார் அவரை எர்வர்ற் பட்டணத்திலிருக்கும் சர்வகலாசாலைக்கு அனுப்பினார். ஹான்ஸ் லூதர் என்பவர் தன்னாலானமட்டும் பிரயாசப்பட்டு தன் குமாரன் சர்வகலாசாலையில் படிப்பதற்கு வேண்டிய பண உதவி தேர்ச்சியடைந்ததை சர்வகலாசாலையிலுள்ளோரெல்லாரும் பார்த்து அவரை வியந்தார்கள். இவ்வளவு சுறுசுறுப்பாய்ப் படிக்குங் காலத்திலும் அவர் மார்க்கத்துக்கடுத்த கடமைகளை மறந்துவிடவில்லை. ஒவ்வொருநாளும் காலையில் எழுந்து ஊக்கத்தோடு தனிஜெபஞ் செய்வார். படிக்கிறதற்குப் புஸ்தகங்களை எடுக்குமுன் காலையில் கோவிலுக்குப் போய்வருவார். "படிப்பின் முக்கியபாகம் நன்றாய் ஜெபம் பண்ணுவதுதான்" என்று அடிக்கடி சொல்வார்.

லூதர் எர்வர்ற் சர்வகலாசாலையில் இரண்டுவருஷமிருந்தபின், 1503-ம் வருஷத்தில் ஓர்நாள் அவர் சர்வகலாசாலைப் புஸ்தகசாலைக்குட்சென்று அங்கிருந்த புஸ்தகங்களைத் திருப்பிப் பார்த்துக்கொண்டி

ருந்தார். அங்கே அவர் முன் ஒருக்காலும் கண்டிராத ஒரு புஸ்தகத்தைக் கண்டார். அந்தப் புஸ்தகம் சத்தியவேத புஸ்தகம். லூதருக்கு அப்படி ஒரு புஸ்தகம் இருக்கிறதென்று அதற்குமுன் தெரியாது. ஜெபப் புஸ்தகத்திலிருந்து கோவிலில் வாசிக்கப்படும் பாகங்களில் தேவவசனமெல்லாம் அடங்கியிருக்கிறதென்று எண்ணியிருந்தார். அவர் முதலில் அன்னாளையும் சாமுவேலையும்பற்றி எழுதியிருக்கும் சரித்திரத்தை வாசித்தார். அது அவருக்கு அதிக எழுப்புதலை உண்டாக்கிற்று. "ஆ என் தேவன் இப்படிப்பட்ட ஒரு புஸ்தகத்தை எனக்குக் கொடுக்கமாட்டாரா" என்று விரும்பினார். ஒவ்வொருநாளும் அவர் அந்த இடத்திற்கு வந்து கடவுள் அவருக்கு ஆச்சரியமானவிதமாய் காட்டிக்கொடுத்த இந்த பரமஞான பொக்கிஷக் களஞ்சியத்தை வாசிக்கத் தலைப்பட்டார். இதுதான் மார்க்கச் சீர்திருத்தத்தின் வித்தாயிருந்தது. அவர் உபாத்தியாயர் லூதர் இப்படிச் சத்தியவேத புஸ்தகத்தைக் கருத்தாய் வாசித்து வருவதைப் பார்த்து: "இந்தச் சத்தியவேத புஸ்தகத்தில் என்ன இருக்கிறது? இதைவிட வேதசாஸ்திரிகளுடைய நூல்களை வாசிக்கலாமே; அவர்கள் சத்தியமென்னும் தேனை உறிஞ்சிக் குடித்திருக்கிறார்களே; சபையிலுண்டாகும் கலகங்களுக்கெல்லாம் சத்தியவேதமே காரணம்" என்று சொன்னார்.

லூதர் சர்வகலாசாலையின் முதற் பரீட்சைக்குப் படிக்கும்போது அதிக வியாதிப்பட்டு மிகவும் மோசமான நிலைமையிலிருந்தார். அவர் மரித்துப்போவாரென்று எல்லோரும் பயந்திருந்தார்கள். அவருடைய வியாதிப்படுக்கையில் அவரைப் பார்க்கவந்த அநேக சிநேகிதர்களில் ஒருவராகிய ஓர் வயதுசென்ற குருவை அவர் பார்த்து "இவ்வுலகத்தைவிட்டு நான் சீக்கிரம் அழைத்துக் கொள்ளப்படுவேன்" என்றார். அதற்கு அந்த வயோதிப குரு "என் வாலிப சிநேகிதனே! தைரியத்தைக் கைவிடாதே, நீ இந்தத்தடவை சாகமாட்டாய். அநேகரை ஆறுதற்படுத்த கடவுள் உன்னைத் தமக்குக் கருவியாக ஏற்றுக்கொள்ளுவார்; கடவுள் யாரை நேசிக்கிறாரோ அவர்களுக்கு அவர் அநேக துன்பங்களைக் கொடுக்கிறார். அவற்றைப் பொறுமையாய்ச் சகிக்கிறவர்கள் அதிக ஞானத்தை அடைவார்கள்" என்று அன்புடன் சொன்னார். லூதர் மனத் தைரியமடைந்து சீக்கிரத்திற் சுகப்பட்டார்.

இன்னொருமுறை மரணத்திற்கு அரிதாய்த் தப்பிப்பிழைத்தார். அவர் தம்முடைய வீட்டுக்குப்போகப் புறப்பட எத்தனித்துத் தம்முடைய இடுப்பில் பட்டயத்தைக் கட்டும்போது பட்டயம் தவறி காலில்விழுந்து ஒரு பெரிய காயம் உண்டாயிற்று ரத்தம் நீரூற்றாய்ப் பெருகவே, அவருடைய தோழரிலொருவர் அவருக்கு உதவிசெய்ய



ஓடிவந்தார். லூதர் கீழே படுத்துக்கொண்டு தன் விரலை வெட்டுக் காயத்தில் வைத்து ஓட்டத்தை நிறுத்தப் பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தார். ஆனாலும் ரத்தம் ஓடிக்கொண்டேயிருந்தது. லூதர் இறந்துபோவோமென்று பயந்து, "மரியம்மாளே; துணைசெய்யும்" என்று மரியம்மாளைப் பார்த்து ஜெபித்தார். அவர் கடவுளை நோக்கி ஜெபிக்காமல் மரியம்மாளை நோக்கி ஜெபித்தாலும் கடவுள் அவர் அறியாமையை மன்னித்து அவர் சத்தியத்தை அறிந்து மற்றவர்களுக்கு அதைப் போதிக்கும்படி அவருக்கு உயிரைக் கட்டளையிட்டார். சீக்கிரத்தில் ஒரு வைத்தியன் வந்து அவருடைய காயத்தைக் கட்டினான். ஆனால் அன்று ராத்திரி திரும்பவும் அந்தக் கட்டு அவிழ்ந்து ரத்தம் பீறிட்டதினால் மூர்ச்சையடைந்து கீழே விழுந்தார். ஆனால் கடவுளுடைய கிருபையால் திரும்பவும் சுகமடைந்து தன் பாடங்களை உற்சாகமாய்ப் படித்துவந்தார்.

1505-ம் வருஷத்தில் லூதர், மாஸ்டர் அப் ஆர்ட்ஸ் (Master of Arts) என்னும் உயர்ந்த பரீட்சையில் தேர்ந்தார். அந்தக்காலத்து வழக்கத்தின்படி அச்சமயத்தில் மிகவும் ஆடம்பரத்தோடு அவருக்கு அதிகமரியாதை நடந்தது. மாணாக்கரெல்லாம் தீவட்டிகள் பிடித்து அவருக்கு எதிர்கொண்டு வந்தார்கள். பட்டணமெல்லாம் மிகவும் ஆனந்தக்களிப்பாயிருந்தது. இவ்விதகௌரவமடைந்த லூதர் தன் தகப்பனார் விருப்பத்தின்படி நியாயசாஸ்திர பரீட்சைக்காக உற்சாகத்தோடு படிக்கத் தலைப்பட்டார். ஆனால் கடவுளின் சித்தம் வேறுவிதமாயிருந்தது.

சர்வகலாசாலை மாணாக்கருள் அலெக்ஸிஸ் என்று பேர்கொண்ட ஓர் மாணாக்கனிருந்தான். அவன் லூதருக்கு நல்ல சிநேகிதன். இவனை ஒருநாள் சாலையில் யாரோ கொன்றுபோட்டார்கள். இந்தச் சங்கதி லூதருக்கு அதிகவிசனத்தைக் கொடுத்தது. அவர் "நான் இப்படிச் சடுதியாய் மரணமடைந்தால் என் கதி எப்படி" என்று யோசிக்கலானார்.

1505-ம் வருஷத்தில் மான்ஸ்பீல்ட் நகரத்திலிருக்கும் தம் பெற்றோரைப் பார்த்துவிட்டு எர்பர்ட் நகரத்திற்குத் திரும்பிவரும்போது ஒரு கடும்புசலில் அகப்பட்டுக்கொண்டார். மின்னல் மின்னி அவர் காலினருகே தரையில் இடிவிழுந்தது. லூதர் தமக்கு முடிவு காலம் வந்ததென்றெண்ணித் தரையில் முழங்காற்படியிட்டுக் கடவுள் தன் உயிரைக் காப்பாற்றினால் உலகத்தை வெறுத்துக் கடவுளுடைய ஊழியத்திற்குத் தம்மை ஒப்புக்கொடுப்பதாகப் பிரதிக்கினை செய்தார். அக்காலத்தில் உலகத்தை வெறுக்க விரும்பினவர்கள் சன்னியாசி மடத்திற் புகுவது வழக்கம். அவர் பிற்காலத்தில் தம் தகப்பனுக்கு எழுதிய கடிதத்தில் "நான் சன்னியாசியாக வேண்டு

மென்று என் முழுமனதோடு விரும்பவில்லை; அல்லது சோம்பேறியாயிருந்து வயிறுவளர்த்துக் கொழுக்கவேண்டுமென்பதும் என் கருத்தல்ல. சடுதியாய் மரண பயங்கரம் என்னைச் சூழ்ந்து பயமுறுத்தியபோது திகிலின் மிகுதியால் யோசியாதபடி ஓர் பிரதிக்கினை செய்தேன்" என்று எழுதினார்.

ஹான்ஸ் லூதர் என்பவர் தம்முடைய மகன் சன்னியாசியானதைக்கண்டு மிகவும் மனவருத்தப்பட்டார். தம்முடைய மகன் உலகத்தில் கீர்த்திபெற்று மிகவும் தனவானுவானென்றெண்ணி, தம்மை வெறுத்து மிகவும் கஷ்டத்தை அநுபவித்து, அவரைச் சர்வகலாசாலையில் படிப்பித்தார். அவர் எண்ணிய எண்ணங்களெல்லாம் வீணாய்ப்போயிற்று. தன் மகன் மாஸ்டர் ஆவ் ஆர்ட்ஸ் என்னும் பரீட்சையில் தேறின நாள்முதல் தன் மகனை மிகவும் மரியாதையாய் "நீங்கள்" என்று அழைத்துவந்தார். இதைக் கேள்விப்பட்டவுடன் "நீ" என்றழைக்கத் தலைப்பட்டார். அவரை வெறுத்து, தன் பிள்ளையல்லவென்று தள்ளிவிட்டார்.

ஒருநாள் சாயங்காலம் லூதர் தன் சிநேகிதருக்கு விருந்துசெய்தார். சாப்பிட்டபின், அவர்கள் பாட்டுபாடி மிகவும் உல்லாசமாயிருக்கும்போது லூதர் தாம் சன்னியாசியாய்ப்போக எண்ணிய எண்ணத்தை அவர்களுக்கு வெளியிட்டார். அவர்கள் அந்த எண்ணத்தை மாற்றும்படி அவரை மிகவும் வருந்திக் கேட்டார்கள். அவரோ ஒரே நிலையாய் நின்றார்.

அவ்விராத்திரியே அவர் தாமிருந்த இடத்தைவிட்டு அகஸ்தீன் சன்னியாசி மடத்துக்குப்போய் அங்கிருக்கும் சன்னியாசிகளைத் தம்மைச் சேர்த்துக்கொள்ளும்படி கெஞ்சினார். அவர்கள் கதவைத் திறந்து அவரை ஏற்றுக்கொண்டார்கள். அவர் 1505-ம் வருஷம் ஜூலை மாதம் 17-ம் தேதி அங்கே சேர்ந்து அகஸ்தீன் என்னும் பேரைத் தரித்துக்கொண்டார்.

லூதரின் சிநேகிதர் இதைக்கேட்டு மிகவும் ஆச்சரியப்பட்டு இரண்டு நாள் வரையும் சன்னியாசிமடத்தைச் சூழ்ந்து அவர் ஒருவேளை திரும்ப வருவார் என்று மிகவும் துயரத்தோடு காத்திருந்தும் அந்த மடத்தின் கதவுகள் சாத்தப்பட்டிருந்தன. ஒருமாதமானபின் தான் லூதர் தம்முடைய சிநேகிதரைக் கண்டு பேசினார்.

ஹான்ஸ் லூதரின் இரண்டு பிள்ளைகள் கொள்ளைநோயில் இறந்துபோனார்கள். அதன்பின்பு லூதரும் இறந்துபோனாரென்று அவர் காதில் எட்டிற்று; அதன்பின் அவர் லூதர் செய்த பிழையை மன்னித்தார்.



## 5. லூதர் சன்னியாசியாயிருந்தது.

லூதர் உலகத்தை வெறுத்துக் கடவுள் காரியங்களிலேயே சிந்தனையைச் செலுத்தவேண்டுமென்று நினைத்து, சன்னியாசி மடம் போய்ச் சேர்ந்தார். அங்கே சேர்ந்தபின், அந்த மடத்தில் சில பக்தர் இருந்தாலும், பெரும்பாலும் சன்னியாசிகள், உலகப்பற்றுடையவர்களாய் சொகுசாய் வருத்தமில்லாமல் ஜீவனம் பண்ணவேண்டுமென்னும் விருப்பங்கொண்டவர்களென்று கண்டார்.

லூதர் சர்வகலாசாலையிலிருக்கும்போது அவர் சாமர்த்தியத்தையும் கல்வியையும் யாவரும் வியந்துகொள்வது வழக்கம். சன்னியாசிமடத்தில் அவர் தம்முடைய கல்வியெல்லாம் விட்டுவிட்டு கதவுகளைத் திறந்து மூடவும், கோவிலைப் பெருக்கி வாரவும் இன்னும் அற்ப ஊழியங்களைச் செய்யவும் வேண்டியதாயிருந்தது. இப்படிப்பட்ட வேலைகளை அவர் செய்து முடித்தபின், "ஊரிலே போய்ப் பிச்சை எடுத்துவா" என்று சொல்லியனுப்புவார்கள். லூதர் தோளில் ஓர் பையைப் போட்டுக்கொண்டு எர்வர்ட் பட்டணத்துத் தெருக்களில் வீடுவீடாய்ப் பிச்சை எடுத்துவருவார்.

இவ்வித இழிவான வேலைகளைச் செய்துவரும்போது, படிக்கிறதற்குக் கொஞ்சநேரமாவது அகப்படாதா என்று லூதர் பார்த்தால், சன்னியாசிகள் உடனே அவருக்கு வேலையிடுவார்கள். "நீ படித்து ஆவதென்ன? ரொட்டி, மீன், முட்டை முதலியவைகளைப் பிச்சையெடுத்துக்கொண்டு வந்தாலல்லவா எங்கள் வயிறு நிறையும்?" என்பார்கள். அவர்கள் சொற்படி அவர் உடனே புஸ்தகங்களை வைத்துவிட்டுப் பிச்சையெடுக்கப் போவார். கடவுள் இவ்வித சிறிய சோதனைகளைத் தாங்க அவரை வல்லவராக்கினார்.

சர்வகலாசாலை அதிகாரிகள் லூதருக்கு இவ்வித இழிவான வேலைகளை இடக்கூடாதென்று கேட்டுக்கொள்ள, இனிமேல் லூதர் தன் மட்டில் படித்துக்கொண்டிருக்கும்படி உத்தரவு கொடுத்தார்கள். லூதர் உலகத்தைவிட்டு, சன்னியாசிமடத்திற்கு வந்தபோது தம் பாவமும் உலகத்தோடேயே வெளியே நின்றுபோயிற்று என்றெண்ணினார். ஆனால் அவர் பாவம் நிறைந்த இருதயம் அவருடைய அறைக்குள் அவரோடேயே சென்றதென்று சீக்கிரத்திற் கண்டார். அவர் தம்முடைய சிநேகிதரை வெளியேவிட்டு அடைத்துப்போட்டாலும் கெட்ட எண்ணங்களை வெளியே தள்ளி அடைக்க சக்தியற்றவராயிருந்தார்.

தம்முடைய கிரியைகளினால் மோட்சத்திற்குப் பாத்திரராக வேண்டுமென்பது லூதரின் கருத்து. எத்தனை ஜெபங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லியும் அவர் மனதில் ஆறுதல் ஒன்றுமில்லை. உபவாசத்தினாலும் விழிப்பினாலும் கெட்ட இச்சைகளை அடக்க வேண்டுமென்று தன்னாலானமட்டும் பிரயாசப்பட்டார். அவர் இருந்த சன்னியாசி மடத்திலே சத்தியவேதாகமப் புஸ்தகம் சங்கிலியினால் கட்டப்பட்டு வைத்திருந்தது. அதை அவர் அடிக்கடி வாசித்துவந்தார். ஆனால் அந்த சத்திய ஆகமத்திற் சொல்லியிருந்த பரிசுத்த நிலைமையை அடையச் சற்றேனும் சக்தியற்றவராயிருந்தார்.

அவரோடிருந்த சன்னியாசிகள் நற்கிரியைகளைச் செய்து தேவரீருக்குத் திருப்திசெய்ய அவரை ஏவினார்கள். ஆனால் லூதரோ "என்னுடைய இருதயத்தைப்போலொத்த இருதயத்திலிருந்து என்ன நற்கிரியைகள் உற்பத்தியாகும்? தேவனுடைய பார்வையில் நான் ஓர் நீசப்பாவி, என் புண்ணியங்களினால் அவர் கோபத்தை ஆற்றுவதெப்படி" என்றெண்ணிக் கிலேசப்பட்டார். இவ்வித துக்கசாகரத்தில் மூழ்கியிருக்கும்போது அவர் மனச்சாட்சி அவரைப் பார்த்து "நீ இன்னும் பொறாமையும், ஆத்திரமும், கோபமும் நிறைந்தவனா யிருக்கிறாய். நிர்ப்பாக்கியனான நீ இந்தப் பரிசுத்த ஊழியத்தில் பிரவேசித்ததில் பிரயோஜனமென்ன" என்று அவரைக் குத்திற்று.

எழுவாரங்களாய் லூதருக்குத் தூக்கமேயில்லை; நாலுநாளாய்ப் போஜனபானத்தை வெறுத்து தம்முடைய அறைக்குள் ஒருவரையும் வரவிடாமல் அறையைப் பூட்டிக்கொண்டார். இதைக்கேட்ட ஒருவயதுசென்ற சன்னியாசி கோவில் பாடகரான சில சிறுவரை இட்டுக்கொண்டு அவருடைய அறைக்குப்போனார். பலதரம் கதவைத்தட்டியும் திறப்பார் ஒருவருமில்லை. லூதர் எங்கே இறந்துபோனாரோ அல்லது மரணத்தறுவாயிலிருக்கிறாரோ என்று பயந்து அறையின் கதவை அவர் உடைத்துப்பார்க்கும்போது, லூதர் ஜீவனற்றவர்போல் தரையிற் கிடக்கக் கண்டார். அவர் மூர்ச்சை தெளிவதற்குப் பற்பல பிரயத்தனங்கள் செய்தும் ஒன்றும் பிரயோசனப்படாமல் கடைசியில் அந்தச் சிறுவரைப் பாடச்சொன்னார். அந்தச் சிறுவரின் இனிய குரலோசை லூதர் செவியில் ஏறவே மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்கார்ந்தார். அவர் எழுந்து திரும்பவும் தன் கடமைகளை நிறைவேற்றிவந்தபோதிலும், அவர் மனதிலிருந்த துயரம் கொஞ்சமேனும் நீங்கவில்லை.

ஜர்மனியா தேசத்தில் அகஸ்தினரைச் சேர்ந்த பல சன்னியாசி மடங்களுண்டு. அக்காலத்தில் இம்மடங்கள் நன்றாய் நடத்தப்படுகின்றனவாவென்று அவைகளை மேற்பார்த்து வரும்படி ஸ்றுப்பிரீஸ்



என்னும் ஓர் சற்புருஷனை நியமித்தார்கள். அவர் லூதர் இவ்விதமாய் மனச் சஞ்சலப்பட்டுக்கொண்டிருக்கும் காலத்தில் லூதரிருந்த மடத்தைப் பார்க்கவந்தார். லூதர் படிப்பு, உபவாசம், தவம் முதலியவற்றால் இளைத்துப்போய் எலும்பும் தோலுமாயிருந்தார். ஸ்றுப்பிரீஸ் என்பவர் லூதரைக் கவனித்து, அவர் அறைக்குப்போய் விசாரித்தபோது, லூதர் தம்முடைய மனக்கிலேசத்தையெல்லாம் எடுத்துச்சொன்னார்.

"நான் தேவனிடத்தில் எத்தனையோ வாக்குத்தத்தங்களையும் பிரதிக்கினைகளையும் செய்திருக்கிறேன். அவற்றாலெல்லாம் என்னபலனைக் கண்டேன். பாவம் என்னைவிடப் பலங்கொண்டிருக்கிறதே" என்று லூதர் முறையிட, ஸ்றுப்பிரீஸ் என்பவர், "என் அருமையான நண்பனே, நானும் எத்தனையோதரம் பிரதிக்கினைசெய்து அவைகளை நிறைவேற்ற என்னால் கூடாதென்று கண்டு இப்போது பிரதிக்கினை செய்கிறதை விட்டுவிட்டேன்; ஏனெனில் கடவுள் பாவியாகிய என்மேல் கிறிஸ்துவினிமித்தம் இரக்கம் காண்பியாவிட்டால், என் கிரியைகளையும் பிரதிக்கினைகளையும் கொண்டு அவர்முன் நீதிமானாக என்னாலாகுமோ?" என்றார்.

லூதர் இந்த நல்வார்த்தைகளைக் கேட்டும் அவர் மனதிலிருந்த அச்சம் நீங்கவில்லை. "பாவியாகிய நான், சர்வநீதியும் பரிசுத்தமும் நிறைந்த கடவுள் முன் நிற்பதெப்படி" என்று கிலேசப்பட்டார். ஸ்றுப்பிரீஸ் என்பவர் "ஏன் இவ்விதமான நினைவுகளால் வருத்தமடைகிறாய்? இரட்சகரின் கரத்தில் எல்லாப் பாரத்தையும் போட்டுவிடு; அவரை நம்பு, அவர் பாடுகளாலுண்டான நீதியில் நம்பு, அவர் மரணத்தின் உத்தரவாத புண்ணியத்தை நம்பு. வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களையும், நெஞ்சு கலங்கி, மனச்சாட்சியில் குத்துண்டவர்கள் யாவரையும் தம்மிடத்தில் அழைக்கும் தேவகுமாரனின் சத்தத்துக்குச் செவிகொடு" என்றார்.

"தேவன் என்னைச் சேர்த்துக்கொள்ளுமுன் நான் குணப்பட வேண்டுமே" என்று இன்னும் ஐயப்பட்டார்.

அதற்கு ஸ்றுப்பிரீஸ் "மெய்யாய் மனந்திரும்புகிறவன் முதலில் கிறிஸ்துவைத் தன் ரட்சகராக ஏற்றுக்கொள்ளுகிறான். பாவத்திற்காக மனஸ்தாபப்பட்டுத் தவஞ்செய்வதினால் பாவம் நிவர்த்தியாகும் என்றெண்ணாதே. நீ அவரை அறியுமுன் உன்னை நேசித்து, உன் பாவங்களுக்காக மரித்து, உயிர்த்தெழுந்து, பாவிகளுக்கு மனந்திரும்புதலையும் பாவமன்னிப்பையும் கொடுக்கும்படி, ராஜாவாகவும் ரட்சகராகவும் உயர்த்தப்பட்ட யேசுவைப் பார்த்து அவரை நேசி" என்றார்.

இந்த திவ்விய சத்தியத்தைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த லூதரின் மனதில் கொஞ்சம் தெளிவுண்டாயிற்று. பரம வெளிச்சமும் நம்பிக்கையும் அவர் இருதயத்திற்குள் பிரவேசித்தன. மனிதன் தன்னைத்தான் ரட்சிக்க வல்லமையற்றவனென்றும் இயேசுவானவர் பாவிகளை ரட்சிக்க மரித்தார் என்றும் அவர் உணர்ந்தார்.

ஸ்ரூப்பிட்ஸ் அவ்விடத்தை விட்டுப்போகுமுன் லூதருக்கு ஒரு வேதாகமத்தைக் கொடுத்து அதை எப்போதும் தவறாமல் வாசித்து வரும்படிச் சொன்னார்.



லூதர் வேதம் வாசிப்பது.

இப்படி வாசித்து வரும்போது லூதருக்குச் சிலவேளை மனச்சமாதானமும் விசுவாசமும் உண்டானாலும், சிலவேளைகளில் மனக்கலக்கமும் அவநம்பிக்கையும் உண்டாயிற்று. அவர் திரும்பவும் மிகு



க்க வியாதிப்பட்டு மரணத்தறுவாயிலிருந்தார். "பாவியாகிய நான் நீதியின் சொரூபியாகிய கடவுள்முன் போய் நிற்பதெப்படி" என்று மனவருத்தமடைந்தார். லூதர் தம்மைப் பார்க்கவந்த ஓர் வயோதிப சன்னியாசியினிடத்தில் தம்முடைய மனவருத்தத்தையும் இலேசத்தையும் சொன்னார். அவர் ஸ்ரூப்பிட்ஸ் என்பவரைப்போல் அன்றும் கற்றவரல்லாதிருந்தும் தன் இருதயத்திற் காறுதல் அருளிச்செய்த சத்தியத்தை லூதருக்கு எடுத்துச்சொன்னார். அவர் லூதரைப் பார்த்து "பாவமன்னிப்புண்டென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லும்போது, தாவீது பேதுரு என்பவர்களின் பாவத்தைக் கர்த்தர் மன்னித்தாரென்றுமாத்திரம் நீ நம்பாமல், உன்னுடைய பாவங்களும் மன்னிக்கப்பட்டதென்று நம்பவேண்டும்" என்று சொன்னார்.

அந்நாள்முதல் லூதருக்கு மனச்சமாதானம் திரும்பவும் வந்தது. அதன்பின் நல்ல சுகமடைந்து பெலனடைந்தார்.

நீதி பெண்ணிடமேயன்றி நின்திருக் குருசேதந்தம்
ஆதியே அடைக்கேன்றிதி மனையும் குருந்தரம்
சோதியே சதிவேதியலாக் கடையனேக் கருணையோடுஞ்
சோதிலாக்குருதி யூற்றில் கழுவிடலன்றி உய்யேன்.

## 6. லூதர் உவிற்றன்பர்க் நகரத்திற்குச் சென்றது.

லூதர் இரண்டு வருஷம் சன்னியாசியாயிருந்தபின் குருப்பட்டம் பெற்றார். தகப்பனுடன் ராசியாகிறதற்கு இது நல்ல தருணம் என்றெண்ணி அந்தச் சமயத்தில் அவரை வரவழைத்தார். ஹான்ஸ் லூதர் குதிரைப்பாரிகாரர்களுடன் வந்திறங்கிப் புதிதாய்க் குருப்பட்டம் பெற்ற தன் மகனுக்கு 20 தங்கக்காசு இனாம் கொடுத்தார்.

லூதர் பட்டம் பெற்றபின் அவர் தகப்பனாரும் மற்ற அசன்திலாக் குருக்களும் பந்தியில் உட்கார்ந்திருக்கும்போது லூதர் சன்னியாசி மடத்திற் சேர்ந்ததைப்பற்றிப் பேச்சுவந்தது. அங்கிருந்த சன்னியாசிகள் லூதர் செய்த கிரியை மிகவும் புகழ்பெற்றதென்று மெச்சிப் பேசினார்கள். ஆனால் ஹான்ஸ் லூதர் அவர்களைப் பார்த்து "சத்திய வேதாகமத்தில் உன் தகப்பனுக்கும் தாய்க்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும் என்று எழுதியிருப்பதை நீங்கள் ஒருக்காலும் வாசித்தறியீர்களா?" என்று கேட்டார். இந்த வார்த்தைகள் லூதர் மனதில் தைத்தன. தன்னுடைய ஆத்துமாவை ஆதாயப்படுத்தக்

கருதி அவர் சன்னியாசி மடத்தைச் சேர்ந்தாலும் தன் சுய இச்சையின்படியே அப்படிச் செய்தார்.

பெற்றோர் நல்ல காரியங்களைச் செய்யக் கட்டளையிடும்போது நாம் அவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும். மனிதருக்குக் கீழ்ப்படிகிறதைவிடத் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே நன்னடத்தை. ஒரு தகப்பன் தன் பிள்ளையைத் திருடச்சொன்னால் அப்பிள்ளை கீழ்ப்படியக்கூடாது. விக்கிரகத்தைக் கும்பிடச்சொன்னால் கீழ்ப்படிவது பிசகு. தகப்பன் சொன்னானென்று சொன்னால் ஞாயாதிபதி விட்டுவிடுவாரா? அதுபோலவே கடவுளும் விடமாட்டார்.

லூதர் 1507-ம் வருஷம் குருப்பட்டம் பெற்றார். அதற்கு ஆறு வருஷங்களுக்குமுன், சாக்ஸனிநாட்டை ஆளும் எலெக்டர் பிரபு உவிற்றன்பர்க் நகரத்தில் ஓர் சர்வகலாசாலையை ஏற்படுத்தினார். ஸ்றப்பிட்ஸ் என்பவர் லூதரை அந்த சர்வகலாசாலையில் வித்தியா பண்டிதராய் ஏற்படுத்தவேண்டுமென்று எலெக்டர் பிரபுவுக்குச் சிபார்சு செய்தார். 1508-ம் வருஷத்தில் அவரை நியமித்தபோது 179 மாணாக்கர் இருந்தார்கள். சீக்கிரத்தில் மாணாக்களின் தொகை 2,000 ஆயிற்று.

லூதர் வித்தியா பண்டிதராயிருந்தும் சன்னியாசியாயிருந்ததினால் உவிற்றன்பர்க் நகரத்திலிருந்த சன்னியாசி மடத்தின் ஓர் அறையில் வசித்துவந்தார். அவர் சர்வகலாசாலையில் தத்துவஞானம் கற்றுக்கொடுத்துவந்தார். சில மாதங்களுக்குப்பின் அவருக்கு வேதசாஸ்திரப் பாண்டித்தியப் பட்டம் கிடைத்தது. அதன்பின் அவர் ஒவ்வொருநாளும் வேதாகமத்தின்பேரில் பிரசங்கம் செய்துவந்தார். முதலாவது சங்கீதாகமத்தின்பேரில் பிரசங்கம் செய்தார். கொஞ்சநாட்களுக்குப்பின் ரோமருக்கு எழுதின நிருபத்தின்பேரில் பிரசங்கம் செய்தார். ஒருநாள் அவர் தம்முடைய பிரசங்கத்திற்கு ஆயத்தம் செய்துகொண்டிருக்கும்போது, ரோமர் நிருபம் முதலாம் அதிகாரம் 17-ம் வசனத்தில் "நீதிமான் விசுவாசத்தினால் பிழைப்பான்" என்றெழுதியிருப்பதைக் கண்டு அதைப்பற்றி யோசிக்கத் தொடங்கினார். அந்த வார்த்தைகள் அவர் மனதில் கிரியைசெய்ய ஆரம்பித்தன. பிற்காலத்தில் அவருடைய மனச்சஞ்சலங்களிலெல்லாம் அவைகள் அவருக்கு ஆறுதலைக் கொடுத்தன.

லூதருடைய போதனா சாமர்த்தியத்தைக்கண்டு பிறதேசங்களிலிருந்து அநேக மாணாக்கர் சர்வகலாசாலையில் கல்விகற்க வந்தார்கள். அநேக வித்தியா பண்டிதரும் அவருடைய உபந்யாசங்களைக் கேட்க ஆவலுடன் வருவதுண்டு. ஓர் கல்விமான் அவர் போதனையைக் கேட்டபின் "இந்த மனிதன் ஓர் புதிய உபதேசத்தைப்



போதித்து சபை முழுவதையும் சீர்திருத்துவானென்பதற்குச் சந்தேகமேயில்லை. கிறிஸ்துவின் வார்த்தைகளில் தன் உபதேசத்தை ஸ்தாபிக்கிறான். அந்த வார்த்தையை எதிர்க்கத்தக்க வேறொன்றும் இவ்வுலகத்திலில்லை" என்றார்.

ஸ்றப்பிட்ஸ் என்பவர் லூதரை அகஸ்தீனரின் ஆலயத்தில் பிரசங்கம் செய்யக் கேட்டுக்கொண்டார். லூதர் முதலில் அதற்குச் சம்மதிக்கவில்லை, "தேவனுடைய ஸ்தானத்திலிருந்து மனிதருக்குப் பேசுவது எளிதான காரியமா" என்று சொல்லுவார். ஆனால் ஸ்றப்பிட்ஸ் திரும்பவும் திரும்பவும் வருந்திக் கேட்டதின்பேரில் லூதர் இணங்கினார்.

உவிற்றன்பர்க் நகரத்தின் மத்தியில் 30 அடி நீளம் 20 அடி அகலத்தில் பலகையால் கட்டப்பட்ட ஓர் ஆலயமிருந்தது. அதிலுள்ள பலகைகள் உளுத்துக் கெட்டுப்போயிருந்தன. அந்த ஆலயத்திலேதான் பலகைகளால் செய்யப்பட்ட ஓர் பிரசங்க பீடத்தில் நின்று லூதர் தம்முடைய முதலாவது பிரசங்கத்தைச் செய்தார்.

லூதருடைய தெளிவான குரலோசையையும், அவருடைய திவ்விய பக்தியையும் பார்த்து அநேக ஜனங்கள் அவரைக் கேட்க வந்தார்கள். கொஞ்சநாட்களுக்குள் அவரைக் கேட்கவந்த ஜனக்கூட்டங்களுக்கு அந்த ஆலயத்தில் இடமில்லாமல் அந்தப் பட்டணத்திலிருந்த பெரிய ஆலயத்தில் பிரசங்கஞ்செய்ய அவரைக் கேட்டுக்கொண்டார்கள். அங்கே அவர் பிரசங்கம் கேட்க எலெக்டர் பிரபுவும் ஓர் தரம் வந்தார்.

## 7. ரோமாபுரிக்கு யாத்திரைபோனது.

லூதர் ரோமாபுரி மிகவும் "பரிசுத்த நகரம்" என்றும், அதைப் பார்ப்பது அவசியம் என்றும் எண்ணி, அதைப் பார்க்க மிகவும் ஆவலுடையவராயிருந்தார். ஸ்றப்பிட்ஸ் என்பவருக்கும் அகஸ்தீனரின் மடாதிபதிகளுக்கும் விவாதம் உண்டாகவே அந்தக் காரியத்தை ரோமான் சபைத்தலைவராகிய பாப்புவினிடம் சொல்லித் தீர்ப்புப் பெற்றுவர 1510-ம் வருஷத்தில் லூதரை அனுப்பினார்கள்.

அவர் பிரயாணப்பட்டு ஆல்ப்ஸ் மலைவழியாய் இத்தாலியா தேசத்துச் சமவெளிகளில் வந்து சேர்ந்தார். அவர்போன மடங்களிலெல்லாம் அவர் கண்ட அநேக காரியங்கள் வெட்கத்துக்கிடமானவையாயிருந்தன. அப்படிப்பட்டவைகளைக் கண்டு அவர் பிரமித்தார். போ என்னும் ஆற்றினருகே இருந்த பெனிடிக்தினரின்



ரோமாபுரி.

மடத்தில் அவர் விருந்துக்குப்போனபோது அவர்கள் செல்வப் பெருக்கையும், சோடிக்கப்பட்டு சிங்காரம் பொருந்தியிருந்த அவர்கள் அறைகளையும், விலையுயர்ந்த உடைகளையும், சம்பிரமமான போஜனபானத்தையும் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டார். அவற்றையெல்லாம் பார்த்தும் லூதர் ஒன்றும் பேசவில்லை. வெள்ளிக்கிழமை வரட்டும் என்று சும்மாவிருந்தார். ரோமான் மார்க்கத்தார் வெள்ளிக்கிழமையில் மாம்சம் சாப்பிடுகிறதில்லை; ஆனால் இந்த மடத்திலோ மாம்ச பதார்த்தங்கள் சமைக்கப்பட்டு மேசையில் ஆயத்தமாய் வைக்கப்பட்டிருந்தன. லூதர் இதைப்பார்த்து மிகவும் மனவருத்தப்பட்டு, "கிறிஸ்துசபையும் பாப்புவும் இப்படிப்பட்ட பதார்த்தங்களைச் சாப்பிடக்கூடாது என்று தடுக்கிறார்களே. இப்படிச் செய்யலாமா" என்று அந்த பெருந்தீனிக்காரரைக் கடிந்துகொண்டார். இது அவர்களுக்குக் கோபத்தை உண்டாக்கிற்று. அந்த மடத்திலிருந்த காவற்சேவகன் லூதரிடத்தில் "இனி நீங்கள் இங்கே இருந்தால் மோசம்" என்று அவரை எச்சரிக்க லூதர் அவ்விடம் விட்டு ரோமாபுரி நோக்கிச் சென்றார்.

போலோனு என்னும் நகரத்தில் லூதர் மிகவும் வியாதிப்பட்டார். சிநேகிதர் ஒருவரும் இல்லாத அந்நிய இடத்தில் இறந்து



போவோமோ என்று எண்ணி மிகவும் பயந்தார். அவர் தன் இருதயத்திலிருந்த பாவத்தை உணர்ந்து தேவனுக்குமுன் போகப் பயந்தார். இப்படி அவர் மிகவும் பயந்துகொண்டிருக்கையில் முன் அவர் மனதில் கிரியைசெய்த "நீதிமான் விசுவாசத்தினால் பிழைப்பான்" என்னும் வசனம் அவருக்குத் தட்டுப்பட்டது. அதை நினைத்து, அவர் தைரியங்கொண்டு சீக்கிரத்தில் சுகப்பட்டு ரோமாபுரி நோக்கிச் சென்றார். அவர் பென்திக்தினர் மடத்தில் கண்ட ஒழுங்கீனங்கள் பரிசுத்த பட்டணமாகிய ரோமாபுரியிலிராது என்று தம்மைத் தைரியப்படுத்திக்கொண்டு போனார்.

கடைசியாய் மிகுந்த இளைப்போடு பிரயாணஞ்செய்து வரும் போது தூரத்தில் ரோமாபுரியைக் கண்டார். அதைக் கண்டவுடன் முழங்காற்படியிட்டு "பரிசுத்த ரோமாபுரியே உனக்கு வந்தனஞ் செய்கிறேன்" என்றார். அவர் ரோமாபுரிக்குள் சென்றபோதோ அங்கே பரிசுத்தமான தொன்றையும் காணவில்லை.

லூதர் அடிக்கடி மிகுந்த பக்திவிநயத்தோடு ரோமாபுரியில் ஆராதனை நடத்திவந்தார். ஆனால் அங்கிருந்த குருக்கள் சடங்குக்காக ஆராதனைகளை நடத்தி சீக்கிரமாய் முடித்துவிடுகிறதைக் கண்டு மிகவும் மனவருத்தப்பட்டார். ஒருநாள் லூதர் ஒரு ஜெபத்தைச் சொல்லி முடிக்குமுன் குருக்கள் ஏழு ஜெபங்களைச் சொல்லி முடித்தார்கள். அதைக்கண்ட ஒரு குரு லூதரைப் பார்த்து "சீக்கிரம், சீக்கிரம். சீக்கிரமாய் முடிக்கமாட்டாயா" என்றார்.

லூதர் ஒருவன் ரோமாபுரிக்குப் போனால் அங்கிருக்கும் அக்கிரமத்தைப் பார்த்துத் தானும் துர்ப்பெரிய துன்மார்க்கனுவான் என்று அர்த்தங்கொண்டபடி "ரோமாபுரிக்குப் போகிறவன் முதல்முறை திருடனைத் தேடுவான், இரண்டாந்தரம் போகும்போது திருடனைக் கண்டுபிடிப்பான்; மூன்றாந்தரம் ஒரு திருடனைத் தன்னோடுகொண்டு வருவான் என்று முற்காலத்தில் சொல்லுவார்கள்; இப்போதோ எல்லாரும் மூன்றுபயணத்தையும் ஒரே தடவையிற் செய்கிறார்கள்" என்று சொன்னார். ரோமாபுரிக்கு லூதர் போனவுடன் ரோமான் சபையின் வீண் சடங்காசாரங்களையெல்லாம் தவறாது அனுசரித்து வந்தார். அங்கிருந்த ஒவ்வொரு கோவிலுக்குப்போய் அங்குள்ள மாய்மாலக் குருக்கள் மகாத்துமாக்களின் ஞாபக சின்னங்களென்று காட்டியவைகளையெல்லாம் மெய்யென்று நம்பினார். அவர் "என் பெற்றோர் இன்னும் உயிரோடிருக்கிறார்களே! அவர்கள் இறந்து போயிருந்தால் என் பூசைகளினாலும் ஜெபங்களினாலும் நற்கிரியைகளினாலும் எவ்வளவு சந்தோஷத்தோடு அவர்களை உத்தரிக்கும் ஸ்தலத்தினின்றும் விடுவிப்பேன்?" என்றும் தனக்குள் சொல்லிக்கொண்டார். ரோமாபுரியில் பிலாத்துவின் படிக்கட்டு என்றோர்

படிக்கட்டிருக்கிறது. இந்தப் படிக்கட்டின் வழியாய்த்தான் இயேசு பெருமான் பிலாத்தின் அரண்மனையிலிருந்து இறங்கிவந்தாரென்றும், அந்தப் படிக்கட்டைத் தேவதூதர் அங்கிருந்து ரோமாபுரிக்கு தூக்கிக்கொண்டு வந்தார்களென்றும் ஓர் கட்டுக்கதை உண்டு. இந்தப் படிக்கட்டின்மேல் முழங்காலில் ஏறுகிறவர்களுக்கு பாப்பு பாவ மன்னிப்புக் கொடுப்பதுண்டு. இந்த பாவமன்னிப்பைப் பெற ஆசைப்பட்டு லூதர் படிக்கட்டில் மெதுவாய் ஏறத்தொடங்கினார். அதற்குள் அவர் காதில் இடியோசைபோல் "நீதிமான் விசுவாசத்தினால் பிழைப்பான்" என்றும் சத்தம் கேட்டதுபோலிருந்தது. அதைக் கேட்டவுடன் தன் புத்தியீனத்தையும் வீண்பக்தியையும் உணர்ந்து வெட்கப்பட்டு எழுந்து போய்விட்டார்.

லூதர் ரோமாபுரிக்குப் போகும்போது அது நகரங்களிலெல்லாம் பரிசுத்தநகரம் என்றெண்ணிப் போனார். அவர் திரும்பிவரும்போது அதைப்பற்றித் தாம் கொண்டிருந்த எண்ணத்தை அவரே எழுதிவைத்திருக்கிறார். "ரோமாபுரியில் நடந்துவரும் பாவங்களையும் அவலட்சண நடத்தைகளையும் ஒருவராலும் விவரிக்க முடியாது; அங்கேபோய்ப் பார்த்தவர்களுக்கே அந்தத் துன்மார்க்கத்தின் அளவு தெரியும். நரகமொன்றிருந்தால் ரோமாபுரி அதன்மேலில் கட்டப்பட்டிருக்கிறது என்று ஜனங்கள் சொல்லும் பழமொழி பொய்யல்ல. ரோமாபுரி பாவமெல்லாவற்றிற்கும் உறைவிடமான ஓர் படுகுழி."

லூதர் ரோமாபுரியைப் பார்த்தது அவருக்கு மிகவும் பிரயோஜனமாயிருந்தது. பிற்காலத்தில் அவர், "எனக்கு யாராவது 200,000 ரூபாய் கொடுப்பேனென்று சொல்லியிருந்தாலும் ரோமாபுரியைப் பாராமல் இருந்திருக்கமாட்டேன்" என்று சொன்னார்.

ரோமாபுரியில் தம்முடைய வேலை முடிந்தவுடன் லூதர் உவிற்றன்பர்க் நகரத்திற்குத் திரும்பிவந்தார்.

## 8. மார்க்க சீர்திருத்தத்தின் அருணோதயம்.

லூதர் பண்ணிய பிரசங்கத்தை எலெக்டர் பிரபு கேட்டு மிகவும் வியந்து அவரை வேதசாஸ்திர பண்டிதராக்கவேண்டும் என்று தம்முடைய சிநேகிதரோடு சொல்லிக்கொண்டிருந்தார். லூதர் ரோமாபுரியிலிருந்து வந்தபின் திரும்பவும் தம்முடைய பழைய மடத்திற்குப்போய் அங்கேயுள்ள மற்ற சந்நியாசிகளைப் போல் சகல சட்டங்களுக்கும் கீழடங்கி நடந்துவந்தார். அங்கே ஸ்ரப்பிற்ஸ்



சென்று அவரைத் தனியே தோட்டத்திற்குள் அழைத்துக்கொண்டுபோய் "என் நண்பனே, நீ இப்பொழுது பரிசுத்த வேதாகமத்தில் தேறின சாஸ்திரியாக வேண்டியது அவசியம்" என்றார். அதற்கு லூதர் "என்னைவிட அந்தப் பட்டத்திற்குத் தகுந்தவரைத் தேடும்; நான் அதற்கு சம்மதிக்கமாட்டேன்" என்றார்.

ஸ்ரப்பிற்ஸ் அதோடு விட்டுவிடாமல் "கடவுளின் சபையில் நடக்கவேண்டிய ஊழியம் மிகுதியாயிருக்கிறது. அதற்கு வாலிபராயும் பெலசாலிகளாயும் இருக்கும் வேதசாஸ்திரிகள் மிகவும் அவசியம்" என்றார். அதற்கு லூதர் "நான் சீக்கிரம் செத்துப்போவேன் பெலவீனமும் வியாதிஸ்தனுமாயிருக்கிறேன். என்னைவிட பெலசாலியான ஒருவனைத் தேடும்" என்றார். ஸ்ரப்பிற்ஸ் அதற்குப் பிரதியுத்தரமாக: "கடவுளுக்கு நாம் வானத்திலிருந்தாலும் பூமியிலிருந்தாலும் ஊழியம் செய்யத்தானேவேண்டும். உயிரோடிருந்தாலும் மரித்தாலும் நம்மை அவர் ஆட்கொள்ளுகிறவராயிற்றே" என்றார். பின்னும் லூதர் "நான் மிகவும் எளியவன். அந்தப் பட்டத்தைப் பெறப் பணச்செலவுண்டே, அதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை" என்றார். அதற்கு ஸ்ரப்பிற்ஸ், "அந்தவிஷயத்தில் நீ பயப்படாதே, எலெக்டர் பிரபு எல்லாச் செலவுகளுக்கும் உத்தரவாதி" என்றார். அதன்பின் லூதர் ஆட்சேபனைசொல்ல இடமில்லாமல் சம்மதித்தார். 1512-ம் வருஷம் அக்டோபர்மாதம் லூதர் வேதாகமத்தை உண்மையாய்க் கற்றுக்கொடுப்பேனென்றும், அதைக் கள்ளப்போதகங்களிலிருந்து காப்பாற்றுவேனென்றும் சத்திய வாக்களித்தார்.

அக்காலத்தில் வேதாகமத்தைக் கற்க ஆசைப்படுபவர் ஒருவருமில்லை. எல்லாரும் தத்துவசாஸ்திரங்களையும் மார்க்கசம்பந்தமான பல நூல்களையும் கற்றுக்கொள்வதிலேயே முயற்சியாயிருந்தார்கள். சார்லிமேன் என்னும் அரசன் ஏற்படுத்தின வேதசாஸ்திரப் பள்ளிக்கூடங்களில் கற்றுக்கொடுத்தவர்களுக்கு பண்டிதவிற்பனர் (School men) என்று பெயர். இவர்கள் அரிஸ்றோட்டல் என்னும் வித்வானுடைய கொள்கைகளைப் பின்பற்றி வீணான குதர்க்கங்கள் செய்து தங்கள் காலத்தைக் கழித்தார்கள். லூதரோ "அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கும் சித்தாந்தங்கள் இப்பண்டித விற்பனரின் ஞானத்திற்கும் அறிவிற்கும் மேலானவை" என்று எண்ணினார். உவிற்றன்பர்க் நகரத்தில் எல்லோரும் லூதரின் கொள்கையைப் படிப்படியாய் ஒப்புக்கொண்டார்கள். ஒரு வருஷத்திற்குள் லூதர் "வேதாகமத்திலிருக்கிற போதனையை போதிக்காதவன் பேச்சை ஒருவரும் இங்கே கேட்கமாட்டார்கள்" என்று எழுதத்தக்க நிலைமைக்கு அந்தப்பட்டணம் வந்துவிட்டது.

இவ்விதமாய் லூதர் பிரசங்கித்துவருகையில் எலெக்டர் பிரடுவின் சிநேகிதரும் குடும்ப குருவுமாயிருந்த ஸ்பிலாட்டின் என்னும் ஓர் சற் புருஷரோடு சிநேகிதரானார். எலெக்டர் பிரடுவினிடத்தில் லூதருக்கு வேண்டியவைகளெல்லாம் இவரே செவ்வையாய் முடித்துக்கொடுத்தார்.

ரோமான் ஆலயங்களில், மகாத்மாக்களின் உடற்பாகம் அல்லது உடுப்புமுதலிய ஞாபகசின்னங்கள் வைத்திருக்கிறதுண்டு. அநேக கோவில்களில் எம்பெருமான் கிறிஸ்துநாதர் அறையுண்ட சிலுவையின் ஓர் பாகம் இருக்கிறதென்று சொல்லி குருமார் வீண்பெருமை பாராட்டுவதுண்டு. டிரெவ்ஸ் என்னும் நகரத்தில் இயேசுபெருமானின் அங்கி இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இந்தியாவில் மேற்கே கடற்கரையோரத்திலிருக்கும் கோவா பட்டணத்தில் சவேரியார் என்னும் ஓர் பேர்போன ரோமான்மார்க்க குருவின் தேகத்தைப் பாதுகாத்து வைத்திருக்கிறார்கள். அதைப் பார்க்க அநேகர் யாத்திரை போவதுண்டு. இப்படி ஞாபகசின்னங்கள் என்று சொல்லப்படுபவைகளில் அநேகம் மெய்யானவையல்ல. அநேக சின்னங்களைத் தாங்களே செய்து யாத்திரைபோகும் வீண்பக்திக் காரரை மோசம் போகச்செய்கிறார்கள். எலெக்டர் பிரடு தாம் கட்டிய ஓர் கோவிலுக்கு இவ்வகையான ஞாபகசின்னங்களை வாங்க ஸ்பலாட்டின் என்பவரை அனுப்பினார். அக்காலத்தில் அவர் வேலையை லூதர் பார்த்துவந்தார்.

அவர் இப்படிச் சன்னியாசி மடங்களைப் போய்ப் பார்த்துக் கொண்டுவரும்போது தான் தெருவாசல் திறந்து கோவில் பெருக்கி ஊழியஞ்செய்த எர்பர்ட் மடத்திற்கு வந்தார். அதிகாரத்துடன் வந்ததினால் அவ்விடத்திலுள்ள சன்னியாசிகளைத் தத்துவசாஸ்திர புஸ்தகங்கள் முதலியவற்றை ஒழித்துக் கர்த்தருடைய வசனத்தை வாசித்துத் தியானித்துப் பரிசுத்த ஜீவியஞ்செய்து ஒருவரோடொருவர் சமாதானமாய் வாழும்படி புத்திசொன்னார். அவர் இப்படிச் சன்னியாசிமடங்களுக்குப் போனதினால் அதிக நன்மை உண்டாயிற்று. அகஸ்தின சன்னியாசிகளில் அநேகர் சுவிசேஷத்தைக் கூறும் உத்தம பிரசங்கிகளானார்கள்.

லூதருக்கு அக்காலத்தில் வேலை அதிகம். " எந்தவேளையும் எனக்கு இரண்டு லிகிதர் வேண்டும். நாள்முழுவதும் கடிதங்கள் எழுதின வண்ணமாய் இருக்கவேண்டியதாயிருக்கிறது, நான் மடத்தில் பிரசங்கம் செய்யவேண்டும், சாப்பாட்டுவேளையில் மடத்தாருக்கு ஜெபம் செய்யவேண்டும், சபை ஊழியமும் பார்க்கவேண்டும், பவுல் அப்போஸ்தலன் நிருபங்களில் உபந்நியாசம் செய்யவேண்டும், இவைகளெல்லாவற்றோடும் சங்கீத புஸ்தகத்தின்பேரில் வியாக்கியானமும்



எழுதவேண்டும் " என்று அக்காலத்தில் தமக்கிருந்த பற்பல வேலைகளைப்பற்றி எழுதியிருக்கிறார்.

இப்படியிருக்கும்போது உவிட்டின்பர்க் நகரத்தில் ஒரு பெரிய கொள்ளைநோய் வந்தது. அநேகம் குருமார் அவ்விடத்தைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள்; லூதரோ அவ்விடத்திலிருந்து தம்முடைய ஊழியங்களைக் குறைவற நிறைவேற்றிவந்தார். அவரை அவ்விடத்தைவிட்டுப் போகும்படி ஆலோசனைசொன்ன ஒருவருக்கு அவர் சொன்னதாவது:—" என்னை இவ்விடத்தைவிட்டு ஓடிப் போகச்சொல்லுகிறீர். கொள்ளைநோய் அதிகரித்தால் இவ்விடத்திலிருக்கும் சன்னியாசிகளைப் பற்பல இடங்களுக்கு அனுப்பி விடுவேன், நானோ இங்கேயே யிருப்பேன். என்னை இவ்வூழியத்திற்கு அழைத்தவர் என்னைக் கூப்பிடுமட்டும் அவர் என்னை வைத்த இடத்திலேயே நான் தரித்திருப்பேன். நான் மரணத்திற்கு பயப்படாதவன் என்று சொல்லவில்லை; ஆனால் கர்த்தர் என்னை மரண பயத்திற்குத் தப்புவிப்பார் என்று உறுதியாய் நம்புகிறேன் " என்றெழுதினார்.

லூதருக்கு நாளடைவில் சகல காரியங்களும் தெளிவாய்த் தோன்றின. கிறிஸ்தவர்கள் என்று சொல்லியும் சடங்காசாரங்கள், சகுனங்கள், குறிகள், பில்லி சூனியங்கள், நல்ல நாட்கள் முதலியவற்றைப்பார்த்து அநுசரித்துவரும் பொய்க் கிறிஸ்தவர்களின் தவறுகளை எடுத்துக் காட்டத்தொடங்கினார். மனிதன் தன்னுடைய சொந்தக் கிரியைகளினால் தன் பாவத்தை நீக்கச் சக்தியற்றவனென்றும், தவசுமுதலிய நற்கிரியைகளினால் தன்னை நீதிமானாக்கிக் கொள்ளமாட்டானென்றும் வற்புறுத்திப் போதித்துவந்தார்.

1516-ம் வருஷத்தில் ஜனங்களுக்குள் அக்காலத்தில் இருந்த சில தப்பான போதகங்களை நீக்கும்படி 99 சித்தாந்தங்களை எழுதி மற்றவர்கள் அதற்கு ஆட்சேபனை சொல்லும்படி கேட்டார். அவைகளிலெல்லாம் மனிதன் தன் சுயமுயற்சியால் தன்னுடைய இரட்சிப்பை அடையக்கூடாதவனாயிருக்கிறான் என்னும் சத்தியத்தையே வற்புறுத்திக் காட்டினார்.

" நீதியானவைகளைச் செய்கிறதினால் நாம் நீதிமான்களாகிறதில்லை. நீதிமான்களானபின், நீதியானவைகளைச் செய்கிறோம்."

" கிறிஸ்து இயேசுவை நம்புகிறவன் எல்லாக் காரியங்களையுஞ் செய்ய வல்லவனாயிருக்கிறதால், மனிதருடைய சித்தத்தினாலாவது பரிசுத்தவான்களினாலாவது நமக்கு உதவி கிடைக்கும் என்றெண்ணுவது விருதா."

இந்தச் சித்தாந்தங்கள் பிரசித்தமானவுடன் எல்லாரும் அவைகளை வாசிக்கத் தலைப்பட்டார்கள். இதுதான் மார்க்க சீர்திருத்தத்திற்கு ஆரம்பமாயிருந்தது. லூதர் அவைகளுக்கு ஆட்சேபனை சொல்லக் கேட்டிருந்தும் ஆட்சேபனை செய்வார் ஒருவருமில்லை.

1517-ம் வருஷம் லூதர் சாக்ஸனி மாகாணத்துப் பிரபுவாகிய ஜோர்ஜ் என்பவர்முன் பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தில் லூதர் எம்பெருமான் இயேசுநாதரால் மீட்பு இலவசமாய்க் கிடைக்கும் என்று சொன்னது அப்பிரபுவுக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. அந்த பிரபு தம்முடைய ராஜசபையிலுள்ள ஓர் பெருமாட்டியிடம் அப்பிரசங்கம் நன்றாயிருந்ததா என்று கேட்டபோது அந்த அம்மாள் "இவ்விதமான இன்னொரு பிரசங்கத்தைக் கேட்டால் நான் சமாதானத்தோடு மரிப்பேன்" என்றார்கள். இதற்கு ஒரு மாதத்திற்குப் பின்பு அந்த அம்மாள் மிகவும் வியாதிப்பட்டு, இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அருளப்பட்டிருக்கும் கிருபையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு சந்தோஷத்தோடும் சமாதானத்தோடும் மரித்தார்கள்.

லூதர் ரோமான் மார்க்கத்தின் குறைவுகளை அறிந்திருந்தாலும் பாப்புவிற்கும் ரோமான் மார்க்கத்திற்கும் அடியவராய் நடந்துவந்தார். அக்காலத்தில் அவர் தாமிருந்த நிலைமையைப்பற்றி பின் ஒருதரம் அடியில் கண்டவாறு எழுதியிருக்கிறார். "நான் பாப்புமார்க்கத்தில் வெறிபக்தியுடையவனான சன்னியாசியாயிருந்தேன். பாப்புவிற்குக் கீழ்ப்படியமாட்டேன் என்று சொல்லத் துணிபவர்களைக் கொலைசெய்ய ஆயத்தமாயிருந்தேன்."

## 9. பாவ மன்னிப்புச் சீட்டுகள்.

ரோமான் சபையில் பாவங்களுக்கேற்ற தவசு உண்டு. மனிதர் பாவத்திற்காகத் துக்கப்பட்டு மனந்திரும்பி, பாவத்திற்குரிய தண்டனையைத் திருப்பும்படியாகத் தங்களைத் தாங்களே தண்டித்துக் கொள்ளும் தண்டனையே தவசு. அநேகவகையான தவசு உண்டு. சிலர் உபவாசமிருப்பார்கள், சிலர் சவுக்கால் தங்களை அடித்துக் கொள்ளுவார்கள், சிலர் மந்திரங்களை உச்சரிப்பார்கள், வேறு சிலர் மயிரால் பின்னின உட்சட்டைகளைத் தரித்துக்கொள்ளுவார்கள். உத்தரிக்கும் ஸ்தலத்தைப்பற்றி முன் சொன்னோம். பாவமன்னிப்புச் சீட்டுகள் இவ்வுலகத்தில் செய்யும் பாவத்திற்குரிய தவசைமாத்திரமல்ல உத்தரிக்கும் ஸ்தலத்தில் அனுபவிக்கும் பாடுகளையும் தொலைக்குமென்று அக்காலத்தில் ரோமான் மார்க்கத்தார் போதித்து வந்தார்கள். எல்லாத் தவசுகளையும் மன்னித்துவிடும் மன்னிப்புச்



சீட்டு "பூரண" சீட்டு. கொஞ்சத் தவசுகளை மாத்திரம் மன்னித்துவிடும் சீட்டு "குறை"ச்சீட்டு.

"பாவமன்னிப்புச் சீட்டு" என்னும் வார்த்தை முதல் முதல் 11-ம் நூற்றாண்டில் வழங்கிற்று. பாலஸ்தீனா தேசத்திற்கு யாத்திரைபோன கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்திய மகம்மதிய அரசர் வசமிருந்து பாலஸ்தீனா தேசத்தைப் பிடிக்கும்படி செய்த யுத்தங்களின் காலத்தில் இச்சீட்டுகள் வழங்கிவந்தன. யாராவது இப்படிப்பட்ட யுத்தத்தில் போர்புரிந்தால் அல்லது அதற்குப் பொருள் சகாயம் செய்தால் அவன் தவசு செய்யவேண்டியதில்லை. 1513-ம் வருஷத்தில் 10-ம் லியோ பாப்புவானார். அவர் ரோமாபுரியிலிருந்த பரிசுத்த பேதுருவின் ஆலயத்தைச் சிறப்பாய்ப் புதுப்பித்துக் கட்டப் பிரியங்கொண்டார். இதற்கு வெகு திரவியம் வேண்டுமென்று கண்டு பாவமன்னிப்புச் சீட்டுகளை விற்கத் தலைப்பட்டார்.

பற்பல ஊர்களில் இச்சீட்டுகள் விற்பனையாகும்படி காரியகாரர் ஏற்படுத்தப்பட்டார்கள். ஜர்மானியா தேசத்தாரின் பாவங்களையெல்லாம் மென்ட்ஸ் பட்டணத்திலிருக்கும் சிரேஷ்ட கண்காணியாரிடம் ஒப்பிவித்திருந்து. அவர் ஜான் டெட்ஸல் என்னும் தொமினிக்க சன்னியாசியைத் தம்முடைய காரியஸ்தனாக ஏற்படுத்தினார். டெட்ஸல் பரம துன்மார்க்கன்; இவனுடைய துர்நடத்தைக்காக மாக்ஸிமிலியன் சக்கிரவர்த்தி இவனை ஒரு சாக்கில் கட்டி ஆற்றில் போட்டுவிடும்படி உத்தரவுசெய்தார். ஆனால் சாக்ஸனிதேசத்து பிரபு இவனுக்காகப் பரிந்துபேசினதால் சக்கிரவர்த்தி இவன் குற்றத்தை மன்னித்தார். இவன் வியாபாரத்தில் கெட்டிக்காரனானதால் சிரேஷ்ட குரு இவனை நியமித்தார்.

டெட்ஸல் பாவமன்னிப்புச் சீட்டு விற்க வரும்போது மூன்று குதிரைவீரர் சூழ்ந்துவர ஓர் அழகிய ரதத்தில் ஏறிவருவான். அவ்விடத்திலுள்ள குருமார், சன்னியாசிகள், சன்னியாஸ்திரீகள் முதலானோர் தீவட்டி பிடித்தும், வியாபாரிகள் முதலானோர் கொடி பிடித்தும் ஜனங்களில் பெரியோர் சிறியோர் ஆண்பெண் முதலிய எல்லோரும் ஊருக்கு வெளியே இவனைச் சந்திக்க எதிர்கொண்டு போவார்கள். மணிகள் ஒலித்து வாத்தியம் முழங்க டெட்ஸலின் பின்னே யாவரெல்லாரும் ஆலயத்திற்குட் புகுவார்கள்.

பாப்புவின் முத்திரைபோட்ட கட்டளைப் பிரமாணத்தைச் சூரியகாந்திப் பட்டால் தைத்த ஓர் மெத்தையின்மேல் அல்லது தங்கச்சரிகையின்மேல் வைத்து அவன்முன்னே கொண்டுபோவார்கள். அதன் பின் டெட்ஸல் தொமினிக்க சன்னியாசி உடைதரித்து கையில் ஓர் பெரிய செங்குருசேந்தி வருவான்.

கோவிலில் வந்தவுடன் பீடத்தின்முன் சிலுவையை வைத்து அதின்பேரில் பாப்புவின் சின்னங்களைத் தூக்கிவைப்பார்கள். றெற்ஸெலுக்கு அச்சமயத்தில் 63 வயது. அவன் கிழவனாயிருந்தாலும் பலசாலியாயிருந்தான். இவையெல்லாம் ஆனபின் அவன் பிரசங்க பீடத்தின் மேல் ஏறி, பாவமன்னிப்புச் சீட்டுகளைப்பற்றி அடியிற் கண்டவாறு பிரசங்கம் செய்வான்.

"பாவமன்னிப்புச் சீட்டுகள் தேவனுடைய ஈவுகளில் மிகவும் அருமையானவை. இங்கே இருக்கும் செஞ்சிலுவைக்கு இயேசுநாதரின் சிலுவைக்குரிய மகத்துவம் உண்டு. என்னண்டை நெருங்கிச் சேர்ந்தால் நீங்கள் இனிச் செய்ய விரும்பும் பாவங்களுக்குங்கூட மன்னிப்புத்தரும் முத்திரைபோட்ட பத்திரங்களைத் தருவேன். பாவமன்னிப்புச் சீட்டைக்கொண்டு மன்னிப்புப் பெறக்கூடாத பெரிதான பாவம் ஒன்றுமில்லை. அதிகமாய்ப் பணம் கொடுத்தீர்களானால் எல்லாம் மன்னிக்கப்படும்."

"இந்த மாத்திரமோ? பாவ மன்னிப்புச் சீட்டு உயிருள்ளோரை மாத்திரமல்ல, செத்துப்போனவர்களையும் ரட்சிக்கும்."

"குருக்களே, பிரபுக்களே, வியாபாரிகளே, மனைவிகளே, கன்னிகைகளே, வாலிபரே, பரிதாபத்திலிருக்கும் உங்கள் பெற்றோர் கதறுகிற துக்கமானவர்களுடைய சத்தத்தைக் கேளுங்கள். 'கொடிய வாதனையைச் சகிக்கிறோம். கொஞ்சம் பணம் கொடுத்தால் நாங்கள் விடுதலைபெறுவோம். உங்களால் கொடுக்கக்கூடுமென்றாலும் கொடுக்காமலிருக்கிறீர்கள்' என்கிறார்களே."

இப்படி அவன் பலத்த சத்தத்துடன் சொல்லவே ஜனங்களெல்லாம் பயந்து நடுங்குவார்கள். றெற்ஸெல் திரும்பவும் சொல்வான்:—

"என் பணப்பெட்டியினடியில் உங்கள் பணம் விழுந்த சத்தம் கேட்டவுடனே உத்தரிக்கும் ஆத்துமா விடுவிக்கப்பட்டுப் பரலோகம் போகும். புத்தியற்ற ஜனங்களே, மிருகத்துக்கு ஒப்பானவர்களே, இவ்வளவு தயவாய்க் கடவுள் உங்களுக்கு அருளும் கிருபையை அறியாதிருக்கிறீர்களே.. பரலோகம் இன்று எப்பக்கத்திலும் திறந்திருக்கிறது; உள்ளே போகமாட்டோம் என்று சொல்லுகிறீர்கள். இன்றைக்கு அநேக ஆத்மாக்களை மீட்க உங்களால் கூடும். புத்தியற்ற மூடமனுஷரே, எட்டு அணா கொடுத்தால் உங்கள் தந்தையை உத்தரிக்கும் ஸ்தலத்திலிருந்து மீட்கலாமே. நன்றிகெட்ட நீங்கள் மீட்கமாட்டோம் என்கிறீர்களோ? நான் சொல்லுகிறதைக் கேளுங்கள், நீங்கள் போடுவதற்கு ஒரே சட்டை இருந்தாலும் அந்தச் சட்டையையும் விற்று இந்தக் கிருபையையும் பெறத்தகும்."





றெற்ஸெலும் பணப்பெட்டியும்.

இதன்பின் றெற்ஸெல் பணம் சேர்க்கிற காரணத்தைப்பற்றிச் சொல்லுவான்.

"பரிசுத்த பேதுரு, பவுல் என்பவர்களின் ஆலயத்தை உலகத்தின் காட்சிகளிலெல்லாம் சிறந்து விளங்கத்தக்கதாகப் புதுப்பித்துக் கட்டப்போகிறோம். அந்தக் கோவிலில் பரிசுத்த பவுல் பேதுரு என்பவர்களையும் இன்னும் அநேக இரத்தச் சாட்சிகளையும் அடக்கம் செய்திருக்கிறது. அவர்களுடைய பரிசுத்த சரீரங்கள் இப்போது கட்டடம் இடிந்து கிடக்கிறதினால் எல்லாராலும் மிதிபட்டு நசுங்கி, அசுத்தப்பட்டு, மழையிலும் பனியிலும் அடிபட்டு நீரில் மிதந்து அவமரியாதைக் குட்பட்டுவருகின்றன. ஐயோ! இந்தப் பரிசுத்த தேகங்கள் எத்தனைநாள் இப்படி மிதிபட்டு அவமதிக்கப்படும்?"

இப்படி அவன் சொன்னவுடன் எல்லோர் மனமும் உருகி பரிசுத்த பவுல், பேதுரு என்பவர்களின் சரீரங்களை நனையவொட்டாமல் பாதுகாக்கப் பிரயாசப்படும் 10-ம் லியோவுக்குப் பணசகாயம் செய்ய மிகவும் ஆசைப்படுவார்கள்.

இவ்விதமாய் அவன் பேசியபின்பு பணம் போடுகிற பெட்டியை அவர்களுக்குக் காட்டி, "உங்கள் பணத்தைக் கொண்டுவாருங்கள், பணம் கொண்டுவாருங்கள், பணம் கொண்டுவாருங்கள்" என்று மும்முறை சொல்லிப் பிரசங்கத்தை முடிப்பான். அவன் பிரசங்கம் முடிந்தபின், பிரசங்கபீடத்தி லிருந்திறங்கி, படிக்கட்டின் ஓரத்திலிருந்த பணப்பெட்டியில் எல்லோர் செவியிலும் ஓசைபட ஓர் வெள்ளிக்காசைப் போடுவான்.

அதன்பின், பாப்புவின் சின்னங்கள் பொருந்திய பாவமன்னிப்புப் பீடங்களை காட்டுவார்கள். அப்பீடங்களினருகில் ஜனங்கள் கையிற் பணங்கொண்டுவந்து தங்கள் பாவங்களைக் குருக்களிடம் அறிக்கையிடுவார்கள். அறிக்கையிட்டபின் பணத்தைக் கொண்டு அண்டை நிற்கும் பாவமன்னிப்புச் சீட்டு விற்கிறவனிடம் கொண்டு போவார்கள். ஒவ்வொரு பாவத்திற்கும் அதற்குத் தகுந்த விலையுண்டு. பணக்காரனுக்கு அதிக விலையும், எளியவனுக்கு அவனுக்குத் தகுந்த விலையுமிருக்கும். ஆனால் ஒவ்வொருவரும் அவனவன் எவ்வளவு கொடுக்கக்கூடுமோ, அவ்வளவையும் கொடுக்கவேண்டும். பல பாரியுடையவனுக்குத் தண்டனை 20 ரூபாய்; கோவிலிலிருந்து திருடினவனுக்கும் பொய்ச்சத்தியம் செய்தவனுக்கும் 45 ரூபாய்; கொலைபாதகனுக்கு 40 ரூபாய்; பில்லிசூனியக்காரனுக்கு 10 ரூபாய். பாவமன்னிப்புச் சீட்டுகளிலொன்று அடியிற் கண்டவாறிருக்கும்:—

**நம்முடைய இரட்சகராகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர் ...... ஆகிய உன்மேல் இரங்கி தம்முடைய பரிசுத்தபாடுகளின் புண்ணியத்தால் உனக்கு மன்னிப்பு அருளுவாராக. அவர் உனக்கு ஒப்புவித்திருக்கும் அப்போஸ்தல வல்லமையினால் நீ பெற்றுக் கொள்ளவேண்டிய எல்லாத் தண்டனைகள், தீர்ப்புகள், அபராதம் முதலிய குரு சிட்சைகளினின்றும் உனக்கு மன்னிப்பு அருளுகிறேன். அதுவுமல்லாமல் அப்போஸ்தல ஆதீனத்திலிருக்கும் நம்முடைய பரிசுத்த பிதாவாகிய பாப்புவிற்குமாத்திரம் உனக்குப் பாவ மன்னிப்புக் கொடுக்க அதிகாரம் இருந்தாலும், நான் நீ செய்த சகலவிதமான பாவங்களையும், குற்றங்களையும், அக்கிரமங்களையும் உனக்கு மன்னிக்கிறேன். அவ்வித பாவங்களினால் உனக்கு நேரிட்டிருக்கும் பலவீனம் வெட்கம் முதலிய எல்லாக் கறைகளையும் நீக்கி விடுகிறேன். நீ உத்தரிக்கும் ஸ்தலத்தில் சகிக்கவேண்டிய வேதனைகளிலிருந்து உன்னை நீங்கலாக்குகிறேன். திருச்சபையின் நற்கருணைகளை நீ திரும்பவும் பெற்றுக்கொள்ள உன்னைப் பாத்திரனாக்குகிறேன். இப்படி நான் பரிசுத்தவான்களின் சபையில் உன்னைச் சேர்த்து ஞானஸ்நானத்தில் உனக்கிருந்த குற்றமின்மையையும் பரிசுத்தத்தையும் கட்டளையிடுகிறேன்; இவ்விதமாய் நரகவாசல்கள் அடைபட்டுப்போயின், பரலோகவாசல் உனக்குத் திறக்கப்படும். கடவுள் உனக்கு நல்ல ஆயுளைக் கட்டளையிட்டால் இப்போது பெற்ற நன்மை உனக்கு எப்போதும் மாறாமல் நிலைத்திருக்கும்."**

"பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே. ஆமென்."

"நமது காரியதரிசியாகிய ஜான் டெற்ஸெல் இதில் தன் கையொப்பம் வைத்திருக்கிறான்."



இந்தியாவில் பிராமணர் சரிதையென்று சொல்லி ஜனங்களை ஏமாற்றிப் பணம் பிடுங்குவதுபோல இது பணம் பிடுங்குவதற்கு ஓர் திருட்டுவகைதான்.

இந்தப் பாவமன்னிப்புச் சீட்டில், எம்பெருமான் இயேசுகிறிஸ்துவின் பேரால்தான் பாவமன்னிப்பென்று கண்டிருந்தாலும், அநேக பொய்யான காரியங்களும் அதில் அடங்கியிருக்கின்றன. அப்படிப்பட்ட பொய்களை நம்புகிறவர்கள் மோசம்போவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துநாதர் தம்முடைய உதிரத்தைச் சிந்தி வாங்கின பாவமன்னிப்பைப் பணத்திற்கு விற்கிறது எவ்வளவு துணிகரமான காரியம்? "பாவஞ் செய்கிற ஆத்துமா சாகும்" என்று கடவுள் சத்தியவாக்களித்திருக்க, பாவஞ்செய்ய உத்தரவுகொடுப்பது எவ்வளவு பெரிய அக்கிரமம்!

இப்படித் திருட்டுத்தனமாய்க் கிடைக்கும் பணம் மோசம் போகாதபடி, பணப்பெட்டிக்கு மூன்று சாவிபோட்டு ஒன்று டெற்ஸெலிடத்திலும், ஒன்று பொக்கிஷக்காரன் கையிலும், ஒன்று ஊர் அதிகாரிகையிலும் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. குறித்தநாளில் எல்லாரும் ஒன்றுசேர்ந்து, ஓர் சாதனை லிகிதன்முன் பெட்டியைத் திறந்து பணத்தை எண்ணிப் புஸ்தகங்களில் குறிப்பிட்டுக்கொள்வார்கள்.

டெற்ஸெல் இப்படிப் பிரசங்கம்செய்து ஜனங்களை ஏமாற்றிக் கொண்டு திரிந்தாலும், அவனை எதிர்க்கத்தக்க படிப்பாளிகள் ஒருவ

ருயில்லை. ஜனங்கள் பெரும்பாலும் அறியாமையும் வீண்பக்தியும் நிறைந்தவர்களாயிருந்தார்கள். டெற்ஸெல் சுவிக்கா என்னும் ஓர் ஊரில் தன் செங்குருசை நாட்டி, நல்ல பணஞ்சேர்த்து, அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுப்போக இருக்கும் சமயத்தில், அவ்வூரிலுள்ள குருக்களும் சபைத்தலைவரும் டெற்ஸெலைத் தங்களுக்கு ஒரு விருந்து செய்யக் கேட்டுக்கொண்டார்கள். டெற்ஸெல் என்ன பண்ணுவான்! அவ்வளவு பணம் சேர்த்த இடத்தில் விருந்து பண்ண வேண்டியது நியாயந்தானே! ஆனால் பணத்துக்கு எங்கே போவான்! எல்லாம் எண்ணி முத்திரை போட்டிருக்கிறது. உடனே ஓர் உபாயம் பண்ணினான். கோவிலில் சாமணி அடிக்கச் சொன்னான். ஏதோ விசேஷம் என்று ஜனங்களெல்லாரும் கூட்டமாய் வந்து சேர்ந்தார்கள். டெற்ஸெல் வந்த ஜனங்களைப் பார்த்து, "நான் இன்று காலையில் புறப்படவேண்டுமென்று தீர்மானித்திருந்தேன். ஆனால் நேற்று ராத்திரி எனக்குத் தூக்கமேயில்லை. கல்லறைத் தோட்டத்திலிருந்து வந்த பெருமூச்சுகளை நான் என்ன சொல்லட்டும்! அங்கிருந்த ஒரு ஏழை ஆத்துமா என்னைக் கூப்பிட்டுத் தான் சகிக்கும் நிர்ப்பந்தத்தினின்றும் தன்னை விடுவிக்க என்னைக் கெஞ்சிற்று. நான் மாட்டேனென்று சொல்லாமல் இன்று மட்டும் தரித்தேன். இந்த நிர்ப்பாக்கியம் நிறைந்த ஆத்துமாவுக்காக கிறிஸ்தவர்களாகிய நீங்கள் பரிதாபப்படுவதைப்பார்க்கப்போகிறேன். நானே முதலாவது பணங்கொடுக்கிறேன்; என்னைப் பார்த்துப் பணங்கொடாதவன் நியாயத்தீர்ப்புக்குப் பாத்திரன்" என்றான். ஏழை ஜனங்கள் என்னசெய்வார்கள்! யார் ஆத்துமா என்று தெரியும்! எல்லாரும் மனப்பூர்வமாய் கொடுத்தார்கள். சுவிக்கா ஊரின் ஏழை ஆத்துமாவுக்காகக் கொடுத்த பணத்தைக்கொண்டு டெற்ஸெலும் குருக்கள் மாரும், சபை அதிகாரிகளும் நன்றாய்ச் சாப்பிட்டுக் குடித்துச் சந்தோஷித்தார்கள்.

வாகேனோ என்னும் ஓர் இடத்தில் பாவமன்னிப்புச் சீட்டு விற்றபோது, ஒரு சக்கிலியன் பெண்சாதி 5-ரூபாய்க்கு ஓர் பாவமன்னிப்புச் சீட்டை வாங்கினாள். கொஞ்ச நாட்களுக்குப்பின் அவள் இறந்துபோனபோது, அவள் புருஷன் தன் பெண்சாதியின் ஆத்துமாவுக்காக ஜெபஞ்செய்ய குருக்களுக்குப் பணம் கொடுக்கவில்லை. குருக்கள்மார் இவன் மார்க்கத்தை அசட்டைசெய்கிறான் என்று அவன்மேல் பிரியாது செய்தார்கள். சக்கிலியன் பாவமன்னிப்புச் சீட்டைத் தன் சட்டைப்பையில் போட்டு நியாயாதிபதியின் முன் வந்து நின்றான். நியாயாதிபதி "உன் பெண்சாதி இறந்துபோனாளா" என்றார். "ஆம்" என்று உத்தரவு சொன்னான். "அவளை என்ன செய்தாய்" என்று நியாயாதிபதி கேட்க, அவன் "நான்



அவளை அடக்கம்பண்ணி அவள் ஆத்துமாவைக் கர்த்தருக்கு ஒப்புவித்தேன்" என்றான். "என்னடா அவள் ஆத்தும மீட்புக்காக ஜெபஞ்செய்ய ஒழுங்கு பண்ணவில்லையா" என்று நியாயாதிபதி கேட்டதற்கு, அவன் "அது அவசியமில்லை; அவள்மரித்தவுடன் நேரே மோட்சத்திற்குப் போனாள்" என்றான். "உனக்கு அது எப்படித்தெரியும்?" என்றார். "இதோ அதற்குச் சாட்சி" என்று சொல்லி, தன் பையிலிருந்த பாவமன்னிப்புச் சீட்டை குருவுக்கு முன் எடுத்து விரித்தான். அதில் அந்தப் பெண்பிள்ளை சாகும்போது உத்தரிக்கும் ஸ்தலத்திற்குப் போகாமல் நேரே மோட்சம் போவாள் என்று கண்டிருந்தது. மேலும் அவன் "இதற்குப்பின் ஜெபம் முதலியவை வேண்டும் என்று இந்த குரு சொல்லுவது நிசமானால், நம்முடைய பரிசுத்த பிதாவாகிய பாப்புவானவர் என் பெண்சாதியை ஏமாற்றிவிட்டார்; அவள் ஏமாந்துபோகாவிட்டால் இந்த குரு என்னை ஏமாற்றப் பார்க்கிறார்" என்றான். இதற்கு மறுமொழி ஒன்றும் சொல்ல ஏதுவில்லாமல் நியாயாதிபதி அவனை விடுவித்தார்.

அன்னபர்க் என்னும் ஒரு ஊரில் டெற்ஸெல் இரண்டுமாதம் இருந்து அதை விட்டுப்போகப் புறப்படும்போது ஜனங்களைப் பணம் கொடுக்கச்சொல்லி மிகவும் நெருக்கினான். "நான் சீக்கிரத்தில் இந்த செங்குருசை எடுத்துப்போடுவேன், அப்போது மோட்சவாசல் மூடிப்போம். இப்போது உங்கள்முன் பிரகாசிக்கும் கிருபையின் சூரியன் மறைந்துபோகும்" என்று நாடோறும் சொல்லிவருவான். கடைசியாய்த் தான் போகுமுன் பரிசுத்த ஆவியின் திருநாளில் கடவுள்முகத்தைப் பார்த்து எளியவர்களுக்குப் பாவமன்னிப்புச் சீட்டுகளை இலவசமாய்க் கொடுப்பேனென்று வாக்களித்தான்.

மைக்கோனியஸ் என்னும் ஓர் எளிய மாணாக்கன் இப்படி இலவசமாய்ப் பாவமன்னிப்பைப் பெற ஆசைப்பட்டு டெற்ஸெலிடத்தில்வந்து, "நான் ஒரு ஏழைப்பாவி எனக்கு இலவசப் பாவமன்னிப்பு வேண்டும்" என்றான். டெற்ஸெலோடிருந்தவர்கள் அவனைப் பார்த்து, "கிறிஸ்துவின் சபைக்குப் பண உதவிசெய்து அதைப் பலப்படுத்துகிறவர்களுக்குத்தான் கிறிஸ்துவின் உத்தரவாத புண்ணியத்தில் பங்குண்டு" என்றார்கள். அதற்கு மைக்கோனியஸ், "கோவிற் சுவற்றிலும் வாசலிலும் பாவமன்னிப்பு இலவசமாய்க் கிடைக்கும் என்று ஒட்டியிருக்கிற விளம்பரம் பொய்யா?" என்று கேட்டான். அதற்கு "நாலு அணாவாவது கொடு" என்றார்கள். "என்னால் கூடாது" என்றான். "ஆறுகாசு கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டார்கள். அதற்கு அவன் "என்னிடத்தில் அதுவுமில்

லை; விலைகொடுத்து வாங்கும் பாவமன்னிப்பு எனக்கு வேண்டாம். கடவுளுக்காக இலவசமாய்க் கொடுக்கும் மீட்பே எனக்கு வேண்டும். 5-காசில்லாமல் தன் இரட்சிப்பை இழந்த ஒரு ஆத்துமாவுக்காக நீங்கள் கணக்குக் கொடுக்கவேண்டும்" என்று சொல்லிப் போய்விட்டான்.

மைக்கோனியஸ் இதைப்பற்றிப் பிற்காலத்தில், "இவ்விதமாய் இரக்கமின்றி அவர்கள் என்னை அனுப்பிவிட்டது எனக்கு அதிக வருத்தத்தை யுண்டாக்கிற்று. ஆனாலும் எனக்குள்ளேயிருந்த தேற்றரவாளர், 'கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னும் தம்முடைய குமாரனினிமித்தம் என்னுடைய பாவங்களை பணமில்லாமல் கிரயமில்லாமல் மன்னிக்கும் கடவுள் இருக்கிறார்' என்று சொல்லி என்னைத்தேற்றினார். அவர்களைவிட்டு நான் போகும்போது பரிசுத்த ஆவியானவர் என் இருதயத்தைத் தொட்டார். நான் கண்ணீர் சொரிந்தழுது 'கர்த்தாவே என்னிடத்தில் பணமில்லையென்று இந்த மனிதர் என் பாவங்களை மன்னிக்கமாட்டோம் என்கிறார்கள். நீரே என்மேல் இரங்கி உம்முடைய சுத்த கிருபையினால் என் பாவங்களை மன்னியும்" என்று கெஞ்சினேன். அப்போது எனக்குண்டான ஆனந்தத்தை வர்ணிக்க என்னால் முடியாது. தேவனை எனக்குத் தகப்பனாயிருக்கக் கேட்டேன். என்னைத் தமக்குப் பிரியமானபடி நடத்த அவரைக் கெஞ்சினேன். என் சுபாவம் மாறிப் புதிதாக்கப்பட்டது. முன்னே எனக்கு இன்பத்தைக் கொடுத்தவைகள் அப்போதே அருவருப்பாயின. கடவுளோடு ஜீவித்து, அவரைப் பிரியப்படுத்துவதே என் உத்தம வாஞ்சையாயிற்று" என்று எழுதியிருக்கிறார்.

இந்த மைக்கோனியஸ் பிற்காலத்தில் மார்க்க சீர்திருத்தஞ் செய்தவர்களில் ஒருவர். மார்க்க சீர்திருத்தத்தின் சரித்திரத்தை இவர் எழுதியிருக்கிறார்.

டெற்ஸல் ஒருமுறை தான்வைத்த கண்ணியில் தானே விழுந்தான்; அவன் பிரசங்கத்தைக் கேட்ட ஒர் பிரபு அவன் வஞ்சகங்களைப்பார்த்துக் கோபமுண்டு அவனண்டைபோய் "இனிச் செய்யும் பாவங்களுக்கும் மன்னிப்புக்கொடுக்க உன்னால் கூடுமோ" என்று கேட்டார். அதற்கு டெற்ஸல், "அதற்கு என்ன சந்தேகம்? பாப்புவானவர் எனக்கு முழு அதிகாரமும் கொடுத்திருக்கிறார்" என்றான். அந்தப் பிரபு "அது நல்ல காரியந்தான். எனக்கு ஒரு சத்துரு இருக்கிறான், அவனுக்குக் கொஞ்சம் புத்தி கற்பித்துக் கொடுக்கவேண்டும்; அவனைக் கொல்ல எனக்குப் பிரியமில்லை. உனக்கு 10-வராகன் தருகிறேன். அந்தப் பாவத்தை மன்னிப்ப



தற்கு எனக்கு ஒரு சீட்டுக்கொடு" என்று கேட்டார். டெற்ஸல் அதிக பண ஆசைப்பட்டு அதற்குச் சம்மதியாமல் 30-வராகன் என்று ஒழுங்கு செய்து சீட்டைக்கொடுத்தான்.

டெற்ஸல் பாவமன்னிப்புச்சீட்டுக் கொள்ளைப்பணத்தைக்கொண்டு ஒரு காட்டின் வழியாய்ப் போகும்போது இந்தப் பிரபுவும் அவர் வேலைக்காரரும் அவனை எதிர்த்து, அடித்து, பணம் நிறைந்திருந்த அவன் பணப்பெட்டியைப் பிடுங்கிக்கொண்டு போய்விட்டார்கள். டெற்ஸல் அதிகூர்க்கத்துடன் நியாயாதிபதிகள் முன் போய் பிரியாது செய்தான். பிரபுவோ தான் செய்த பாவத்திற்காக முன்னமே பெற்றுக்கொண்ட மன்னிப்புச் சீட்டைக் காட்டினார். நியாயாதிபதி பிரியாதைத் தள்ளிவிட்டார்.

## 10. லூதர் பாவமன்னிப்புச் சீட்டுகள் விற்பது அக்கிரமம் என்று காட்டியது.

லூதர் 1516-ம் வருஷத்தில் டெற்ஸலைப்பற்றி முதல் முதல் கேள்விப்பட்டார். அவன் சொன்ன அநேக அக்கிரமமான வார்த்தைகளை அவர் மற்றவர்களால் கேள்விப்பட்டபோது, "கர்த்தருக்குச் சித்தமானால் அவனுக்கு சீக்கிரம் புத்தி வருவிக்கிறேன்" என்றார்.

லூதர் குருவாயிருக்கையில் ஒரு நாள் சபையாரிடம் பாவ அறிக்கை கேட்டுக்கொண்டிருந்தார். தாங்கள் மிகவும் பாவிகள் என்று அறிக்கையிட்ட அவர்களை லூதர் கண்டித்துத் தங்கள் ஜீவியத்தைச் சீர்ப்படுத்தச் சொன்னபோது, அவர்கள் தங்கள் பாவங்களை விடமாட்டோமென்றும் அப்படிச்செய்வது அவசியமில்லை யென்றும் சொன்னார்கள். ஏனென்று அவர் கேட்டதற்கு டெற்ஸலிடமிருந்து பாவமன்னிப்புச் சீட்டு வாங்கிவிட்டோம் என்றார்கள். அதற்கு லூதர், "நீங்கள் மனந்திரும்பாவிட்டால் எல்லாரும் சாவீர்கள்", என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொன்ன அருமையான வார்த்தைகளைச் சொல்லி, நான் உங்களுக்குப் பாவ விமோசனம் கூறமாட்டேன் என்று சொல்லிவிட்டார். மேலும் அவர், "இந்தப் பாவ மன்னிப்புச் சீட்டு வியாபாரிகளைப்பற்றி எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் உங்களுக்குக் கொடுக்கும் சீட்டுகளைப் பணங்கொடுத்து வாங்குகிறது பிசகு" என்று அவர்களைக் கண்டித்தார்.

உவிற்றன்பேர்க் நகரத்து ஜனங்கள் டெற்ஸலிடம் போய், லூதர் பாவமன்னிப்புச் சீட்டுகளை அவமதித்ததாகச் சொன்னார்கள்.

அதைக் கேட்டவுடன் டெற்ஸெல் கடுங்கோபமூண்டு சீறினான். ஜனங்களை மிகவும் பயமுறுத்தும்படி, அடிக்கடி ஊரின் மத்தியில் நெருப்பு மூட்டி, அதில் தான்விற்கும் பரிசுத்த பாவமன்னிப்புச் சீட்டுகளுக்கு விரோதமாய்ப் பேசுகிறவர்களைச் சுட்டெரிக்கத் தனக்கு அதிகாரம் உண்டென்று சொல்லுவான்.

லூதர் இந்த மிரட்டுக்கெல்லாம் பயப்படவில்லை. தைரியமாய்த் தன் கோவில் பிரசங்கபீடத்திலேறி பாவமன்னிப்புச் சீட்டுகளுக்கு விரோதமாய்ப் பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கத்தை அச்சிட்டுப் பிரசுரஞ்செய்தார். அதை வாசித்தவர்களெல்லாம் மிகவும் உணர்ச்சியடைந்தார்கள். டெற்ஸெல் அதற்கு ஒரு மறுமொழி எழுதினான். லூதர் அதற்கு ஏற்ற மறுவிடை எழுதினார்.

ஆனால் டெற்ஸெல் தன் வியாபாரத்தை விடவில்லை. திரும்பவும் தன் சீர்கேட்டின்படியே உற்சாகமாய்ப் பிரசங்கம் செய்துவந்தான். அதைக்கண்டு லூதர் முன்னிலும் அதிக வைராக்கியத்தோடு பாவமன்னிப்புச் சீட்டுகளுக்கு விரோதமாய்ப் பிரசங்கம் செய்தார். கடைசியில் சகல பரிசுத்தவான்களின் திருநாள் கிட்டிற்று. உவிற்றன்பேர்க் நகரத்தில் இது ஒர் முக்கியநாளாயிருந்தது. எலெக்டர் பிரபு கட்டின ஆலயம் பரிசுத்தவான்களின் ஞாபக சின்னங்களால் நிறைந்திருந்தது. அந்நாளில் பொன், வெள்ளி, விலையுயர்ந்த கற்கள் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்ட அந்த ஞாபக சின்னங்களை ஜனங்களுக்கு எடுத்துக் காட்டுவது வழக்கம். அந்நாளில் அவ்வாலயத்திற்குப் போய்ப் பாவங்களை அறிக்கையிட்டவர்கள் எல்லாருக்கும் பூரண பாவ விமோசனம் உண்டென்று சொல்வார்கள்.

இந்தத் திருநாளுக்கு முந்தினநாளில், அதாவது 1517-ம் வருஷம் அக்டோபர் 31உயில், லூதர் கோவிலுக்குப் போய் அங்கே கூடிவரும் விண்பத்திக்காரர் பார்த்து வாசிக்க, பாவமன்னிப்புச் சீட்டுகளின் போதனையைக் கண்டிக்கும் 95-சித்தாந்தங்களைக் கோவில் வாசலில் ஒட்டினார். அடியிற்கண்ட சில சித்தாந்தங்கள் அவற்றிலுள்ளவை:—

27. *பணம் பெட்டியில் ஓசைபட விழுந்தவுடன், உத்தரிக்கும் ஸ்தலத்திலிருக்கும் ஆத்துமா மோட்சத்திற்குப் பறந்துபோகிறது என்று சாதிக்கிறவர்கள் மனிதரின் புத்தியீனங்களையே போதிக்கிறார்கள்.*

36. *பாவத்திற்காக உண்மையாய் மனஸ்தாபப்படுகிற எந்தக் கிறிஸ்தவனும் பாவமன்னிப்புச் சீட்டுகளுடைய உதவியின்றி, இலவசமாய்ப் பாவத்தின் குற்றத்தினின்றும் தண்டனையினின்றும் மன்னிப்படைகிறான்.*

76. *பாப்புவின் பாவமன்னிப்புச் சீட்டு ஒரு அற்ப பாவத்தைக்கூட நீக்கக்கூடாததாயிருக்கிறது. பாவத்தின் குற்றத்தையாவது அதின் கறையையாவது நீக்க அந்தச் சீட்டுக்கு வல்லமையில்லை.*



லூதர் மென்ற்ஸ் நகரத்துச் சிரேஷ்ட அத்தியட்சருக்கு ஒரு தாழ்மையான கடிதம் எழுதி அக்கடிதத்தோடு இந்த சித்தாந்தங்களின் பிரதி ஒன்றை அனுப்பினார். ஆனால் அந்த அத்தியட்சர் அதைக் கவனிக்கவில்லை.

அக்காலங்களில், சர்வகலாசாலைகளிருக்கும் பட்டணங்களில், யாராவது ஒரு காரியத்தைப்பற்றி தர்க்கம்செய்ய எண்ணினால் அப்படிப்பட்ட தர்க்கம் பகிரங்கமாய் நடப்பிக்கப்படுவது வழக்கம். வர்த்தமானப் பத்திரிகைகள் இல்லாதகாலத்தில் இப்படிப்பட்ட தர்க்கங்கள் மூலமாய்த்தான் ஜனங்கள் அநேக காரியங்களை அறிந்து கொண்டார்கள்.

ஆனால் லூதரின் சித்தாந்தங்களுக்கு ஆட்சேபனைசொல்ல எற்படுவார் ஒருவருமில்லை. அந்தச் சித்தாந்தங்களைக் கோவில் வாசலில் ஒட்டியவுடன், அவைகள் மின்னொளிபோல் எங்கும் பரவின. இரண்டுவாரத்திற்குள் ஜர்மானியா தேசமெங்கும் பரவின. ஒரு மாதத்தில் ரோமாபுரிவரையும் பரவின. கொஞ்ச நாட்களுக்குப்பின் அவைகள் ஒல்லாந்து ஸ்பானியா தேசங்களின் பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டது மல்லாமல், ஒரு வியாபாரி அவைகளை எருசலேம் நகரம்வரையிலும் விற்கக்கொண்டுபோனான்.

உவிற்றன்பேர்க்கில் நடந்த சகல பரிசுத்தவான்களின் திருவிழாவை ஜர்மானியா தேசத்தின் எப்பக்கத்திலுமிருந்து பார்க்க வந்த யாத்திரைக்காரர், அவரவர் இடங்களுக்குத் திரும்பிப்போனபோது, பாவமன்னிப்புச் சீட்டுகளைக் கொண்டுபோகாமல் அச்சிட்டிருந்த லூதரின் கோட்பாடுகளைக் கொண்டுபோனார்கள்.

இவ்விதமாய் அவைகள் பரவின ; அவைகளை வாசியாதவரில்லை. சன்னியாசி மடங்களிலும் கல்விச்சாலைகளிலும் அவைகளைப்பற்றி சம்பாஷணைகளும் தர்க்கங்களும் நடந்தன.

ஒரு சன்னியாசி மடத்தலைவன் அதை வாசித்துப் பார்த்து "சரி, இவ்வளவுகாலமாய் நாம் எதிர்பார்த்திருந்த மனிதன் இதோ வந்தான். சன்னியாசிகளாகிய உங்களை அதிரச்செய்வான்" என்றார். மாக்ஸிமிலியன் சக்கரவர்த்தி இந்தக் கோட்பாடுகளை வாசித்து அவற்றை வியந்துபேசினார். அவர் சாக்ஸனி நாட்டு எலெக்டர் பிரபுவுக்கு "லூதர் என்னும் சன்னியாசியைப் பத்திரமாய்ப் பார்த்து வாரும்; ஒருகாலத்தில் அவன் உதவி நமக்கு வேண்டியதாயிருக்கும்" என்றெழுதினார். பாப்பு முதலில் இது அகஸ்தீனிய சன்னியாசிகளுக்கும் தொமினிக்க சன்னியாசிகளுக்கும் உள்ள ஓர் விகற்பம் என்று எண்ணினார். "மார்டின் லூதர் என்னும் சகோதரன் சமர்த்தன், அவனுக்கு விரோதமாய் மற்ற சன்னியாசிகள் பொறாமையினால் பலதும் சொல்லுகிறார்கள்" என்று எழுதினார்.

ஆனால் லூதரின் சிநேகிதரில் அநேகர் அவர் செய்கிறதைப் பார்த்துப் பயந்தார்கள்; பலர் அவரிடத்தில் தங்கள் அபீஷ்டத்தை வெளிப்படுத்தினார்கள். எலெக்டர் பிரபுவும் இப்படித் தொடங்கிய இந்த சண்டை என்னமாய் முடியுமோ என்று பயந்து விசனத்துடனிருந்தார். சர்வகலாசாலையிலிருந்த ஒரு வயதுசென்ற வித்தியா போதனர் இந்தக் கோட்பாடுகளைப் பார்த்து லூதரிடத்தில் "தம்பீ, உம்முடைய அறைக்குட் புகுந்து, கர்த்தாவே எனக்கு இரங்கும் என்று ஜெபியும்" என்று சொன்னார். லூதரிருந்த சன்னியாசி மடத்தைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் இவர் செய்கையைக் கண்டு பயந்தார்கள். அவர்களில் முக்கியரான சிலர் நடுக்கத்தோடு லூதரின் அறைக்கு வந்து, தங்கள் வகுப்பாருக்கு அவமானத்தை வருவிக்காதிருக்கும்படி அவரைக் கெஞ்சினார்கள். லூதர் அதற்குப் பிரதியுத்தரமாக "அருமையான தகப்பன்மாரே, இது தேவனால் உண்டாகாதிருந்தால் வீணாய்ப்போகும்; தேவனால் உண்டாயிருந்தால் நடக்கிறபடியே நடக்கட்டும்" என்றார்.

லூதர் சபைத்தலைவரில் சிலரும், ஜெர்மனியா தேசத்திலுள்ள வித்வான்களும் தன்பக்கம் சேர்ந்துகொள்வார்களென்று எண்ணினார். ஆனால் தாம் ரோமான் மார்க்கத்தவர் எல்லாருக்கும் எதிர்நின்று தன்னந்தனியே போர்செய்ய நேரிட்டதைக் கண்டு பயந்தார். அவர் சிறுவயது முதல் ரோமான் சபையை விசுவாசிகளின் தாய் என்றெண்ணி வந்தார். அந்தச் சபைக்கு விரோதமாய் ஏழைச் சன்னியாசியாகிய தாம் நிற்பதெப்படி என்று கலங்கினார்.

தம்முடைய சிநேகிதர் தம்மை நிந்தித்து, பயமுறுத்தி, தம்முடன் பேசாமலிருந்ததைப் பார்த்து அதைரியப்பட்டார். சத்துருக்கள் தம்மை எதிர்க்கும்போதோ திடன்கொண்டார். றெற்ஸல் லூதருடைய பிரசங்கத்துக்கு எதிருரை சொல்வேனென்றும், ஓடர் நதியருகே இருக்கும் பிராங்போர்ட் நகரத்தின் பேர்பெற்ற வித்தியாசாலையில், லூதரின் கோட்பாடுகளையெல்லாம் சில தாட்டாந்தங்களால் நிராகரிப்பேனென்றும் விளம்பரம் செய்தான்.

றெற்ஸல் அக்காலத்தில் மகா வேதசாஸ்திரி என்றெண்ணப்பட்ட காண்ராட் உவிம்பினு என்பவனைக் கூட்டிக்கொண்டு பிராங்க் போர்ட் நகரத்திற்குப் போனான். 1518-ம் வருஷம், ஜனவரி மாதம் 20-ம் தேதியில் அவனுக்கும் லூதருக்கும் தர்க்கம் நடந்தது. அதைக் கேட்க சமீபத்திலிருந்த சன்னியாசி மடங்களிலிருந்து 300 பேருக்கு மேலான சன்னியாசிகள் வந்திருந்தார்கள். றெற்ஸல் அவர்களுக்குத் தன் சித்தாந்தங்களை வாசித்துக்காட்டினான். அச்சித்தாந்தங்களிலொன்றில் "பணம் பெட்டியில் விழுந்த



மாத்திரத்தில் உத்தரிக்கும் ஸ்தலத்திலிருக்கும் ஆத்துமா பரலோகம் போகவில்லையென்று சொல்வது தப்பான கொள்கை" என்று சொல்லியிருந்தது.

றெற்ஸல் சொன்னவைகளைக்கேட்டு, வந்திருந்த 300 சன்னியாசிகளும் அகமகிழ்ந்திருந்தார்கள். அவனே வெற்றி சிறந்தவனாய் விளங்குவதுபோலத் தோன்றிற்று. ஆனால் அக்கூட்டத்திலிருந்த மாணாக்கருள் ஜான் நாப்ஸ்ட்ரா என்னும் ஓர் 20 வயதுள்ள வாலிபன் இருந்தான். அவன் லூதர் எழுதிய சித்தாந்தங்களை வாசித்து அவைகள் பரிசுத்த வேதாகமத்திற்கு இசைந்தவையாயிருந்தன வென்று கண்டான். சத்தியத்தைப் பாதுகாப்பதற்கு வேறொருவரும் எழும்பி வராததை அவன் கண்டு தானே எழுந்து றெற்ஸலை எதிர்த்தான். றெற்ஸல் கொஞ்சநேரம் அவனுடன் தர்க்கம்பண்ணி அவனை வெல்லக்கூடாமல் உவிம்பினு என்பவனை அவனோடு தர்க்கம் செய்யச் சொன்னான். உவிம்பினு என்பவனும் அவனுக்கு உத்தரவு சொல்ல வழியில்லாமல் தர்க்கம் முடிந்ததென்று சொல்லி, றெற்ஸலுக்கு வேதசாஸ்திர பண்டித பட்டம் கொடுத்தான்.

றெற்ஸலுக்கோ மனதில் சமாதானமில்லை. தான் தோல்வியடைந்ததைப்பற்றி மனவருத்தப்பட்டு, பிராங்போர்ட் நகரத்தினருகில் ஒரு பிரசங்கபீடமும் ஒரு மேடையும் நாட்டி, லூதரை வாயில்வந்தபடி வைதான். பதிதனாகிய அவனை உயிரோடே சுட்டெரிக்கவேண்டுமென்று பிரசங்கம் செய்தான். அப்படிப் பிரசங்கம் செய்தபின், லூதருடைய சித்தாந்தங்களையும், பிரசங்கங்களையும் அந்த மேடையில் வைத்துத் தீக்கொளுத்தினான்.

லூதருடைய சித்தாந்தங்களை நிராகரிக்கும்படி, றெற்ஸல் தன்னுடைய சித்தாந்தங்களை சாக்ஸனி நாட்டிற்கு அனுப்பினான். உவிற்றன்பேர்க் நகரத்தில் அவைகளை விற்கும்படி போன மனிதனை அங்கிருந்த சர்வகலாசாலை மாணாக்கர் சூழ்ந்துகொண்டார்கள். தங்கள் வித்தியா போதகரின் சித்தாந்தங்களை றெற்ஸல் கொளுத்திப் போட்டதைப்பற்றி இவர்களெல்லாரும் மூர்க்கங்கொண்டிருந்தார்கள். மாணாக்கரிற் சிலர் றெற்ஸலின் சித்தாந்தங்களின் பிரதிகளில் சிலவற்றை வாங்கினார்கள். வேறுசிலர் மீதியானவைகளைப் பலோத்காரமாய்ப் பிடுங்கினார்கள். அதன்பின் சர்வகலாசாலை வாசலில் அடியிற்கண்ட விளம்பரத்தை ஒட்டினார்கள் :—"றெற்ஸல் எழுதிய சித்தாந்தங்களின் கருமாந்தரத்திற்கு வரப் பிரியமானவர்களெல்லாம் 2 மணிக்கு சந்தை வெளியில் வரலாம்."

ஜனங்கள் குறித்த நேரத்தில் கூட்டம் கூட்டமாய் அந்த இடத்தில் வந்து சேர்ந்தார்கள். ஜனங்களெல்லாம் சந்தோஷித்து ஆரவா

ரிக்க அம்மானுக்கர் ஜெற்ஸலின் சித்தாந்தங்களை அக்கினியிற்போட்டுச் சுட்டெரித்தார்கள். இந்தச் சமாசாரம் ஜர்மானியா தேசமுழுவதும் பரவிற்று. லூதர் இதைக்கேட்டு மிகவும் விசனப்பட்டார். இதினால் லூதருக்கு இருந்த அபாயம் மிகவும் அதிகரித்தது.

## 11. ரோமாபுரியில் சதி.

லூதருக்கு ஜெற்ஸலைவிட ஒரு பெரிய சத்துரு ஏற்பட்டான். ரோமானித்தார் இன்ன புஸ்தகங்களை வாசிக்கலாம், இன்ன புஸ்தகங்களை வாசிக்கக்கூடாது என்று தீர்மானிக்கும் உத்தியோகஸ்தன் ஒருவன் உண்டு. அக்காலத்தில் இந்த உத்தியோகத்தைப் பெற்றிருந்தவனுக்கு பிரைபெரியாஸ் என்று பெயர். இவன் லூதருடைய சித்தாந்தங்களுக்கு விரோதமாய் ஒரு புஸ்தகம் எழுதி அதை 10-ம் லியோ என்னும் பாப்புவுக்குப் பிரதிஷ்டைசெய்தான். அந்தப் புஸ்தகத்தில் நியாயங்களொன்றும் எடுத்துரைக்கப்படவில்லை; எல்லாம் பரியாசமும், நிந்தையும், மிரட்டுமாய்த் தானிருந்தது. அந்தப் புஸ்தகத்தின் முடிவில் "விசுவாசத்தை முதலில் பெற்றுக்கொண்டு பின் அதை விட்டு வழுவிப்போகிறவர்களை லௌகீக அதிகாரத்தால் அடக்க பாப்புவுக்கு அதிகாரம் உண்டு. கலகக்காரரை எதிர்த்து, அவர்களை மேற்கொள்வது கிறிஸ்துவின் சபைக்கு கடைமையல்ல என்று கண்டிருந்தது.

லூதர் கிஞ்சித்தேனும் பயப்படாமல் இரண்டுநாளில் அதற்கு மறுமொழி எழுதினார். அகுஸ்தீன் என்னும் மகானுபாவன் சொன்ன வார்த்தைகளை ஆதாரமாகக்கொண்டு பிரைபெரியாஸ் என்பவனை எதிர்த்தார். அந்த வார்த்தைகளாவன, "தேவாவியால் அருளப்பட்ட சத்தியவேதமே தவறாத அதிகாரமுடையதென்று கண்டு அதன் அதிகாரத்திற்கு மாத்திரம் அடங்குவேன்; மற்றவர்களைப்பற்றி எனக்குக் கவலையில்லை, அவர்கள் போதிக்கும் போதனைக்கு அவர்கள் சொல்லேயன்றி வேறு ஆதாரமில்லாதிருப்பதினால் அப்போதனைகளை நான் நம்பேன்." இந்த வாக்கியத்தில் மார்க்க சீர்திருத்தக்காரரின் கொள்கையெல்லாம் அடங்கியிருக்கிறது. பிரைபெரியாஸ் தன்னை பயமுறுத்தினதற்கு மறுமொழியாக, "ரத்தத்திற்காகவா நீ தவிக்கிறாய்? நீ பயமுறுத்தி நான் பயப்படுவேன் என்றுமாத்திரம் கனவிலும் நினையாதே, நான் என் உயிரை இழந்தால் என்ன மோசம்? கிறிஸ்து இன்னும் பிழைத்திருப்பாரே. அவரே என் ஆண்டவர், எல்லாவற்றிற்கும் மேலாக எப்போதும்



ஆசீர்வதிக்கப்படத்தக்க என் நாயகர் அவரே. ஆமென்" என்று லூதர் எழுதினார்.

கோலோன் நகரத்திலிருந்த இன்குவிஸிற்றர் என்னும் பாப்புவின் அதிகாரி லூதரின் கொள்கைகளைப்பற்றிக் கேள்விப்பட்டு மிகுந்த கோபமடைந்தான். இந்தப் பதிதனாகிய லூதரைக் கொல்லவேண்டுமென்று சொன்னான். "இவ்வளவு பெரிய பதிதனை ஒரு மணிநேரமாவது பிழைத்திருக்க விடுவது சபைக்குத் துரோகம். இவனை உடனே சிரசாக்கினை செய்யவேண்டும்" என்றான். பிரான்டன்பேர்க் நகரத்து அத்தியட்சர் நெருப்பிலிருந்த ஒரு கொள்ளிக்கட்டையைக் கையிலெடுத்து, "இந்தக் கொள்ளிக்கட்டையை நான் நெருப்பில் போடுவது போல் மார்ட்டின் லூதரை நெருப்பில் போட்டாலொழிய எனக்குச் சமாதானமில்லை" என்று சொல்லிக் கையிலிருந்த கொள்ளியை நெருப்பிற் போட்டார்.

லூதருக்குத் தம் சிநேகிதனாகிய எக் பண்டிதர் தமக்கு விரோதமாகத் தலையெடுத்தது மிகவும் மனவருத்தத்தைக் கொடுத்தது. இங்கோல்ஸ்தாத் பட்டணத்திலிருந்த வித்தியாபோதகரில் எக் பண்டிதர் சிறந்தவர். லூதருடைய சித்தாந்தங்களுக்கு விரோதமாய் "ஈட்டிப் பிரபந்தம்" என்று ஓர் பிரபந்தம் எழுதி அதில் மிகவும் எரிச்சலாய்ப் பலகாரியங்களை எழுதினார். லூதர் "நட்சத்திரப் பிரபந்தம்" என்று ஓர் பிரபந்தம் எழுதி அந்த ஈட்டிப்பிரபந்தத்திற்கு மறுவிடை கொடுத்தார். லூதர், அந்தப் பிரபந்தத்தில் எக் பண்டிதர் பரிசுத்த வேதாகமத்தைக்கொண்டு ஒன்றையும் ரூபியாமல் எல்லாக் காரியங்களிலும் பண்டிதவிற்பனரின் கொள்கைகளைக்கொண்டு ரூபித்தார் என்று தெளிவாய்க் காட்டினார்.

லூதர் தம்முடைய கொள்கைகளைப் பிரஸ்தாபிக்கும்பொருட்டுப் பத்துக்கற்பனைகளின்மேல் பிரசங்கங்கள், கர்த்தருடைய ஜெபத்தின்பேரில் வியாக்கியானம் முதலிய பிரயோஜனமான அநேக சிறு புஸ்தகங்களைப் பிரசுரஞ்செய்தார். அவருடைய பிரசங்கங்களைக் கேட்க வரும் ஜனங்களின்தொகை நாளுக்குநாள் அதிகரித்தது.

1518-ம் வருஷம் ஏப்பிரல் மாதத்தில் அகுஸ்தீன சந்நியாசிகளின் பொதுவான கூட்டம் ஒன்று ஹைடல்பேர்க் நகரத்தில் நடந்தது. லூதர் அவ்விடத்திற்குப் பிரயாணம் போகும் வழியிலிருந்த இடங்களிலெல்லாம் அவர் பெயரை தூற்றி, ஜனங்கள் அவரை அவமதித்து பகைக்கப் பண்ணவேண்டுமென்று சந்நியாசிகள் எத்தனஞ் செய்தார்கள். லூதரின் சிநேகிதர் இதை அறிந்து அவரைப் போகவேண்டாம் என்று தடுத்தார்கள். அவர் தம்முடைய கடமையை நிறைவேற்றுவதில் என்னமோசம் வந்தாலும் அக்கறையில்லை

என்று தைரியத்துடன் இருந்தார். அவ்விடத்திலிருந்த சர்வகலா சாலை கீர்த்தி பெற்றதாயிருந்ததினால், அவ்விடத்தில் பகிரங்கமாய் ஓர் தர்க்கஞ்செய்து, தம்முடைய சித்தாந்தங்களில் சிலவற்றை ஸ்தாபிக்க விரும்பினார்.

ஐந்து வேதசாஸ்திர பண்டிதர் லூதரின் சித்தாந்தங்களுக்கு ஆட்சேபனை சொன்னார்கள். லூதர் தம்முடைய மறுமொழியில் காட்டிய அடக்கத்தையும், பொறுமையையும், சாமர்த்தியத்தையும் பார்த்து, எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். விசேஷமாய் மூன்றுபேர் மிகவும் அதிசயப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் மார்ட்டின் பியூஸர் என்பவர். இவர் இந்தத் தர்க்கத்தைப்பற்றிக் குறிப்புகள் எடுத்தெழுதக் காகிதம், இறகு, மை முதலியவற்றோடு வந்தார். பிற்காலத்தில் இவர் மார்க்க சீர்திருத்தக்காரரில் சிறந்தவரானார். இவரை கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் வேதசாஸ்திரம் கற்பிக்கும்படி இங்கிலாந்திற்கு வரவழைத்தார்கள்.

பேலாற்றின் பிரபு எலெக்டர் பிரபுவுக்கு எழுதின ஒரு கடிதத்தில் லூதர் இந்தத் தர்க்கத்தில் காட்டிய சாமர்த்தியம் உவிட்டன்பேர்க் சர்வகலாசாலைக்குப் பெரும் கீர்த்தி" என்றெழுதினார். லூதருடைய சாமர்த்தியத்தைப் பார்த்திருந்த அகஸ்டீனின் சன்னியாசிகள் அவரை நடக்கவொட்டாமல் தாங்களே பணம்போட்டு அவரை ஒரு வண்டியில் ஏற்றி அனுப்பினார்கள்.

லூதர் ஹைடல்பேர்க் நகரத்திலிருந்து திரும்பிவந்தபின், தம்முடைய சித்தாந்தங்களை விளக்குவிக்கும்பொருட்டு விவரணம் என்னும் ஓர் பிரபந்தத்தை அச்சிட்டார். அதில் பாவங்களுக்காக மனஸ்தாபப்படும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் பாவமன்னிப்புச் சீட்டில்லாமல் பாவமன்னிப்புப் பெறுவான் என்றும், பரிசுத்த வேதாகமமே விசுவாசியின் பாதைக்கு வழிகாட்டி என்றும் தெளிவாய்க் காட்டியிருந்தது.

லூதர் இன்னும் பாப்புவை மிகவும் மதித்துவந்தார். லீயோ நீதியுள்ளவரென்றும் உண்மையின்பேரில் பிரியப்படுகிறவரென்றும் எண்ணியிருந்தார். லூதர் பாப்புவுக்கு எழுதின ஓர்கடிதத்திலிருந்து அடியிற்கண்டவைகளை எடுத்தெழுதுகிறோம்:—

"எல்லாவற்றிற்கு மேலான அத்தியட்சராகிய 10-ம் லீயோ என்னும் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட பிதாவுக்கு நித்திய ரட்சிப்புண்டாக விரும்பி அகஸ்தீன் சன்னியாசியாகிய மார்ட்டின் லூதர் எழுதும் விண்ணப்பம்."

"மிகவும் பரிசுத்த பிதாவே! என்னைப்பற்றிக் கெட்ட பேச்சுகள் நடக்கிறதாகவும் தாங்கள் என்னைப் பொல்லாதவனென்று எண்ணுகிறதாகவும் கேள்விப்படுகிறேன். என்னைப் பித்தன் என்றும், வேதப்புரட்டன் என்றும் துரோகி என்றும் பலவாறாய்ப் பழிதூறு செய்கிறார்கள். ஆ பரிசுத்த பிதாவே, நான் சொல்லுகிறதைக் கேளும்; நான் ஒரு குழந்தை, என்னைப் புசப்பியும்"



லூதர் இப்படி எழுதியபின் தன் காரியங்களையெல்லாம் தெளிவாய் எழுதி, கடிதத்தை அடியிற்கண்டவாறு முடிக்கிறார்:—

"ஆகையால் மிகவும் பரிசுத்த பிதாவே, உம்முடைய பாதபடியில் அடியேன் விழுந்து என்னையும் எனக்குண்டான எல்லாவற்றையும் உமக்கு ஒப்புவிக்கிறேன். நான் எடுத்துக்கொண்ட காரியத்தை அழித்தாலும் சரி, அதைச் சரிப்படுத்தினாலும் சரி, எனக்கு விரோதமாய்ச் சொன்னாலும் சரி, எனக்கு ஏற்பேசினாலும் சரி, என் ஜீவனை எடுத்துக்கொண்டாலும் சரி, அதைத் திரும்பக் கொடுத்துவிட்டாலும் சரி, நீர் சொல்வதையெல்லாம் உமக்குள் வீற்றிருக்க உம்முடைய மூலமாய்ப் பேசும் கிறிஸ்துவானவருடைய சட்டமாய் ஏற்றுக்கொள்ளுவேன். நான் மரணத்திற்குப் பாத்திரனாயிருந்தால் மரிக்க ஆயத்தமாயிருக்கிறேன். பூமியும் அதிலுள்ள யாவும் கர்த்தருடையது; அவருக்கே சதாகாலங்களிலும் புகழ்ச்சி உண்டாவதாக. அவரே உம்மை சதா காலங்களிலும் காப்பாராக. ஆமென்.

1518-ம் வருஷம் பரிசுத்த திரித்துவத் திருநாளாகிய இன்று என் கையொப்பம் வைத்தேன். மார்ட்டின் லூதர் என்னும் அகஸ்தீனிய சகோதரன்" என்று எழுதினார்.

பாப்பு நீதிசெய்வாரென்று இவர் காத்துக்கொண்டிருக்கும் போது ரோமாபுரியில் இவருக்கு விரோதமாய்ச் சதியோசனை நடந்துகொண்டிருந்தது. முதலாவது லூதருடைய முக்கிய சிநேகிதரும் ஆதரவுமாயிருந்த எலெக்டர் பிரபுவைத் தங்கள் பக்ஷத்தில் சேர்க்கப் பிரயாசப்பட்டார்கள்; அதினொரு சித்தியுமடையவில்லை. லூதரைப்பற்றி மாக்ஸிமிலியான் சக்கிரவர்த்தி பாப்புவுக்கு "தேவனுடைய நாமத்தினிமித்தம் மகிமையாகத் தாங்கள் கட்டளையிடுவீரேயானால், அதை இந்த ராச்சியம் முழுவதிலும் கொண்டு நடத்துவோம்" என்று எழுதினான். லூதர் 60 நாளைக்குள் ரோமாபுரிக்குப் போகவும் அங்கே பிரையேரியாஸ் என்பவன் அவருக்கு விரோதமாய்க் குற்றம் சாட்டவும் அவரை விசாரணை செய்யவும் பாப்பு உத்தரவு கொடுத்தார்.

லூதருக்கு இந்த உத்தரவு வரும்போது உவிட்டன்பேர்க் நகரத்திலிருந்தார். "நான் ஆசீர்வாதத்தைப் பெறும்படி காத்திருந்த போது என்மேல் ஓர் இடி விழுந்தது" என்றார்.

அவருடைய சிநேகிதர்கள் இதைப் பார்த்து மிகவும் பயந்தார்கள். அவர் என்னசெய்தாலும் மோசந்தான். ரோமாபுரிக்குப் போனால் சத்துருக்களுக்கு இரையாவார்; போகமாட்டேனென்று சொன்னாரானால் பாப்புவின் அதிகாரத்திற்குக் கீழ்ப்படியாததற்காகத் தண்டனையடைவார்.

லூதரின் சிநேகிதர் தங்களாலானதையெல்லாம் செய்தார்கள். உவிற்றன்பேர்க் சர்வகலாசாலையைச் சேர்ந்தவர்கள் அவருக்காகப் பாப்புவினிடத்தில் பரிந்துபேசி ஒரு கடிதம் எழுதினார்கள். பாப்புவின் வீட்டுவிசாரணைத் தலைவருக்கும் ஒரு கடிதம் எழுதினார்கள். பாப்புவுக்கு எழுதின கடிதத்தில் "அகஸ்தீனராகிய எங்கள் சங்கக் கப்பட்டத்தக்க தகப்பன் மார்ட்டின் லூதர் என்பவர் எங்களின் சர்வகலாசாலையின் மிகவும் சிறந்த வித்வ சிரோமணியாயிருக்கிறார். அவர் தேக பெலவீனத்தினாலும் வழியில் உண்டாகும் மோசங்களினாலும் தங்களுடைய உத்தரவிற்குக் கீழ்ப்படியக் கூடாதவராயிருக்கிறார்" என்றெழுதினார்கள். எலெக்டர் பிரபுவும் லூதரைப்பற்றிச் சக்கிரவர்த்திக்கு எழுதினார்.

ஜெர்மானியா தேசத்திலிருந்த சபைப் பிரிவினைகளையெல்லாம் வேரோடே நிர்மூலமாக்க விரும்பின கார்டினல் காஜிடன் என்பவர் லூதரைத் தன் கையில் விட்டுவிடப் பாப்புவைக் கேட்டுக்கொண்டார். பாப்புவும் அதற்குச் சம்மதித்து ஆக்ஸ்பர்க் என்னும் ஜெர்மானிய நகரத்தில் லூதரை விசாரணைசெய்ய அவருக்கு அதிகாரம் கொடுத்தார். சக்கிரவர்த்தி மற்ற பிரபுக்கள் முதலிய யாவரையும் அழைத்து, அவர்களும் தமக்கு உதவிசெய்ய, அந்த கார்டினல் அதிகாரம் பெற்றுக்கொண்டார். "அந்த மனிதன் உன் கையில் அகப்பட்டவுடனே அவனைக் காவல்பண்ணி நமக்குமுன் அவனைக் கொண்டுவரவேண்டும்......இக்கொள்ளைநோய் வேரோடு அற்றுப் போகப் பண்ணும்படி மார்ட்டின் லூதரையும் அவனைச் சேர்ந்தவர்களையும் பிடித்துத் தகுந்த பந்தோபஸ்துடன் உன்னிடம் அனுப்பாதவர்களையெல்லாம் சபையைவிட்டு நீக்கிவிடு" என்று பாப்பு அவருக்கு உத்தரவு அருளிச்செய்திருந்தார்.

லூதருக்கு 60 நாள் தவணை கொடுத்திருந்தது. அப்படியிருந்தும் அந்த நாட்கள் முடியுமுன், அஸ்கோலி நகரத்து அத்தியட்சர் லூதரை விசாரணைசெய்து அவர் இருதயத்திலே சபைப் பிரிவினையுடையவர் என்று தீர்ப்புச் செய்தார்.

லூதருக்கு இவ்வளவு வருத்தங்களெல்லாமிருந்தாலும் பிலிப்பு மெலாங்தான் என்னும் ஓர் சிநேகிதர் உவிற்றன்பேர்க் நகரத்திற்கு வந்ததனால் மன ஆறுதலடைந்தார். மெலாங்தான் என்பவர் வாலிபனாயிருந்தபோதிலும், படிப்பில் சமர்த்தன், குணத்தில் சாத்வீகன். 14 வயதாயிருந்தபோது பீ. ஏ. பட்டம் பெற்றார். 17 வயதில் தத்துவ சாஸ்திர பண்டிதர் என்னும் பட்டம் பெற்றார். 21 வயதாயிருந்தபோது உவிற்றன்பேர்க் சர்வகலாசாலையில் பூர்வ பாஷைகளைக் கற்பிக்கும் வித்தியாபோதகரானார்.



மெலாங்தான் வந்து நாலுநாட்களுக்குப்பின் சர்வகலாசாலையில் தம்முடைய உத்தியோகத்தை ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாய் ஓர் உபந்நியாசம் செய்தார். அவர் லத்தின் பாஷையில் இனிமையாய், கல்விப்பெருக்கோடும் நியாய தோரணையோடும் செய்த உபந்நியாசம் எல்லாருக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அன்றுமுதல் லூதரும் அவரும் பிராண சிநேகிதரானார்கள். ஒருவரிலிருந்த குறையை இன்னொருவர் நிவிர்த்தி செய்தார்கள். லூதரின் சோங்கடத்தை மெலாங்தான் சாந்தத்தினாலும் விவேகத்தினாலும் மட்டுப்படுத்தினார்; லூதர் மெலாங்தானுக்கு உற்சாகம் உண்டாக்கச் செய்தார். இந்த சிநேகத்தின் முக்கியபலன் லூதர் ஜெர்மானியா பாஷையில் வேதாகமத்தை மொழிபெயர்த்ததுதான். மெலாங்தான் கடினமான அநேக பாகங்களை மொழிபெயர்ப்பதில் அவருக்கு உதவிசெய்தார்.

## 12. லூதர் ஆக்ஸ்பர்க் நகரத்துக்குப் போனது.

லூதருடைய சிநேகிதர் அவரை ஆக்ஸ்பர்க் நகரத்திற்குப் போகவேண்டாம் என்று தடுத்தார்கள். சில பிரபுக்கள் அவரைப் பிடித்துக் கழுத்தைத் திருகி அல்லது நீரில் அமிழ்த்திக் கொன்றுபோடவேண்டுமென்று பிரமாணிக்கம்செய்துகொண்டிருக்கிறார்கள் என்று ஆல்பர்ட் பிரபு கேள்வியுற்று லூதரை எச்சரித்தார். ஆனால் லூதர் ஒன்றிலும் அசையவில்லை. தேவனுக்கு விரோதமாகப் பாவஞ்செய்வதைப்பற்றிமாத்திரம் பயந்தார். "மனிதர் முன்பாக என்னை அறிக்கையிடுகிறவன் எவனோ அவனைப் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின்முன் அறிக்கையிடுவேன்" என்னும் வேதவாக்கியம் எப்போதும் அவர் காதில் தொனித்துக்கொண்டிருந்தது.

லூதர் வழியில் தாம் பயமின்றிப் பிரயாணம் செய்வதற்கு, எலெக்டர் பிரபுவினிடத்தில் ஓர் வழிக் காவல்பத்திரம் கேட்டார். எலெக்டர் பிரபு அது அவசியமில்லையென்று சொல்லிவிட்டார். ஆனால் ஆக்ஸ்பர்க் நகரத்து ஆலோசனைச் சங்கத்தாரில் முக்கியமான சிலருக்குக் கடிதங்களும் வழிச்செலவுக்குப் பணமும் கொடுத்தனுப்பினார்.

உவிற்றன்பேர்க் நகரம் ஜெர்மானியா தேசத்தின் வடபாகத்திலிருக்கிறது. ஆக்ஸ்பர்க் நகரம் அதிலிருந்து 300 மைலுக்குத் தெற்கே இருக்கிறது. லூதர் கால்நடையாய்த்தான் பிரயாணஞ் செய்தார். அக்காலத்தில் எலெக்டர் பிரபு வேமார் என்னும் நகரத்தில் வாசம்செய்து வந்தார். செப்டம்பர் 28ல் லூதர் அங்கே வந்து சேர்ந்தபோது, அவரைப் பிரசங்கஞ்செய்யக் கேட்டுக்கொண்

டார்கள். நூரம்பர்க் நகரத்திற்கு அவர் வந்தபோது, தன் உடுப்புப் பழையதாய்ப் போனதால் தன்னுடைய சிநேகிதனாகிய லின்க் என்னும் போதகரிடமிருந்து ஒரு உடுப்பு இரவலாய்ப் பெற்றுக்கொண்டு, அவ்விடமிருந்து லின்க் என்பவரையும் லெனார்ட் என்னும் ஒரு சன்னியாசியையும் கூட்டிக்கொண்டுபோனார்.



ஆக்ஸ்பர்க் நகரம்.

ஆக்ஸ்பர்க் நகரத்திலிருந்து 20 மைல் தூரத்திலிருக்கும்போது லூதர் தாம் இறந்துபோவோமென்று பயந்தார். அவரு



டைய இரண்டு சிநேகிதரும் மிகவும் பயந்து ஒரு வண்டி அமர்த்தினார்கள். அக்டோபர் மீ 7உ அவர்கள் ஆக்ஸ்பர்க் நகரத்தில் அகஸ்த்தீனர் வசிக்கும் மடத்தில் வந்து சேர்ந்தார்கள். அங்கே வந்தபின் லூதர் சீக்கிரத்தில் சுகமடைந்தார்.

மறுநாள் காலையில் தம்மை ஒரு அந்நியன் பார்க்க வரப்போகிறதாகச் சொல்லிவிட்டார். கார்டினல் காஜிறன் என்பவரிடத்தில் வேலையாயிருந்த செர்ராலொங்கா என்பவன் லூதரிடத்தில் சிநேகிதன்போல் வந்தான். லூதர் முன் சொன்னதை மறுக்கவாவது, தம்முடைய சித்தாந்தங்களை மறுதலிக்கவாவது அவரை ஏவுவதற்கு அந்தக் கார்டினல் அவனை லூதரிடத்தில் அனுப்பினார். லூதர் நான் எந்தக்காரியத்தையாவது பிசகாய்ச் சொன்னதாக ரூபித்தால் அதை மறுத்துவிட ஆயத்தமாயிருக்கிறேனென்று சொன்னார். செர்ரா லொங்கா இதைக் கேட்டு மகிழ்ந்து, வீட்டுக்குப்போய் வருகிறேனென்று சொல்லிப் போய்விட்டான்.

அந்த நகரத்து ஆலோசனைச் சங்கத்தாராயிருந்த லூதரின் சிநேகிதர், நாங்கள் சக்கிரவர்த்தியிடமிருந்து வழிக்காவல் பத்திரம் வாங்கிக் கொடுக்குமட்டும் நீர் கார்டினலிடத்தில் போகவேண்டாம் என்று லூதரைத் தடுத்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது செர்ராலொங்கா வந்து கார்டினல் உமக்காகக் காத்திருக்கிறார் என்று லூதரிடத்தில் சொன்னான். அதுவுமல்லாமல் லூதர் கார்டினலிடத்தில் போகும்போது நடந்துகொள்ளவேண்டிய விதத்தையும் அவருக்குக் கற்பித்தான். முதலாவது, கார்டினல் முன் சாஷ்டாங்கமாய் விழவேண்டும். கார்டினல் எழும்ப உத்தரவு கொடுத்தால் எழும்பி நிற்காமல் முழங்காலில் நிற்கவேண்டும். திரும்பவும் எழுந்து நிமிர்ந்து நிற்கச்சொன்னால்தான் நிற்க வேண்டும் என்று போதித்தான்.

“ஆக்ஸ்பர்க் நகரத்திலிருக்கும் என் சிநேகிதர் வழிகாவல் பத்திரமில்லாமல் கார்டினல்முன் போகவேண்டாம் என்று சொல்லி என்னைத் தடுக்கிறார்கள். ஆனால் வழிக்காவல் பத்திரம் வைத்திருந்த ஜர்மானிய சீர்திருத்தக்காரனாகிய ஜான் ஹஸ் என்பவரையும் அக்கினிக்கிரையாக்கினார்கள் என்று எனக்குத் தெரியும். எலெக்டர் பிரபு இந்த ஆலோசனைச் சங்கத்தாரிடத்தில் என்னை ஒப்புவித்திருக்கிறார். அவர்கள் இஷ்டப்படிதான் நான் செய்ய வேண்டும்” என்றார்.

அக்டோபர் மீ 10உ திங்கட்கிழமை காலையில், செர்ரா லொங்கா திரும்பவும் லூதரிடத்தில் வந்து, “நீ ஏன் இன்னும் கார்டினலிடத்திற்குப் போகாமலிருக்கிறாய். உன்னை அவர் அன்பாய் ஏற்

றுக்கொள்ளக் காத்திருக்கிறேரே. ரெ-வொ-க்-கோ என்னும் ஆறு எழுத்துள்ள இந்த வார்த்தையைச் சொல். எல்லாம் சரியாய்ப்போகும். என்னோடு வா; பயமொன்றுமில்லை" என்றான்.

லூதர் அந்த ஆறு எழுத்தையும் எளிதில் சொல்லத்தக்கவரில்லை, வழிக்காவல் பத்திரம் வந்தவுடன் வருகிறேன் என்றார். செர்ராலோங்கா கோபத்துடன், "உன்னை எல்லாரும் கைவிடும்போது எங்கே அடைக்கலம் புகுவாய்?" என்றான். லூதர் வானத்தை அண்ணாந்து பார்த்து "கடவுளினிடத்தில்தான்" என்றார். செர்ராலோங்கா பேச மறுவார்த்தையில்லாமல் போய்விட்டான். கொஞ்ச நாட்களுக்குப்பின் வழிக்காவல் பத்திரம் வந்துசேர்ந்தது.

லூதர் சில சிநேகிதரைக் கூட்டிக்கொண்டு கார்டினலைப் பார்க்கப்போனார். கார்டினல் அவரை மரியாதையோடு ஏற்றுக்கொண்டாலும் பட்சம் பாராட்டவில்லை. லூதர் கார்டினலைப் பார்த்து "சங்கிக்கப்படத்தக்க பிதாவே, பரிசுத்த பாப்புவின் கட்டளைப்படி நான் உமக்கு முன் பரிசுத்த கிறிஸ்துசபையின் பிள்ளையாய்த் தாழ்மையோடும் கீழ்ப்படிதலோடும் வருகிறேன்; இந்தச் சித்தாந்தங்களையும், கோட்பாடுகளையும் பிரசுரம் செய்தவன் நான்தான். எனக்கு விரோதமாய்க் கொண்டுவரப்படும் பிரியாதுகளைக் கேட்கவும், நான் தவறு செய்திருந்தால் படிப்பிக்கப்படவும் தாழ்மையுடன் காத்திருக்கிறேன்" என்றார்.

கார்டினல் வெகு அன்புடன் மறுமொழி சொன்னார். லூதரின் தாழ்மையை வியந்து, தமக்கு அதனாலுண்டான சந்தோஷத்தையும் வெளியிட்டார். லூதரைத் தம்முடைய குற்றங்களை ஒத்துக்கொள்ளவும், தாம் எழுதிய சித்தாந்தங்களை மறுதலிக்கவும், பிற்காலத்தில் இவ்வித கொள்கைகளைப் பிரசுரம் செய்யமாட்டேனென்று வாக்குக் கொடுக்கவும் புத்திசொன்னார்.

லூதர் பாப்புவின் கடிதத்தைக் காட்டச்சொன்னார்.

அதற்குக் கார்டினல், "மகனே நீ கேட்கிறதைச் செய்ய என்னால் முடியாது. நீ உன் பிழைகளை ஒத்துக்கொள்ளவேண்டும்; இனிப் போதிப்பதைப்பற்றி எச்சரிக்கையாயிருந்து நீ முன் கக்கினதை விழுங்காமலிருக்கவேண்டும்" என்றார்.

லூதர் "என் பிழை எதென்று சொல்லமாட்டீர்களா? நான் பிழை செய்திருந்தால் அதைத் திருத்தவும் மற்றவர்களால் படிப்பிக்கப்படவும் காத்திருக்கிறேன்" என்றார்.

கார்டினல் "உன்னோடு தர்க்கம்செய்யவா நான் இங்கே வந்திருக்கிறேன்? நீ மறுக்க ஆயத்தமாயிருக்கிறாயா, நான் உன்மேல்



செலுத்தவேண்டிய நியாயமான தண்டனையைச் செலுத்தட்டுமா?" என்றார்.

இப்படிச் சம்பாஷிக்கிறதில் காரியம் முடியாதென்று லூதர் கண்டு புறப்பட்டுப்போனார். அப்பொழுது கார்டினல், "நீ ரோமாபுரிக்குப் போகிறதற்கு நான் உனக்கு வழிக்காவல் பத்திரம் தரட்டுமா?" என்றார். அதை லூதர் பெற்றிருந்தாரானால் சத்துருக்கள் கையில் அகப்பட்டிருப்பார். பலதரம் கார்டினல் அதைக் கொடுப்போமென்று சொல்லியும் லூதர் வேண்டாமென்று சொல்லிவிட்டார்.

லூதர் சன்னியாசி மடத்திற்குத் திரும்பிவந்தபோது, ஸ்டாப்பிட்ஸ் தமக்கு உதவிசெய்ய ஆக்ஸ்பர்க் நகரத்திற்கு வந்திருக்கிறார் என்னும் சந்தோஷமான செய்தியைக் கேள்வியுற்றார். கார்டினல் தம்முடைய குற்றத்தைக்கூட எடுத்துக்காட்டாமல் தம்மை மறுதலிக்கக் கேட்டதை ஸ்டாப்பிட்ஸ் என்பவருக்குச் சொன்னார். அதற்கு அவர் "நீர் கார்டினலுக்கு எழுத்தில் மறுமொழி கொடும்" என்றார்.

மறுநாள் லூதரும் கார்டினலும் ஒருவரையொருவர் இரண்டாந்தரம் சந்திக்க ஆயத்தப்பட்டார்கள். லூதர் தம்மோடு ஒரு வக்கீலையும் ஸ்டாப்பிட்ஸையும் எலெக்டர் பிரபு அனுப்பின சில ஆலோசனைக்காரரையும் கூட்டிக்கொண்டுபோனார். எலெக்டர் பிரபு லூதரைப் பத்திரமாய்ப் பார்க்கவும், லூதரோடு இப்படிப்பட்ட கூட்டங்களுக்குப் போகவும் சில ஆலோசனைக்காரரை அனுப்பியிருந்தார்.

கார்டினலுக்குத் தகுந்த மரியாதைகள் செய்தபின், லூதர் எழுந்து நின்று, தாம் ஆயத்தம் பண்ணியிருந்த அறிக்கைப் பத்திரத்தை வாசித்தார்.

"நான் சத்தியத்தைத் தேடினேன். நான் போதித்ததெல்லாம் உண்மையும் நீதியும், கிறிஸ்துமார்க்க சத்தியத்திற்கு இசைந்ததுமாய் இருக்கின்றனவென்று எண்ணுகிறேன். ஆனால் நான் தவறியிருக்கக்கூடும். நான் எதில் தவறினேன் என்று படிப்பிக்கப்படக் காத்திருக்கிறேன். என் பிழையைக் காட்டுமுன் என்னை மறுதலிக்கச் சொல்லுவது தகுதியல்ல."

லூதர் இப்படி அறிக்கைப்பத்திரம் எழுதித் தம்மை எதிர்ப்பாரென்று கார்டினல் நினைக்கவேயில்லை. ஆனாலும் தம்முடைய கோபத்தை அடக்கிச் சாந்தகுணமுள்ளவர்போல் காட்டி,

"இந்த எதிருரை அவசியமற்றது. நான் உன்னோடு தனித்தாவது வெளியரங்கமாவாவது வழக்காடமாட்டேன், மறுதலித்துவிடு; என் மகனே மறுதலித்துவிடு. அதுவே பாப்புவின் சித்தம்; உனக்கு இஷ்டமிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அது எனக்கு அக்கறையில்லை" என்றார்.

லூதர், தம்மை அவர்கள் ஒரு முரட்டாட்டமுள்ள பிள்ளையைப் போல் நடத்துகிறார்களென்று கண்டு, "நான் சொன்னதை மறுக்க மாட்டேன். ஆனால் நான் எழுத்தில் மறு உத்தரவு கொடுக்கிறேன்" என்றார்.

கார்டினல் லூதரின் போதகங்கள் தவறு என்று ரூபிக்கப் பிரயாசப்பட்டார்; ஆனால் லூதர் மறுமொழி சொல்ல அவருக்கு இடங்கொடுக்கவில்லை. லூதரும் ஸ்ருப்பிற்சும் இனி அங்கிருப்பதிற் பயனில்லை என்று கண்டார்கள். லூதர் தமக்குப் பேச உத்தரவில்லாததினால், தம்முடைய மறுமொழியை எழுதியாவது அனுப்பலாமா என்று கேட்டார். அவருடைய சிநேகிதரெல்லாம் அவரோடு சேர்ந்து இதைக் கேட்டதினால், கார்டினல் மனவருத்தத்தோடு உத்தரவு கொடுத்தார்.

மறுநாள் லூதர் தம்முடைய சிநேகிதர் சகிதமாய்க் கார்டினலின் அரண்மனைக்குப் போனார். கார்டினலைச் சூழ பல இத்தாலியர் நின்றார்கள். அவர்கள் நடுவில் லூதர் போய், தம்முடைய மறுமொழியைக் கார்டினல் கையில் கொடுத்தார். அதில் அவர், பாவமன்னிப்புச் சீட்டுகள் பிரயோஜனமற்றவையென்றும், விசுவாசமே அவசியமென்றும் வேதாகமத்திலிருந்து எடுத்துக்காட்டி ரூபித்தார். "என் ஆத்துமா சத்தியத்தின் வெளிச்சத்தைத் தேடுகிறது. என்னுடைய மனச்சாட்சிக்கு விரோதமான ஒன்றையும் செய்ய என்னைப் பலவந்தம் செய்யாதேயுங்கள்" என்றார்.

கார்டினல் அவர் எழுதியிருந்த தாளை வாங்கிப் பார்த்து, அதை அலட்சியமாய்க் கீழே எறிந்துவிட்டு, லூதர் மறுதலிக்கவேண்டுமென்று திரும்பவும் சொன்னார். திரும்பவும் லூதரின் போதனைகள் தவறானவையென்று காட்டப் பிரயாசப்படும் கூடாமல்,

"மறுதலித்துவிடு, மறுதலித்துவிடு, இல்லாவிடில் உன்னை நான் ரோமாபுரிக்கு அனுப்புவேன். அதுவுமல்லாமல் உன்னையும் உன்னைச் சேர்ந்தவர்களையும், இனி உன் சார்பில் இருப்பவர்களையும் சபையை விட்டு வெளியே துரத்தித் தள்ளிப்போடுவேன்" என்றார்.

அதற்கு லூதர் "தாங்கள் தயவுசெய்து நான் தங்களிடத்தில் எழுதிக்கொடுத்த மறுமொழியை என் தாழ்மையான விண்ணப்பங்களோடு 10-ம் லியோ என்னும் பாப்புவுக்கு அனுப்புங்கள்" என்றார்.

கார்டினல் மிகவும் கோபமுண்டவராய்:—

"மறுதலி அல்லது இங்கே ஒருபோதும் திரும்பிவராதே" என்றார்.



லூதர் குனிந்து வணங்கி, எலெக்டர் பிரபுவின் ஆலோசனைக்காரருடன் கூடத் திரும்பிப் போய்விட்டார். அதன்பின் லூதர் அந்தக் கார்டினலை ஒருநாளும் காணவில்லை. ஆனால் கார்டினல் மனதில் லூதரைப்பற்றி உண்டான எண்ணம் ஒரு நாளும் நீங்கவேயில்லை.

லூதர் சன்னியாசி மடத்திற்குத் திரும்பிப்போனார். சத்தியத்திற்காக உறுதியாய் நின்றோமென்கிற எண்ணம் அவர் ஆத்துமாவிற்குச் சந்தோஷத்தையும் ஆறுதலையும் கொடுத்தது.

கார்டினலுக்கு தாம் அவ்வளவு கோபமாய்ப் பேசியிருக்கக் கூடாதென்று சீக்கிரம் உணர்வுவந்தது. அன்று சாயங்காலம் ஸ்ருப்பிற்ஸ் என்பவரை அழைத்து, லூதர் தம்முடைய கொள்கைகளை மறுதலிக்க ஏதாவது சொல்லக்கூடாதா என்று கேட்டார். அதற்கு ஸ்ருப்பிற்ஸ், அப்படித் தர்க்கத்துக்கிடமாயிருக்கிற காரியங்களை வெளியரங்கமாய் ஓர் தர்க்கம் வைத்து, அதிலே தீர்த்துக்கொள்ளலாம் என்றார். அதற்குக் கார்டினல் "நான் அந்த மிருகத்துடன் இனி வாக்குவாதம் செய்யமாட்டேன்" என்று சொல்லிவிட்டார். ஆனால் ஸ்ருப்பிற்ஸ் அவ்விடம் விட்டுப் போகுமுன் லூதர் மறுதலிக்க வேண்டிய காரியங்கள் எவையென்று கார்டினல் எழுதியனுப்ப வேண்டுமென்று கார்டினலிடத்தில் ஒழுங்கு செய்துகொண்டார்.

இரண்டு நாளாகியும் கார்டினலிடமிருந்து ஒரு கடிதமும் வராததினால் லூதரின் சிநேகிதர் பயந்தார்கள். "கார்டினல் என்னவோ ஒரு தீங்குசெய்ய யோசித்திருக்கிறார். ஒருவேளை உம்மைப் பிடித்துக் காவற்சாலையில் போடுவார்" என்றார்கள்.

ஸ்ருப்பிற்ஸ், லிங்க் என்பவர்கள் இருவரும் ஆக்ஸ்பர்க் நகரத்தை விட்டுப் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள்; லூதரோ, இங்கேதான் இருப்பேனென்று ஒரே நிலையாய் நின்றார். மூன்றாம்நாள் லூதர் கார்டினலுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதற்கு மறுமொழி ஒன்றும் வரவில்லை. கார்டினலும் அவருடைய ஆலோசனைக்காரரும் ஒன்றும் பேசாமலிருந்தது சமுசயத்திற்கிடமாயிருந்தது. லூதருடைய சிநேகிதர் "பாப்புவுக்கு முறையிட்டு ஒரு கடிதமெழுதிவிட்டு ஆக்ஸ்பர்க் நகரத்தைவிட்டுப் புறப்பட்டுப் போம்" என்று அவருக்குப் புத்திமதி சொன்னார்கள்.

லூதர் வீணாய் 4-நாள் அந்தப் பட்டணத்தில் காத்திருந்தபின், தம்முடைய இஷ்டரின் விருப்பத்திற்கு இணங்கினார். அவர் புறப்படுமுன், தாம் பட்டணத்தைவிட்டுப் போனபின் கார்டினல் கையில் கொடுக்கப்படும்படி ஒரு கடிதம் எழுதிவைத்தார். அதுவுமல்லாமல் பாப்புவுக்கு முறையிட்டு ஒரு கடிதம் எழுதினார். அதைத் தாம்

அந்த ஊரைவிட்டுப்போய் இரண்டு மூன்று தினங்களுக்குப்பின், ஒரு வக்கீல், சாட்சிகள் முதலானவர்கள் முன்னிற்க, பெரிய தேவாலயத்தின் கதவில் ஒட்டும்படி ஒழுங்கு செய்துவிட்டுப் போனார்.

மறுநாட் காலையில் தமக்காக ஸ்ரௌபிட்ஸ் விட்டுப்போயிருந்த ஒரு குதிரையின்மேலேறி, பொழுது விடியுமுன்னே புறப்பட்டார். சன்னியாசி மடவாசலில் கூடிவந்திருந்த தன் சிநேகிதரையெல்லாம் வழியனுப்பிவிட்டு, குதிரைமேலேறி, தம்மை கூட்டிக்கொண்டு போக அனுப்பப்பட்ட ஒரு வழிகாட்டி பின்னாலே தெருவழியே மௌனமாய்ச் சவாரிபோனார். பட்டணத்துத் திட்டிவாசல்களில் ஒன்று இவருக்காகத் திறக்கப்பட்டு வைத்திருந்தது. பட்டணத்தைக் கடந்ததும் லூதர் பயமற்றிருந்தார். அவர் திரும்பவும் உவிற்றன்பேர்க் நகரத்திற்கு வந்தார். அவருடைய சிநேகிதரெல்லாம் அவரைக்கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள்.

## 13. சமாதானப் பிரயத்தனங்கள்.

லூதர் தன் கைவிட்டுக் கடந்துபோனார் என்று கார்டினல் கேள்விப்பட்டதும் மிகவும் மூர்க்கவெறிகொண்டார். லூதரை மறுதலிக்கப் பண்ணவுமில்லை; தண்டனை செய்யவுமில்லை. உடனே-எலெக்டர் பிரபுவுக்கு ஒரு கடிதம் எழுதி, "நீர் லூதரை ரோமாபுரிக்கு அனுப்பிவிடவேண்டும் அல்லது உம்முடைய மாகாணத்தை விட்டுத் துரத்திவிடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அந்தக் கடிதத்தின் அடியில் "கேவலம் ஒரு சன்னியாசிக்காக உம்முடைய மகிமையையும் உம்முடைய முன்னோரின் கீர்த்தியையும் அலட்சியம் செய்யாதேயும்" என்றெழுதினார்.

எலெக்டர் பிரபு கடிதத்தை வாங்கி வாசித்து, அதன் பிரதி ஒன்றை லூதருக்கு அனுப்பினார். கார்டினல் எலெக்டர் பிரபுவைச் செய்யச்சொல்லும் காரியம் எவ்வளவு புத்தியீனமான காரியம் என்றும், ஒரு குற்றமற்ற மனுஷனை அவனுடைய சத்துருக்களின் கையில் ஒப்புக்கொடுப்பது எவ்வளவு அவமானத்துக்கிடமான தென்றும் லூதர் எடுத்துக் காட்டி, "பாப்புவானவர் என்னுடைய தப்பிதங்களை எடுத்துக் காட்டி, நான் எவைகளில் தவறியிருக்கிறேனென்று போதிப்பித்து எனக்கு எழுதவேண்டும்" என்று, எலெக்டர் பிரபுவுக்கு ஒருகடிதம் எழுதினார்.

எலெக்டர் பிரபு அதை வாசித்துப் பார்த்து, லூதர் நீதியாயும் நியாயமாயும் வழக்காடுகிறார் என்று நன்குணர்ந்தார். உடனே



கார்டினலுக்கு "நான் லூதரை ரோமாபுரிக்கு அனுப்பவும் மாட்டேன்; என்னுடைய நாட்டிலிருந்து துரத்தவும் மாட்டேன்" என்று எழுதியனுப்பினார்.

லூதர் உவிற்றன்பேர்க் சர்வகலாசாலையின் அனுமதிபெற்று அக்கடிதத்தை எழுதினார். ஜர்மானியநாட்டின் எப்பக்கத்திலுமிருந்து, மார்க்கம், கல்வி, இவை இரண்டிற்கும் புதியவழி காட்டும் இந்த அதிசய புருஷனுடைய போதனையைக் கேட்க மாணாக்கர் கூட்டம் கூட்டமாய் வந்தார்கள்.

கடைசியாய் எலெக்டர் பிரபு லூதரை உவிற்றன்பேர்க் பட்டணத்தைவிட்டுப் போகச்சொன்னார். அவரும் சபையாருக்குப் பயணோபசார பிரசங்கம் செய்துவிட்டுப் புறப்பட ஆயத்தமாயிருந்தார். ஆனால் எத்திசைக்குப் போகவென்று தெரியாமல் அவர் மயங்கினார். போகுமுன் தன் சிநேகிதரெல்லாரையும் திரும்பவும் கூடிவரச்செய்து ஒரு விருந்துபண்ணினார். அவர் விருந்திலிருக்கும்போது எலெக்டர் பிரபு "ஏன் இன்னும் புறப்படாமலிருக்கிறீர்" என்று கேட்டெழுதின கடிதம் வந்தது. லூதர் அதை வாசித்துப் பார்த்து, "தகப்பனும் தாயும் என்னைக் கைவிட்டாலும் கர்த்தர் என்னைக் கைதூக்கியெடுக்கிறார்" என்னும் வசனத்தை நினைத்து ஆறுதலடைந்தார். அவருடைய சிநேகிதரெல்லாம் அவரைப் பார்த்துக் கண்ணீர் விட்டார்கள். சீக்கிரத்தில் நல்ல சங்கதி அடங்கியிருந்தது. அதில், "பாப்புவிடத்திலிருந்து இப்பொழுது வந்த ஸ்தானாதிபதி, ஒரு ஆலோசனைச் சங்கத்தில் எல்லாக் காரியங்களையும் ஒழுங்கு செய்யலாம் என்றெண்ணியிருக்கிறதினால் நீர் தற்சமயத்தில் இருக்கிற இடத்திலிருக்கலாம்" என்று கண்டிருந்தது.

ரோமாபுரியில் எல்லாரும் கார்டினல் காஜிதன்பேரில் கோபமாயிருந்தார்கள். அவர் செய்தது அவர்களுக்குத் திருப்தியாயில்லை. பாப்புவின் ஆலோசனைக்காரரெல்லாம், கார்டினல் காரியங்களைச் சரியாய் நடப்பிக்காததினால்தான் எல்லாம் தவறிப்போயிற்று என்று எண்ணினார்கள். "ஏன் அவர் லூதரைக் கோபமூட்டவேண்டும்? லூதரை ஏன் தூஷித்துப் பயமுறுத்தவேண்டும்? சன்மானியாராக்கிப் போடுவோமென்று இனியவார்த்தை சொல்லக்கூடாதா? அவசியமானால் கார்டினல்பட்டம் தருவோம் என்று சொல்லக்கூடாதா" என்று சொன்னார்கள். அவர்களுக்கு லூதர் இன்னாரென்று தெரியவில்லை; தங்களைப்போலொத்த ஒரு மனுஷன் என்று எண்ணினார்கள்.

அவ்ஸ்பர்க் நகரத்தில் கூடிய சங்கத்தின் நடவடிக்கைகளை லூதர் அச்சிட்டார். 1518-ம் வருஷம் நவம்பர்மாதம் 28-ம் தேதி

யில் உவிர்றன்பேர்க் நகரத்தின் ஒரு தேவாலயத்தில் லூதர் பாப்பு விடமிருந்து சபையின் பொதுவான சங்கத்திற்கு அபயமிட்டார். இப்படி லூதர் செய்தது துணிகரமான செய்கைதான். இப்படித் தனக்கு விரோதமாய் அபயமிட்ட சக்கரவர்த்திகளைக் கூட பாப்பு சபையிலிருந்து தள்ளிவிடுவது வழக்கம். லூதர் தம்மை ஜர்மானியா தேசத்திலிருந்து துரத்திவிடுவார்களென்று அறிந்திருந்தார். போகு முன் தம்முடைய எதிருரையைப் பகிரங்கமாய் விளம்பரஞ்செய்ய விரும்பி இப்படிச் செய்தார்.

ஆனால் பாப்பு உடனே வேறே ஒரு உபாயஞ்செய்ய எத்தனித்தார்; சமாதானம்பண்ணப் பிரயத்தனித்தார். ஒவ்வொரு வருஷமும் பொன் ரோஜாப்பூ ஒன்று செய்து, அதைப் பிரதிஷ்டை பண்ணி ஐரோப்பாவிலுள்ள முக்கியமான பிரபுக்களில் ஒருவருக்குக் கொடுப்பது வழக்கம். அந்த ரோஜாப்பூவைக் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்துக்கு அடையாளமாய் எண்ணிக் கொள்ளுவார்கள். நாலு வருஷத்துக்குமுன்னே எலெக்டர் பிரபு அதைக் கேட்டெழுதியிருந்தார். இந்த வருஷத்தில் ரோமாபுரியில் தம்முடைய சபையிலிருந்த மில்டிஸ் என்னும் ஓர் பிரபுவின்மூலமாய் எலெக்டர் பிரபுவுக்கு அந்த ரோஜாப்பூவை அனுப்பத் தீர்மானித்தார். மில்டிஸ் அவ்விடம்போய்க் காரியங்களின் தன்மையை விசாரித்துக்கொண்டு, எலெக்டர் பிரபுவின் ஆலோசனைக்காரரைப் பாப்புவின் வசப்படுத்த அவனுக்கு அதிகாரம் கொடுத்தனுப்பினார்.

இதற்குள் லூதருடைய சிநேகிதர் மில்டிஸைப்பற்றி எச்சரிக்கையாயிருக்க லூதருக்குப் புத்திசொன்னார்கள். "உம்மைப் பிடித்து பாப்புவின் கையில் ஒப்புக்கொடுக்க அவன் வருகிறான். சில நம்பிக்கையுள்ள மனுஷர் அவன் அதிகாரப் பத்திரத்தை பார்த்திருக்கிறார்கள்" என்றார்கள். லூதரோ, "நான் தேவசித்தத்திற்குக் காத்திருக்கிறேன்" என்றார்.

எலெக்டருக்கு இன்னதுசெய்வோம் என்று தெரியவில்லை. பாப்புவானவர் தம்மைப் பயமுறுத்தினால் எதிர்க்க ஆயத்தமாயிருந்தார். இப்படி யூகமாய் பாப்பு காரியங்களை நடப்பிக்கும்போது ஒன்றும் எதிர்பேசக் கூடாதவராயிருந்தார். ஆனால் பாப்புவின் கோபம் மாறுமட்டும் கொஞ்சநாளைக்கு லூதரை ஒளித்துவைக்கலாமென்றெண்ணினார். ஆனால் அவர் எதிர்பாராத ஓர் காரியம் நடந்ததினால் அவர் பயமெல்லாம் தெளிந்தது.

1519-ம் வருஷம் ஜனுவரிமாதம் 12-ம் தேதியில் ஜர்மானியா தேசத்துச் சக்கரவர்த்தியாகிய மாக்ஸிமிலியன் இறந்துபோனார். அந்த ராச்சியபாரத்தை நடத்தும்படி எலெக்டர்பிரபுவை ஏற்படுத்தி



னார்கள். அந்த ஸ்தானத்திலிருக்குமட்டும் அவர் பாப்புவின் ஸ்தானாதிபதிகளுக்குப் பயப்படவேண்டிய அவசியமில்லை. லூதரை பாப்புவின் கோபத்தினின்று பாதுகாக்க அவருக்கு வல்லமை இருந்தது. பாப்புவுக்கு ஆஸ்திரியா நாட்டு அதிபதியாகிய சார்ல்ஸ் என்பவர் சக்கரவர்த்தியாகக்கூடாதென்ற விருப்பமிருந்தது. சன்னியாசியாகிய லூதருக்குப் பயந்ததைவிட சார்ல்ஸுக்கு மிகவும் பயந்தார்.

மாக்ஸிமிலியன் இறந்துபோகுமுன் மில்டிஸ் சாக்ஸனி நாட்டுக்கு வந்துவிட்டான். அவன் லூதருடைய பூர்வ சிநேகிதனாகிய ஸ்பேலாட்டின் என்பவரிடத்தில் போய் லூதரைப்பற்றிப் பிரியாது சொன்னபோது, அவர், சபையிலுண்டான குழப்பங்களுக்கெல்லாம் டெற்ஸெல்சொன்ன பொய்களும் தேவதூஷணங்களுமே காரணம் என்றார். மில்டிஸ் அதை ஆச்சரியத்துடன் கேள்விப்பட்டு, டெற்ஸெலைத் தன் முன் நியாயம் விசாரிக்கப்பட வரச்சொன்னான். டெற்ஸெல் பயந்து வரவில்லை. லூதரைப்போல் குற்றமற்றவனாயிருந்தால் வந்திருப்பான்.

மில்டிஸ் லூதரிடத்தில் முதலாவது நயமாய்ப் பேசும்படி உத்தரவு பெற்றிருந்தான். இருவருக்கும் சிநேகிதராயிருந்த ஸ்பலாட்டின் என்பவர் வீட்டில் லூதரும் மில்டிஸ் என்பவனும் சந்தித்தார்கள். மில்டிஸ் லூதருக்கு அதிக பட்சங்காட்டி, அதிசயமாய் முகஸ்துதி பேசினான். மில்டிஸ் லூதரைப் பார்த்து "நீர் பாப்புவினிடத்திலிருந்து உலகத்தையெல்லாம் இழுத்துவிட்டீரென்று உமக்குத் தெரியுமா. என்னிடத்தில் 25,000 பேருள்ள ஒரு சேனை இருந்தாலும் உம்மை ரோமாபுரிக்குக் கொண்டுபோக என்னால் முடியாது" என்று சொன்னான். பின்னும் லூதரைப் பார்த்து, சபையின் கேடுகளை அகற்ற வேண்டுமானால் நீர் மறுதலிக்கவேண்டும் என்றான்.

லூதர் "என்னுடைய சத்துருக்கள் பேசாமலிருந்தால் நானும் மௌனமாயிருப்பேன்" என்றார். தாம் சற்றே துணிகரமான காரியங்களைச் செய்ததாக ஒத்துக்கொண்டார். தம்முடைய புஸ்தகங்களில் ரோமான் சபைக்கு விரோதமானதொன்றும் எழுதியிருப்பதாக எண்ணக்கூடாதென்று சொன்னார். ஆனால் தம்மை மறுதலிக்கச் சொன்னால் தம்மால் அது கூடாதகாரியம் என்று தெளிவாய்ச் சொன்னார்.

அக்காலத்தில் லூதர் ரோமான் சபைக்கு அதிக வணக்கத்தைக் காட்டிவந்தார். சமாதானத்தை விரும்பி பாப்புவுக்கு அவர் எழுதின ஒரு கடிதத்தில் "எல்லாவற்றிற்கும் ஆண்டவராயிருக்கும் இயேசு நாதரைத் தவிர வானத்திலும் பூமியிலும் ரோமான் சபையைவிட மேலானதொன்றுமில்லை" என்று எழுதினார்.

இக்காலத்தைப்பற்றி, பின் அவர் எழுதின ஒரு புஸ்தகத்தில் "இதை வாசிக்கும் கிறிஸ்தவ சகோதரனே, உலகமெல்லாவற்றையும் சாதனையினால் படிப்பித்து, நீடிய பழக்கத்தினால் இயற்கை போன்றதாய்க் கொண்டிருக்கும் தப்பிதங்களை விட்டு நீங்கி, அவைகளைக் களைந்து விடுவது எவ்வளவு கடினமான காரியம் என்று என் சரித்திரத்திலிருந்து பார்த்து உணர்ந்துகொள்" என்று எழுதியிருக்கிறார்.

இந்தக் காரியத்தை நடுத்தீர்க்க ஒரு கிரேவ்ஸ்ட அத்தியட்சர் மத்தியஸ்தராய் ஏற்படுத்தப்படவேண்டுமென்று மிலிற்ஸ் சொன்னதற்கு லூதர் சம்மதித்தார். முதற் சம்பாஷணை இப்படி முடிந்தது. இரண்டாந்தரம் அவர்கள் சந்தித்தபோது சமாதான உடன்படிக்கை பண்ணினவர்கள்போல் நடந்துகொண்டார்கள். இந்தத் தர்க்கத்தைப்பற்றி இனி இருதிறத்தாரும் பிரசங்கிக்கவாவது எழுதவாவது கூடாதென்று ஒழுங்கு செய்துகொண்டார்கள். மிலிற்ஸ் மிகவும் சந்தோஷப்பட்டு லூதருக்கு விருந்துசெய்தான். அவர் வீட்டுக்குத் திரும்பிப் போகும்போது அவரை மார்போடணைத்து உபசாரம் செய்தான்.

மிலிற்ஸ் டெற்சலை வரவழைத்து, "நீதான் இவ்வளவு தீவினைக்கும் காரணன். பாப்புவைக்கொண்டு உனக்கு நான் செய்கிறதைப் பார்" என்று பயமுறுத்தினான். கணக்குப் புஸ்தகத்தைக் கொண்டுவரச்சொல்லி அதிலிருந்து டெற்சல் அதிக பணத்தை வீணாய்ச் செலவழித்ததாயும் அபகரித்துக்கொண்டதாயும் ரூபித்தான். டெற்சல் இந்தப் பிரியாதுகளைக் கேட்டு பயந்து அசைவற்றிருந்தான்; கொஞ்சகாலத்துக்குப்பின் நிர்ப்பாக்கியமாய் மரணமடைந்தான். அவன் இறந்துபோகுமுன் லூதர் அவனுக்கு ஓர் அன்பான கடிதம் எழுதினார்.

கார்டினல் காஜிறன் றிரெவ்ஸ் பட்டணத்தில் இருந்தார். அங்கே மிலிற்ஸ் போய்ச் சேர்ந்தான். லூதர் மறுதலிக்கமாட்டேனென்று சொன்னதால், அவர்கள் இருவரும் அவரைத் தங்கள் கைவசப்படுத்தப் பிரயாசப்பட்டார்கள். அவர்கள், றிரெவ்ஸ் பட்டணத்துக் கிரேவ்ஸ்ட அத்தியட்சர் லூதரை தம்மிடத்தில் அனுப்பும்படியாக எலெக்றருக்கு ஒரு கடிதம் அனுப்பச்செய்தார்கள். அதை எலெக்றராவது லூதராவது கவனிக்கவில்லை. எலெக்றர் பிரபுவுக்குப் பாப்புவைப்பற்றியாவது அவர் ஸ்தானாதிபதிகளைப் பற்றியாவது பயமில்லை. லூதர் தாம் அங்கே போனால் தம்மை இன்னது செய்வார்கள் என்று அறிந்து போகாமல் இருந்துவிட்டார்.

கிரேவ்ஸ்ட அத்தியட்சர் யூகசாலியாயிருந்ததால், லூதரை இரண்டு வருஷத்திற்குப்பின் ஓர்மஸ் நகரத்தில் கூடப்போகும் சங்



கத்தில் விசாரணை செய்துகொள்ளலாம் என்று எலெக்றருடன் ஒழுங்கு செய்துகொண்டார்.

லூதர் இதன்பின் பாப்புகளின் தீர்மானங்கள் அடங்கிய சட்டசங்கிரகப் புஸ்தகத்தை ஒழுங்காய் படித்துவந்தார். அதில் அடங்கியிருந்த தவறுகள் அவர் எண்ணங்களை மாற்றிவிட்டது. அதுவுமல்லாமல் லூதர் எழுதியிருந்த புஸ்தகங்களை ஐரோப்பாக்கண்டம் முழுவதும் பரவி அநேகரை ரோமான் மார்க்கத்துக்கு விரோதமாய் ஏவிவிட்டன. அதினால் முன்செய்த பொருத்தம் முறிந்து முன்போல் தர்க்கங்கள் எழும்ப இடமுண்டாயிற்று.

பழைய விவாதத்தை எக் பண்டிதன் திரும்பவும் துவக்கினான். 8 சர்வகலாசாலைகளில் அவன் விருதுபெற்றிருந்ததினால் தன்னுடைய கல்விச் சாமர்த்தியத்தைக் காட்ட அவனுக்கு விருப்பமிருந்தது. கார்ல்ஸ்றட் என்பவர் லூதரின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டார். அவருக்கும் எக் பண்டிதனுக்கும் ஒரு தர்க்கம் நடந்தது. அதன்பின் எக் பண்டிதன் லீப்ஸிக் நகரத்தில் பகிரங்கமாய் நடக்கப்போகிற தர்க்கத்திற்கு லூதரை வரும்படியாக அழைத்தான்.

கார்ல்ஸ்றட் என்பவரோடு தர்க்கம் செய்ததை, எக் பண்டிதன் ஒரு பொருட்டாய் எண்ணவில்லை. லூதரோடு தர்க்கம் செய்து அவரை வெல்லவேண்டும் என்று விரும்பினான். லூதரைத் தர்க்கம் செய்ய வரும்படி அவருடைய முக்கியமான கோட்பாடுகளுக்கு விரோதமாய் 13 சித்தாந்தங்களைப் பிரசுரஞ்செய்தான். லூதர் ஒன்றிற்கும் அஞ்சாமல் உடனே அதற்கு மறுமொழியாய் வேறு சித்தாந்தங்களைப் பிரசுரஞ் செய்தார்.

பாப்பு சபையின் தலைவரோ அல்லவோ என்பது அந்தத் தர்க்கத்தில் முக்கியமான ஓர் விவாதம். இதைப் பார்த்து லீப்ஸிக் மாகாணத்துக்கு அதிபதியாகிய ஜோர்ஜ் பிரபு மலைத்தார். லூதர் இந்தத் தர்க்கத்தில் தாமும் தர்க்கஞ்செய்ய உத்தரவுகேட்டுக் கடிதத்தின்மேல் கடிதம் எழுதியும் அவர் மறு உத்தரவு ஒன்றும் எழுதவில்லை. லூதர் மற்ற ஜனங்களைப்போல் வந்து, தர்க்கத்தைப் பார்க்கமாத்திரம் உத்தரவு பெற்றார்.

அடால்பஸ் என்னும் அத்தியட்சர் இந்தத் தர்க்கத்தைத் தடுக்க வேண்டுமென்று ஜோர்ஜ் பிரபுவைக் கேட்டதற்கு, அவர், "நம்முடைய முன்னோரின் நல்வழக்கப்படி, விசுவாசிக்கப்படும் காரியங்களில் சமுசயமானவைகளைப்பற்றித் தர்க்கம் செய்வதை ஒரு அத்தியட்சர் தடைசெய்யக் கேட்பது ஆச்சரியம். வேதசாஸ்திரிகள் தங்கள் கொள்கைகளுக்கு நியாயஞ்சொல்லக்கூடாவிட்டால் அவர்களுக்குக் கொடுக்கிற பணத்தைக் கிழவிகளுக்கும் பிள்ளைகளுக்கும்

கொடுத்தால் உத்தமமாயிருக்கும். அவர்கள் பாப்புக்கும் ஜதைய தூக்குமாவது அந்தப் பணம் உதவும்" என்றார்.

லூதரும் அவர் சிநேகிதரும் மகா துன்மார்க்கரென்று லீப்ஸிக் நகரத்துச் சன்னியாசிகளும், குருக்களும் போதித்தார்கள். வேதப் புரட்டராகிய அவர்கள் சொற்களை, ஒருவரும் கேளாதபடி சபை யாரை வேண்டிக்கொண்டார்கள்.

எக் பண்டிதன் லீப்ஸிக் பட்டணத்தில் வந்தவுடன் அவனுக்கு வெகு மரியாதை நடந்தது. அவன் குரு உடைதரித்து, தெரு வழியே அநேக குருக்கள் பின்செல்ல, பவனிபோனான். லூதர் லீப்ஸிக் நகரத்திற்குவந்தவுடன், எக் பண்டிதன் அவர் வீட்டிற்குப் போய் "என்ன, என்னோடு தர்க்கம் செய்யமாட்டேன் என்கிறீராமே" என்றான்.

அதற்கு லூதர் ஜோர்ஜ் பிரபு தம்மைத் தடுத்திருக்கிறதாகச் சொன்னார். எக் பண்டிதன் "நான் பிரபுவினிடத்தில் உத்தரவு பெற்றுக்கொடுத்தால் என்னோடு தர்க்கம் பண்ணுவீரா?" என்று கேட்டான். லூதர் மிகவும் சந்தோஷப்பட்டு "உத்தரவு வாங்கித் தாரும், தர்க்கம் பண்ணலாம்" என்றார்.

எக் பண்டிதன் பிரபுவினிடத்தில் போய் "நான் லூதரை தோற்கச் செய்வேன்" என்று நிச்சயமாய் சொன்னதின்பேரில் அவர் உத்தரவு கொடுத்தார்.

ஏறக்குறைய 20 நாளாய்த் தர்க்கம் நடந்தது. பாப்புவின் தலைமை, பாவமன்னிப்புச் சீட்டுகள், உத்தரிக்கும் ஸ்தலம், குரு அளிக்கும் பாவமன்னிப்பு முதலியவைகளைப்பற்றித் தர்க்கம் செய்தார்கள். தர்க்கத்தின் முடிவை ஒருவரும் வெளிப்படுத்தவில்லை. எக் பண்டிதனும் அவன் சிநேகிதரும் தாங்கள் வென்றுவிட்டோம் என்று வீம்பு பாராட்டினார்கள். மற்றவர்களோ லூதரும் கார்ல்ஸ்டாடும் வென்றார்கள் என்று தீர்மானித்தார்கள்.

லூதரின் வார்த்தைகள் அநேகருடைய இருதயத்தில் பதிந்தன. எக் பண்டிதனின் லிகிதன் சீர்திருத்தக்காரரின் பக்கம் சேர்ந்து விட்டான். லூதருக்கு அதிக விரோதமாயிருந்த செல்லாரியஸ் வேதாகமத்தை ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்தார். இவர் எபிரெய பாஷையில் பண்டிதராயிருந்தார். அவர் மற்றவர்களுக்குக் கற்பிப்பதை விட்டுவிட்டு, லூதரினிடம் உவிற்றின்பேர்க் நகரத்திற் கற்றுக்கொள்ளவந்தார். இந்தத் தர்க்கத்தில், பாப்பு சபைக்கு தலைவரென்று சொல்வது பிசகென்று லூதருக்கு தெளிவாய்க் காணப்பட்டது. மெலாங்க்தான் என்பவர் கலைஞானத்தையெல்லாம் ஒழித்து வேதசாஸ்திரம் கற்கத் தலைப்பட்டார்.



இக்காலத்தில் லூதர், கலாத்தியர் நிருபத்தின்பேரில் தம்முடைய முதலாம் வியாக்கியானத்தை எழுதினார். இந்த வியாக்கியானத்தில் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் என்னும் சத்தியத்தை வல்லமையோடு உணர்த்தினார். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறதென்றால், நம்முடைய புண்ணியங்களினால் அல்ல, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை நம்புவதினால் நமக்கு இரட்சிப்புக் கிடைக்கும் என்பதே.

## 14. பாப்புவின் முத்திரைப்பத்திரம்.

எக் பண்டிதன் லூதருக்குப் பெரிய சத்துருவாய்த் தலைப்பட்டான். அவன் 1520-ம் வருஷத் துவக்கத்தில் ரோமாபுரிக்குச் சென்று, தன்னுடைய பெரிய எதிராளியாகிய லூதரை நசுக்கிப் போடப் பாப்புவை எழுப்பிவிட்டான்.

எலெக்டர் பிரபுக்களெல்லாம் ஓர் சக்கரவர்த்தியைத் தெரிந்து கொள்ள பிராங்க்போர்ட் நகரத்தில் கூடிவந்திருந்தார்கள். அந்தப் பட்டத்தைப் பெற மூன்றுபேர் ஆசைப்பட்டார்கள். அவர்கள் யாரென்றால், மாக்ஸிமிலியனின் பேரனும், ஸ்பானியா அஸ்திரியா முதலிய தேசங்களுக்கு அரசனுமாகிய சார்ல்ஸ் என்பவனும், பிரான்ஸ் தேசத்து அரசனாகிய முதலாம் பிராஞ்சிஸ் என்பவனும், இங்கிலாந்து தேசத்து அரசனாகிய எட்டாம் ஹென்றியுமே. பாப்புக்கு இவர்கள் மூன்றுபேரில் ஒருவரும் அந்தப் பட்டத்தைப் பெறுவது இஷ்டமில்லை. "உங்களுக்குள்ளே ஒருவரைத் தெரிந்துகொள்ளுங்கள்" என்று எலெக்டர் பிரபுக்களுக்குப் புத்திசொல்லி எழுதியிருந்தார். லூதருடைய சிநேகிதராகிய சாக்ஸனிநாட்டு எலெக்டர் பிரபுவாகிய பிரெடரிக் என்பவரை, அந்தப் பட்டத்தைத் தரித்துக் கொள்ளச் சொன்னதற்கு அவர், "ஜர்மானியா தேசத்தை இரட்சிப்பதற்கு என்னிலும் வல்லவரான ஒரு சக்கரவர்த்தி வேண்டியதாயிருக்கிறது. துருக்கியர் நம்முடைய தேசத்திற்குள் வரக் காத்திருக்கிறார்கள். அவர்கள் நுழையப்பார்க்கிற இடத்திலிருக்கிற அஸ்திரியா நாட்டிற்கு அதிபதியாகிய ஸ்பானிய அரசனே அதற்கு ஏற்ற காவலாளி" என்று சொல்ல அந்தப் பட்டம் தமக்கு வேண்டாமென்று தள்ளிவிட்டார்.

கடைசியில் சார்ல்ஸ் என்பவரைத் தெரிந்துகொண்டார்கள். 1520-ம் வருஷம் அக்டோபர்மாதம் 22-ம் தேதி மிகுந்த ஆடம்பரத்துடனே அவரை ஜர்மானியா தேசத்துச் சக்கரவர்த்தியென்று பட்டம் சூட்டினார்கள். சார்லிமேன் காலத்திற்குப்பின் ஐரோப்பா

தேசத்தில் இவரைவிட வல்லமையுள்ள அரசனிருந்ததில்லை. பிரெட்ரிக் சக்கரவர்த்தியாயிருந்தால், மார்க்க சீர்திருத்தம் அவரால் உண்டானதென்று சொல்லலாம். சார்லஸ் மார்க்க சீர்திருத்தத்திற்குச் சற்றேனும் இசைந்தவரல்ல.

சார்லஸ் வோர்ம்ஸ் பட்டணத்தைவிட்டுப் போகுமுன், லூதர் அவருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில், கடவுளின் சத்திய சுவிசேஷத்தைத் தமக்கு ஒப்புவிக்கப்பட்ட அதிகாரத்தினால் பாதுகாக்கும்படி அவரைக் கேட்டார். வாலிபனாயிருந்த ஸ்பானியாதேசத்து அரசன், யாரோ ஒரு ஜர்மானிய சன்னியாசி புலம்புகிறான் என்று அலட்சியமாய் ஒரு மறுமொழியும் எழுதாமல் இருந்துவிட்டார்.

லூதர் அக்காலத்தில் தமது ஜீவனை எப்போதும் கையில் ஏந்திக்கொண்டிருக்கவேண்டியதாயிருந்தது. மைசன் நகரத்து குருக்கள், லூதரைக் கொல்லுகிறவனுக்குப் பாவம் ஒன்றுமில்லையென்று வெளியரங்கமாய்ப் போதித்தார்கள். ஒருநாள் லூதர் தனியே சன்னியாசி மடத்தண்டை உலாவிக்கொண்டிருக்கும்போது, ஒரு அன்னியன் தன் சட்டைக்குள் ஓர் கைத்துப்பாக்கியை வைத்துக்கொண்டு அவரண்டை வந்து, அவரைப் பார்த்து, "இப்படி ஏன் தனியே போகிறீர்" என்றான். அதற்கு அவர், "நான் கடவுளுடைய கரங்களிலிருக்கிறேன்; அவர் என் பெலனும் கேடகமுமாயிருக்கிறார்; மனுஷன் எனக்கு என்னசெய்வான்?" என்று சொல்லவும், அந்த அன்னியன் முகம் வெளிறி நடுநடுங்கி ஓடிப்போனான். சேரா லொங்கா எலெக்டர் பிரபுவுக்கு, "தங்களுடைய நாட்டில் லூதருக்கு இடம் கொடுக்காதேயுங்கள்; எவ்விடத்திலுமிருந்து அவனைத் துரத்தி எல்லாரும் பட்டப்பகலில் அவனைக் கல்லெறியட்டும். 10,000 வராகன் கிடைக்கிறதைவிட அது எனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும்" என்று எழுதினான்.

எலெக்டர் பிரபு லூதருக்கு அடைக்கலம் கொடுக்கிறார் என்று பாப்பு பிராதுபண்ணியபோது, எலெக்டர் பிரபு பாப்புவின் ஸ்தானாபதியைப் பார்த்து, "லூதருக்கு நான் அடைக்கலம் கொடுக்கிறதேயில்லை; தன்னைத் தான் பாதுகாத்துக்கொள்ள லூதரை விட்டுவிடுகிறேன்" என்று உன் எஜமானனுக்குச் சொல் என்று சொல்லியனுப்பினார்.

ஆனால் லூதருக்கும் சிநேகிதர் இருந்தார்கள். பராக்கிரமசாலியான ஓர் போர்வீரன் ஜர்மானியா தேசத்திலிருந்து தன் மகன் வசமாய் லூதருக்கு ஒரு கடிதம் எழுதியனுப்பினார். "உம்முடைய ஜீவனைத் தேடுகிறவர்கள் அநேகர், என்னிடத்தில் வந்தால் தேவகிருபையை முன்னிட்டு நூறுபேருக்கு மேலான வீரரைச் சேர்த்து



அவர்களுடைய உதவியினால் எல்லா மோசத்திற்கும் உம்மைத் தப்புவிப்பேன்" என்று எழுதினார். அநேக வீரர் இப்படிப்பட்ட கடிதங்களை அவருக்கு அனுப்பினார்கள். ஆனால் லூதரோ "சுவிசேஷத்தைப் பாதுகாப்பதற்கு ஆயுதமும் இரத்தம் சிந்துதலும் அவசியமில்லை. சுவிசேஷத்தைப் பிரசங்கஞ் செய்துதான் உலகம் ஜெய்ப்பட்டது" என்றார்.

இதற்குள் லூதர், பாப்புவின் அதிகாரம் எப்படித் துவக்கிப் பரவிற்றென்று நன்றாய் ஆராய்ந்தறிந்தார். அப்படி ஆராய்ச்சிசெய்யும் போது அவர் கண்ட சில காரியங்கள் அவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. 1520-ம் வருஷம் ஜூன் மாதத்தில், கிறிஸ்துமார்க்க சீர்திருத்தத்தைப்பற்றி ஜர்மானியா தேசத்துச் சக்கரவர்த்திக்கும் பிரபுக்களுக்கும் பண்ணிய ஓர் முறைப்பாடு என்று பேர்கொண்ட ஓர் கீர்த்திபெற்ற பத்திரிகையைப் பிரசுரம் செய்தார்.

அதில் லூதர், பல நூற்றாண்டுகளாக ரோமாபுரியில் எல்லாரும் அறிய நடந்துவந்த அக்கிரமங்களையும் கேடுகளையும் வரிசையாய் எடுத்துக்காட்டினார்.

முதலாவது பாப்புவுக்கு விரோதமாய், "கிறிஸ்துவின் பிரதிநிதி என்று சொல்லிக்கொள்ளுகிற இந்த பாப்பு, சக்கரவர்த்திகளைவிட சிறப்பாய் வாழுகிறது பெரிய அநியாயம். தாழ்மையும் எளிமையுமுள்ள இயேசுவையும், ஏழை அப்போஸ்தலனாகிய பரிசுத்த பேதுருவையும் பின்பற்றுகிறவர்கள் இப்படியா இருக்கவேண்டும்?" என்று எழுதினார்.

கார்டினல்களுக்கு விரோதமாகவும், ஜர்மானியாதேசத்திலிருக்கும் பணங்களையெல்லாம் ரோமாபுரிக்குக் கொள்ளைகொண்டு போகும் வழக்கத்திற்கு விரோதமாகவும் எழுதினார். "நமக்கு ஞான நன்மைகளை தங்கத்திற்கு திருட்டுத்தனமாய் விற்றுவிற்கும் மோசக்காரரான பாப்புவின் பிரதிநிதிகளை, ஜர்மானியா நாடெங்குமிருந்து துரத்திவிடவேண்டியது நம்மேல் விழுந்த முதற்கடமை" என்று எழுதினார்.

அப்புறம் சன்னியாசிகள் குருக்களின் நிலைமையைக் காட்டினார். தீமோத்தேயுவுக்குப் பவுல் அப்போஸ்தலன், "கண்காணியானவர் ஒரே மனைவியையுடைய புருஷனாயிருக்கக்கடவன்" என்று எழுதுகிறார். பாப்புவோ குருமார் விவாகஞ்செய்யக் கூடாதென்று சொல்லியிருப்பதினால் அநேக தீவினைகள் விளைகின்றன.

திருநாட்கள், பெருநாட்கள், சர்வகலாசாலைகள், பள்ளிக்கூடங்கள் இவற்றைப்பற்றியெல்லாம் எழுதினார்.

கொஞ்சகாலத்துக்குள் இந்த முறைப்பாட்டில் 4,000 பிரதி விலையாகிப்போயிற்று. ஜனங்களெல்லாரும் லூதர் பட்சமாயிருந்தார்கள். எக் ரோமாபுரியிலிருந்து லூதர்மேல் ஆக்கினைத் தீர்ப்பு பெற்றுக் கொண்டுவரப் பிரயாசப்பட்டான். அவன் பாப்புவின் ஆலோசனைச் சபை, குருக்கள், ஜனங்கள் எல்லாரையும் ஏவிவிட்டு, கடைசியில் தன் காரியத்தை முடித்துக்கொண்டான். லூதருக்கும் அவரைச் சேர்ந்தவர்களுக்கும் 60 நாள் தவணை கிடைத்தது. அதன்பின் அவர்கள் மறுதலிக்காவிட்டால் அவர்களை சபைக்குப் புறம்பே தள்ளிவிட வேண்டும் என்று தீர்ப்பாயிருந்தது.

பாப்புவினிடமிருந்து வரும் கடிதத்திற்கு அல்லது அறிக்கைப் பத்திரத்திற்கு "புல்" என்று இங்கிலீஷில் பெயர். முத்திரை என்றர்த்தங்கொள்ளும் "புல்லா" என்னும் லத்தீன் மொழியிலிருந்து இந்த வார்த்தை வந்தது. இந்தப் பத்திரத்தில், ஈயத்தால் அல்லது தங்கத்தால் செய்த ஒரு முத்திரை கயிற்றால் கட்டப்பட்டுத் தொங்கும். இந்த முத்திரையின் ஓர் பக்கத்தில் பேதுரு பவுல் அப்போஸ்தலரின் தலைகளும், இன்னொரு பக்கத்தில் பாப்புவின் பெயரும் அடித்திருக்கும். பத்திரத்தோடு முத்திரையும் சேர்ந்து வருவதால், முத்திரையின் பேர் அந்தப் பத்திரத்திற்குக் கொடுக்கப்படுகிறது. நாம் அதை முத்திரைப் பத்திரம் என்று சொல்லுவோம்.

இந்த முத்திரைப் பத்திரத்தில், லூதரின் 41 சித்தாந்தங்கள் கேடானவை என்று காட்டியிருந்தது. லூதரின் புஸ்தகங்களை அத்தியட்சர்மார் கவலையுடன் தேடி பகிரங்கமாய்ச் சுட்டெரிக்கவும் லூதரும் அவரைச் சேர்ந்தவர்களும் மறுதலிக்காவிட்டால், அவர்களைப் பிடித்து ரோமாபுரிக்கு அனுப்பவும் கட்டளையிட்டிருந்தது.

எக் இந்தப் பத்திரத்தை ஜர்மானியாவுக்குக் கொண்டுவந்தான். எல்லாரும் அவன்தானே அதைப் பொறாமையினால் எழுதிக்கொண்டு வந்ததாக நினைத்தார்கள். அநேக அத்தியட்சர்மார் அதை பிரசித்தஞ் செய்யமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். இன்னும் அநேக இடங்களில் ஜனங்கள் அதைக் கிழித்து காலின்கீழே போட்டு மிதித்தார்கள். எர்வர்ட் நகரத்து மாணாக்கர் தங்கள் கையில் அகப்பட்ட பிரதிகளையெல்லாம் ஆற்றில் எறிந்துவிட்டார்கள். லீப்ஸிக் நகரத்து மாணாக்கர் எக்கின்பேரில் ஒரு கையாண்டிப் பாட்டு கட்டி அதைத் தெருக்களில் பாடினார்கள். எக் பயந்து இராத்திரியே ஓடிப்போய் ஒளித்துக்கொண்டான். லூதர் அந்த முத்திரைப் பத்திரம் பிரசுரமாயிற்றென்று கேள்விப்பட்டவுடன், "பொய்யும், அவபக்தியும் நிறைந்த இப்பத்திரத்தை நான் அவமதிக்கிறேன். இது எக் என்பவனுடைய யோக்கியத்திற்கேற்ற பத்திரம்" என்றார்.



அத்தியட்சர்மார், தேசாதிபதிகள் முதலானோர் அநேக இடங்களில் லூதருடைய புஸ்தகங்களைச் சுட்டெரித்தார்கள். ஒல்லாந்து நாட்டுக்கு அரசியாயிருந்த மார்கரேற் பெருமாட்டியினிடம் அவ்விடத்துக் குருக்கள் "லூதர் விசுவாசத்தை வேரறுக்கிறார்" என்று பிரியாது செய்தார்கள். "இந்த லூதர் யார்" என்று அந்தப் பெருமாட்டி கேட்டாள். அதற்கு அவர்கள், "ஒரு அறிவற்ற சந்நியாசி" என்றார்கள். அதற்கு அந்தப் பெருமாட்டி, "நல்லது, கற்றவர்களாயும் அநேகராயுமிருக்கிற நீங்கள் அவனைப் பொய்யனுக்குங்கள். உலகம் அறிவற்ற ஒரு சந்நியாசியை நம்புவதைவிட கற்றோரின் கூட்டமாகிய உங்களைத்தானே நம்பும்" என்று சொன்னாள். ஆதலால் குருக்கள் அவர் புஸ்தகங்களைச் சுட்டெரிப்பதிலேயே முயற்சியாயிருந்தார்கள்.

இவையெல்லாம் நடந்தும் லூதர் அதைரியப்படவில்லை. நவம்பர்மாதம் 17-ம் தேதியில், ஒரு வக்கீல் ஐந்து சாட்சிகள் முன்னிலையில் பாப்புவின் அதிகாரத்திற்கு விரோதமாய் முறையிட்டு, சபையின் பொதுவான சங்கத்திற்கு அபயமிட்டார். அவர் பண்ணிய முறைப்பாடு ஜர்மானியா நாடெங்கும் பிரசுரம் செய்யப்பட்டதுமல்லாமல், ஐரோப்பாவின் அரசர் சபைகளுக்கெல்லாம் போய் எட்டிற்று.



பாப்புவின் முத்திரைப் பத்திரத்தைச் சுட்டெரித்தது.

இதைவிடத் துணிகரமான ஓர் காரியத்தையும் செய்தார். டிசெம்பர் மாதம் 10-தேதி, சர்வகலாசாலை வித்தியாபோதகரையும், மாணாக்க

ரையும் மறுநாட் காலையில் கீழ்வாசலண்டை கூடிவரும்படி உவிற்றன்பேர்க் நகரத்து மதிற் சுவரில் ஒரு விளம்பரம் ஒட்டினார். அநேகர் அதற்கிசைவாய் கூடிவந்தார்கள். லூதர் அவர்களை நடத்திக்கொண்டு, குறித்த இடத்திற்குக் கூட்டிக்கொண்டுபோனார். அங்கே விறகுக்கட்டுகள் குவித்திருந்தது. அங்கிருந்தவர்களில் வயதில் பெரியவரான ஒரு குரு அந்தக் குவியலில் நெருப்புவைத்தார். அக்கினிச்சுவாலை எழும்பவே, லூதர் பாப்புக்களின் கனோன் சட்டங்களையும் தீர்ப்புச் சங்கிரகங்களையும், எக் எழுதின சில பிரபந்தங்களையும் நெருப்பில் போட்டார். அவைகள் வெந்து சாம்பலாய்ப்போனபின், பாப்புவின் முத்திரைப் பத்திரத்தை லூதர் கையிலெடுத்து "நீ கர்த்தருடைய பரிசுத்தரைத் துன்பப்படுத்தியதால் அவியாத அக்கினி உன்னைத் துன்பப்படுத்திப் பட்சிக்கக்கடவது" என்று சத்தமிட்டுச் சொல்லி அதை நெருப்பில் எறிந்தார். அதின்பின், சந்தோஷத்துடன் ஆரவாரிக்கும் ஜனக்கூட்டம் பின்செல்ல, பட்டணத்துக்குள் திரும்பிப்போனார்.

லூதர் பாப்புவின் சபையிலிருந்து தாம் பிரிந்ததை இவ்விதமாய் எல்லாருக்கும் வெளியரங்கமாய் தெரியப்படுத்தினார்; இதனால் தமக்கும் பாப்புவுக்கும் போர் இருக்கிறதென்று அறிக்கையிட்டார்.

சபையிலிருந்து தள்ளப்பட்டவர்களை உடனே மரணாக்கினைக்குட்படுத்துகிறது பல நூற்றாண்டுகளாய்ச் சபையின் வழக்கம். பாப்புவின் கட்சிக்காரர், லூதரின்பேரில் இந்த ஆக்கினையைச் செலுத்துவதற்கு சக்கிரவர்த்தியினிடம் ஒரு கட்டளைபெற மிகவும் பிரயத்தனஞ் செய்தார்கள். பாப்பும் லூதருடைய புஸ்தகங்களைச் சுட்டெரிப்பதில் பிரயோஜனமில்லையென்று கண்டு, லூதரின் மரணாக்கினைப்பத்திரத்தைப் பெற்று வரும்படி ஜர்மானியாதேசத்திற்கு ஒரு தூதனை அனுப்பினார்.

முதலிற் சக்கரவர்த்தியினிடம் சொல்லிப்பார்த்தார்கள். அவர் புதிதாய்ப் பட்டம் பெற்றவராதலால், சாக்ஸனி நாட்டு எலெக்றர் பிரபுவைத் தீர்ப்புச் சொல்லச்சொன்னார்.

பாப்புவின் தூதன் எலெக்றர் பிரபுவினிடம் வந்து, "பரிசுத்த பாப்புவின்பேரால் உம்மை இரண்டு காரியம் கேட்கிறேன். முதலாவது நீர் லூதரின் புஸ்தகங்களைச் சுட்டெரிக்க உத்தரவு கொடுக்கவேண்டும், இரண்டாவது, நீர் அந்த வேதப்புரட்டனைச் சரியானபடி தண்டிக்கவேண்டும் அல்லது அவனைக் கைதியாகப் பாப்புவிடத்தில் ஒப்புவிக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

எலெக்றர் அதற்குப் பிரதியுத்தரமாக: "இது உடனே மறுமொழி சொல்லத்தக்க காரியமல்ல. முக்கியமான விஷயமாயிருப்ப



தால் ஏற்றகாலத்தில் நம்முடைய தீர்மானத்தை உனக்குத் தெரியப்படுத்துவோம்" என்றார்.

எலெக்றருக்கு என்ன செய்கிறதென்று தெரியவில்லை. பாப்புவைக் கோபமூட்டவும் அவருக்கு இஷ்டமில்லை. குற்றஞ்செய்யாத ஓர் யதார்த்த வாதியைச் சத்துருக்கள் கையில் ஒப்புக்கொடுக்கவும் அவருக்கு பிரியமில்லை. தம்முடைய ஆலோசனைக்காரரோடு இந்த விஷயத்தைப்பற்றி நன்றாய் யோசித்தபின், எலெக்றர் பிரபு, லூதருக்கு வழிக்காவற்பத்திரங் கொடுத்து, கல்வியும், பக்தியும், நேர்மையும் நிறைந்த நியாயாதிபதிகள் கூடிய நியாயஸ்தலத்தில் அவரை விசாரணை செய்யவேண்டும்" என்று சொன்னார்.

இதற்குள் லூதரின் புஸ்தகங்கள் எங்கும் பரவின. லூதரும் மேலான்க்தானும் பண்ணும் பிரசங்கங்களைக் கேட்க நூற்றுக்கணக்கான மாணாக்கர் உவிற்றன்பேர்க் நகரத்துக்கு வந்துசேர்ந்தார்கள். ஆராதனைக்கு வரும் ஜனங்களுக்கு இரண்டு கோவிலிலும் இடமில்லாதிருந்தது. அரசர், பிரபுக்கள், கற்றோர் முதலிய எல்லோரும் பலதிசைகளிலுமிருந்து லூதருக்கு ஆறுதலான வார்த்தைகளை எழுதினார்கள். ஆனால் லூதரின் சிநேகிதரிற் சிலர் பயந்தார்கள்; அதில் ஸ்றப்பிற்ஸ் ஒருவர். லூதர் அவருக்கு "நீர் தாழ்மையாயிருக்கும்படி எனக்கு புத்திசொல்லுகிறீர், நான் உம்மைத் திடமனதாயிருக்கும்படி புத்தி சொல்லுகிறேன்" என்றெழுதினார்.

## 15. ஓர்ம்ஸ் நகரத்து ஆலோசனைச் சங்கம்.

ஓர்ம்ஸ் நகரத்து சங்கத்தில் நடந்த விசாரணையிலேதான் லூதர் உலகெங்கும் போற்றும் சிரோமணியென விளங்கினார். சங்கம் நூரம்பேர்க் நகரத்தில் நடக்கவேண்டியது. அந்த நகரத்தில் கொள்ளைநோய் நடமாடியதால் சங்கத்தை ஓர்ம்ஸ் நகரத்தில் வைத்தார்கள். ஓர்ம்ஸ் நகரம் மிகவும் புராதன நகரம். அது றைன் நதியினருகே அழகாய் அமைந்துள்ளது. சக்கரவர்த்திகள் அடிக்கடி இந்த நகரத்தில் வசித்துவந்தார்கள். சார்லிமேன் என்னும் சக்கரவர்த்தி இங்கேதான் விவாகஞ்செய்தார்.

ஏதாவது ஒரு முக்கியமான காரியத்தைப்பற்றி ஆலோசிக்கச் சேர்ந்துவரும் கூட்டத்திற்கு, ஜர்மானியா நாட்டில் டையட் என்று பெயர். இது இங்கிலாந்திலுள்ள பார்லிமென்று என்னும் சபைக்கு ஒப்பானது.

1521-ம் வருஷம் ஜனவரி௴ 6உ இந்த ஆலோசனைச் சங்கம் கூடிவரவேண்டுமென்று ஒழுங்குசெய்தார்கள். சக்கரவர்த்தி பாப்புவையும் எலெக்டரையும் பிரியப்படுத்த மனதுள்ளவராய், ஆலோசனைச் சங்கத்திற்கு லூதரை நேரே கூட்டிக்கொண்டு வாருமென்று எலெக்டர் பிரபுவுக்குச் சொன்னார். எலெக்டர் பிரபு எங்கே லூதரை மோசம் பண்ணுகிறார்களோ என்று பயந்தார். ஸ்பிலாற்றின் இதை லூதருக்குச் சொன்னபோது அவர் சிநேகிதர் பயந்தார்கள்; லூதரோ அஞ்சாமலிருந்தார். அவர் அச்சமயத்தில் பலவீனமாயிருந்தும் அதை ஒரு பொருட்டாயெண்ணவில்லை. எலெக்டர் பிரபுக்கு அவர் எழுதின கடிதத்தில் "நான் சுகத்தோடு ஓர்ம்ஸ் நகரத்துக்குப் போகக்கூடாவிட்டால், என் பெலவீனத்தை ஒரு பொருட்டாயெண்ணாமல் என்னைத் தூக்கிக்கொண்டு போகவேண்டும். அநேகமாய் அவர்கள் என்னையிருக்கிறபடி என்னைப் பலவந்தம் பண்ண விரும்பினால் அப்படியே செய்யட்டும். எல்லாம் கர்த்தருடைய கரத்தில் இருக்கிறது. அவர் என்னை இரட்சியாவிடில், என் ஜீவனில் பிரயோஜனமென்ன? ஓடிப்போகிறது, மறுதலிக்கிறது இவை இரண்டையுந்தவிர வேறென்ன காரியத்தையும் செய்ய ஆயத்தமாயிருக்கிறேன். ஓடிப்போக என்னால் முடியாது; மறுதலிக்கிறதோ அதைவிட கஷ்டமான காரியம்" என்றெழுதினார்.

இந்தக் கடிதம் எலெக்டர் பிரபுவிடத்தில் போய்ச் சேருமுன்னே, எலெக்டர் பிரபு லூதரை விட்டுவிட்டு, ஓர்ம்ஸ் நகரத்திற்கு தனியே புறப்பட்டுப் போய்விட்டார்.

ஜனவரி௴ 28உ ஆலோசனைச் சங்கம் கூடிற்று. லூதர் ஓர்ம்ஸ் நகரத்திற்கு வருவது பாப்புவின் ஸ்தானுக்கு கொஞ்சமேனும் இஷ்டமில்லை. லூதர் தம்முடைய சாதுரியத்தினால் அநேகரை ரோமான் சபையிலிருந்து திருப்பிவிடுவாரென்று பயந்தான். பாப்பு இன்னொரு முத்திரைப் பத்திரம் பிறப்பித்தார். முதற்பத்திரத்தில் லூதரைச் சபையைவிட்டுத் தள்ளியிருந்தது; இரண்டாவது பத்திரத்தில் லூதருக்கும், அவரைச் சேர்ந்தவர்கள் எல்லாருக்கும் விரோதமாய் ஆக்கினைத் தீர்ப்புக் கூறியிருந்தது. அவர்கள் சபிக்கப்பட்டவர்களென்றும், அவர்களும் அவர்களுக்குப் பின்வரும் சந்ததியாரும் தங்கள் உடைமை ஆஸ்திகளை இழந்துபோகவேண்டுமென்றும் கண்டிருந்தது. இந்த ஆக்கினைத்தீர்ப்பை ஒவ்வொரு கோவிலிலும் வாசிக்கவேண்டுமென்றும், அதை வாசிக்குமுன் பீடத்திலிருந்து பரிசுத்த பணிமுட்டுக்களையும் ஆபரணங்களையும் எடுத்துவிட்டு, சிலுவையைத் தரையிலே போட்டுவிடவேண்டுமென்றும், பன்னிரண்டு குருக்கள் தீவட்டிகளை எடுத்து முதலில் அவைகளைக் கொளுத்தி, பின் அவைகளைத் தங்கள் கால்களின் கீழே மிதித்து அவித்துவிட



வேண்டுமென்றும், அத்தியட்சரும் குருக்களும் சாபங்கூறிப் பாட வேண்டுமென்றும், ஆராதனை முடிவில் லூதரையும் அவரைச்சேர்ந்தவர்களையும் ஆக்கினைத்தீர்ப்புப் பெற்றவர்களென்று எல்லாரும் அறியக் குறித்துக் காட்டவேண்டுமென்றும், பாப்புவினிடத்திலிருந்து கட்டளை பிறந்திருந்தது.

இந்த முத்திரை பத்திரத்தை ஜர்மானியா நாடெங்கும் செல்லச் செய்வதற்காகச் சக்கரவர்த்தியிடமிருந்து ஒரு கட்டளை பிறப்பிக்கக் கூடியபிரயத்தனஞ் செய்தார்கள். அப்படிப்பட்ட கட்டளை ஒன்று ஆயத்தமாயிருந்தது. ஆனால் அத்தேச வழக்கப்படி சக்கரவர்த்தி சம்மதிக்குமுன் மகாணங்களும் அவைகளின் அதிபதிகளும் சம்மதிக்கவேண்டும். ஆகையால் சக்கரவர்த்தி, "முதலில் ஆலோசனைச் சங்கத்தில் லூதர் கெட்டவன் என்று ருபியுங்கள். அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்" என்றார். அப்படிச் செய்கிறேன் என்று பாப்புவின் ஸ்தானுகிய அலியாந்தர் ஏற்றுக்கொண்டான்.

பெப்ருவரி௴ 13உ அலியாந்தர், லூதரை அவலட்சணமாக வைது, அவர்மேல் கள்ளப் பிரியாதுகள்பண்ணி, வேதப் புரட்டனாகிய அவனைச் சிட்சிக்கவேண்டியது அவசியமென்று 3-மணிநேரமளவும் நின்றுகொண்டிருந்த ஆலோசனை சங்கத்தாரைப் பார்த்துக் கெஞ்சினான். சக்கிரவர்த்தியினிடம் திரும்பி "உம்முடையபேரில் ஸ்பஷ்டமாய் விழுந்த கடமையைச் செய்யும்; லூதருடைய சொற்களை ஒருவரும் பின்பற்றாதபடி உம்முடைய இராச்சியம் முழுவதும் கட்டளையிடும்; அவனுடைய புஸ்தகங்களை எவ்விடத்திலும் கொளுத்திப்போட உத்தரவருளும். நீதியின் பாதையைவிட்டுப் பின் வாங்காதேயும். நூறாயிரம் சபைப் பிரிவினைக்காரரைக் கொளுத்திப்போடுவதற்குப் போதுமான தப்பிதங்கள் இந்த லூதர் ஒருவனிடத்தில் இருக்கிறது" என்றான். அதுவுமல்லாமல் பாதகனான லூதரையும் சேர்த்துக் கொளுத்துகிறதானால் தானும் கூடக் கொளுத்தப்படுவதற்கு ஆட்சேபனையில்லை என்றுஞ்சொன்னான்.

பாப்புவின் ஸ்தானுக்கு மறுமொழிசொல்லுவார் ஒருவருமில்லை. அநேகர் அதைக்கேட்டு, அவன்பட்சம் சார்ந்தவர்களாயிருந்தாலும் இரண்டு மூன்றுநாளில் அதை எல்லாரும் மறந்துவிட்டார்கள். சாக்ஸனி நாட்டின் அதிபதியாகிய ஜோர்ஜ் பிரபு, அநேகம் கேடுகள் சபையிலிருந்து எடுபடவேண்டுமென்று சொன்னார். சன்மானிப்புகளை இத்தாலியருக்குக் கொடுப்பது, பாவமன்னிப்புச் சீட்டு விற்பது, குருக்களின் துர்நடத்தை முதலிய ஒழுங்கீனங்கள் சபையிலிருந்து நீக்கப்படவேண்டுமென்று காட்டினார். சபையை நன்றாய்ச் சீர்திருத்தம் செய்வது அவசியம் என்று கண்டு, சங்கத்தார் சபையிலிருக்கும் நூற்றொரு தாறுமாறுகளை எடுத்துக் காட்டினார்கள்.

சக்கரவர்த்தி, முன் பாப்புவின் தூதன் பிரசுரஞ்செய்யவேண்டுமென்றிருந்த கட்டளையை நிறுத்திப்போட்டார்; சங்கத்தாரும் லூதர் தாமே சங்கத்திற்கு வரவேண்டுமென்று விரும்பினார்கள். சக்கரவர்த்தியும் மற்றப் பிரபுக்களும் தங்கள் நாடுகள்வழியாய் அவர் பிரயாணம் பண்ணுவதற்கு அவருக்கு வழிக்காவற்பத்திரங்களை அனுப்பினார்கள்.

மார்ச்சு மீ 24உ சக்கரவர்த்தியின் ஸ்தானாதிபதி அவரிடத்தில் அழைப்புப் பத்திரத்தைக் கொடுத்தான். அவருடைய சிநேகிதரெல்லாரும் பயந்து நடுநடுங்கினாலும் அவர் பயப்படவேயில்லை. "என்னுடைய இரத்தம் தரையில் விழுந்து குளிர்ந்துபோகுமுன்னே பல தேசங்களிலுமுள்ள ஆயிரம் பதினாயிரக் கணக்கானவர்கள் அதைச் சிந்தினதற்காகக் கணக்குக் கொடுக்கவேண்டும்" என்றார்.

லூதர் ஏப்பிரல் மீ 2உ தம்முடைய சிநேகிதரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, மூன்று சிநேகிதருடன் ஒரு வண்டியிலேறி அவர்கள் முன் புறப்பட்டார். சக்கரவர்த்தியின் ஸ்தானாதிபதி குதிரையிலேறிச் சென்றான். அவர் சென்றவிடமெல்லாம் அவரைப் பார்க்க ஜனங்கள் கும்புகும்பாய் வந்தார்கள். சக்கரவர்த்தி, ஆலோசனைச் சங்கத்தார் இவர்கள்முன் போய் நிற்கப்போகிற லூதரைப் பார்ப்பது ஜனங்களுக்கு நூதனமான காட்சியாயிருந்தது.

ஆனால் எல்லா இடங்களிலும் ஜனங்கள் அவரைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளவில்லை. நாம்பேர்க் நகரத்தில் ஒரு குரு, அதற்குச் சில வருஷங்களுக்குமுன் சுட்டெரிக்கப்பட்ட சவனெரோலா என்பவர் படத்தை அவர்முன் பிடித்துக் காட்டினான்; வேமார் நகரத்தில் சக்கரவர்த்தியின் ஸ்தானாபதிகள் "லூதருடைய புஸ்தகங்களை அதிகாரிகளிடத்தில் கொடுத்துவிடவேண்டும்" என்னும் ராஜகட்டளையை ஒட்டும்போது, ஜனங்கள் ஆரவாரித்ததை லூதர் தமது காதுகளால் கேட்டார்.

வேமார் நகரத்தில் பிரசங்கஞ்செய்தார்; பின் ஏர்வர்ட் நகரத்திற்குப்போனார். அவர் அந்த நகரத்திற்கு சமீபமாய் வந்தபோது, அநேக பெரியோரும், சில விசேஷித்த சிநேகிதரும் ஊருக்கு வெளியேவந்து ஆர்ப்பரிப்புடன் அவரை எதிர்கொண்டார்கள். அங்கிருந்த ஜஸ்டஸ் ஜோனஸ் என்னும் ஓர் சாதுரிய பிரசங்கியையும் இன்னும் சில சிநேகிதரையும் கூட்டிக்கொண்டு ஐசினக் நகரத்திற்குப் போனார். அங்கே லூதர் வியாதிப்பட்டார். ஆனாலும் மறுநாள் பிரயாணத்தை ஆரம்பித்தார்.

அவர் பிரயாணம் பண்ணிப்போகும்போது, திரளான ஜனங்கள் இந்த தைரிய புருஷனைப் பார்க்கவந்தார்கள். சிலர் "ஐயோ



வர்ம்ஸ் நகரத்தில் எத்தனையோ கார்டினல்களும், அத்தியட்சர்களும் இருக்கிறார்கள். ஜான் ஹஸ் என்பவரை அக்கினிக்கிரையாக்கினது போல் உம்மையும் தகனம் பண்ணிவிடுவார்களே" என்றார்கள். அதற்கெல்லாம் பயப்படாமல் லூதர், "விட்டன்பேர்க் நகரம்முதல் வர்ம்ஸ் நகரம் வரையிலும் வானம் அளாவுவதற்கு நெருப்புக் கொளுத்தி வைத்திருந்தாலும் கர்த்தரின் நாமத்தை முன்னிட்டு அதனூடே நடந்து அவர்கள்முன் போய் நிற்பேன்" என்றார்.

பாப்புவின் கட்சிக்காரர் வழிக்காவற்பத்திரத்தில் சாட்டப்பட்ட நாட்கள் முடியும்வரையும் லூதரை வேறிடஞ்சேராவது போகச் செய்ய வேண்டுமென்று பிரயத்தனஞ்செய்தார்கள். ஆனால் லூதர் நேரே போகவேண்டும் என்று ஒரே உறுதியாய் நின்றதினால் அது சித்திபெறவில்லை.

லூதர் வர்ம்ஸ் நகரத்திற்குச் சமீபத்தில் வந்தபோது, ஸ்பிலாற்றின் ஒரு வேலையாளை அவரிடம் அனுப்பி, "வர்ம்ஸ் நகரத்திற்குள் வராதேயும்" என்று சொல்லி அனுப்பினார். லூதரோ மனங்கலங்காமல், "வர்ம்ஸ் நகரத்திலிருக்கும் வீடுகளின் மேல் பாவியிருக்கும் ஓடுகளத்தனை பேய்கள் அந்நகரத்தி லிருந்தாலும் நான் அதற்குள் பிரவேசிப்பேன்" என்றார்.

ஏப்பிரல் மாதம் 16உ காலையில் லூதர் வர்ம்ஸ் நகரத்தின் மதில்களைக் கண்டார். வாலிபரான சில பிரபுக்களும், வீரரும், குதிரைச்சேவகரும் அவருக்கு எதிர்கொண்டுவந்து அவர் வாகனத்தைச் சூழ்ந்து அவரைப் பட்டணவாசல்மட்டும் கூட்டிக்கொண்டு வந்தார்கள். பட்டணத்தினூடே அவர் செல்லும்போது ஜனங்களெல்லாம் தெருவாசல்களில் அவரைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். சக்கரவர்த்தி வந்தபோதுகூட அவ்வளவு ஜனக்கூட்டமில்லை. லூதர் தாம் தங்கும் இடத்திற்கு வந்து, வண்டியைவிட்டுக் கீழே இறங்கித் தரையிற் கால்மிதித்தவுடன், "கர்த்தரே எனக்குச் சகாயமாயிருப்பார்" என்றான்.

லூதர் வந்தவுடன் சார்ல்ஸ் பயந்து, சங்கத்தாரை அழைத்து "லூதர் வந்திருக்கிறார்; இனி என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டான். அதற்கு பாலர்மோ நகரத்து அத்தியட்சர் "தாங்கள் உடனே இந்த மனுஷனைக் கொன்றுபோடவேண்டும். சிஜிஸ்மண்டு சக்கரவர்த்தி ஜான் ஹஸ் என்பவனைத் தகனிக்கவில்லையா? சபைப் பிரிவினைக்காரருக்கு வழிக்காவற்பத்திரம் கொடுப்பதும் தகுதியன்று, கொடுத்ததை ஒத்துக்கொள்வதும் சரியல்ல" என்றார்.

ஜான் ஹஸ் ஓர் மார்க்க சீர்திருத்தக்காரர். அவர் 1415-ம் வருஷத்தில் கான்ஸ்டன்ஸ் நகரத்திற் கூடிய சங்கத்திற்கு சிஜிஸ்



லூதர் ஓர்ம்ஸ் நகரத்தில் வருகிறது.

மன்னு சக்கரவர்த்தி கொடுத்த வழிச் சாவற்பத்திரத்தோடு வந்தும் அவரைத் தகனித்துப் போட்டார்கள். அதைப்பற்றித்தான் பாலர்மோ நகரத்து அத்தியட்சர் அப்படி சொன்னார். சார்லஸ் அதைக்



கேட்டு "அப்படியல்ல ; நாம் சொன்ன பேச்சின்படி நடக்கவேண்டும்" என்றார்.

சக்கரவர்த்தியும் ஜர்மானியா பிரபுக்கள் எல்லோரும் கூடி வீற்றிருக்கும் சபாமண்டபத்தில் மறுநாள் சாயந்தரம் 4-மணிக்கு ஆஜராக வேண்டுமென்று லூதர் உத்தரவுபெற்றார். முதலில் லூதர் இவ்வளவு பெரிய சபைமுன் நிற்பதற்குப் பயந்தார். பின் கடவுளை நோக்கிப் பெலன்தர வேண்டுமென்று ஜெபித்தார் ; பெலனைப்பெற்றார்.

அன்று சாயங்காலத்தில் சக்கரவர்த்தியின் உத்தியோகஸ்தரில் ஒருவன் லூதரைச் சங்கத்திற்கு இட்டுக்கொண்டுபோனான். வழியெல்லாம் ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் நின்றார்கள். ஜன்னல்களெல்லாம் நிறைந்திருந்தது. வீடுகளின் கூரையிலும் ஜனங்கள் ஏறி நின்றார்கள். தெருவழியேபோக மார்க்கமில்லாமல், லூதர் தோட்டங்கள் பின்வாசல்கள் வழியாய்ச் சங்கம் கூடியிருந்த இடத்திற்குப் போகவேண்டியதாயிருந்தது.

லூதர் சபாமண்டப வாசலண்டை போனபோது ஒரு உத்தம போர்வீரன் அவரை அன்போடு பார்த்து, "ஏழைச் சன்னியாசியே, கடினமான போர்புரியப் போகிறீரே. நானாவது என்னைப்போலொத்த போர்வீரராவது மிகுந்தகொடிய யுத்தமுகத்திலும் இப்போருக்கொத்த போரைக் கண்டறியோம் ; ஆனால் நீர் நியாயத்தையும் சத்தியத்தையும் கொண்டிருப்பது உண்மையானால், கடவுள் நாமத்தில் போர்புரியும் ; கடவுள் உம்மைக் கைவிடமாட்டார்" என்று சொன்னான்.

கதவுகள் திறந்தன ; லூதர் உட்புகுந்தார். அரசரும் பெரிய மக்களும் கூடிய அந்தச் சங்கம் மகா செம்பிரமமாயிருந்தது. ராஜசிம்மாசனத்தில் 5-ம் சார்லஸ் வீற்றிருந்தார். அவருடைய இடதுபக்கத்தில் அவர் சகோதரனாகிய பெர்டினாந்து என்னும் சிரேஷ்டபிரபு வீற்றிருந்தார். சக்கரவர்த்திக்கு முன்பக்கத்தில், பாப்புவின் பிரதிநிதியாகிய திரேவ்ஸ் பட்டணத்துச் சிரேஷ்ட அத்தியட்சர் தலையிற் கிரீடம் தரித்து, கையிற் செங்கோல் பிடித்தவராய் உட்கார்ந்திருந்தார். மத்தியிற் போட்டிருந்த ஓர் மேசைக்குமுன், சிரேஷ்ட அத்தியட்சரின் ஆலோசனைத் தலைவன் சில புஸ்தகங்களைக் கையிலேந்தி, லூதரிடத்தில் கேள்விகேட்க ஆயத்தமாய் நின்றான். வலதுபுறத்தில் சாக்ஸனி நாட்டு எலெக்டர் பிரபு, பட்டயத்தின் கைப்பிடியில் கையைவைத்து நின்றார். சக்கரவர்த்திக்கு எதிரில், இவர்களெல்லாருக்கும் முன்பாக, லூதர் தலையில் பாகை ஒன்றுமில்லாமல் நின்றார். அவர்முன் ஒரு மேசையில் அநேக புஸ்தகங்கள் பரப்பி

யிருந்தன. 200 பேருக்கு அதிகமான சிரேஷ்ட அத்தியட்சர்கள், பிரபுக்கள், அத்தியட்சர்கள், ஸ்தானாபதிகள், மேன்மக்கள் முதலானோர் அவ்விடத்தில் கூடிவந்திருந்தார்கள். இதுவுமல்லாமல் அந்தச் சங்கம்கூடிய அரமனையின் சபாமண்டபத்தில் 5,000 பேருக்கு மேலான ஜனக்கூட்டம் கூடியிருந்தது. லூதர் கொஞ்சம் பயமடைந்ததை ஒரு பிரபு கண்டு, "ஆத்துமாவைக்கொல்ல வல்லமையற்று, சரீரத்தைமாத்திரம் கொல்லக் கூடியவர்களுக்குப் பயப்படாதே" என்றார். அவரை இட்டுக்கொண்டுவந்த உத்தியோகஸ்தன் லூதரைவிட்டுப் போகுமுன் "உம்மிடத்தில் ஏதாவது கேட்குமுன் நீர் பேசவேண்டாம்" என்று சொன்னான்.

லூதர் அந்த சபையில் பிரவேசித்தவுடன் அதிக குழப்பமுண்டாயிற்று. அங்கிருந்த ஒவ்வொருவரும் கீர்த்திபெற்ற லூதரைப் பார்க்க விரும்பினார்கள். ஆனால் கொஞ்சநேரத்தில்எல்லாச் சத்தமும் அமர்ந்து அமைதியாயிருந்தது. அப்போது சிரேஷ்ட அத்தியட்சரின் ஆலோசனைத்தலைவன் எழுந்து நின்று லூதரிடத்தில் இரண்டு கேள்விகளைக் கேட்டான். அந்த மண்டபத்தின் மத்தியிலிருந்த ஒரு மேசைமேல் வைத்திருந்த 20 புஸ்தகங்களைச் சுட்டிக்காட்டி, "இந்தப் புஸ்தகங்களை எழுதினது நீதானா? இவைகளை மறுதலிக்க ஆயத்தமாயிருக்கிறாயா?" என்று கேட்டான்.

லூதர் முதற்கேள்விக்கு "ஆம்" என்று உத்தரவுசொல்ல எத்தனித்துக்கொண்டிருக்கையில், அவருடைய சிநேகிதரொருவர் "அந்தப் புஸ்தகங்களின் பெயரை வாசியும்" என்று சத்தமிட்டுச் சொன்னார். உடனே அந்த ஆலோசனைத்தலைவன் மேசையண்டை வந்து, அந்தப் புஸ்தகங்களின் பெயர்களை வாசித்தான்.

லூதர் முதலில் லத்தீன்பாஷையிலும் இரண்டாவது ஜர்மானியா பாஷையிலும் அந்தப் புஸ்தகங்களை தாம் எழுதினாரென்று ஒத்துக்கொண்டார். இரண்டாவது கேள்விக்கு "கொஞ்சம் பொறுத்து உத்தரவுசொல்லுகிறேன்" என்றார். சங்கத்தார் ஆலோசனைசெய்து மறுநாள் வரைக்கும் அவருக்குத் தவணைகொடுத்தார்கள்.

மறுநாள் காலையில் எழுந்து, லூதர் தேவனை நோக்கி மிகவும் ஊக்கமாய் ஜெபித்து, கர்த்தருடைய பரிசுத்த வேதாகமத்தை வாசித்தார். பின் தம்முடைய புஸ்தகங்களைப் பார்த்து, என்னவிதமான உத்தரவு கொடுக்கிறதென்று ஆலோசித்தார். தமது இடதுகையைத் திறந்திருந்த வேதாகமத்தில் வைத்து, வலதுகையை வானத்துக்கு நேராக உயர்த்தி, "சுவிசேஷ சத்தியத்தையே பற்றுவேன்; இரத்தச்சாட்சியாக மரிக்கவேண்டியதாயிருந்தாலும் பயப்படாமல் என்



னுடைய விசுவாசத்தை வெளியரங்கமாய் அறிக்கையிடுவேன்" என்று பிரமாணம் பண்ணினார். அப்படிச் செய்தபின், அவர் மனதில் அதிக சமாதானமும் ஆறுதலும் உண்டாயிற்று.

4 மணிக்கு ஒரு சேவகன் வந்து அவரைச் சங்கத்திற்கு கூட்டிக்கொண்டுபோனான். இரண்டுமணிநேரம் ஜனத்திரளின் நடுவே காத்திருந்து, பின் உட்பிரவேசித்தார். இருட்டாகிற சமயமானதினால் மண்டபத்தில் தீவட்டிகள் பிடிக்கவேண்டியதாயிருந்தது. லூதர் கர்த்தரில் நம்பிக்கையோடு அமரிக்கையாய் திரும்பவும் சக்கரவர்த்தி முன் நின்றார்.



லூதர் 5-ம் சார்ல்ஸ் சக்கரவர்த்திமுன் நின்றது.

ஆலோசனைத்தலைவன் லூதரைப் பார்த்து, முதலில் லத்தீன் பாஷையிலும் பின் ஜர்மானியா பாஷையிலும், "உன்னுடைய புஸ்தகங்களில் அடங்கியிருக்கிறவைகளெல்லாம் சரியென்று நியாயம் சொல்லப்போகிறாயா? அல்லது அவைகளில் சில பாகங்களை மறுதலிக்கப்போகிறாயா?" என்றான்.

இந்தக் கேள்விக்கு லூதர் தைரியமாய்:—

"மகா மகத்துவமுள்ள சக்கரவர்த்தியே, மதிக்கப்படத்தக்க பிரபுக்களே, என்னிடத்தில் கேட்ட கேள்விக்கு எளிதில் விளங்கத்தக்கதாய், தெளிவாய், நேராய் உத்தரவு சொல்லுகிறேன், கேளுங்கள்:—நான் என்னுடைய விசுவாசத்தைப் பாப்புவுக்கும் சங்கங்களுக்கும் கீழ்ப்படுத்தமாட்டேன்; ஏனென்றால் அவர்களின் சட்டங்களும் தீர்ப்புகளும் அடிக்கடி தவறுதலுள்ளவையாயும், சில காரியங்களில் ஒன்றுக்கொன்று ஒவ்வாதவையாயும் இருக்கின்றனவென்று பிரசித்தமாய்ப் பட்டப்பகல்போல் விளங்குகிறது. ஆதலால் வேதாகமத்திலிருந்தாவது, சரியான நியாயங்களைக்கொண்டாவது, நான் சொன்னதெல்லாம் பிசகு என்று ரூபித்துக்காட்டி, நான் எடுத்துக்காட்டிய வேதவாக்கியங்களுக்கு சமாதானம் சொல்லி, அவ்விதமாய் என் புத்தியைத் தேவ வசனத்தைக்கொண்டு அடக்கி ஆளாவிட்டால், நான் மறுதலிக்கிறது கூடாத காரியம்; அப்படிச் செய்யமாட்டேன். கிறிஸ்தவன் ஒருவன் தன் மனச்சாட்சிக்கு விரோதமாய்ப் பேசுவது தகுதியல்லவே" என்றார்.

இப்படிச் சொல்லியபின் தம்முடைய உயிரை வாங்கவல்லோர் கூடிய அந்தச் சங்கத்தின்முன் நின்று, அவர்களை உற்றுப்பார்த்து "இதோ இங்கே நிற்கிறேன். வேறுவிதமாய் ஒன்றும் செய்ய என்னால் முடியாது. கர்த்தர் எனக்குத் துணை நிற்பாராக. ஆமென்" என்றார்.

சபையாரெல்லாரும் ஆச்சரிய பிரமைகொண்டு அசைவற்றிருந்தார்கள். கூடிவந்த அநேக பிரபுக்கள் லூதரின் தைரியத்தைப் பார்த்து வியந்தார்கள். சக்கரவர்த்தி, இந்தச் சந்நியாசி திடமனதோடும் உறுதியான தைரியத்தோடும் பேசுகிறானே" என்றார்.

ஆலோசனைத்தலைவன் ஜனங்களை அமர்த்தி, எல்லாரும் திரும்பவும் கவனமாயிருக்கச்செய்து, பின் லூதரைப் பார்த்து, "நீ மறுதலியாவிட்டால் சக்கரவர்த்தியும் இத்தேசத்து அரசரும் பிடிவாதமுள்ள சபைப் பிரிவினைக்காரனுக்கு உனக்குச் செய்யவேண்டிய ஆக்கினையைச் செய்வார்கள்" என்றான்.

லூதரின் சிநேகிதர் இதைக்கேட்டு நடுங்கினார்கள்; லூதரோ "நான் ஒன்றையும் மறுதலிக்கமாட்டேன், கர்த்தரே எனக்குச் சகாயஞ்செய்வாராக" என்றார்.

லூதரை உடனே மண்டபத்திலிருந்து வெளியே கொண்டுபோனார்கள். சங்கத்தார் உள்ளேயிருந்து ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள். திரும்பவும் அவரை உள்ளே அழைப்பித்து, ஆலோசனைத்தலைவன்:—

"மார்ட்டின்! உன் நிலைமைக்கேற்ற தாழ்மையோடு நீ பேசவில்லை; கான்ஸ்டன்ஸ் நகரத்துப் பொதுச்சங்கத்தில் தவறு என்று



சாட்டப்பட்ட வேதப்புரட்டுகளை நீ திரும்பவும் போதித்து, அவைகளைத் தப்பிதம், என்று வேதாகமத்திலிருந்து ரூபிக்கக் கேட்பது பைத்தியம். ஆதலால் நீ முன் எழுதினவைகள் சரியென்று சாதிக்கப்போகிறாயா? அல்லது அவைகளில் ஏதாவது ஒரு பாகத்தை மறுதலிக்கப்போகிறாயா? ஆம் அல்லது இல்லை என்று சொல். சக்கரவர்த்தி உன்னைக் கேட்கிறார்" என்றான்.

லூதர் மிகவும் அமைதியாய், "நான் முன்சொன்ன உத்தரவைத்தவிர வேறே உத்தரவுகொடுக்க என்னாற் கூடாது" என்றார்.

லூதர் கன்மலைபோல் அசையாதிருந்து உலகத்தின் மேன்மக்கள்மேல் வெற்றிகொண்டார். பாப்புவுக்கும் சக்கரவர்த்திக்கும் பயப்படவில்லை. சார்ல்ஸ் சக்கரவர்த்தியும் சபையும் எழும்பிப் போகுமுன் ஆலோசனைத்தலைவன், "நாளைக் காலையில் சக்கரவர்த்தியின் தீர்ப்பைக் கேட்கச் சங்கம் கூடும்" என்று உரத்த சத்தமாய்ச் சொன்னான். பிரபுக்களில் அநேகர் லூதர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டபின், அவர்பட்சம் சாய்ந்தார்கள். சாக்ஸனி நாட்டு எலெக்டர் பிரபு இப்பேர்ப்பட்ட மனிதனைத் தாம் பராமரித்ததற்காக மிகவும் சந்தோஷப்பட்டார்.

இரவாகிப்போய்விட்டதால், இரண்டு சேவகர் லூதரை அவரிருந்த விடுதிக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். அவர் தெருவழியாய் அச்சேவகர் மத்தியிற் போனதைப் பார்த்துச் சில சிநேகிதர் "அவரைக் காவற்சாலைக்கா கொண்டுபோகிறார்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு லூதர் "இல்லை, நானிருக்கும் வீட்டுக்கு என்னை அழைத்துக்கொண்டு போகிறார்கள்" என்றார்.

லூதர் தாம் இறங்கியிருந்த வீட்டுக்குத்திரும்பிவந்து, இளைப்பாறப்போகும் போது, ஸ்பாலாத்தினும் மற்றச் சிநேகிதரும் அவரைச் சூழ்ந்து வந்து கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், ஒரு வேலைக்காரன் ஓர் வெள்ளிப்பாத்திரத்தில் ஆரோக்கியமான ஓர் பானத்தைக் கொண்டுவந்தான். லூதரிடத்தில் அவன் அதைக் கொடுத்து, "என் எஜமான் நீர் இந்தப் பானத்தைக் குடித்து ஆயாசந்தீர விரும்புகிறார்" என்றான்.

"என்னை இப்படிக் கிருபையாய் நினைவுகூர்ந்த பிரபு யார்?" என்று லூதர் கேட்டார்.

"பிரன்ஸ்விக் நகரத்தை ஆளும் வயதுசென்ற எரிக் பிரபு" வென்று சொன்னார்கள்.

லூதர் அதைப் பானம்பண்ணி "இந்நாளில் எரிக் பிரபு என்னை நினைவுகூர்ந்ததுபோல நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அவர் மரணத்தறுவாயில் அவரை நினைவுகூருவாராக!' என்றார்.

வேலைக்காரன் அங்கே நடந்ததைத் தன் எஜமானுக்குப் போய்ச் சொன்னான். பிற்காலத்தில் இந்தப் பிரபு தம்முடைய மரணத் தருவாயில் பக்கத்தில் நின்ற ஒரு வாலிபனைப்பார்த்து, "வேதாகமத்தைத் திறந்து எனக்கு வாசி" என்றார். அவன் "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களாயிருக்கிறபடியினாலே என் நாமத்தினிமித்தம் உங்களுக்கு ஒரு கலசம் தண்ணீர் குடிக்கக்கொடுக்கிறவன் தன் பலனை அடையாமற் போவதில்லை என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கிறிஸ்துவானவர் சொன்ன வசனத்தை வாசித்தான். அதைக்கேட்டு அந்தப்பிரபு ஆறுதலடைந்தார்.

சக்கரவர்த்தி பாப்புவைப் பிரியப்படுத்த விரும்பி, தம்முடைய கையால் பாப்புவுக்குத் தாம் எழுதிய ஒரு கடிதத்தை மறுநாள் சங்கத்தார் முன் வாசிக்க உத்தரவு பண்ணினார். "தன் புத்தியினுடைய வழிதப்பினை ஓர் சன்னியாசி கிறிஸ்தவ சமயங்களெல்லாவற்றுக்கும் விரோதமாய் எழும்பியிருக்கிறான். இவ்விதமான அபத்தியை அழிக்க என் இராச்சியத்தையும், என் பொக்கிஷத்தையும், என் சிநேகிதரையும் என் இரத்தத்தையும் என் ஆத்துமாவையும், என் ஜீவனையும் பலியாகக் கொடுக்கக் காத்திருக்கிறேன். ஜனங்களுக்குள் நீ கொஞ்சமேனும் குழப்பம் செய்யக்கூடாதென்று கட்டளையிட்டு, லூதரை அனுப்பிவிடப்போகிறேன். அப்புறம் கீழ்ப்படியாத சபைப் பிரிவினைக்காரனாகிய அவனையும் அவனைச் சேர்ந்தவர்களையும் சபைக்குப் புறம்பே தள்ளுவதுமல்லாமல் அவர்களை அழிக்கும்படி பலவித பிரயத்தனங்களைச் செய்வேன்" என்று அக் கடிதத்தில் கண்டிருந்தது.

பாப்புவின் கட்சிக்காரர் அநேகர், லூதருக்குக் கொடுத்த வழிக் காவற் பத்திரத்தை பிரயோஜனமற்றதாக்க வேண்டுமென்று பிரயாசப்பட்டார்கள். "அவனைச்சுட்டு அவன் சாம்பலை றைன் நதியிற் போடவேண்டும்" என்றார்கள். ஆனால் ஜோர்ஜ் பிரபு, "ஜர்மானிய பிரபுக்கள் கொடுத்த வழிக் காவற் பத்திரத்தை ஒருவரும் மீறவொட்டார்கள். நம்முடைய புது சக்கரவர்த்தி கூட்டிய இந்த முதற்சங்கம் அவ்வளவு இழிவான காரியத்தைச் செய்யாது. ஜர்மானியர் விசுவாசத்திற்குப் பெயர்போனவர்கள். இப்படிப்பட்ட மோசம் அவர்களுக்குத் தகுதியானதல்ல" என்றார்.

லூதரை மறுதலிக்கச் செய்யும்படி திரும்பவும் பிரயத்தனம் செய்தார்கள். லூதர்மேல் அதிக கரிசனையாயிருந்த பல பிரபுக்களும் திரேவ்ஸ் பட்டணத்துக் கிரேஷ்ட அத்தியட்சரும் அதற்காக மிகவும் பிரயாசப்பட்டார்கள். லூதர் அவர்களுடைய அன்புக்காக நன்றியறிதலான வார்த்தைகளைச் சொல்லி, "நான் தேவனுடைய



வார்த்தையை மறுத்துவிடுகிறதைவிட என் ஜீவனை இழக்க ஆயத்தமாயிருக்கிறேன்" என்றார்.

இந்தப் பிரயத்தனமும் வீணாய்ப்போயிற்றென்று சக்கரவர்த்தி கேள்விப்பட்டு, மிகுந்த கோபத்துடன் "இந்த விஷயத்திற்குச் சீக்கிரத்தில் முடிவு செய்யவேண்டும்" என்றார். லூதர் வீட்டுக்குத் திரும்பிப்போக 21 நாள் தவணை கொடுத்தார். லூதர் பிரசங்கத்தினாலாவது புஸ்தகங்களினாலாவது சமாதானக்கேடு செய்யக்கூடாதென்று அவருக்குத் திட்டமாய்க் கட்டளையிட்டார்.

லூதர் தம்முடைய சிநேகிதரை வழியனுப்பிவிட்டு ஓர்ம்ஸ் நகரத்திலிருந்து ஏப்பிரல்மாதம் 26-ம் தேதி புறப்பட்டார். அவர் வண்டியைக் கூட 20 குதிரையாட்களும் ஏராளமான ஜனங்களும் போய், ஊருக்கு வெளியே அவரை வழியனுப்பிவிட்டார்கள்.

வீட்டுக்குப் போகும்வழியில், தம்முடைய சிநேகிதனாகிய லூகாஸ் கிறநேக் என்னும் சித்திரக்காரனுக்கு, ஓர்ம்ஸ் நகரத்தில் நடந்த சங்கதிகளைப்பற்றி ஒரு கடிதம் எழுதினார். அதில் "சன்னியாசியைக் குற்றவாளியென்று தீர்க்க, சக்கரவர்த்தி 50 பண்டிதரையாவது கூட்டிவைத்திருப்பாரென்று நான் எண்ணினேன். அப்படியொன்றுமில்லை. 'இந்தப் புஸ்தகங்களை நீ எழுதினாயா?' என்றார். 'ஆம்;' என்றேன். 'இவைகளை மறுதலிப்பாயா' என்றார். 'மாட்டேன்' என்றேன். 'அகன்று போ' என்றார். இதுதான் நடந்தவற்றின் சரித்திரம்" என்று எழுதினார். லூதர் திரும்பவும் சார்லஸ் சக்கரவர்த்திக்கும் ஜர்மானிய பிரபுக்களுக்கும் ஒரு கடிதம் எழுதினார்.

## 16. வார்ட்பர்க் கோட்டை.

லூதர் வித்தென்பேர்க் நகரத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில், சக்கரவர்த்தி ஓர்ம்ஸ் நகரத்துப் பிரதான ஆலயத்தில் ஓர் ராஜகட்டளைக்குக் கையொப்பம் வைத்தார். அதில், "சீர்திருத்தக்காரனாகிய லூதர் நம்முடைய திருச்சபையின்மேல் பைத்தியக்காரன்போல் பாய்ந்தான். பக்தியும் புத்தியுமுள்ள யாவரும் பைத்தியக்காரன் அல்லது பிசாசுபிடித்தவன் என்றெண்ணும் இந்த லூதரை நம்முடைய சமூகத்திலிருந்து அனுப்பிவிட்டோம். அவனுடைய வழிக் காவற் பத்திரத்தின் நாட்கள் கடந்தபின் அவனுடைய மூர்க்கமான சினத்தை அடக்கத் தகுதியான வழி தேடுவோம்" என்று கண்டிருந்தது. அந்தக் கட்டளைப் பத்திரத்தில் ஒருவரும் லூதருக்குத் தங்க இடமாவது உண்ண உணவாவது குடிக்க ஜலமா



வார்ட்பர்க் கோட்டை.

வது கொடுக்கக்கூடாதென்றும், வார்த்தையினாலாவது கிரியையினாலாவது அவருக்கு யாதாமொரு உதவிபுரியக் கூடாதென்றும் அப்படிச் செய்கிறவர்கள் ராஜத்துரோகத்துக்குரிய தண்டனை யடைவார்களென்றும் சொல்லியிருந்தது. அவருடைய பட்சத்தாரைக் காவலிற் போடவும் அவர்கள் சொத்துக்களை சர்க்கார் வசப்படுத்தவும் கட்டளையிட்டிருந்தது.

லூதரோ உவிற்றன்பேர்க் நகரத்துக்கு நேரே அமைதலாய்ப் பிரயாணம் செய்துகொண்டு போனார். வழியில் அவர் சிறுவயதிலிருக்கும்போது அர்சுலா கொட்டா என்னும் நல்ல அம்மாள் அவரை ஏற்றுக்கொண்டாதரித்த ஐசினாக் பட்டணத்திற் பிரசங்கம் செய்தார். மோரா என்னும் ஊரிலிருந்த தம்முடைய பாட்டியாரைப் பார்த்துவிட்டு மறுநாள் தம்முடைய சகோதரனாகிய ஜேம்ஸ் என்பவரையும் ஆம்ஸ்டார்ஃப் என்னும் ஓர் சிநேகிதனையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டார். வண்டி காட்டினருகே ஓர் இடுக்கமான கணவாய் வழி



யாய்ப் போகும்போது தங்கள் முகத்திற் பொய்முகம் தரித்துக் கொண்டுவந்த நாலு குதிரைவீரர் இவர்களை எதிர்த்தார்கள். ஜேம்ஸ் லூதர் ஓடிப்போய்விட்டார். வண்டியை ஓட்டினவன் அவர்களுக்கு விரோதமாய்ச் சண்டைசெய்யப் பார்த்தான். ஆனால் அந்த குதிரை வீரரில் ஒருவன் அவனைத் தரையிலே தள்ளிவிட்டான். இன்னொருவன் ஆம்ஸ்டார்ஃப் என்பவனைப் பிடித்துக் கரத்திலே நிறுத்திக்கொண்டான். மற்ற மூன்றுபேரும் ஒரு வார்த்தையும் பேசாமல் லூதரைப் பிடித்துக்கொண்டார்கள். அவரை வண்டியிலிருந்து கீழே இழுத்து அவர் தோளின்மேல் ஓர் போர்வீரனின் அங்கியைப் போர்த்து, தங்களோடே கொண்டுவந்த ஒரு குதிரையின் மேல் அவரை ஏற்றினார்கள். அதன்பின் மற்ற இருவரும் வண்டிக்காரனையும் ஆம்ஸ்டார்ஃபையும் விட்டுவிட்டு ஐந்துபேரும் குதிரையேறிப் புறப்பட்டார்கள். ஒருவரும் அவர்கள் போகிற இடத்தைக் கண்டுபிடிக்கக் கூடாதபடி முதலில் ஒரு திசையாயும் பின்பு வேறொரு திசையாயும் சவாரி செய்தார்கள். லூதருக்குக் குதிரை மேலேறிச் சவாரிசெய்து பழக்கமில்லாததினால் சீக்கிரத்தில் களைத்துப்போனார். அவர் வழிகாட்டிகள் அவரைச் சற்றுநேரம் இளைப்பாறவிட்டு ஒரு சுனையில் தண்ணீர் குடிக்க இடங்கொடுத்தார்கள். அச்சுனையை இந்நாள்வரையிலும் "லூதரின் சுனை" என்று அழைக்கப்படுகிறது.

இருட்டானபின் ஒருவரும் இனிப்பின் தொடரமாட்டார்கள் என்று கண்டு லூதரின் வழிகாட்டிகள் வேறே பாதையில் சென்றார்கள். வார்ட்பர்க் கோட்டை கட்டப்பட்டிருந்த மலை அடிவாரத்துக்கு வர இராத்திரி 11 மணி ஆகிவிட்டது. இந்தத் தனித்த இடத்தில் அந்தத் தேசத்துப் பிரபுக்கள் அடிக்கடி அடைக்கலம் புகுந்திருந்ததுண்டு. தாழ்ப்பாள்களை நீக்கிக் கதவுகளைத் திறந்து வந்தவர்களை ஏற்றுக்கொண்டபின் கதவுகளை மூடிவிட்டார்கள். லூதர் ஓர் உள் பிராகாரத்தில் இறங்கினார். கூடவந்த குதிரைவீரரில் ஒருவர் ஒரு பிரபு. அவர் போய்விட்டார். அந்த கோட்டைக்குக் காவலாளியாயிருந்த இன்னொரு பிரபு, லூதருக்குக் குறிக்கப்பட்ட அறைக்கு அவரைக் கூட்டிக்கொண்டுபோனார். அந்த அறையில் ஓர் போர்வீரனுடைய உடுப்பும் பட்டயமும் தொங்கின. மற்ற மூன்றுபேரும் லூதருடைய உடுப்பை எடுத்துக்கொண்டு அவருக்காக ஆயத்தம் செய்திருந்த போர்வீரனுக்குரிய உடுப்பை அவருக்கு உடுப்பித்தார்கள். அவர் இன்னதென்று அந்தக் கோட்டையிலிருக்கும் ஒருவரும் அறியாதபடி அவர் தாடியையும் தலைமயிரையும் வளர்க்கச் சொன்னார்கள். வார்ட்பர்க்கிலிருந்த ஜனங்கள் அவரை ஜோர்ஜ் போர்வீரன் என்று அழைத்தார்கள்.

வார்ட்பர்க் கோட்டை ஐசினாக் நகரத்திலிருந்து இரண்டு மூன்று மைலுக்குக் கிழக்கே இருக்கிறது. அதை 1070-ம் வருஷம் கட்ட ஆரம்பித்தார்கள். அது நின்று ஒழுங்கற்ற கட்டடங்களுள்ளதாயிருந்தது. தெற்கிலிருந்த பாகத்தில் தான் லூதர் இருந்த அறை இருந்தது. மற்ற அவைகளும் முட்டைவடிவமுமான பாகத்தில் எலெக்டர் பிரபு குளிர்காலத்தில் வந்து வசிக்கும் அறைகளிருந்தன.

தைரிய புருஷனுன லூதரை யாரோ பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள் என்ற செய்தி சீக்கிரம் பரவிற்று. சிலருக்குச் சந்தோஷந்தான். ஆனால் பலர் ஆச்சரியமும் கோபமும் கொண்டவர்களாயிருந்தார்கள். ஜர்மானியாதேசமெங்கும் "லூதர் பகைவருடைய கைகளில் அகப்பட்டுக்கொண்டார்" என்கிற அபாயசத்தம் தொனித்தது. சிலர் அவரைக் கொன்றுபோட்டார்கள் என்றும் பேசிக்கொண்டார்கள். அவருடைய சிநேகிதர், "ஐயோ, சிறந்த குணசீலம் நிறைந்த இப்புருஷனை இனிக் காணமாட்டோமே" என்றார்கள்.

லூதரை ஏன் இப்படிக் கொண்டுபோனார்கள்? சாக்ஸனி நாட்டு எலெக்டர் பிரபு மிகுந்த செல்வாக்குள்ளவர்; லூதருக்கு நல்ல சிநேகிதர். உர்ம்ஸ் நகரத்துச் சங்கத்தில் லூதர் வெற்றி சிறந்ததைப்பார்த்துக் கோபங்கொண்டவர் சத்துருக்கள் லூதர் உவிட்டன்பேர்க் நகரத்திற்கு வந்தவுடனே அவரைப் பிடித்து கொன்றுபோடுவார்களென்றெண்ணினார். ஆதலால் எலெக்டர் பிரபு லூதரின் சத்துருக்கள் கோபம் அடங்குமட்டும் அவரைப் பிடித்து ஒருவரும் அறியாத ஓரிடத்தில் காவல்பண்ணிவைத்தால் மோசத்திற்கு தப்பிவிடுவாரென்றெண்ணி இப்படிச் செய்தார். லூதர் பிரயாணம் பண்ணும் மார்க்கத்தைக் கண்டுபிடித்து, ஐந்து குதிரைவீரரை அனுப்பி தம்முடைய கோட்டையிற் கொண்டுபோய் வைக்க உத்தரவு செய்தார்.

லூதர் இறந்துபோனார் என்ற செய்தி பரவி, உவிட்டன்பேர்க்கிலிருக்கும் அவர் சிநேகிதர் அதைக் கேட்டு அபாயப்பட்டுக்கொண்டிருந்தார்கள் என்று முன் சொன்னோம். சடுதியாய் நல்லசெய்தி வந்தது. மெலாங்தன், "நம்முடைய பிதா உயிரோடிருக்கிறார், தைரியங்கொண்டு உறுதியாய் நிலைத்திருங்கள்" என்று சொன்னார். லூதர் உயிரோடிருந்தாலும் சிறையிலிருந்தார்.

லூதர் வார்ட்பேர்க்கில் இருந்தது அவருக்குப் பல வகையில் நன்மையாயிருந்தது. அவர் இவ்வளவுகாலும் ஓடியாடித் திரிந்த பின் அவருக்கு இது கொஞ்சம் இளைப்பாறுதலாயிருந்தது. உவிட்டன்பேர்க் நகரத்தில், அவர் வித்தியாபோதகராயிருந்ததினால்



மாணாக்கருக்கு நாடோறும் போதிக்கவேண்டும். குருவாயிருந்ததினால் ஒவ்வொருநாளும் பிரசங்கம் செய்யவேண்டும். மார்க்க சீர்திருத்தத்திற்கு அதிகாரியாயிருந்ததினால் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குப் போய்ப் போதிக்கவேண்டும். இவையெல்லாம் தவிர அவர் புஸ்தகங்கள் எழுதவேண்டும்; சகல விதமான கடிதங்களுக்கும் உத்தரவு எழுதவேண்டும். இந்த அமைதலான மறைவிடத்தில் வேதாகமத்தை மூலபாஷைகளாகிய எபிரேய கிரேக்கு பாஷைகளில் வாசித்துக் கற்றுக்கொள்ள அவருக்கு நல்ல சமயம் கிடைத்தது.

இந்தக்காலத்தில் ஜர்மனியா தேசத்தின் வெவ்வேறு பாகங்களிலிருந்து மார்க்க சீர்திருத்தமாகிய பெரும் பணியைப்பற்றி வரும் தபால் கேள்விகளுக்கு அவர்கள் வழிநடத்துதலுக்குக் கடிதங்களை எழுதித் தொடுப்பினார். இந்தக் கடிதங்களைத் தம்முடைய ஆட்களைக்கொண்டு அனுப்புவார், தாம் இருக்கிற இடம் மற்றவர்களுக்குத் தெரியாதபடி "என்னுடைய ஆரணியத்திலிருந்து," "பத்மோஸ் தீவிலிருந்து," "பறவைகளின் மத்தியிலிருந்து," "ஆகாய மண்டலத்திலிருந்து" என்று வேடிக்கையான இடப்பெயர்களைக் கடிதங்களில் எழுதுவார். அவ்விடத்திலிருந்துதானே லூதர் பல சிறு புஸ்தகங்களைப் பிரசுரம் செய்தார். அவை எங்கும் சீக்கிரத்தில் பரவின எல்லாரும் அவற்றை ஆவலுடன் வாசித்தார்கள்.

காவற்கூடத்திலிருக்கும்போது லூதர் செய்த முக்கியமான வேலை ஜர்மானியா பாஷையில் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்ததுதான். பிராமணர் வேதங்களை நாட்டில் வழங்கும் பாஷைகளில் மொழிபெயர்க்க இடங்கொடாததுபோல் ரோமான் சபைக் குருக்களும் ஜனங்கள் தங்கள் சுயபாஷையிற் சத்தியவேதத்தை வாசிக்க விரும்பவில்லை. வல்கேட் என்று சொல்லப்படும் லத்தீன் மொழிபெயர்ப்பு தானிருந்தது. இது வெகு காலத்துக்கு முன்னுள்ள மொழிபெயர்ப்பு. படித்தவர்களுக்கு மாத்திரம் உதவும். லூதர் மொழிபெயர்க்குமுன் இந்த வல்கேட் என்னும் லத்தீன் மொழிபெயர்ப்பிலிருந்து ஜர்மானியா பாஷையில் மொழிபெயர்த்திருந்த பாகங்கள் சாதாரண ஜனங்களுக்கு எளிதில் விளங்காததும் அதிக விலையுள்ளவையாயும் இருந்தன. லூதர் படிப்பில் தேறினவர். இது அதிக விசேஷமான காரியமல்ல. அவரைவிட ஜர்மானியா பாஷையை நன்றாய் எழுதினவர்கள் ஒருவருமில்லை. வார்ட்பர்க் கோட்டையிலிருந்த வருஷத்தில், புதிய ஏற்பாட்டை ஜர்மானியா பாஷையில் திருப்பினார். அந்த வருஷம் அவர் ஜீவியத்தில் மிகவும் பிரயோஜனமான வருஷமாயிருந்தது. அவருடைய சிநேகிதரில் சிலர் இப்படி அவர் ஜனங்களின் பொது நன்

னாம் செய்யக்கூடாதவராய், தனித்த இடத்திலிருந்து மிகவும் தாக்கப்படத்தக்க காரியம் என்று எண்ணினார்கள்; ஆனால் கடைசியில் எல்லாம் நன்மைக்கென்றிருந்தது.

லூதர் இருந்த அறை இன்னும் வார்ட்பர்க் கோட்டையிலிருக்கிறது. அவர் உட்கார்ந்திருந்த நாற்காலியும், அவர் எழுத்து வேலைக்காக உபயோகித்த அதாக் சருவாலி மரமேசையும், அம்மேசை முன் தொங்கிய விசித்திரமாய்ச் சித்திரிக்கப்பட்ட ஒரு புஸ்தக பீடமும் அங்கே பத்திரமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் புஸ்தக பீடத்திற்குமேல் லூதருடைய படமும் அறைச் சுற்றிப் பல படங்களுமிருக்கின்றன.

அடைபட்டுத்தனிச்சஞ்சாரம் செய்யவேண்டியதாயிருந்ததினால் லூதர் மிகவும் இளைத்து வியாதிப்பட்டார். சிலவேளைகளில் இராமுழுவதும் தூக்கமற்றிருப்பார். சிலவேளைகளில் கொத்தளங்களில் தனித்திருந்து பரவச தியானத்தில் மூழ்கியிருப்பார். நாட்கள் போகிறதுகூடத் தெரியாது. அந்த நாட்களிலுள்ள விண்டக்கிகளும் அவர் மனதைக் குழப்பிற்று. சாத்தான் இருப்பது மெய்யானாலும் அவன் காணப்படாதவனென்பதை மறந்து, இயேசுகிறிஸ்துவானவருக்கு முன் தோன்றினதுபோல மனுஷருக்கு முன்னும் தேவனுடைய சத்துருவாகிய இவன் தோன்றுகிறான் என்று எண்ணினார். விசேஷமாய் ஒருநாள், தாம் புதிய ஏற்பாட்டை மொழிபெயர்த்துக்கொண்டிருக்கும்போது சாத்தான் தாம் செய்கிறவேலையைப் பார்த்து நறுக்கிக்கொண்டு, தம்மைத் துன்பப்படுத்தி எப்பொழுது விழுங்கலாமென்றிருக்கும் சிங்கத்தைப்போல, தம்மைச் சுற்றிக்கொண்டிருக்கிறதாக நினைத்துக்கொண்டார். லூதர் பயந்து கோபங்கொண்டு பக்கத்திலிருந்த மைக்கூட்டை எடுத்துத் தம்முடைய சத்துருவின் தலையில் எறிந்தார். சாத்தானோ, காணாமற்போனான். மைக்கூடு சுவரில் மோதித் துண்டு துண்டாய்ப்போயிற்று. அநேக வருஷங்களாய் அந்த சுவற்றில் அந்த மைக்கறை இருந்தது. இப்பொழுது சுவருக்குத் திரும்பவும் சுண்ணாம்பு பூசினதினால் அவைகளெல்லாம் மறைந்துபோயின.

## 17. உவிற்றன்பேர்க் நகரத்திற்குத் திரும்பிவந்தது.

முதலில் லூதர் கோட்டை மதிலுக்குப் புறம்பே போகக்கூடாதென்று உத்தரவுபெற்றிருந்தார். அப்புறம் அவர் ஒரு காவற்காரனோடு போர்வீரனுடை தரித்துப் பக்கத்திலிருக்கிற இடங்களுக்குப் போகலாமென்று உத்தரவுபெற்றார்.



உவிற்றன்பேர்க்கிலிருந்து அவர் காதில் எட்டிய சங்கதி அவர் மனதுக்கு ஆயாசத்தைக் கொடுத்தது. சீர்திருத்தமார்க்கம் ஆரம்பித்த காலத்தில் கள்ளத்தீர்க்கதரிசிகள் ஏற்பட்டதுபோலவே சீர்திருத்தத்தின் காலத்திலும் அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் எழும்பினார்கள். சுவிக்கா என்னும் நகரில் சிலர் தேவனிடத்திலிருந்து தங்களுக்கு நேரே வெளிப்படுத்தல் வந்ததாகச் சொன்னார்கள். அவர்கள் "வேதாகமத்தை இப்படிக் கவலையாய்ப் படிப்பதில் பிரயோஜனமென்ன? தேவனே எங்களிடத்தில் பேசி நாங்கள் செய்யவும் பேசவும் வேண்டியதின்னதென்று எங்களுக்குச் சொல்லுகிறார்" என்று சொன்னார்கள். அவர்களில் ஒருவன் கிறிஸ்துவானவரைப் போல் 12 அப்போஸ்தலரையும் எழுபது சீஷரையும் தெரிந்துகொண்டான். உவிற்றன்பேர்க் நகரத்திலிருந்த மாணாக்கரை விட்டுப்போய் பயிரிடும்படி உத்தரவு செய்தார்கள். மனிதன் உடம்பின் வேர்வை நிலத்தில் விழப் பாடுபடவேண்டும் என்றார்கள். ஆன் பள்ளிக்கூடத்து வாத்தியார்; தாய் தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திலிருந்து இட்டுக்கொண்டு போய்விடவேண்டும் என்று உத்தரவுசெய்தார்.

இப்படி அநேக கெடுதிகள் சேரிட்டும் அவற்றை நிவர்த்தி செய்யத் தலைப்படுவார் ஒருவருமில்லை. லூதர் வரவேண்டும் என்று உவிற்றன்பேர்க் நகரத்தார் எல்லோரும் விரும்பினார்கள். எல்லோரும் அவர் திரும்பிவரும்படி அவரைக் கெஞ்சினார்கள். சமயம் பார்த்து முடிவில் இரகசியமாய், உவிற்றன்பேர்க் நகரத்துக்கு அவர் வந்தது அவர் சிநேகிதருக்கு அதிக மகிழ்ச்சியை உண்டாக்கிற்று; ஆனால் எலெக்டர் பிரபுக்கு அவர் வார்ட்பர்க் கோட்டையை விட்டுப்போகிறது இஷ்டமில்லாதிருந்ததினால் அவர் திரும்பவும் அங்கே போய்விட்டார்.

கொஞ்ச நாட்களுக்குப்பின் லூதர் தம்மைச் சுற்றி நிற்கும் மோசங்களையெல்லாம் எதிர்த்து நிற்கத் திடங்கொண்டு தாம் இருந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டார். 1522-ம் வருஷம் மார்ச்சு மாதம் 3-ம் தேதி தம்முடைய ஆபத்துகளிலெல்லாம் தம்மோடிருந்து சகித்த ஒரு உண்மையுள்ள வேலைக்காரனைக் கூட்டிக்கொண்டு வார்ட்பர்க் கோட்டையிலிருந்து புறப்பட்டார். இரண்டாம்நாள் ஒரு பெரிய புசற்காற்று அடித்ததனால் கருங்காடு என்றழைக்கப்பட்ட ஓர் சத்திரத்தில் தங்கினார்கள். அந்த சத்திரத்திலேயே உவிற்றன்பேர்க் நகரத்துச் சர்வகலாசாலையின் கீர்த்தியைப்பற்றிக் கேள்விப்பட்டு அங்கே போகிற இரண்டு மாணாக்கரும் அன்று தங்கினார்கள். அவர்கள் சுவிட்சர்லாந்து நாட்டார். மேஜைகள் ஒன்றின்முன்னே தலையில் சிவப்புத் தொப்பி தரித்துப் பட்டயத்

தின் நுனியில் வலதுகையும் பிடியில் இடதுகையும் வைத்தவராய் உட்கார்ந்திருக்கும் ஓர் போர்வீரனைக் கண்டார்கள். அந்தப் போர்வீரன் தமக்கு முன்னிருந்த ஒரு புஸ்தகத்தைக் கவனமாய் வாசித்துக்கொண்டிருந்தார். இந்த மாணாக்கர் வந்தவுடன் போர்வீரன் அவர்களுக்கு வந்தனஞ்செய்து தாமிருந்த மேஜையிடம் வந்து ஏதாவது சாப்பிடச் சொன்னார். அவர் தங்களிடத்தில் தயவாயிருந்ததைப் பார்த்து அந்த வாலிபர், "மார்ட்டின் லூதர் தற்சமயத்தில் எங்கேயிருக்கிறார் என்று உமக்குத் தெரியுமா" என்று கேட்டார்கள்.

அதற்கு அந்தப் போர்வீரன் "இப்போது அவர் உவிற்றன்பேர்கில் இல்லையென்று எனக்கு நிச்சயமாய்த் தெரியும். ஆனால் சீக்கிரத்தில் அங்கே இருப்பார்" என்றார்.

அந்த வாலிபர்களில் ஒருவன், "கடவுளுக்குச் சித்தமானால் நாங்கள் லூதர் பண்டிதரைப் பார்த்து அவர் வார்த்தைகளைக் கேட்குமுன் வீட்டுக்குப் போகமாட்டோம்; அவருக்காகத்தான் இவ்வளவு கடும் பிரயாணம் செய்தோம்" என்றான்.

கொஞ்ச நிமிஷத்துக்குப்பின், சத்திரத்தலைவன் வாலிபரில் ஒருவனை அழைத்து அவனிடத்தில் "நீங்கள் லூதரைப் பார்க்க விரும்புகிறீர்களென்று கேள்விப்படுகிறேன்; உங்கள் பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறவர்தான் அவர்; ஆனால் உங்களுக்குத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்ளாதேயுங்கள்" என்று இரகசியமாய்ச் சொன்னான்.

அந்தக் கூட்டம் கலைந்தபின் லூதர் அந்த இரண்டு மாணாக்கருக்கும் உபசாரஞ்செய்து "நீங்கள் உவிற்றன்பேர்க் நகரத்துக்குப் போனபின், உங்கள் தேசத்தானான ஷூர்வ் பண்டிதரை நான் கேட்டுக்கொண்டதாகச் சொல்லுங்கள்" என்றார்.

அதற்கு அவர்கள் "வெகு சந்தோஷத்துடன் அப்படிச் செய்வோம்; ஆனால் யாருடைய பேரைச் சொல்லுவோம்?" என்று கேட்டார்கள்.

அதற்கு அந்தப் போர்வீரன் "வரப்போகிறவர் உமக்கு வந்தனஞ்சொல்லுகிறார் என்று சொல்லுங்கள்" என்றார்.

லூதர் தாம் உவிற்றன்பேர்க் நகரத்துக்குத் திரும்பிப்போகிறதாக எலெக்டர் பிரபுவுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் அவர் "பட்டயத்தினால் கர்த்தருடைய வார்த்தை பரவாததால் என்னைப் பாதுகாக்கப் பிரயாசப்படவேண்டாம். என்னைப் பிடித்துக்கொண்டுபோக அவர்கள் பிரயாசப்பட்டால் நீர் அவர்களை எதிர்க்கவேண்டாம்" என்று எழுதினார்.



மார்ச்சுமாதம் ஏழாந்தேதி வெள்ளிக்கிழமையன்று லூதர் திரும்பவும் உவிற்றன்பேர்க் நகரத்திற்குட் பிரவேசித்தார். வேத சாஸ்திரிகளும் மாணாக்கரும் ஜனங்களுமாகிய எல்லோரும் அவரைக் கண்டு மகிழ்ந்தார்கள். மறுநாள் ஷூர்வ் பண்டிதரைப் பார்க்க அவர் வீட்டுக்குப்போனார். அங்கே மெலாங்தான், ஜோனாஸ் என்பவர்களும் அநேக சிநேகிதரும் கூடியிருந்தார்கள். லூதர் அவர்களிடத்தில் அநேக கேள்விகளைக் கேட்டுத் தாமங்கில்லாத காலத்தில் நடந்த சங்கதிகளைப்பற்றி விசாரித்துக்கொண்டிருக்கும்போது இரண்டு அந்நியர் அந்த அறைக்குள் வந்தார்கள். கற்றவர்களின் கூட்டத்திற்குள் வந்துவிட்டோமே யென்று மயங்கின அவர்கள், அந்த கூட்டத்தின் மத்தியில் சத்திரத்தில் தாங்கள் கண்ட போர்வீரன் உட்கார்ந்திருக்கிறதைக் கண்டு பயங்கொண்டார்கள். லூதர் எழுந்து அவர்கள் தம்முடைய பழைய சிநேகிதரென்று அங்கிருந்தவர்களுக்குச் சொன்னார்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. ஊரெல்லாம் "லூதர் வந்துவிட்டார், லூதர் இன்று பிரசங்கம் செய்யப்போகிறார்" என்று பேச்சுமயமாயிருந்தது. எல்லாத் திசைகளிலுமிருந்து ஜனங்கள் வந்தார்கள். கோவில் நிரம்பியிருந்தது. அவர் சபையாரோடு அன்பாய்ப் பேசி, அவர்களை "என் சொந்த ஆடுகள்" என்று அழைத்தார். அதுவுமல்லாமல் அவர் "பலவந்தத்தினால் சுவிசேஷத்தைப் பரவச்செய்ய முடியாது; கர்த்தருடைய வசனமே அதைச் செய்யும்" என்றார்.

எல்லாரும் மிகவும் மகிழ்ந்திருந்தார்கள். ஷூர்வ் பண்டிதர் எலெக்டருக்கு எழுதின கடிதத்தில், "ஆ! மார்ட்டின் போதகர் வந்தது எங்களுக்கு எவ்வளவு இன்பமாயிருக்கிறது. கர்த்தருடைய கிருபையினால் அநேகர் அவருடைய வார்த்தைகளைக் கேட்டு, தப்பும் தவறுமான பாதைகளிலிருந்து சத்தியத்தின் வழிகளில் நடக்க ஏவப்படுகிறார்கள்." என்றெழுதினார்.

லூதர் திரும்பவும் சன்னியாசிமடத்திலே யிருந்து சன்னியாசி உடுப்பைத் தரித்திருந்தார்; அவருக்கு இஷ்டமானால் அந்த உடுப்பைக் களைந்துபோட்டுவிட்டு இருந்திருக்கலாம்.

எல்லாரும் சமாதானமாயிருக்கையில் லூதர் மெலாங்தான் உதவியைக்கொண்டு வார்ட்பர்க் நகரத்திலிருந்துதாம் கொண்டுவந்த புதிய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பைப் பிழைபார்த்து முடித்தார். மெலாங்தான் சந்தோஷத்தோடு நாள்தோறும் அவருக்கு இரண்டு மணிநேரம் உதவிசெய்தார்.

அச்சவேலை வெகு சுறுசுறுப்பாய் நடந்தது. மூன்று அச்சயந்திரங்களில் ஓயாமல் வேலை நடந்துகொண்டேயிருந்தது. ஒவ்

வொரு நாளும் 10,000 தான் அச்சடிக்கப்பட்டது. செப்டெம்பர் மாதம் 21-ம் தேதி இரண்டு பிரிவாக 3,000 பிரதிகள் பிரசுரஞ் செய்யப்பட்டன. எல்லாப் பிரதிகளும் சீக்கிரத்தில் விலையாகிப் போயின. டிசெம்பர் மாதம் இரண்டாம் பதிப்பை அச்சடிப்போட்டார்கள்; 1533-ம் வருஷத்திற்குள் ஜர்மானியா சுவிற்சர்லாந்து தேசங்களில் 58 பதிப்பாகிப் போய்விட்டது.

பழைய ஏற்பாட்டு மொழிபெயர்ப்பை 1522-ம் வருஷம் ஆரம்பித்து ஓயாமல் அதிலேயே கருத்தாயிருந்தார். ஏழை ஜனங்கள் எளிதில் வாங்கவும் ஆவலோடு காத்திருந்த ஜனங்களைத் திருப்தி செய்யவும் தக்கதாக முடிந்த பாகங்களைப் பங்கு பங்காக அச்சிட்டார்.

இப்படி வேதாகமப் பிரதிகள் எல்லார் கையிலும் போய்ச் சேர்ந்தது பாப்புவுக்கு வருத்தமாயிருந்தது. அவரும் பிரபுக்களும் அதை விலக்கப் பிரயாசப்பட்டார்கள். சில மாகாணங்களில் புதிய ஏற்பாட்டுப் பிரதிகளையெல்லாம் அதிகாரிகளிடத்தில் கொடுத்துவிடவேண்டுமென்று கட்டளை பிறந்தது. சில இடங்களில் சந்தை வெளிகளில் நெருப்புமூட்டி அதில் இந்த புஸ்தகங்களைக் கொளுத்தினார்கள். இதில் எல்லாம் அவர்கள் நினைத்தகாரியம் முடியவில்லை. ஜோர்ஜ் பிரபு "நான் விற்கவேண்டாமென்று உத்தரவு பண்ணின பின்புங்கூட அநேக ஆயிரம் பிரதிகள் என் நாட்டில் விற்கப்பட்டும் வாசிக்கப்பட்டும் வந்தன" என்று எழுதினார்.

ஆறு பெண்சாதிக்காரன் என்று கைப்பிரசித்தனான 8-ம் ஹென்றி என்னும் இங்கிலீஷ் அரசன் லூதர் செய்கைகளைக் கேட்டுக் கொண்டு 1521-ம் வருஷம் மே மாதம் 12-ம் தேதியில் லூதருடைய புஸ்தகங்களை லண்டன் நகரத்துப் பரிசுத்த பவுல் ஆலயத்தின் பின்னிருந்த மைதானத்திற் சுட்டெரித்தான். அவன் ஜர்மானியா நாட்டு பிரபு ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் "இவ்வளவு விஸ்தாரமான கலகங்களைச் செய்தவன் தானே லூதரின் மூலமாய் எழும்பியிருக்கிறானென்று எண்ணுகிறேன். லூதர் மனந்திரும்பாவிட்டால் அவனையும் அவன் புஸ்தகங்களையும் நெருப்பிலிட்டுச் சுட்டெரிப்பதே சரி" என்று எழுதினான். லூதருக்கு விரோதமாய் ஒரு புஸ்தகத்தையும் எழுதினான். அதில் லூதரை ஓநாய் என்றும், சர்ப்பம் என்றும், பிசாசின் அவயவம் என்றும் அழைத்தான். இது பாப்புவிற்கு மிகவும் சந்தோஷத்தைக் கொடுத்தது. இங்கிலாந்தின் அரசரும் அரசிகளும் பெற்றிருக்கும் "விசுவாச காவலன்" என்னும் பெயர் இவன் பாப்புவிடமிருந்து பெற்ற பெயர்தான்.

லூதர் அரசனுடைய நியாயங்களைத் தெளிவாயும் வல்லமையோடும் எதிர்த்தார். இப்படித் தைரியத்தோடு அவர் அரசனுடைய



நியாயங்களை ஒரு பொருட்டாய் எண்ணாமல் எதிர்த்தது ஆச்சரியமல்ல. இந்த ஆட்சேபனையைப்பற்றி ஹென்றி கேள்விப்பட்டபோது லூதருக்கு விரோதமாய் ஒன்றும் எழுதத்துணியாமல், சாக்ஸனி நாட்டு எலெக்டர் பிரபுவுக்கும் மற்ற பிரபுக்களுக்கும் லூதரைத் துன்பப்படுத்தும்படி எழுதிக் கேட்டுக்கொண்டான்.

புஸ்தகங்களைக் கொளுத்திப் போடுவதினால் ஜர்மானியா நாட்டில் நடந்துவந்த சீர்திருத்தத்தை நிறுத்தலாம் என்று எண்ணியது மடத்தனம். சன்னியாசிகள் அநேகர் தாங்கள் மடங்களிலிருந்து காலத்தை வீணாய்க் கழிப்பது கிறிஸ்துமார்க்கப் போதனைக்கு ஒவ்வாத நடத்தையென்று உணர்ந்து அவைகளிலிருந்து வெளியேறி விட்டார்கள். ஒருநாள் நூரம்பேர்க் நகரத்தில் ஒரு சன்னியாசி ஒரு கருமானண்டை பிச்சைக்குப் போனான். கருமான் அவனைப்பார்த்து "உன் கையால் உழைத்து சாப்பிடக்கூடாதா?" என்றான். உடனே அந்த பெலசாலியான சன்னியாசி தன் உடுப்பைக் களைந்துவிட்டுச் சம்மட்டியைக் கையில் எடுத்து ஓங்கி அடைகல்லின்மேல் அடித்தான். பின் அக்கருமானுக்கு வேலைசெய்து கொடுத்துக்கொண்டிருந்தான். புஸ்தக விற்பனை செய்பவர்கள் ஜர்மானியா தேசமுழுவதும் வேதாகமப் பிரதிகளையும் சிறு புஸ்தகங்களையும் கொண்டு விற்றுத் திரிந்தார்கள். சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் தேசமெங்கும் வெளிகளில் நின்று இரட்சிப்பைப்பற்றிப் பிரசங்கம் செய்தார்கள்.

சீர்திருத்தக்காரரை எங்கும் துன்பப்படுத்தத் தொடங்கினார்கள். ஜோர்ஜ் பிரபு லூதரைப் பின்பற்றின சன்னியாசிகளையும் குருக்களையும் காவலிற் போட்டார். ஐந்தாம் சார்ல்ஸ் தன் அரசாட்சிக்குட்பட்டிருந்த ஹாலந்து, பெல்ஜியம் என்னும் தேசங்களிலிருந்த சீர்திருத்தக்காரரைக் கொலைசெய்தான், இவர்கள்தான் மார்க்க சீர்திருத்தத்தின் முதலாம் இரத்தசாட்சிகள். பிரஸெல்ஸ் நகரத்திற்கு மூன்று சன்னியாசிகளை சங்கிலிகளால் கட்டி இழுத்துக்கொண்டுபோய் அங்கே அவர்களை மறுதலிக்கச் சொன்னபோது அவர்கள் "இல்லை, நாங்கள் மறுதலிக்கமாட்டோம்; நாங்கள் கர்த்தருடைய வசனத்தை மறுக்கமாட்டோம்; விசுவாசத்திற்காக மரிப்பதையே விரும்புவோம்" என்றார்கள். அவர்களில் இரண்டுபேரைத் தகனித்து விட்டார்கள், மூன்றாம் சன்னியாசி மரணத்திற்குப் பயந்து தனக்குக் கொஞ்சகாலம் தவணை கொடுக்கச்சொல்லிக் கேட்டதினால் அவனைத் திரும்பவும் சிறைச்சாலைக்குக் கொண்டுபோய்விட்டார்கள். ஆனால் சீக்கிரத்தில் அவனும் தன் சிநேகிதரைப்போல் தன் விசுவாசத்தை அறிக்கையிட்டு இரத்தசாட்சியாய் மரித்தான்.

லூதர் இதைக் கேள்விப்பட்டு, இந்த வாலிபரான வீரரின் முடிவை நினைத்து விசனப்பட்டு அவர்கள் மரணத்தைப்பற்றி ஒர் பாட்டு எழுதினார், அதில் அடியிற்கண்ட தொடர்கவி :—

பக்தர்தம் சாம்பலைச் சாருமோர் இங்கே இங்கே
எத்திசை பெயர்தேசத் தேசங்கள் பார்த்தென்றும்
சுத்தர்தம் சடலத்தாரி விதிடணின்றுந் தோன்றும்
வத்திர மிகைத்தேவ சத்திய சைபபோர்தாரே.

பிரஸ்ஸல்ஸ் நகரத்திலுள்ளவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்ட மனதாயிருந்தார்கள். மிகவும் கீர்த்திபெற்ற எராஸ்மஸ் என்னும் வித்துவான் "அலியாந்தர் என்னும் பாப்புவின் ஸ்தானாதிபதி எங்கே நெருப்புக் கொளுத்துகிறாரோ, அங்கே அவன் சுவிசேஷ விதை எழும்ப விதை விதைக்கிறதுபோலிருக்கிறது" என்று எழுதினார்.

இந்நாட்டில் தங்களை உயர்ந்த ஜாதியார் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் பறையரைக் கொடூரமாய் நடத்துவதுபோல் ஜெர்மனிய தேசத்துப் பிரபுக்கள் அந்நாட்டுக் குடிகளைக் குரூரமாய் நடத்தி வந்தார்கள். 1525-ம் வருஷத்தில் குடிகள் கலகஞ்செய்ய ஆரம்பித்தார்கள். லூதர் பலவந்தமான விஷயங்களைச் செய்யவேண்டாமென்று வார்ட்பர்க் நகரத்திலிருந்து அநேகதரம் குடிகளுக்கு எழுதினார். "கலகஞ் செய்வதனால் நடக்கவேண்டிய காரியமும் ஆகாது, அது கடவுளுக்கும் எதிரானது" என்று எழுதினார். அவர்களுக்கு அப்படி எழுதினவர் பிரபுக்களுக்கும் குறுநிலமன்னருக்கும் ஒரு கடிதம் எழுதி, குடிகளுக்குத் தயவுகாட்டும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டார். அவர் எச்சரித்தும் குடிகள் கலகஞ்செய்து அநேக பயங்கரமான குரூரங்களை நடப்பித்தார்கள். அதிகாரிகள் இந்தக் கலகத்தை அடக்க எத்தனித்ததில் 50,000 பேருக்குமேலான ஜனங்கள் மாண்டுபோனார்கள்.

## 18. லூதரின் இல்லற வாழ்க்கை.

புதிய ஏற்பாட்டில் கிறிஸ்தவ குருக்கள் விவாகஞ்செய்யலாமென்று கண்டிருக்கிறது. அவர்கள் புத்தமார்க்க குருக்களைப்போல் விவாகஞ் செய்யாதிருக்கவேண்டியது அவசியமில்லை. மனிதர் புண்ணியம் சம்பாதிக்க மிகவும் பிரயாசப்படுகிறார்கள். இந்தியதேசத்திலிருக்கும் தவசியின் கை சூம்பிப்போகுமட்டும் அதை உயர்த்திக் கொண்டிருந்தால், அல்லது கொடிய அக்கினியின்முன் நின்றால்





லூதருடைய வீட்டில்.

புண்ணியமுண்டு என்று நினைக்கிறார்கள். கிறிஸ்தவின் சபையிலும் 12-ம் நூற்றாண்டில் இப்படிப்பட்ட எண்ணங்கள் உண்டா

யிற்று. குருக்கள்மார் வேதாகமத்தில் சொல்லியிருக்கிறவைகளைச் செய்யாமல் புத்தமார்க்க சன்னியாசிகளைப்போல் நடந்துகொண்டார்கள். இப்படிப்பட்ட கட்டளைகளுக்கு எல்லாரும் கீழ்ப்படிந்து நடப்பது கூடாதகாரியம். மனிதருடைய ஆசாபாசங்கள் அநேக துன்மார்க்கமான கிரியைகளைச்செய்ய அவர்களை ஏவிவிடும். அதுவுமல்லாமல் கல்விகற்றுப் பக்தியிற் சிறந்த நல்ல மனிதர் சந்தானமற்று இறந்துபோக நேரிடும்.

1523-ம் வருஷத்தில் ஒன்பது சன்னியாஸ்திரீகள் சன்னியாஸ்திரீமடத்தை விட்டுவந்தார்கள். அவர்கள் தாய்தகப்பன்மார் அவர்களை ஏற்றுக்கொள்ளாதிருந்ததால் அவர்கள் உவிட்டன்பேர்க் நகரத்தில் அவர்களை ஏற்றுக்கொண்ட சில சிநேகிதருடைய வீட்டுக்கு வந்தார்கள். அவர்களில் ஒரு சன்னியாஸ்திரீ பேர் காதரீன் போரா. அவள் தம்முடைய இரண்டு சிநேகிதரில் ஒருவரை விவாகம்செய்துகொள்ள லூதர் ஒழுங்குசெய்தார். முதல் சிநேகிதன் நான் மாட்டேனென்று சொல்லிவிட்டான். இரண்டாம் சிநேகிதனைக் காதரீன் வேண்டாமென்று சொல்லிவிட்டாள். அதன்பின் லூதர் தாமே இவளைக் கலியாணம் செய்யக்கூடாதோ என்று யோசிக்க எத்தனித்தார். இதற்குமுன் அநேகர் இவரை விவாகம் செய்யச்சொல்லி வலியும், அதனால் அநேகர் தம்மை நிந்தித்து தம்மைப்பற்றிப் பொய்யான



லூதர் குடியிருந்த அகஸ்தீனிய சன்னியாசிமடம்.



காரியங்களைச் சொல்லுவார்கள் என்று நினைத்து சம்மதிக்கவில்லை. வயது சென்ற அவர் தகப்பனார் விவாகம் செய்யும்படி அவரை நெருக்கினார். விவாகம் கடவுளின் ஏற்பாடென்றும், விவாகம் செய்யக்கூடாதென்பது மனிதனின் ஏற்பாடென்றும் சொல்லி 1523-ம் வருஷம் ஜூன் மாதம் 11-ம் தேதி காதரீன் போரா என்னும் அம்மாளை மணம்புரிந்தார். இங்கிலீஷ்காரரைப் போலவே ஜர்மானியருக்கும் இல்லறவாழ்க்கையில் அதிக பிரியமுண்டு. லூதர் இல்லற வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு சிறந்த முன்மாதிரி காண்பித்தார்.

லூதர் விவாகஞ்செய்தபோது அவருக்கு 42 வயது. அவர் இல்லற வாழ்வில் மிகவும் சந்தோஷத்தை அனுபவித்தார். "கர்த்தருக்குப் பயந்து, தன் குடும்பத்தை நேசித்து, தன் கணவனோடு சமாதானமாய் ஜீவித்து, அவன் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் மனைவி கடவுளின் ஈவுகளிலெல்லாம் சிறந்த ஈவு" என்று சொல்லுவார். லூதர் விவாகஞ்செய்தகாலத்தில் சன்னியாசி என்னும் பெயரையும் சன்னியாசி உடைகளெல்லாவற்றையும் களைந்துவிட்டிருந்தார். அவர் விவாகம் செய்தவுடன் நாட்டின் எலெக்டர் பிரபு லூதரும் அவர் மனைவியும் குடியிருக்க அவர் முன்னிருந்த சன்னியாசி மடத்தை அவர்களுக்கு இனாமாகக் கொடுத்தார்.

லூதர் தம்முடைய மனைவியை "என் அன்புள்ள குணவதியாகிய கேதா" என்று அழைப்பார். அவள் அவருக்கு நல்ல மனைவியாயிருந்தாள். அவர் வீட்டுக் கவலைகளெல்லாம் தானே பொறுப்பாய்ப் பார்த்துக்கொள்ளுவாள். அவர் வருத்தப்பட்டிருக்குங் காலங்களில் மிகவும் அன்புடன் அநேக வேதவாக்கியங்களை அவருக்கு ஞாபகப்படுத்துவாள். அவர் யாருக்காவது கடிதங்கள் எழுத மறந்துவிட்டால் அதை ஞாபகப்படுத்துவாள். அவருக்குச் சிலசமயங்களில் வேடிக்கை காட்டுவாள். அவள் நடத்தையில் எப்பொழுதும் சற்றே கௌரவம்பாராட்டி வருவாள். அதற்காக லூதர் அவளை கேதா பிரபு என்று சிலவேளை கூப்பிடுவதுண்டு. ஒருநாள் லூதர் "நான் இனி விவாகஞ் செய்யவேண்டியதாயிருந்தால், பொறுமையும் கீழ்ப்படிதலுமுள்ள மனைவி இனிக் கிடைக்கிறது அரிதாயிருக்குமாதலால் கற்பதுமையொன்று செய்யவேண்டும்" என்று வேடிக்கையாய்ச் சொன்னார். லூதர் காதரீனுடனிருக்கும்போது மிகவும் சந்தோஷமாயிருப்பார். அவர்கள் வீட்டில் உலக ஆஸ்தி அதிகமாயில்லாவிட்டாலும், அன்பும், நேசமும், அந்நியரை உபசரித்தலும், நன்மையான சகல வார்த்தைகளும், கிரியைகளும் அதில் நிறைந்திருந்தன. அவர்கள் இல்லற வாழ்க்கை 21 வருஷம் நீடித்திருந்தது.

அவர்கள் விவாகஞ்செய்து ஒரு வருஷத்துக்குப்பின் பிறந்த புத்திரனுக்கு ஹான்ஸ் என்று பேரிட்டார்கள். அடுத்த வருஷம்



லூதருடைய படிப்பறை.

லூதர் மிகவும் வியாதிப்பட்டுக் கொஞ்சகாலம் மரணத்தருவாயிலி
தார். அப்பொழுது அவர் தம்முடைய மனைவியைப் பார்த்து "என்
நேச மனைவியே, தம்முடைய நல்லதேவன் இந்தத்தடவை என்னை



தம்மிடத்திலே எடுத்துக்கொண்டால், அவருடைய கிருபையுள்ள சித்தத்துக்கு அடங்கியிரு. தேவபக்தியற்ற முரட்டு ஆத்துமாக்கள் என்னசொன்னாலும், நீ என் விவாகஞ்செய்த மனைவி என்று நிச்சயமாய் எண்ணிக்கொள்" என்றார். தம்முடைய விவாகம் ஒழுங்குள்ளதல்லவென்று சிலர் சொல்லி அவளுக்கு விசனமூட்டுவார்களென்று நினைத்து இப்படிச் சொன்னார். அப்புறம் "என் அன்புள்ள சின்ன லேனாள் எங்கே" என்று சொல்லிக்கேட்டார். ஒருவயதுப் பிள்ளையாயிருந்த அவர் மகளைக் கொண்டுவந்தார்கள். பிள்ளை தகப்பனைப் பார்த்துச் சிரித்தது. அதைப்பார்த்து லூதர் "என் அருமையான ஏழைப் பிள்ளையே, அருமையான பிள்ளையாகிய உன்னையும் என் அருமையான மனைவியையும் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கிறேன். அவர் அன்புள்ளவர், பிதா; உங்களிடத்தில் ஒன்றுமில்லை; ஆனாலும் அநாதப் பிள்ளைகளுக்குத் தகப்பனும், விதவைகளுக்கு நியாயாதிபதியுமாயிருக்கிற என் தேவன் உங்களைப் போஷித்து உங்களைப் பார்த்துக்கொள்ளுவார்" என்றார்.

அவர் மனைவி இந்த வார்த்தைகளைக் கேட்டு பயந்தாளாய், 'என் நேச கணவனே, கர்த்தருக்குச் சித்தமானால் நீர் என்னோடேயிருப்பதையே அவரோடேயிருப்பதைப் பார்க்கிலும் அதிகமாய் விரும்புவேன். நீர் போய்விட்டீரால் நானும் என் பிள்ளைகளும் மாத்திரம் கஷ்டப்படுகிற காரியமல்ல. அநேகம் பக்தியுள்ள கிறிஸ்தவர்கள் வருத்தப்படுவார்களே. என்னைப்பற்றி நீர் விசாரப்படவேண்டாம்; உம்மை அவருடைய திவ்விய சித்தத்திற்கு ஒப்புவிக்கிறேன்; அவர் தயவாய் உம்மைப் பராமரிப்பார் என்று நம்புகிறேன்" என்றாள். லூதர் சீக்கிரத்தில் சுகப்பட்டார்.

லூதர் குடியிருந்த சன்னியாசிமடத்திலிருந்த முன்னறையில் ஒரு இரட்டை ஜன்னலிருந்தது. அதில் இரண்டுபேர் உட்கார ஆசனங்கள் போட்டிருந்தது. அதில் இரண்டுபேர் ஒருவருக்கொருவர் எதிரே உட்கார்ந்திருக்கலாம். அங்கே லூதரும் அவர் மனைவியும் அடிக்கடி உட்கார்ந்திருந்து வெளியே தோட்டத்தைப் பார்த்துக்கொண்டு, வெயில் தங்கள்மேற்பட, ... புதுவசந்தகாலத்தின் வாசனையை ஏற்றுக்கொண்டிருப்பது வழக்கம். சில வேளைகளில் லூதர்மாத்திரம் தனியே உட்கார்ந்து பூங்குழலில் இனியராகம் பாடுவார். பிள்ளைகள் தரையில் விளையாடிக்கொண்டிருப்பார்கள். அவர் மனைவி ஒரு மூலையிலும் அவள் வேலைக்காரி இன்னொரு மூலையிலும் உட்கார்ந்திருப்பார்கள்; வேலைக்காரன் ஒரு நாற்காலிமேல் சாய்ந்து தன் எஜமான் சொல்லும் வார்த்தைகளைக் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருப்பார்.

லூதர் சிலவேளை தனியேயாவது, சிலவேளை பிள்ளைகளோடே யாவது தோட்டத்தில் உலாவுவது வழக்கம். அவர் பூக்களைப் பார்த்தாலும் சரி, பழங்களைப் பார்த்தாலும் சரி, தன் தலைக்குமேற் பறந்து, அல்லது மரங்களில் பாடிக்கொண்டிருக்கும் பறவைகளைப் பார்த்தாலும் சரி, எதைப் பார்த்தாலும் சில பக்திக்குரிய எண்ணங்கள் அவர் மனதில் எழும்பும். ஒருநாள் ஒரு அடைக்கலான் குருவியைக் கண்டு, "ஆ என் அருமையான வேதசாஸ்திர போதகனே, நீ எனக்குக் கடவுளுடைய வல்லமையையும் அவர் தயாளத்தையும், ஞானத்தையும், அவர் அதிசயமான பராமரிப்பையும் பற்றிப் போதிக்கிறாய்" என்று சொன்னார். அவர் அப்படிச் சொல்லும்போது "ஆகாயத்தின் பட்சிகளைப் பாருங்கள், அவைகள் அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்க்கிறதுமில்லை, என்றாலும் உங்கள் பரமபிதா அவைகளையும் போஷிக்கிறார்" என்னும் திவ்விய வசனங்களை நினைத்திருப்பார்.

லூதர் பேச்சில் சமர்த்தன். உவிட்டன்பேர்க் நகரத்தில் அவரோடிருந்து அவர் பேச்சைக் கேட்பது மிகவும் அருமையாயிருந்திருக்கும். அவர் சொன்ன அநேக காரியங்களை அவர் சிநேகிதர் எழுதி, லூதரின் சாதாரண சம்பாஷணை என்னும் ஓர் புஸ்தகத்தை பிரசுரஞ்செய்தார்கள். இந்தப் புஸ்தகத்தின் முதற்பதிப்பு பிரதிகளெல்லாம் பாப்புவின் உத்தரவினால் சுட்டெரிக்கப்பட்டன. ஆனால் 1626-ம் வருஷத்தில் ஒரு ஆள் ஒரு புது வீட்டுக்கு அஸ்திபாரம் போடத் தோண்டும்போது வெகு ஆழத்தில் பத்திரமாய்ப் பொதிந்திருந்த ஓர் புஸ்தகத்தைக் கண்டார். அது தொலைந்துபோயிற்றென்று நினைத்திருந்த இந்தப் புஸ்தகத்தின் ஓர் பிரதி.

லூதரின் வீடு எப்போதும் சந்தோஷம் நிறைந்ததாயிருந்தாலும் லூதருக்குத் துன்பங்கள் இல்லாமற்போகவில்லை. 1527-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் "என்னுடைய அருமைப் பிள்ளையாகிய சின்ன ஹான்ஸ் வியாதியாயிருக்கிறதினால் உமக்கு வந்தனம் சொல்லவில்லை. ஆனால் தனக்காக உம்மை ஜெபஞ்செய்யச் சொல்லுகிறான்; 12 நாளாய் அவன் நீர்ப்பதார்த்தந்தான் சாப்பிட்டான்; இப்பொழுதுதான் சற்றே சாப்பிட ஆரம்பிக்கிறான். ஆனாலும் அவன் மனது சோர்ந்துபோகாதிருக்கிறது ஆச்சரியந்தான்; மிகுந்த பெலவீனமாயிராவிட்டால் வழக்கம்போல் சந்தோஷமுள்ளவனாயிருப்பான்" என்று தம்முடைய சிநேகிதரில் ஒருவருக்கு எழுதினார்.

இதற்கு ஏழுமாதத்திற்குப்பின் எழுதின ஒரு கடிதத்தில் "என் சின்னக்குமாரத்தி எலிசபேத்து மரித்துப்போனாள். என் மனதில்



இது எவ்வளவு துயரத்தை உண்டாக்குகிறதென்பது எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. ஒரு பெண்பிள்ளையைப்போல் அழுவேன் போலிருக்கிறது. பிள்ளைக்காக பெற்றோர் இவ்வளவு துக்கப்படுவார்கள் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை" என்று எழுதியிருக்கிறார்.

இந்த வருத்தங்களையெல்லாம் சகித்துக்கொண்டிருக்கையில் தமக்கு மரணம் கிட்டியிருக்கிறதென்று எண்ணிக்கொண்டார். "சுவிசேஷத்தைப் பரவச்செய்வதற்கும், தாழ்ந்துபோனவர்களைத் தைரியப் படுத்துவதற்கும் உதவுவேன் என்று நினைத்து ஜீவனை விரும்புகிறேன்; மற்றப்படி மரணத்தைச் சந்தோஷத்தோடு ஏற்றுக்கொள்ளுவேன்" என்று சொன்னார்.

இதற்குப் பல வருஷங்களுக்குப்பின், 1542-ம் வருஷத்தில் அவருடைய குமாரத்தி மதலேனாள் 13 வயதாயிருக்கும்போது மரித்துப்போனாள். அவள் படுக்கையண்டை முழங்காற்படியிட்டு, "கிருபையுள்ள கர்த்தரே! இவளை அருமையாய் நான் நேசித்தும், அவளை எடுத்துக்கொள்வது உம்முடைய சித்தமாதலால் அவள் உம்முடனிருக்கும்படி முழுமனதோடே அவளை உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன்" என்று அவள் மரணத்தறுவாயில் ஜெபஞ்செய்தார். அவள் ஜீவன் போகிறபோது அவளுக்கு நேரே குனிந்து, "மதலேனாளே! என் மகளே! உன் தகப்பனாகிய என்னோடிருக்க நீ பிரியப்படுவாயே; அந்தத் தகப்பனிடம் புறப்பட்டுப்போக உனக்குப் பிரியந்தானே?" என்று கேட்டார்.

அதற்கு அவள் "கர்த்தருடைய சித்தத்தின்படி ஆகட்டும்; அப்படியே ஆயத்தமாயிருக்கிறேன்" என்றாள்.

தம்முடைய கண்ணிலிருந்து வடியும் கண்ணீரைத் துடைத்துவிட்டு, அவர் திரும்பவும் "கிறிஸ்து உனக்காகச் செய்து முடித்த அவருடைய கிரியையில் நம்பிக்கை வைக்கிறாயா" என்றார். அவள் "அப்பா! நீங்கள் எனக்குப் படித்துக்கொடுத்ததை நான் விசுவாசிக்கிறேன். நானோ சிறுபிள்ளை, கிறிஸ்துவை நேசிக்கிறேன்; அவர் என்னை நேசிக்கிறார் என்று நிச்சயமாய் நம்புகிறேன். நான் அநேகந்தரம் அப்பிரியம் செய்திருக்கிறேன்; ஆனால் இயேசுவினிடத்தில் மன்னிப்புக் கேட்டிருக்கிறேன். அப்பா! நான் மோட்சத்திற்குப் போகிறேனென்று எனக்குத் தெரியும். அங்கே என் சகோதரி எலிசபெத்தைக் கண்டால் அவளுக்கு என்ன சொல்லட்டும்?" என்றாள்.

அதற்கு அவர் "நான் முத்தங்கொடுத்தேனென்று சொல் அம்மா. அப்பா தம்மால் கூடிய சீக்கிரத்தில் அங்கே வருவாரென்றுஞ்

சொல்லு. ஆ! அவனைப் பார்த்து அவனிடம் பேச எவ்வளவு வாஞ்சையாயிருக்கிறேன்!" என்றார்.

சாகப்போகும் அந்தப் பெண் "அப்பா! என்னைத் திரும்பவும் கையில் எடுத்து ஏந்திக்கொள்ளுவீர்" என்றாள்.

"ஆம் என் அருமைக் குழந்தையே! அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி அவளைக் கையில் எடுத்தார், கையில் ஏந்தியவுடன் அவள் எவ்வளவு மெலிந்து பெலனற்றுப்போயிருக்கிறாளென்று கண்டு தன்னால் அடக்கமாட்டாமல் கண்ணீர்விட்டுச் சத்தமிட்டு அழுதார். அந்தப் பிள்ளை அவரைப்பார்த்து, "அழாதேயுங்கள் அப்பா, இயேசு அல்லவா தம்மோடு என்றுமிருக்கும்படி என்னை எடுத்துக்கொள்ளுகிறார். ஆண்டவராகிய இயேசுவே வாரும், வாரும்" என்று சொன்னாள்.

லூதர் அவளைத் தம்முடைய மார்பில் அணைத்துக்கொண்டிருக்க, அவள் பேசிக்கொண்டிருக்கையில் அவளுடைய மெலிந்த தேகத்தினின்று அவள் ஆத்துமா தேவனிடத்தில் போய்ச்சேர்ந்தது.

அவர் "ஆ, லீனு நீ பாக்கியவதி, நீ இப்போது நட்சத்திரங்களைப்பார்க்கிலும் பிரகாசமுள்ளவளாயிருந்தாலும் இன்னும் என்னுடைய லீனுதான்" என்றார்.

மரணத்திலும் நல்ல கிறிஸ்தவர்களுக்கு எவ்வளவு ஆறுதலிருக்கிறதென்று இதனால் அறியலாம். இந்துக்களைப்போல் மறுபிறப்பில் பாவங்களுக்காக திரும்பவும் பாடனுபவிக்கவேண்டுமென்று அவர்கள் பயப்படுகிறதில்லை. அவர்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன. அவர்கள் மரணத்துக்குப்பின் இன்பம் நிறைந்த ஒரு பதிக்குப் போகிறார்கள். அங்கே மனைவியும் புருஷனும், பிள்ளைகளும் பெற்றோரும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாமல் இசைந்திருப்பார்கள்.

## 19. ஸ்பயர்ஸ் பட்டணத்து அறிக்கை.

கிறிஸ்துசபையில் ரோமான் கத்தோலிக்கு, லூதரன், புரொடெஸ்டான்டு சபைகளென மூன்று பிரிவுகளுண்டு. புரொடெஸ்டான்டு சபைக்கு அந்தப் பேர் எப்படி வந்ததென்று இந்த அதிகாரத்தில் சொல்லுவோம்.

ஒர்ம்ஸ் நகரத்துச் சங்கம் கூடி எட்டு வருஷமாகிவிட்டது. இதற்குள் மார்க்க சீர்திருத்தம் எங்கும் பரவிற்று. அநேக பிரபுக்களும் ஜனங்களில் அநேகரும் இந்தக் கொள்கைகளை ஒப்புக்கொண்டார்கள். பாப்புவின் பட்சத்தார் லூதருக்கும் அவர் பட்சத்தாருக்கும்



விரோதமாக ஒர்ம்ஸ் நகரத்தில் கொடுக்கப்பட்ட தீர்ப்பை அவர்கள்மேற் செலுத்த பிரயாசப்பட்டார்கள். ஆனால் சீர்திருத்தம் நடக்க வேண்டுமென்றிருந்த பிரபுக்கள் அதற்கு விரோதமாய்த் தைரியத்தோடு எதிர்த்ததினால் அவர்களால் ஒன்றும் கூடாமற்போயிற்று.

1526-ம் வருஷம் ஜூன் மாதம் 25-ம் தேதியில் ஐந்தாம் சார்ல்ஸ் அரசன் சீர்திருத்தக்காரருக்கு விரோதமாய், ஒர்ம்ஸ் நகரத்தில் தான் கொடுத்த தீர்ப்பை நிலைபெறச் செய்வதற்கு ஸ்பயர்ஸ் நகரத்தில் ஒரு பெயர்போன சங்கத்தைக் கூட்டினான். போஹேமியா தேசத்தரசனும் சக்கரவர்த்தியின் சகோதரனுமாயிருந்த பேர்டினென்று அந்தச் சங்கத்திற்கு அக்கிராசனாதிபதியாயிருந்தான்.

ஸ்பயர்ஸ் ஜர்மானியா தேசத்தின் பூர்வீக பட்டணங்களிலொன்று. அது ரைன் நதியினருகே இருக்கிறது. அது கோட்டைகளும், கோபுரங்களுமுள்ள ஓர் அரணிப்பான பட்டணம். ஜர்மானியா சக்கரவர்த்திகள் பெரும்பாலும் வசித்துவந்த ஓர் பெரிய மாளிகையும் அந்த நகரத்திலிருந்தது. அதின் பிரதான தேவாலயத்தின் கீழறைகளில் ஜர்மானியா சக்கரவர்த்திகளில் அநேகரும், மற்றப் பெரியோரும் அடக்கம்பண்ணப்பட்டிருக்கிறார்கள். மார்க்க சீர்திருத்தத்தை நாடிய அநேக பிரபுக்கள் அங்கே கூடிவந்திருந்தார்கள். "கர்த்தருடைய வசனம் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்" என்னும் வசனத்தைத் தங்களுக்கு உறுதிச்சொல்லாய்க் கொண்டுவந்தார்கள். தங்களோடு சில போதகரையும் கூட்டிக்கொண்டு வந்திருந்ததால் தாங்கள் ஆராதனை செய்ய தங்களுக்கு கோவில்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். அப்படி கொடுக்கமாட்டோம் என்று சொல்லவே, தங்கள் அரண்மனைகளின் பிரதான அறைகளைத் திறந்துவிட்டு அதில் ஆராதனை நடத்தினார்கள். அந்த கூட்டங்களுக்கு அநேக ஜனங்கள் வந்தார்கள்.

பேர்டினென்று முதலில் இருபட்சத்தாரையும் பிரியப்படுத்தப் பிரயாசப்பட்டு, சக்கரவர்த்தியிடமிருந்து தான் பெற்ற கட்டளையைச் சங்கத்தாருக்குச் சொல்லவில்லை, ஆனால் சங்கத்தாரெல்லாரும் சக்கரவர்த்தியின் உத்தரவை தெரியப்படுத்தவேண்டுமென்று கேட்டதின்பேரில் சக்கரவர்த்தியின் உத்தரவைத் தெரியப்படுத்தினான். "சபையின் ஆசாரங்கள் எங்கும் கைக்கொள்ளப்படவேண்டும்; ஒர்ம்ஸ் நகரத்து ஆக்கினையை உறுதிப்படுத்தவேண்டும்" என்று சக்கரவர்த்தி கட்டளையிட்டிருந்தார்.

ஆனால் அடியிற்கண்ட விஷயத்தினால் கொஞ்சக்காலத்திற்கு ஜர்மானியா தேசத்திலுள்ள நாடுகளுக்கெல்லாம் மனச்சாட்சியின்படி நடக்கச் சமயம் கிடைத்தது.

பாப்புவும் சக்கரவர்த்தியும் முதலில் சிநேகிதராயிருந்தார்கள். சார்ல்ஸ் பாப்புவின் கையிலிருந்து தன் பட்டத்துக்குரிய கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள ரோமாபுரிக்குப் புறப்பட எத்தனித்திருக்கும்போது, பாப்பு ஜர்மானியதேசத்திற் சில நாடுகள் தம்முடையதென்று சொன்னார். சார்ல்ஸ் அதை எதிர்த்தான். பாப்பு பிரான்சு தேசத்து அரசனையும் இங்கிலாந்துதேசத்து அரசனையும் தம்முடைய பக்கத்திற் சேர்த்துக்கொள்ளப் பிரயாசப்பட்டார்; சக்கரவர்த்தியோ மார்க்க சீர்திருத்தத்திற்கு அனுகூலரான ஜர்மானிய பிரபுக்களின் உதவியை நாடினார். அதினால் ஓர்ம்ஸ் நகரத்துத் தீர்ப்பை ஒருவரும் உறுதிப்படுத்தக் கூடாமற்போயிற்று. சார்ல்ஸ் சக்கரவர்த்திக்கு லூதரையும் அவர் பட்சத்தாரையும் பற்றிக் கவலைப்படுவதற்கு நேரமும் சாவகாசமும் கிடைக்கவில்லை. இத்தாலியா தேசத்துக்கு ஒரு சேனையை அனுப்பி 1527-ம் வருஷம் மேய்மாதத்தில் ரோமாபுரியைக் கொள்ளையிட்டார். இதில் அநேக ஜனங்கள் மாண்டார்கள்.

இப்படியிருக்கையில் லூதர் மெலாங்க்தன் ஸ்பிலாத்தின் என்பவர்கள் தேசமுழுவதுஞ் சென்று பிரசங்கித்து, புதுப் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து, உபாத்திமாருக்குப் போதிப்பித்து வந்தார்கள். 1527-ம் வருஷத்தில் லூதர் தம்முடைய புஸ்தகங்களிலெல்லாம் மிகவும் பிரயோஜனமான "சிறுவினா விடை" யென்னும் புஸ்தகத்தைப் பிரசுரஞ்செய்தார். லூதர் மறுவருஷத்தில் எலெக்டர் பிரபுவுக்கு எழுதிய கடிதத்தில், "நம்முடைய சிறுபிள்ளைகள் வேதாகமத்தையும் வினாவிடையையும் இவ்வளவு நன்றாய்க் கற்றுவருவதைப் பார்ப்பதும் என் காதால் கேட்பதும் என் மனதுக்குச் சந்தோஷமாயிருக்கிறது. முன் ஒருநாளும் நம்முடைய பள்ளிக்கூடங்களிலில்லாத வண்ணமாய் இப்போது சிறு பையன்களும் சிறு பெண்களும் தேவனையும் கிறிஸ்துவையும் விசுவாசித்துத் துதித்துவருகிறார்கள்" என்று எழுதினார்.

பாப்புவும் சார்ல்ஸ் சக்கரவர்த்தியும் திரும்பவும் சிநேகிதரானார்கள். இருவரும் சேர்ந்து லூதரையும் அவரைச் சேர்ந்தவர்களையும் அடியோடே வேரறுக்க பிரயத்தனஞ்செய்தார்கள். 1529-ம் வருஷம் மார்ச்சுமாதத்தில் திரும்பவும் ஸ்பையர்ஸ் நகரத்திற் சங்கம் கூடிற்று. "லூதரின் கொள்கைகளைப் பிரசங்கிக்கிறவர்களும் அனுசரிக்கிறவர்களும் காவல் செய்யப்படவேண்டும் அல்லது சிக்ஷைக்குட்படவேண்டும்" என்பது ஓர்ம்ஸ் நகரத்துத்தீர்ப்பு. சில பிரபுக்களுக்கு அந்த தீர்ப்புப் பிரியமில்லாதிருந்ததினால், அதைக் கொண்டு செலுத்துவார் ஒருவருமில்லை. ஆனால் முந்தின கூட்டத்தில் தீர்மானித்தபடி அந்தந்த நாட்டிலுள்ள அதிபதிகள் அவ்விட



த்து மார்க்க விஷயங்களை நடத்திக்கொள்ளலாமென்று செய்த தீர்மானத்திற்கு விரோதமாய் இந்தக் கூட்டத்தில் ஓர் தீர்மானம் செய்யப்பட்டது. இந்தப் புதுத் தீர்மானத்தின்படி பொதுவான சங்கத்தின் தீர்ப்புக் கொடுக்கப்படுமுன், மார்க்கவிஷயமாய் மாறுதல்கள் செய்வது தவறென்றும், எல்லாரும் தங்கள் முன்னிருந்த மார்க்கத்தையே அனுசரிக்கவேண்டுமென்றும் தீர்க்கப்பட்டது. கூடிவந்திருந்த 34 பேரில் 20 பேர் புதிய தீர்மானத்துக்குச் சார்பாயிருந்தார்கள்; 14 பேர் விரோதமாயிருந்தார்கள்.

லூதர் பட்சத்திலிருந்த ஜர்மானிய பிரபுக்கள் மார்க்க சீர்திருத்தம் பரவுவதற்கு விரோதமாய் இந்தத் தீர்மானம் செய்யப்பட்டதென்று கண்டு, மார்க்கவிஷயத்தில் எல்லாருக்கும் சுயாதீனம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். "இந்தத் தீர்மானத்தை உதவாதென்று தள்ளிவிடுவோம். மனச்சாட்சியை அடுத்த காரியங்களில் அநேகராயிருந்தால் என்ன, கொஞ்சம்பேரா யிருந்தால் என்ன? சத்தியமே பிரதானம்" என்றார்கள்.

ஏப்பிரல் மாதம் 18-ம் தேதி பேர்டினான்ட் பிரபு சங்கத்தாருக்கு வந்தனஞ்சொல்லி, கூட்டத்திற் பெரும்பான்மையோர் சம்மதித்த இந்தத் தீர்மானம் ராஜகட்டளை யாகுமென்றும், எலெக்டர் பிரபுவும் அவர் சிநேகிதரும் இதற்குச் சம்மதிக்கவேண்டும் என்றும் தெரிவித்தான். மார்க்க சீர்திருத்தத்திற்கு அனுகூலமாயிருந்த பிரபுக்கள் ஒருவரோடொருவர் கலந்து பேசிக்கொள்ள ஒரு பக்கத்தில் சென்றார்கள். பேர்டினான்ட் "நான் காத்திருக்கமாட்டேன்" என்று சொல்லிவிட்டான். கெஞ்சிப்பார்த்தும் பிரயோஜனம் ஒன்றுமில்லை. "சக்கரவர்த்தியவர்களிடம் ஒரு கட்டளை பெற்றேன், அதை நிறைவேற்றிவிட்டேன், எல்லாம் முடிந்தது" என்றான்.

ஆனால் எல்லாம் முடிந்துபோகவில்லை. 1529-ம் வருஷம் ஏப்பிரல் மாதம் 25-ம் தேதியில் மார்க்க சீர்திருத்தத்திற்கு அனுகூலமாயிருந்த பிரபுக்கள் எல்லாரும் ஒரு சிறு அறையிற் கூடி, இந்தச் சங்கத்திலிருந்து தேவனுடைய வசனத்திற்கும், சார்ல்ஸ் சக்கரவர்த்தியினின்று ராஜாதிராஜனும் கர்த்தாதி கர்த்தனுமாகிய இயேசுகிறிஸ்துவுக்கும் அபயமிட்டு, இந்தத் தீர்மானத்திற்கு எதிருரை ஒன்று எழுதிக் கையொப்பமிட்டார்கள். அவர்கள் கூடிய சிறு அறை இன்னுமிருக்கிறது; அந்நகரத்திலுள்ள இரண்டு வக்கீல்கள் அந்தப் பத்திரத்திற்கு சாட்சிகளாய்க் கையொப்பமிட்டார்கள்.

சாக்ஸனி நாட்டு எலெக்டர் பிரபு இந்த எதிருரைக்கு முதற் கையொப்பமிட்டார். அவர்தான் இதைச் சங்கத்தின் முன் நின்று வாசித்தார். பேர்டினான்ட் அங்கே யில்லாதிருந்ததினால் பிரதியாட்

கள் அதை அவரிடம் கொண்டுபோனார்கள். அவன் அதை முதலில் வாசிப் பின் அவர்களிடம் கொடுத்துவிட எத்தனித்தான். பிரதி



ஸ்பயர்ஸ் பட்டணத்தில் எதிர்மறைக்குக் கையொப்பமிட்டது.

யாட்களோ அதை அவன் கையிலிருந்து வாங்கித் தைரியமாய் அங்கிருந்த ஓர் மேசையில் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

இந்த எதிருரை சொன்னோருக்கு, எதிருரை சொன்னோரென்று அர்த்தங்கொண்டும் புரொட்டெஸ்டென்று என்னும் பெயர் முதல் முதல் கொடுக்கப்பட்டது. இந்தப் பெயர் மார்க்க சீர்திருத்தத்திற்கு அநுகூலமாயிருந்த மற்றவர்களெல்லாருக்கும் அப்புறம் அளிக்கப்பட்டது.

சார்ல்ஸ் சக்கரவர்த்தி பாப்புவினால் கிரீடஞ் சூட்டப்பட்டபின் மார்க்க சீர்திருத்தத்தை அடக்கும் பொருட்டு ஆக்ஸ்பர்க் நகரத்திற்கு வந்தார். வெகு ஆடம்பரத்தோடும் நகரத்துக்குட் பிரவேசித்தார். லூதர் ஆக்ஸ்பர்க் நகரத்திற்கு வருவது நன்மையாகத் தோன்றாததனால் அதற்குச் சிறிது தூரத்திலிருந்த கோபர்க் கோட்டையிலிருந்தார். மெலாங்தன் புரொட்டெஸ்டென்று கொள்கைக்காரர் விசுவாசித்த சத்தியங்களைச் சுருக்கமாய் லூதருடைய அநுமதி பெற்று எழுதினர். "விசுவாசத்தின் அறிக்கை" என்றழைக்கப்பட்ட இந்தப் பத்திரிகையை சக்கரவர்த்தியும் மற்றப் பிரபுக்களும் கூடிய ராஜசபையில் ஜூன் மாதம் 25-ம் தேதி வாசித்தார்கள்.



அதை வாசிக்க இரண்டு மணிநேரம் சென்றது. இதற்குத்தான் "ஆக்ஸ்பர்க் அறிக்கை" என்று பெயர். சார்ல்ஸ் எல்லா பிரபுக்களையும் கூட்டிச் சேர்த்து மார்க்க சீர்திருத்தத்தை நிறுத்த எத்தனித்தான். ஆனால் அக்கூட்டம் அதைப் பரவச்செய்தது. லூதர் மிகுந்த மனமகிழ்ச்சி யடைந்தார். "இந்த மணிநேரம்வரையினும் நான் பிழைத்திருந்து, 1530-ம் வருஷத்தில் திரும்பவும் கிறிஸ்துவானவர் இவ்வளவு மகத்துவமாய் இப்படிப்பட்ட சபையில் இப்படிப்பட்ட மேன்மக்களால் அறிக்கையிடப்படுவதைப் பார்க்கக் கிடைத்ததற்காக நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். அரசர் முன்பாகவும் உம்மை அறிக்கையிட வெட்கப்படேன் என்னும் வேதவாக்கியம் இப்போதுதான் நிறைவேறிற்று" என்று இந்தக் கூட்டத்தைப்பற்றி எழுதினார்.

சக்கரவர்த்தி கொஞ்சக்காலம் சீர்திருத்தக்காரரை உபத்திரவப்படுத்தலாமென்று நினைத்தார்; ஆனால் 1532-ம் வருஷத்தில் இதற்கு விரோதம்பண்ணுவது வீண் என்று கண்டு சமாதான உடன்படிக்கை செய்தார். அநேக வருஷகாலங்களாய் ஜர்மானியா தேசத்தில் சமாதானமிருந்தது.

## 20. கடைசி நாட்கள்.

1527-ம் வருஷத்தில் லூதர் மிகவும் வியாதிப்பட்டார். முடிவு சமீபமாயிற்று என்றெண்ணி தம்முடைய மனைவியிடத்திலும் பிள்ளையினிடத்திலும் பிரியாவிடைபெற்றுக் கொண்டார். ஆனால் அவர் சீக்கிரத்திற் சுகப்பட்டார். அவர் சுகப்பட்டாலும் அந்நாள்முதல் அடிக்கடி ஒரு கொடிய நோய் அவரை வருத்திற்று. 1537-ம் வருஷம் அவர் மிகவும் வியாதிப்பட்டு மரணத் தறுவாயிலிருந்தார். எலெக்டர் பிரபு அவரைப் பார்க்கவந்து அநேக ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னதுமல்லாமல், "இவ்வுலகத்திலிருந்து உம்மை எடுத்துக்கொள்ளக் கர்த்தருக்குச் சித்தமானால் உம்முடைய குடும்ப விஷயத்தைப்பற்றிக் கவலைப்படாதேயும்; உம்முடைய மனைவியையும் குமாரனையும் என் குடும்பத்தாரைப்போல் எண்ணி ஆதரிப்பேன்" என்றும் சொன்னார்.

1540-ம் வருஷத்தில் தலைச்சுற்றுபோல் அடிக்கடி கண்டதுமல்லாமல், கட்டி முதலான நோய்களால் அடிக்கடி வருத்தப்பட்டார். ஆனால் அதன்பின் 5 வருஷகாலம் உயிரோடிருந்தார்.

லூதர் தம்முடைய நோய்களிலெல்லாம் கடவுள்மேல் உறுதியான விசுவாசமும் அவர் சித்தத்துக்குக் கீழ்ப்படிதலும் உள்ள

ராய் காணப்பட்டார். ஒருதரம் அவர் மரணத்தருவாயிலிருந்தபோது, "என் அருமையுள்ள பரம தகப்பனே! இது இவ்வுலகத்தில் என் கடைசி மணி நேரமாயிருக்க உமக்குச் சித்தமானால் உம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்று ஜெபித்தார். அதன்பின் அவர் கண்களை வானத்துக்கு நேராக உயர்த்தி யிருந்த பக்தி விநயமாய் 31-ம், 6-ம் சங்கீதங்களையும் பரமண்டல ஜெபத்தையும் சொன்னார். கொஞ்சநேரத்திற்குப்பின் திரும்பவும் அவர் ஜெபிக்கத் தொடங்கி, "என் ஆத்துமநேசராகிய என் ஆண்டவராகிய தேவனே! உம்முடைய வசனத்திற்காக என் இரத்தத்தையும் சிந்த ஆயத்தமாயிருந்தேன் என்பதை நீர் அறிவீர். ஆனால் நான் அந்த மேன்மைக்குப் பாத்திரமற்றவனாயிருந்தேன். உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது. உமக்குச் சித்தமானால் நான் மனப்பாக்கியத்தோடு மரிப்பேன். நான் பிழைத்தாலும் மரித்தாலும் உம்முடைய நாமமே மகிமைப்படட்டும். துதிக்கப்படத்தக்க என் ஆண்டவராகிய இயேசுவே! உம்முடைய பரிசுத்த நாமத்தை அறியும் அறிவை எனக்குத் தயவாய் அருளிச்செய்தீர். பிதாவோடும் பரிசுத்தாவியோடும் ஒன்றாயிருக்கிற ஒரே மெய்த்தேவனாகிய உம்மை விசுவாசிக்கிறேன் என்று நீர் அறிவீர். நீர் எனக்காக உம்முடைய இரத்தத்தைச் சிந்திய மீட்பரும் மத்தியஸ்தருமாயிருக்கிறீர் என்னும் அருமையான சத்தியத்தைக்கொண்டு என்னைத் தேற்றிக்கொள்ளுகிறேன். இந்த சோதனை நிறைந்தகாலத்தில் என் சமீபத்திலிருந்து உம்முடைய பரிசுத்த ஆவியினால் என்னைத் தேற்றியருளும்" என்று ஜெபித்தார்.

1545-ம் வருஷத் துவக்கத்தில் தம்முடைய வியாதி துன்பத்தோடு மான்ஸ்பீல்டு நகரத்தாருக்கும் அந்த நகரத்துப் பிரபுக்களுக்கு மிருந்த சில வாக்குவாதங்களைத் தீர்க்கப்போனார். அவர் போனதும் சமாதானத்திற்கிடமில்லை. அந்த வருஷத்திலேயே இரண்டாந்தரம் போனார். இன்னும் சண்டைதீரவில்லை. கடைசியாக மூன்றாந்தரம் அந்த இரண்டு பிரபுக்களும் மற்ற இனத்தாரும் அவரை வெகுவாய்க் கேட்டுக்கொண்டதின்பேரில் திரும்பவும் போனார். அவர் மிகவும் பெலவீன நிலைமையிலிருந்ததினால் பிரயாணஞ் செய்யப் பயந்தார். ஆனாலும் சமாதானம்பண்ணக் கூப்பிடும்போது போக மாட்டேன் என்று சொல்ல அவருக்கு இஷ்டமில்லை. 1546-ம் வருஷம் ஜனவரி மாதம் 23-ம் தேதி புறப்பட்டார். அவருடைய மனைவி இனி அவரைக் காணமாட்டோம் என்றறிந்தவள்போல் மிகவும் மனவருத்தத்தோடு அவரை அனுப்பிக்கொண்டாள். அவர் அவளை ஆறுதல்படுத்த பிரயாசப்பட்டார்; பிரயாணத்திலிருந்து அடிக்கடி கடிதம் எழுதினார். ஹால் பட்டணத்திற்கு அவர் வந்தபோது மிக



வும் பலவீன நிலைமையிலிருந்ததினால் அங்கிருந்து ஜோனஸ் பண்டிதரைக் கூட்டிக்கொண்டு சென்றார்.

பிரபுக்கள் அவரை மிகவும் மரியாதையோடு ஏற்றுக்கொண்டார்கள். பெப்ருவரிமாதம் 16-ம் தேதிவரையிலும் வழக்கைத் தீர்க்கும்படி ஏற்பட்ட கூட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் தவறாமற் போய் வந்தார். "என் பிரியமான பிரபுக்களுக்கும் அவர்கள் குடிகைகளுக்கும் சமாதானஞ் செய்துவைத்தால் நான் மனரம்மியத்தோடு வீட்டுக்குத் திரும்பிப்போய் கல்லறையிற் படுத்துக்கொள்ளுவேன்" என்று சொன்னார்.

கடவுள் லுத்தரை மரணகாலத்தில் அவருடைய சொந்த நாட்டிற்கும் அவர் பிறந்த ஊருக்கும் கொண்டுவந்தது ஆச்சரியந்தான். 17-ம் தேதி அவர் மிகவும் வியாதிப்பட்டிருந்ததினால் பிரபுக்கள் அவரை வீட்டைவிட்டு வெளியேறவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்கள். அன்று இராத்திரி அவர் சாப்பாட்டுநேரத்தில் தாம் சீக்கிரமாய் மரிக்கப்போகிறதைப்பற்றிப் பேசினார். அப்புறம் அவர் படுக்கத் தம்முடைய அறைக்குப் போகும்போது, "உம்முடைய கரத்தில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்; சத்தியபரனாகிய கர்த்தாவே! நீர் என்னை மீட்டிருக்கிறீர்" என்னும் வாக்கியத்தைச் சொல்லிக் கொண்டு போனார்.

மரண வேளையில் அவர் சொன்ன அநேக அருமையான வார்த்தைகளைக் கேட்டவர்கள் அவைகளை எழுதிவைத்தார்கள். அவர் சொன்ன அநேக காரியங்களில் இதுவொன்று. "கர்த்தராகிய இயேசுவே! என் ஆத்துமாவை உம்முடைய வசத்தில் ஏற்றுக்கொள்ளும் என்று உம்மைக் கெஞ்சுகிறேன். ஆ, பரமபிதாவே! நான் இந்த என் தேகத்தைவிட்டு, இந்த ஜீவனிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டாலும் உம்மோடு எப்பொழுதும் நிலைத்திருப்பேன் என்பதை நிச்சயமாய் அறிவேன்" என்றார்.

கடைசியாக ஜோனஸ் பண்டிதர் சத்தமாய்க் கேட்ட ஒரு கேள்விக்கு உத்தரவு கொடுத்தார். இதுதான் அவர் கடைசி வார்த்தைகள் ஜோனஸ் பண்டிதர் அவரைப் பார்த்து "சங்கிக்கப்படத்தக்க பிதாவே! கிறிஸ்துவை உறுதியாய் விசுவாசித்து நீர் போதித்த போதனைகளில் நம்புகிறீரா?" அதற்கு லுத்தர் தெளிவாய் "ஆம் ஆம்" என்றார். கொஞ்சநேரத்திற்குப் பின் 1546-ம் வருஷம் பெப்ருவரிமாதம் 18-ம் தேதி இவ்வுலகம் விட்டு மறுவுலகம் சென்றார். அவர் மரிக்கும்போது அவருக்கு 63 வயது.

அவருடைய சரீரத்தை உவிற்றன்பேர்க் நகரத்திற்கு வெகு மகிமையோடு கொண்டுவந்தார்கள். எலெக்டர் பிரபுவின் சபையைச்

சேர்ந்த உத்தியோகஸ்தரும், மான்ஸ்பீல்டு நகரத்துப் பிரபுக்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் சவப்பெட்டியின் பின்னே சென்றார்கள். சவப்பெட்டி ஈயத்தாற் செய்து கறுப்புப் பட்டுத்துணிபோட்டு மூடி ஒரு வண்டியில் வைக்கப்பட்டிருந்தது. லூதரின் சிநேகிதராகிய மெலாங்தான் பண்டிதர் லூதரின் மரணத்தைப்பற்றிப் பிரசங்கம் செய்தார்.

சார்ல்ஸ் சக்கரவர்த்தி உவிட்டென்பேர்க் நகரத்தை முற்றுகை போட்டகாலத்தில் லூதருடைய கல்லறையைப் பார்க்க விரும்பினார். கல்லறைக் கல்லின்மேல் எழுதியிருந்த வாசகத்தைப் பார்த்தபின் அவரோடிருந்தவர்களில் ஒருவன், "இந்தக் கல்லறையைத் திறந்து இந்தச் சபைப்பிரிவினைக்காரனின் சாம்பலைக் காற்றில் தூற்றவேண்டாமா?" என்று அவரைக் கேட்டான். அதற்கு சக்கரவர்த்தி "மரித்தோரோடு நாம் போர்செய்கிறதில்லை. இந்த இடத்தை ஒருவரும் அவமரியாதை செய்யவேண்டாம்" என்றார்.

1821-ம் வருஷத்தில் புருஷிய அரசனான மூன்றாம் உவில்லியம் உவிட்டென்பேர்க் நகரத்துச் சந்தைவெளியில் லூதருக்கு ஒரு ஞாபகஸ்தம்பம் கட்டுவித்தான். ஓர்ம்ஸ் நகரத்தில் ஓர் ஞாபகஸ்தம்பம் கட்டுவதற்கு ஒன்பது வருஷம் பிடித்தது. அதின் செலவு இரண்டுலட்சம் ரூபாய். லூதர் தம்முடைய இடதுகையில் ஒரு வேதாகமப் புஸ்தகத்தை ஏந்தி வலது கையை அதின்மேல் வைத்து வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறவண்ணமாய், அந்த ஸ்தம்பத்திலிருக்கும் அவர் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. இவர் சங்கத்தின் முன் இவ்வண்ணமாய் நின்றுதான் "இதோ! இங்கே நிற்கிறேன்; வேறுவிதமாய் ஒன்றும் செய்ய என்னால் முடியாது; கர்த்தர் எனக்குத் துணை நிற்பாராக. ஆமென்" என்று சொன்னார்.

உவிட்டென்பேர்க் நகரத்தில் லூதர் பிரசங்கித்து, தம்முடைய சித்தாந்தங்களை ஒட்டிய கோவில் 1892-ம் வருஷத்தில் திரும்பவும் பழுதுபார்க்கப்பட்டு, ஜர்மானிய சக்கரவர்த்தியால் திறக்கப்பட்டது. அந்த சந்தோஷ தினத்தில் ஐரோப்பாவிலுள்ள அநேக புரொடஸ்டண்டு ராஜாக்கள் அங்கே கூடிவந்திருந்தார்கள். பட்டத்திற்குரிய ராணியின் பேரன் இங்கிலாந்து அரசியின் பிரதிநிதியாய் நின்றார்.

## 21. லூதரில் காணப்பட்ட லட்சணங்கள், அவர் கிரியைகள்.

—:0:—

வெளித்தோற்றம்.—வாலிபப் பிராயத்தில் பக்திதாகமாயிருந்து வருத்தப்பட்டதினால் லூதர் மெலிந்துபோயிருந்தார். ஓர்ம்ஸ் நகரத்து சங்கத்துக்கு அவர் வந்தபோது முழுப்பிராயமாயிருந்தார், வள



ர்த்தியில் மத்தியத்திற்குக் கொஞ்சம் உயரமாயிருப்பார். தேகவலுள்ளவர், நிமிர்ந்து நடப்பார். மலர்ந்தமுகமும் கழுகுக்கண்போல் கூர்ந்த பார்வையும், தெளிவாய்த் தொனியிடும் சத்தமும் உடையவர். கலியாணஞ்செய்யுமுன் எப்போதும் துக்கமுடையவராயிருப்பார். கலியாணம் செய்தபின்போ அவர் சந்தோஷமுடையவராயிருந்ததால் அவர் சிநேகிதர் அவரை நேசிக்கவும் அவர் மாணுக்கர் அவர்மேல் அபிமானங் கொள்ளவும் நேரிட்டது.

பொழுதுபோக்கும் வகைகள்.—லூதருக்கு எப்போதும் அதிக வேலையிருந்தது. வீணாய்ப் பொழுதுபோக்க அவருக்கு நேரமில்லை. வீட்டிலே தன் பெண்சாதி பிள்ளைகளோடு சேர்ந்து சந்தோஷப்படுவது தான் அவருக்கு மிகுந்த இன்பத்தைக்கொடுத்தது. வீட்டிலிருக்கும்போது சங்கீதாப்பியாசத்தில் அவருக்கு அதிக பிரியம். தோட்டவேலைசெய்வதிலும் பிரியப்படுவார். ஒரு சிநேகிதனுக்கு அவர் எழுதிய கடிதத்தில் "வருகிற வசந்தகாலத்தில் எனக்குச் சில விதைகளைக் கொடுத்தனுப்புவேனென்று நீர் எழுதியிருந்தது எனக்குச் சந்தோஷம். எவ்வளவு அனுப்பக்கூடுமோ அவ்வளவையும் அனுப்பும். அதை அருமையாய் எண்ணுவேன்" என்று எழுதினார். தச்சுவேலை செய்யவும் பழகினார். ஒருவேளை அவசியமானால் கையினால் வேலை செய்து அன்றாடக போஜனத்திற்கு உழைக்கவேண்டும் என்று நினைத்து அந்த வேலையைப் படித்தார்.

தாம் இளைப்பாறுகிற விஷயத்தில் கவலையீனராயிருந்தாலும் மெலாங்தானுக்கு அதைப்பற்றி நல்ல புத்திசொன்னார். "நாம் தேவனுக்காக வேலைசெய்வது மாத்திரம் ஊழியமல்ல; பொழுதுபோக்கியும் இளைப்பாறியும் ஊழியஞ்செய்வது நமது கடமை" என்றார். இத்தேசத்திலிருக்கும் தனவான்கள் வெளியிலே போய்ச் சரீரப்பியாசம் செய்கிறதில்லை. அவர்களில் அநேகர் காலத்துக்குமுன் மரித்துப்போகிறதற்கு இது ஒரு காரணம். பரீட்சைக்குப் படிக்கும் மாணுக்கர் அநேகர் இதனால் வருத்தப்படுகிறார்கள்.

தரித்திரத்திலும் தயாளகுணம்.—லூதர் தன் ஜீவகாலமெல்லாம் எளிமையை அனுபவித்துவந்தார். சிறுவயதாயிருக்கும்போது சாப்பாட்டுக்குப் பிச்சையெடுத்தார் என்று கண்டோம். உவிட்டென்பேர்க் நகரத்தில் அவர் வித்தியாபோதகராயிருக்கையில் அவருக்கு மாத சம்பளம் 20 ரூபாய். அவர் புஸ்தகங்களில் அவருக்குப் பணம் ஒன்றும் வரவில்லை. விசேஷமாய் வேதாகம மொழிபெயர்ப்பில் அவருக்கு ஒரு டணாமுமில்லை. அவர் "என் மொழிபெயர்புகளுக்காக நான் ஒருகாசும் வாங்கினதில்லை; ஒன்றும் கேட்டதுமில்லை" என்றார்.

புஸ்தகங்களுக்கும் பணம் வாங்காதது மாத்திரமல்ல, தாம் செய்த உபதேசங்களில் ஒன்றுக்கும் அவர் ஒரு உபகாரமும் பெற்றுக் கொள்ளவில்லை. தாம் எழுதுகிறவைகளையெல்லாம் அச்சிடுகிறவர்களுக்கு இலவசமாகக் கொடுத்தார். அவர்கள்தான் அவர் புஸ்தகங்களையெல்லாம் விற்றார்கள். அவர்கள் இவருடைய புஸ்தகங்களை அச்சிட்டு விற்பதற்காக வருஷத்திற்கு 400 ரூபாய் கொடுப்போமென்று சொன்னதற்கு அவர் வேண்டாம் என்று மறுத்துவிட்டார். வெகு வேளைகளில் தான் யாராவது ஒரு சிநேகிதனுக்குக் கொடுக்கும்படியாய் ஒரு புஸ்தகத்தை இனாமாகக் கேட்பார்.

இப்படிக் கொஞ்ச வருமானத்தைக்கொண்டு அவர் எப்படிக் காலங்கழித்தாரென்பது ஆச்சரியப்படத்தக்க காரியம். அவர் தம்முடைய குடும்பத்தை ஆதரித்தது மாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் பல உபகாரம் செய்துவந்தார். அவர் மனைவிக்குத் தன் குடும்பத்திலுள்ள சில வயல்களிலிருந்து சொற்ப வருமானம் உண்டு. ஆனால் அவருக்கு அடிக்கடி வெகுமானங்கள் வரும். அடிக்கடி யாரிடமிருந்து வந்ததென்றுகூட அவருக்குத் தெரியாது.

ஏறக்குறைய ஒவ்வொருநாளும் அவர் அந்நியரை உபசரிக்க வேண்டியதாயிருந்தது. இதுவுமல்லாமல் எளிய இனத்தாரையும் ஆதரித்துவந்தார். ஒருதரம் ஒரு மாணாக்கன் புறப்பட்டு உவிற்றன்பெர்க் நகரத்தை விட்டுப்போகப் பணமில்லாமல் லூதரிடத்தில் வந்தான். லூதரிடத்தில் அவனுக்குக் கொடுக்கப் பணமில்லை. எலெக்டர் பிரபு தனக்குக் கொடுத்த ஒரு வெள்ளிப் பாத்திரத்தை அந்த வாலிபனிடத்தில் கொடுத்து "எனக்கு வெள்ளிப்பாத்திரம் வேண்டியதில்லை, ஒரு தட்டானிடத்தில் விற்று அதில் கிடைப்பதை எடுத்துக்கொள்" என்றார்.

லூதருடைய சத்துருக்கள் அவருக்குப் பணம் கொடுத்து அல்லது ஒரு பட்டம் சூட்டி அவரைத் தங்கள் வசப்படுத்தலாமென்று முதலில் நினைத்தார்கள். பாப்பு தம்முடைய கார்டினல்களில் ஒருவரைப் பார்த்து "அவனுக்குத் திரவியம் கொடுத்தாவது அவன் வாயை அடைக்கக்கூடாதா?" என்று கேட்டதற்கு அந்தக் கார்டினல் "அந்த ஜர்மானிய மிருகத்திற்குப் பணம் என்றும் கீர்த்தி என்றும் ஒரு பொருட்டில்லை" என்றான்.

தாழ்மை.—மெலாங்தான் "உவிற்றன்பெர்க் சர்வகலாசாலையில் லூதர் படித்துக்கொடுக்க வகுப்பிற்குள் வரும்போது மாணாக்கர் எல்லாரும் எழுந்து நிற்கவேண்டும்" என்று உத்தரவு செய்திருந்தார். இது சர்வகலாசாலையில் நடந்துவரும் ஓர் பூர்வீக வழக்கமாயிருந்தும் லூதருக்கு அது பிரியமில்லை. அவர் "மெலாங்தான்



இந்தப் பழைய வழக்கத்தை விட்டுவிடுவாரென்று விரும்புகிறேன். என்னை யாராவது கனப்படுத்தினால் நான் தாழ்மையாயிருக்க மிகவும் ஜெபம் செய்யவேண்டியதாயிருக்கிறது" என்றார்.

சங்கீதத்தின்மேல் பிரியம்.—"இளைஞர் அப்பியாசிக்க வேண்டிய காரியங்கள் இரண்டுண்டு; ஒன்று சங்கீதம்; இது மனக்கவலைகளையும் விசாரத்தையும் மனதிலிருந்து நீக்கிவிடுகின்றது. இன்னொன்று சரீராப்பியாசம். இதனால் தேகம் வலுக்கொள்ளுகிறதுமல்லாமல் சுகத்துக் கனுகூலமாயுமிருக்கிறது. துக்கித்திருக்கிற மனுஷனுக்கு சங்கீதத்திலும் சிறந்த மருந்து ஒன்றுமில்லை. அது அவனை ஆற்றித்தேற்றி அவன் இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறது" என்றார்.

லூதர் சங்கீதத்தை மேன்மையாய் உபயோகப்படுத்தக்கூடிய ஓர் வித்தையென்று அதை விரும்பினார். சங்கீதம் தேவன் கொடுத்த இன்பமும் அழகியதுமான ஈவு. அடிக்கடி அது என்னை எழுப்பி ஏவினதினால் நான் பிரசங்கம்செய்ய ஏவப்பட்டிருக்கிறேன்" என்றார். பிள்ளைகளுக்குச் சங்கீதம் கற்றுக்கொடுக்க வேண்டுமென்றும், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் அதைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் ஒவ்வொரு உபாத்தியாயரும் பாடவும் பாட்டு படிப்பிக்கவும் சமர்த்தராயிருக்க வேண்டுமென்றும் அடிக்கடி வற்புறுத்திச் சொல்லுவார்.

லூதரின் பாட்டுகள்.—லூதர் ஜர்மானியா நாட்டாரின் மனதைக் கவர்ந்து அவர்களுக்குள் சுவிசேஷ சத்தியங்களைப் பரப்பினது பிரசங்கங்களினாலும் புஸ்தகங்களினாலும் மாத்திரமல்ல; பாட்டுகளினாலும் அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தார். 1524-ம் வருஷத்திலே 8 பாட்டுகளடங்கிய ஓர் ஞானப்பாட்டுப் புஸ்தகத்தை அச்சிட்டார். இதுதான் ஜர்மானிய பாஷையில் அச்சிடப்பட்ட முதலாம் ஞானப்பாட்டுப் புஸ்தகம். அடுத்தவருஷம் 40 பாட்டுகளாயிற்று. ஜர்மானியா தேசத்தாரின் பக்திவிசுவாசத்தைத் தலைமுறை தலைமுறையாய்ப் பாதுகாத்து வந்த ஞானகீதங்களின் பொக்கிஷசாலைக்கு இதுதான் ஆரம்பமாயிருந்தது.

46-ம் சங்கீதத்தைப் பாட்டாக அமைத்த கீதம் அவர் பாட்டுகளில் பிரதானமானது. அதன் முதற்கவியை அடியில் கண்டிருக்கிறோம்.

பத்திர மாக்கும் பாழிப் பரிசையு மாணக் காப்பும்
சத்திய பரன்தா னென்றுஞ் சகத்தினில் நமக்கே யுள்ளார்
எத்திறத் தீமை வந்தும் இடர்மை யணுகி டாமல்
குத்திர மாகக் காப்பார் குருபரன் என்றுந் தானே.

வருத்தமும் துன்பமும் நிறைந்தகாலங்களில் அவர் மேலாங்தானை அல்லது மற்ற சிநேகிதரைப் பார்த்து "46-ம் சங்கீதத்தைச் சொல்லுவோம்" என்பார்.

பிரசங்கித்தல்.—டூசர் என்பவர் உவிட்டன்பேர்க் கோவிலில் கல்விநிறைந்த ஓர் பிரசங்கம் செய்தார். லூதர் அதன்பின் அவரைப் பார்த்து "உம்முடைய பிரசங்கத்தைக் கேட்டு நான் மிகவும் சந்தோஷப்பட்டேன்; ஆனால் நான் உம்மைவிட நல்ல பிரசங்கி, என் பலவீனம் எனக்குத் தெரியும். உம்மைப்போற் கல்விநிறைந்த பிரசங்கம்செய்ய எனக்குத் தெரியாது. ஆனால் நான் பிரசங்கபீடத்தில் இருக்கும்போது கேட்கவந்திருக்கிற ஜனங்கள் எப்படிப்பட்டவர்கள் என்று பார்த்து அவர்களுக்கு விளங்கத்தக்கவகையாய் பிரசங்கம் செய்வேன். ஒவ்வொருபோதகனும் கேட்கிற ஜனங்கள் எப்படிப்பட்டவர்கள் என்று பார்த்து அவர்களுக்கு விளங்கத்தக்க பிரசங்கஞ் செய்யவேண்டும்; தன் கல்வியைக் காட்டப் பிரயாசப்படக்கூடாது" என்று சொன்னார்.

பிள்ளைகளைக் கட்டாயமாய்ப் படிப்பித்தல்.—லூதர் "ஜனங்கள் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப அதிகாரிகள் அவர்களைக் கட்டாயப்படுத்தவேண்டும். யுத்தகாலத்தில் குடிகள் ஈட்டி துபாக்கி முதலியவைகளை எடுத்துச் சேனையோடு வரச்செய்ய அவர்களுக்கு அதிகாரமில்லையா? இந்த விஷயத்தில் அதைவிட அதிகாரம் செலுத்தலாமே" என்றார். நாகரீகமடைந்த அநேக தேசங்களில் இந்த வழக்கம் பரவிவருகிறது.

லூதரின் குற்றங்கள்:—சிறந்தகுணமுடைய எல்லாப் பெரியோரைப்போலவே அநேக சிறந்த லட்சணங்களுக்கு இடமாயிருந்த லூதரிடத்திற் சில குறைகளுமிருந்தன. அவர் சன்மார்க்க நடக்கை எல்லாராலும் புகழப்படத்தக்கது. அவர் சுபாவதன்மைக்குரிய சில குற்றங்கள் அவரிடத்திலிருந்தன. முற்கோபம், கடுத்துப் பேசுதல் முதலியவைகள்தான் அவரிற் காணப்பட்ட முக்கிய குறைகள்.

மெலாங்தான் லூதரை அடக்கஞ்செய்தபோது செய்த பிரசங்கத்தில் அவருடைய குற்றங்களைப்பற்றி அடியிற்கண்டபடி சொன்னார். "சில நல்லமனிதர் லூதர் அவ்வளவு கடினமானவராயிருந்திருக்கக்கூடாதென்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்டவர்களோடு நான் ஒருவிஷயத்திலும் தர்க்கம் செய்யமாட்டேன். ஆனால் ஏராஸ்மஸ் அடிக்கடி சொன்ன வார்த்தைகளையே சொல்லுவேன். வியாதி இவ்வளவு கடூரமாயிருந்ததினால் தேவன் ஓர் கடினமான வைத்தியரைக் கொடுத்தார்."

**மனச்சாட்சிப்படி உத்தமமாய் நடத்தல்; நீடசிந்தும்.—இவை**



லூதரின் சிறந்த லட்சணங்கள். உண்மையை ஆவலாய் நாடினார்; அதின்படி தனக்குத் தெரிந்தமட்டும் நடந்துவந்தார். அவர் எளியவராயிருந்தும் கோடித்திரவியம் கொடுத்தும் அவரை சும்மாவிருக்கச் சொல்ல முடியாமற்போயிற்று. மனச்சாட்சிக்கு விரோதமாய் நடந்து உலகமேன்மையை அநுபவிப்பதைவிட உலகமேன்மையை அவமதிப்பதே சிறந்தது என்றெண்ணி நடந்தார். சத்தியத்திற்காக ஜீவனையும்விடக் காத்திருந்தார். வோர்ம்ஸ் நகரத்துக்குள் அவர் சென்றால் அவர் பகைஞர் அவரைக் கொன்றுபோடுவார்கள் என்று பயந்து அவரை வரவொட்டாமல் தடைசெய்ய எத்தனித்து ஆள் சொல்லியனுப்பிய ஒரு சிநேகிதனின் வேலைக்காரனைப் பார்த்து, "வோர்ம்ஸ் நகரத்திலிருக்கும் ஓடுகளத்தனை பேய்கள் அந்நகரத்திலிருந்தாலும் நான் அதற்குள் பிரவேசிப்பேன் என்று உன் எஜமானிடத்தில் போய்ச் சொல்" என்றார். ஐரோப்பாவின் மிகுந்த வல்லமையுள்ள சக்கரவர்த்தியும் பிரபுக்களும் கூடியிருந்த சங்கத்தில் அவரை மறுதலிக்கச் சொன்னபோது "இதோ இங்கே நிற்கிறேன். வேறுவிதமாய் ஒன்றும் செய்ய என்னால் முடியாது, கர்த்தர் எனக்குத் துணை நிற்பாராக ஆமென்." என்றார்.

ஜெபவாஞ்சை:—இதுதான் லூதரின் பெலனுக்கு ஆதாரம், தாம் செய்யத்தொடங்கி, நடத்திமுடிக்கும் காரியங்கள் ஒவ்வொன்றையும்பற்றி ஜெபம் செய்வார். ஒரு சிநேகிதர் "நடக்கிறபோதாவது நிற்கிறபோதாவது தம்முடைய கண்களையும் கைகளையும் வானத்துக்குநேரே விசேஷித்தவண்ணமாய் உயர்த்தி ஜெபம் பண்ணினதை நான் அடிக்கடி பார்த்திருக்கிறேன். அடிக்கடி விருந்தாளிகள் மேஜையிலிருக்கும்போது அவர் ஜன்னலண்டை போய்க் கொஞ்சநேரம் தனித்து ஜெபம் செய்வார்" என்று எழுதியிருக்கிறார். ஸ்பிலாத்தினுக்கு லூதர் எழுதிய ஒரு கடிதத்தில் "நான் விசேஷமாய் ஏதையாவது செய்தேன் என்று உமக்கு எழுதுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் ஜெபத்தின் எல்லா வல்லமையோடும், பெருமூச்சுகளினாலும் புலம்புதலினாலும் வானத்தை எட்டிப்பிடித்துத் துன்மார்க்கனான நான், 'தட்டுங்கள், அப்போது உங்களுக்குத் திறக்கப்படும்' என்று சொன்ன அவருடைய வாசலில் தட்டப் பிரயாசப்படுகிறேன்" என்றெழுதினார்.

அவருடைய உத்தம ஊழியக்காரன் அவரைப்பற்றி, "லூதரின் ஆச்சரியமான ஊக்கத்தைப் பார்த்து அவரைப் புகழுகிறேன். இவ்வளவு நிர்ப்பாக்கியமான காலங்களில் எவ்வளவு சந்தோஷமும் விசுவாசமும் நம்பிக்கையும் உடையவராயிருக்கிறார். கர்த்தருடைய வசனத்தை வாசித்து இந்த நற்குணங்களில் நாடோறும் வளருகிறார். படிக்கிறதற்கு மிகவும் வசதியான மூன்றுமணி நேரக்காலத்தை நாடோறும் தவறாமல் ஜெபத்தில் கழிக்கிறார்" என்றெழுதினான்.

ஓர்ம்ஸ் நகரத்து சங்கத்தின்முன் அவர் போகவேண்டிய நாளுக்கு முந்தின ராத்திரியில் அவர் ஓர் மைதானத்திற்போய், அங்கே வானத்திற்கு நேராகக் கண்ணை எடுத்து அடியிற்கண்ட வண்ணமாய் ஜெபித்ததைச் சில சிநேகிதர் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

“கர்த்தாவே! என்னை எல்லா உலக ஞானத்தினின்றும் அறிவினின்றும் விடுதலைசெய்யும். எனக்காக நான் வழக்காடவில்லை. கர்த்தாவே! உமக்காகவே வழக்காடுகிறேன். உம்முடைய வியாச்சியம் நீதியும் நிலைபெற்றதுமாயிருக்கிறது. நான் மனிதன்மேல் நம்பிக்கை வைக்கவில்லை. வாரும் என் கர்த்தாவே! வாரும். இந்த வழக்கு நீதியின் வழக்காதலால் பொறுமையோடு ஓர் ஆட்டுக்குட்டியைப் போல் என் ஜீவனைப் பலிசெலுத்த ஆயத்தமாயிருக்கிறேன். என் ஜீவன் உம்முடையதாதலால் அது உம்மிடத்திலிருந்து ஒருநாளும் பிரியாது. உம்முடைய நாமத்தினால் இப்படித் தீர்மானிக்கிறேன். உலகம் என் மனச்சாட்சியைத் தன் வசப்படுத்தக்கூடாது. என் சரீரம் இதில் அழிந்தாலும் என் ஆத்துமா உம்முடையதாதலால் உம்மோடே என்றைக்கும் தரித்திருக்கும்.”

**லூதரின் பெரிய உபதேசம்.**—ரோமான் சபையின் அநேக தவறுகளை எடுத்துக்காட்டியதில் கிறிஸ்தவசபைக்கு அவர் செய்த பெரிதான ஊழியம் ஒன்றுண்டு. அதாவது நம்முடைய சொந்தக் கிரியைகளினாலாவது புண்ணியங்களினாலாவது நாம் இரட்சிக்கப்படாமல் விசுவாசத்தினால், இயேசுகிறிஸ்துவை நம்பும் நம்பிக்கையினால், இரட்சிக்கப்படுகிறோம் என்று அவர் ஸ்தாபித்த உபதேசமே.

இந்துமார்க்கம் மனுஷன் தன் கர்மத்துக்குத் தக்கதாய் நல்ல பலனை அல்லது தண்டனையை அடைகிறான் என்று போதிக்கிறது. பிரமதேவன் முதலாய் இதை மாற்ற சக்தியற்றிருக்கிறார். ஞானத்தினால் மனிதன் இரட்சிப்படைகிறான் என்று போதிக்கிறது. ஞானம் தேவனுடையதல்ல. மனுஷன் அதைத் தனக்காகச் சம்பாதித்துக்கொள்ளுகிறான். மகம்மதியர் தர்மஞ்செய்வதினாலும் ஜெபஞ் செய்வதினாலும், யாத்திரை செய்வதினாலும் இரட்சிப்படையலாமென்றெண்ணுகிறார்கள். லூதருடைய காலத்தில் கிறிஸ்துமார்க்கத்தின் சிறந்த போதனையை ரோமான்சபை மயக்கச் செய்ததுமல்லாமல், ஜனங்கள் கொடுக்கும் பொருளைப்பெற்ற குருமார் சொல்லும் ஜெபங்களினாலும் மனிதர் மோட்சம் போகலாமென்று போதித்தது.

மெய்க்கிறிஸ்தவன் தன் இரட்சிப்புக்குக் கிறிஸ்துவையே நம்புகிறான். தன் நன்னடத்தையை நம்புகிறதில்லை. “கர்த்தாவே! நான் மாண்டுபோகிறேன் என்னை இரட்சியும்” என்று கெஞ்சுவான்.



இலவசமாய் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுவது மனுஷனுடைய பெருமைக்கு ஊனம்போல் தோன்றுகிறது. கொஞ்சமாகிலும் நற்கிரியைகளைச் செய்து அதைப் பெற்றுக்கொள்ளலாமென்று, அல்லது அதற்கு தன்னைத் தகுதியாக்கிக்கொள்ளலாமென்று எண்ணுகிறான். இந்த உபதேசம் தாழ்மையைப் போதித்து அன்பை எழுப்பிவிடுகிறது. ஒருவன் தன் உயிரைக் கொடுத்து நம்முடைய உயிரை இரட்சித்தால் நாம் நன்றியறிதலுள்ளவர்களாயிருக்கமாட்டோமா?

சிலர் கிறிஸ்துவின் மூலமாய் இரட்சிப்பு இலவசமாய்க் கிடைக்கும் என்று போதிப்பது அநேகரைப் பாவஞ்செய்யத் தூண்டிவிடும் என்றெண்ணுகிறார்கள். கீழ்ப்படிதலுக்குப் புண்ணியத்தின் உபதேசம் அவசியம் என்று நினைக்கிறார்கள். ஆனால் மெய்யாய் நேசிக்கும் நேசம் எல்லா ஏதுக்களிலும் பலமானது. கூலிக்காக வேலைசெய்யும் கூலியாளிலும், அடிக்குப் பயந்து ஊழியஞ்செய்யும் அடிமையிலும், பெற்றதாய் அன்பினால் தன் பிள்ளையை அதிக கவலையாய்ப் பராமரிக்கிறாளல்லவா?

## 22. இந்தியாவில் சீர்திருத்தம் அவசியம்.

கேஷப் சண்டர் சென் என்பவர் முதல் முதல் வங்கத்தோடு ஊழியஞ் செய்தகாலத்தில் இந்தியாவின் வாலிபருக்கு செய்யும் விண்ணப்பம் என்று ஓர் புஸ்தகம் பிரசுரஞ்செய்தார். அதில் இந்தியாவில் சீர்திருத்தம் அவசியம் என்று தெளிவாய்க் காட்டியிருக்கிறார். அந்நியரின் வார்த்தைகளைவிட இத்தேசத்தாராகிய அவர் வார்த்தைகள் அதிக பலமுள்ளவையென்றெண்ணி அதிலிருந்து சில விஷயங்களை இங்கே எடுத்தெழுதுகிறோம் ;—

**இந்தியாவில் நடக்கும் மாறுதல்கள்.**—“நம்முடைய ஜனனதேசமாகிய இந்தியா பெரிய தேசம். ஜாதிகளுக்குள் உயர்ந்த ஸ்தானத்திலிருக்கத் தகுந்தது. நாமிருக்கும் இந்தக் காலமும் முக்கியமானகாலம். சுதேசிகளுக்குள்ளே அநேக மாறுதல்கள் நடக்கின்றன. இந்த இருகாரியங்களையும் நாம் சிந்தித்துப் பார்க்கும்போது பலவகையாய் முயற்சிக்க ஏவப்படுகிறோம். இந்தியாவில் பிறந்து, இந்நாட்டின் சுதேசிகளாய் இருக்கிற நாம், நம்மைச் சுற்றிலுமிருக்கிறவைகளையும் நடக்கிறவைகளையும் விசேஷித்த கவலையோடு பாராமலிருப்பது அதிசயம். எல்லாப் பக்கங்களிலும் பெரிய மாறுதல்கள் நடக்கின்றன. சுதேசிகளின் ஒவ்வொரு கூட்டத்திலும் அநேக ஆச்சரியமான மாறுதல்கள் நடந்துவருகின்றன. எண்ணங்களும்

விருப்பங்களும் மாறுகின்றன; வழக்கங்களும் ஆசாரங்களும் மாறுகின்றன; பழைய ஏற்பாடுகள் புதியவைகளுக்கு இடங்கொடுக்கின்றன; புதுவிதமான காரியங்களை விரும்பவும் செய்யவும் பிரயாசப்படுகிறோம். நம்முடைய உடை நடை பாவனைகளிலும் மாறுதலிருக்கிறது. ஐரோப்பியரின் நாகரீகமும் அறிவும் இந்நாள்களுள் கிரியை செய்து, சில இடத்தில் வெளியரங்கமாயும் சிலவிடத்தில் அந்தரங்கமாயும், நம்மை முழுவதும் மாற்றி, மறு உருவாக்கி, வேறுபடச் செய்கின்றன. இவ்வளவு பிரமாண்டமான மாறுதல்கள் நடக்கும்போது நீங்கள் பார்த்தும் பாராதவர்கள்போல நிற்கலாமா? நீங்கள் அதைப் பார்க்கும்போது உங்கள் தேசத்தின் பின்னிலைமையை நினைத்து உங்கள் மனதில் இருக்க கவலையுண்டாகவில்லையா?"

இந்துக்களின் பல வகுப்புகள்.—"இவ்விதமாய் எவ்விடத்திலும் மாறுதல்கள் நடக்கும்போது நாமெல்லோரும் இம்மாறுதல்களுக்கு ஆயத்தப்பட்டவர்களாய், நம்முடைய கடமைகளைத் தைரியமாய் நிறைவேற்றவேண்டும். அன்னியத்தைநாடி, சோம்பலினாலாவது, கவலையீனத்தினாலாவது, பயத்தினாலாவது தங்கள் கடமையைச் செய்யாமல் விடுகிறவர்கள் தங்களையும் தங்கள் சந்ததியாரையும் நிர்ப்பாக்கியத்துக்குள்ளாக்குவார்களென்பது நிச்சயம். அறியாமை விக்கிரகபக்தி முதலிய பூர்வகாலத்துத் தவறுகளில் நிலைத்து சுகமேயிருக்கலாமென்று நினைக்கிறவர்கள் தாங்கள் நம்பிய இந்த வீணான காரியங்களெல்லாம் அறிவும் தேர்ச்சியும் தோன்றும்போது நாசமாய்ப் போவதைப் பார்த்து புலம்புவார்கள். வைதீகம் என்னும் பலத்த கோட்டையில் பயமின்றி இருக்கலாம் என்று நினைக்கிறவர்கள், சத்தியத்தின் வீரர் கோட்டையின் கொத்தளங்களைத் தகர்த்து, உள்ளே புகுந்து தங்களைக் கீழ்ப்படுத்தி வெட்கப்படுத்துவார்களென்று எல்லாம் முடிந்தபின் தான் அறிவார்கள். அறிவாளிகளாயிருந்தும் உபத்திரவத்திற்குப் பயந்து, மாய்மால வேஷந் தரித்து இருதயமும் இல்லாமல் அலைகிறவர்கள் தங்கள்மேல் நிந்தையும் துன்பத்தையும் கொண்டுவருகிறதுமல்லாமல், தங்கள் சந்ததியாருக்கும் பாவம், வருத்தம் என்னும் சாபங்களைப் பின் வைத்துப்போவார்கள்...... ஆனால், மனச்சாட்சிக்கும் தைரியத்துக்கும் கீழ்ப்படிந்து, தப்பெண்ணங்களுக்கும் கெடுதியான காரியங்களுக்கும் விரோதமாய்த் தைரியமாய்ப் போர்செய்து, நன்மையானவற்றைத் தடையின்றி பின்சென்று, தீவினையைத் தடையின்றி விலக்கி, தங்களிலும் தங்கள் குடும்பத்திலும் தங்கள் தேசத்திலுமிருக்கும் கேடுகளைச் சீர்திருத்தஞ் செய்ய நாடுகிறவர்கள் வருத்தமான இந்த சோதனையில் சேதப்படாமல் தப்புவார்கள்; மகிமையும் ஆசீர்வாதமும் நிறைந்தவர்களாய், தங்கள் தேசத்திற்கு உண்மையையும், சுயாதீனத்தையும் பேரின்பத்தையும் கொண்டுவருகிறவர்களாயிருப்பார்கள்."



இந்தியாவின் வாலிபருக்கு விண்ணப்பம்.—"இம்மாறுதல்கள் நடக்குங்காலத்தில் இந்தியாவின் நன்மையை விரும்பும் யாவரும் இத்தேசத்திலிருக்கும் குறைகளை நிவிர்த்திசெய்து, இத்தேசத்தாரின் வருத்தங்களை நீக்கி, இத்தேசத்திற்கு வரும் மோசங்களை விலக்கி, சன்மார்க்க வழிகளில் இத்தேசத்தை நடத்துவது கடமை. இப்பொழுது அறிவில் தேறி முன்னுக்குவரும் சந்ததியாராகிய இந்தியாவின் வாலிபர்தான் இவ்வளவு கடினமும் முக்கியமுமான வேலையைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவின் தற்கால நிலைமை.—'வழக்கங்களினால் கட்டுப்பட்டு, சுயாதீனமற்றவர்களாய், அறிவீனரும் ஞானமற்றவர்களுமான குருக்களால் ஆளப்பட்டு, நல்லெண்ணங்களையும் நன்னோக்கங்களையும் வழக்கம் என்னும் பெருங்கல்லின்கீழ் வைத்து நசுக்கியிருக்கிற நீங்கள் உங்களைத்தானே சற்று உற்றுப்பாருங்கள். சுயசித்தம் சுய எண்ணம் இன்னதென்றறியாத அடிமைகளைப்போல், வெளியிலிருக்கும் உலகத்தை அறியாது, அந்தப்புரத்தின் உள்ளறைகளில் அடைபட்டிருக்கும் உங்கள் தாய்மாரையும், சகோதரிகளையும், உங்கள் குடும்பங்களையும் நோக்கிப்பாருங்கள். உங்களுடைய வழக்கங்களையும் உங்கள் ஆசாரங்களையும், உங்களைப் பலவீனப்படுத்தி, கெடுத்து கீழ்ப்படுத்தும் சாபங்களையும், பாருங்கள். நாடோறும் உங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாய் உங்களை மாய்மாலம் செய்வதற்கு ஏவிவிட்டு உங்கள் மெய்யான இன்பத்திற்கும் தேர்ச்சிக்கும் விரோதமாய் நிற்கும் பல காரியங்களையும் நினைத்துப் பாருங்கள். நீங்கள் பகைத்து அருவருத்து, நகைத்து, வேண்டாமென்று சொல்லத்தகும் காரியங்களால் எப்பக்கத்திலும் சூழப்பட்டிருக்கிறீர்களென்றும், உங்கள் ஆத்துமாக்களை அழுத்துகிறவைகள், உங்களைக் கஷ்டப்படுத்தி உங்கள் ஆத்துமாவை கசக்கப்பண்ணி உங்கள் சரீரத்திற்கு வருத்தத்தையும், புத்திக்கு கேட்டையும் ஆத்துமாவுக்கு சாவையும் கொடுக்கின்றனவென்றும் உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் வெட்கப்படுகிற சில பயங்கரமான வழக்கங்கள் உங்களிடத்தில் இல்லையா? அவைகளிலிருந்து உடனே விடுதலையாகவேண்டுமென்று நீங்கள் அடிக்கடி வாஞ்சித்துப் பெருமூச்சு விடுகிறதில்லையா? நீங்கள் நாடோறும் வீட்டிலும் கூட்டங்களிலும் செய்யவேண்டிய சடங்குகள், கல்வி நிறைந்த உங்கள் எண்ணங்களுக்கும், நாகரீகமான உங்கள் விருப்பங்களுக்கும் எதிராயிருக்கவில்லையா? இத்துர்மார்க்கம் ஆத்துமாவுக்கும், சரீரத்துக்கும், செய்துவரும் கெடுதிகளையும் நிர்ப்பாக்கியத்தையும் நீங்கள் பார்த்து, நீங்களும் உங்கள் தேசத்தவரும் அனுபவிக்கும் வருத்தத்திற்காக மனங்கசந்து இரகசியமாய் அழவில்லையா?'

**சீர்திருத்தக்காரருக்கு இருக்கவேண்டிய இலட்சணங்கள்.**— "தன் கடமையைச் செய்யவேண்டுமென்று உறுதியாய் எண்ண வேண்டியது சீர்திருத்தத்திற்கெல்லாம் ஆதாரமாயிருக்கவேண்டும். வெறுத்த எண்ணத்தோடாவது சீர்திருத்தஞ்செய்யப் பிரயாசப்படுவது கெடுதி. ஊக்கத்தோடு சன்மார்க்கத்திற்காக ஊழியஞ்செய்யாவிட்டாற் பயன் ஒன்றுமிராது. ஊக்கந்தான் சீர்திருத்தக்காரனுக்குத் தைரியத்தையும், உறுதியான தீர்மானத்தையும், எவருக்கும் அஞ்சாத சத்திய நடத்தையையும் கொடுக்கும். ஊக்கம் இருந்தாற் கேடுகளைப் பயமின்றி வெளியரங்கமாய் எதிர்க்கலாம். தேவனுக்குத்தான் உக்கிராணக்கணக்கு கொடுக்கவேண்டுமென்று அவன் எண்ணுகிறதினால் தன் கடமையை நெகிழவிடமாட்டான். மனிதரைப் பிரியப்படுத்த உண்மையை விட்டுவிடவுமாட்டான்."

"தங்கள் தேசத்தில் சீர்திருத்தம் செய்ய விரும்புகிறவர்கள் தங்களைத்தானே முதலிற் சீர்திருத்தவேண்டும். மற்றவர்களை அனைப்படுத்துவதற்கு நன்மாதிரி நல்ல சாதனமாயிருக்கிறது. ஆனால் மேய்மாலக் காரரின் போதனை வெகு சாதுரியமாயிருந்தாலும் உண்மையைத் தடுக்குமே யன்றிப் பரவச்செய்யாது.... மற்றவர்கள் தனக்குப் பாதையை செவ்வைபண்ணுமட்டும் ஒன்றும் செய்யக்கூடாதென்று ஒவ்வொருவரும் காத்திருந்தால், தொடங்குகிறது யார்? பிரசங்கம்மாத்திரம் செய்து இந்தியாவை உயர்த்த அல்லது புதுப்பிக்கக்கூடும் என்றெண்ணுவது விருதா. 'நாங்கள் செய்கிறபடி செய்யுங்கள்' என்று சொல்லத்தகும் உண்மையும், உத்தமமும், தைரியமும் உள்ள சீர்திருத்தக்காரரே அந்த வேலையைச் செய்யலாம்."

சீர்திருத்தக்காரரின் பாதை முள்ளுள்ளதாதலால் அந்தப் பாதையில் நடக்கிறவர்கள் துன்பமாகிய முட்களுக்கு ஆயத்தப்பட்டிருக்கவேண்டும்; சீர்திருத்தம் செய்வதற்கு ராஜபாதை யொன்றுமில்லை."

**இந்துக்களுக்குள்ளிருக்கும் முக்கிய-கேடுகள்.**—இவை நான்கு வகைப்படும்.

1. **விக்கிரகபக்தி.**—"இந்துக்களைக் கெடுக்கும் எல்லாக் கேடுகளுக்கும் வேரும், அவர்களைத் தாழ்த்துவதற்குக் காரணமுமாயிருப்பது விக்கிரகாராதனைதான் என்பதற்கு ஐயமேயில்லை. விக்கிரகாராதனை இந்தியாவின் சாபம்; சுதேசிகளின் உயிரைக் கெடுக்கும் விஷப்பிசாசு. விக்கிரகாராதனையை நம்புகிறீர்களென்றும் உங்கள் இருதயத்தில் இந்துமார்க்க தேவர்களுக்கும் தேவதைகளுக்கும் பயபக்தி இருக்கிறதென்றும், உங்கள் முன்னோரின் மார்க்கத்திலிருக்கும் கணக்கற்ற புத்தியீனமான காரியங்களை நம்புகிறீர்களென்றும் சொல்வது, நீங்கள் கற்ற கல்விக்கு அவமானமாயிருக்-



கும். ஆனால் உங்கள் முன்னோரின் விக்கிரகாராதனை உங்கள் புத்திக்கு விரோதமாயும் உங்கள் நல்லெண்ணத்துக்கு அருவருப்பாயுமிருந்தாலும், சன்மார்க்க விஷயமாய் அது கொடியது என்று உங்களுக்குத் தெரியவில்லை. விக்கிரகாராதனையை நம்பாமல் அவிசுவாசத்தை மாத்திரம் உங்கள் மனதில் வைத்துக்கொள்ளுவது போதாது. அது கொடிய பாவமும் அருவருப்புமென்றெண்ணி அதிலிருந்து விலகவேண்டும். அசுத்தமான காரியம் என்று சொல்லி அதைத் தள்ளிவிடவேண்டும். அதை சட்டைபண்ணாமல், அதை ஒருவரும் நம்பமாட்டாமல் எதிர்த்து, தேசத்தைவிட்டு துரத்த வேண்டியது உங்கள் கடமை. உங்கள் ஆத்துமாக்களுக்காகவும், உங்கள் தேசத்தாரான பதினாயிரக்கணக்கான ஜனங்களின் ஆத்துமாக்களுக்காகவும், அருவருக்கப்படத்தக்க விக்கிரகாராதனையிலிருந்து விலகியோடுங்கள். நம்மை உண்டாக்கி காப்பாற்றி, நம்மை ஆண்டு நடத்தும் மகத்துவமுள்ள மெய்யான கடவுளை விசுவாசத்தினால் மாத்திரமல்ல, உங்கள் உடைய சகல செய்கைகளிலும் ஊழியங்களிலும் உங்கள் ஆண்டவராகக் கொள்ளுங்கள். அப்படி செய்வதாய், அக்கம் பக்கம் சாயாமல் அவருக்கு நீங்கள் கீழ்ப்படிந்து, அவருக்கு உங்களை முழுவதும் ஒப்புக்கொடுத்தால், உங்கள் மனச்சாட்சியைப் பாவத்தினின்றும் கறையினின்றும், உங்கள் தேசத்தை விக்கிரகபக்தி, குருக்கள் மோசம், கெட்ட புத்தியீனமான வழக்கங்கள், பயங்கரமான வழக்கங்கள் முதலியவற்றினின்றும் விடுவிப்பீர்கள். இந்து மார்க்கத்திற்கு விரோதமாய் நீங்கள் தைரியமாய் போர்செய்தால் சகல கேட்டுக்கும் காரணத்தை அடியோடே வெட்டுவீர்கள்."

2. **ஜாதி வித்தியாசம்.**—"விக்கிரகாராதனைக்கு அடுத்து அதோடு சம்பந்தப்பட்டு நிற்கும் ஒரு பெரிய கேடு ஜாதி வித்தியாசம். விக்கிரகாராதனைக்கு விரோதமாய்த் தைரியத்தோடும் முழுமனதோடும் யுத்தஞ்செய்கிறதுபோல இதற்கு விரோதமாயும் போர்புரியவேண்டும். இந்துமார்க்கத்திலிருக்கும் ஜாதி வித்தியாசம் ஜனங்களுக்கு ஒரு பெரிய வாதனை என்பதை ஒருவரும் எதிர்சொல்லமாட்டார்கள். அது ஜனங்களுக்குள்ளிருக்கும் ஐக்கியத்தையும் ஒருமையையும் சமாதானத்தையும் முற்றிலுங் கெடுத்துப் போட்டதுமல்லாமல் பல நூற்றாண்டுகளாய் ஜனங்களின் தேர்ச்சியையும் கெடுத்துவருகிறது. ஆனால் சிலர், ஜனங்களுக்குள் அது அந்தஸ்துவிதமாய் அதிக கெடுதி செய்யாமல், மார்க்கவிதமாய்த்தான் அதிக கெடுதி செய்கிறது என்று எண்ணுகிறார்கள். அந்தஸ்து விஷயமாய் மகாமூடத்தனமான பிரிவுசெய்வதால், இது கேடுள்ளதுதான். ஆனால் மார்க்கவிஷயமாய் நாம் இதை கவனிக்கும்போது, மனச்சாட்சிக்கு விரோதமாயும், மனுஷத்தன்மைக்கு இகழ்ச்சியாயுமிருக்கிறது. மனுஷரென்று நமக்கிருக்கும் சன்மார்க்க எண்-

னங்களெல்லாம் சேர்ந்து இதைத் தாவித்து, உடனே நிர்மூலமாக்கக் காத்திருக்கின்றன. இத்தாம்ப விக்கிரகாராதனைக்கும், பிராமணரின் குருத்துவத்துக்கும் ஜாதி வித்தியாசம் பலத்த ஆதாரமும் துணையுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் சகோதரர் என்று கடவுள் ஏற்படுத்திய கட்டளையை அக்கிரமமாயும் பரிசுத்தவீனமாயும் தவிர்க்கிறது. முதலில் தேச ஒழுங்குக்காக செய்யப்பட்ட வித்தியாசங்களைக் கடவுளால் செய்யப்பட்ட வித்தியாசங்களென்று சொல்லி, பரிசுத்தராகிய தேவனின் நாமத்தைக்கொண்டு, அவருடைய பிள்ளைகளுக்குள் பகையையும் அக்கிரமத்தையும் விதைக்கிறது. ஜனங்களின் ஒரு பாகத்தாரை மற்றவர்களுக்கு மேலாக உயர்த்துகிறது. அவர்களுக்கு கடவுளின்பேரால் கல்வி, மார்க்க அறிவு, அந்தஸ்து முதலிய சலாக்கியங்களை அருளி, நிர்ப்பாக்கியமான உதவியற்ற பதினாயிரக்கணக்கான ஜனங்கள்மேல் அவர்களுக்குச் சர்வ அதிகாரமும் கொடுத்து அந்த ஜனங்களை அவர்கள் கால்களின் கீழ் நசுக்கவும் நிர்ப்பாக்கியமாய் அடிமைப்படுத்தவும் காரணமாயிருக்கிறது. பிராமணரை தேவனுடைய பிரதிநிதிகளாக்கி ஜனத்தில் பெருகியான மற்றவர்களையோ, இழிவும் அசுத்தமுமான ஜாதியாகவும், மனுஷரென்னும் பேருக்குத் தகாதவர்களாகவும், மோட்சத்திற்குப் பாத்திரரல்லாதவர்களாகவும் ஆக்குகிறது. இவ்விதமான கொடுங்கோல சாட்சியையும், அருவருக்கப்படத்தக்க அடிமைத்தனத்தையும், கடவுள் அதிகாரக்கொள்ளையையும் யார்தான் சகிப்பார்? என் தேசத்தவர்களே! விக்கிரகாராதனையை வெறுத்து மெய்யான கடவுளின் பரம கொடியின்கீழ் சேர்கிறவர்களுக்கு உங்கள் அறிவுக்கும் ஞானத்திற்கு மேற்ற ஓர் புதிய சகோதரக் கூட்டத்தை நீங்கள் ஏற்படுத்த வேண்டும். இந்தக் கூட்டத்திலிருந்து ஜாதி வித்தியாசத்தை நீக்கித் தள்ளவேண்டும். அப்பொழுதுதான் பிராமணனும் சூத்திரனும் எல்லாரும் சத்தியத்தைப் பற்றிக்கொண்டு, தடையில்லாமல் தங்கள் பிறப்பின் சுதந்தரமாகிய மார்க்க சுயாதீனம், தேர்ச்சி, சமாதானம் என்னும் ஆசீர்வாதங்களைத் தடையில்லாமல் அநுபவிப்பார்கள். விக்கிரகாராதனையைத் தள்ளிவிட்டு மெய்த்தேவனின் வணக்கத்தை நாடுங்கள். ஜாதி வித்தியாசம் என்னும் துன்மார்க்கத்தைக் கொன்று உங்கள் புத்திக்கேற்றதாய் உங்கள் தேசத்தாரெல்லாருக்கும் ஓர் மார்க்கக் கூட்டத்தை உண்டுபண்ணுங்கள்."

3. கலியாண வழக்கங்கள்.—"நம்முடைய கலியாணச் சடங்குகளில் சீர்திருத்தமாகவேண்டிய அநேக கெடுதிகள் இருக்கின்றன. அவைகள் சன்மார்க்கத்திற்கும் புத்திக்கும் விரோதமாயிருக்கிறதுமல்லாமல் நம்முடைய தேசத்தார் தேசபலனற்றவர்களாய்ப் போவதற்கு ஒரு முக்கிய காரணமாயுமிருக்கிறது. இதனாலுண்டாகும் கெடுதிகளில் முக்கியமானது பல ஸ்திரீகளை மணஞ்செய்வது



தான். அநேக பெண்களைக் கலியாணம் செய்து அவ்விதமாய் மனிதர் பணங்கொடுத்துப் பரிசுத்த விவாகத்தை ஓர் வியாபாரமாக்கிப் போடுகிறார்கள். எண்பது வயதுள்ள மனிதன் ஒன்பது வயதுகூட இல்லாத பெண்ணை விவாகஞ்செய்கிறான். இந்த வழக்கத்தினால் அநேகர் புருஷனையறியாத கன்னிகைகளாய், அல்லது விதவைகளாயிருக்க நேரிடுகிறது. அவர்கள் துன்மார்க்கமாய் நடந்து கலியாணத்தைச் சாபமாக்கிப்போடுகிறார்கள். குழந்தைகள் விவாகத்தினாலுண்டாகிற கெடுதியும் கொஞ்சமல்ல. அது இத்தேசத்தாரின் சுகத்தைக் கெடுத்து, புருஷர் ஸ்திரீகளுக்கென்று நியமிக்கப்பட்ட மெய்யான விவாக சம்பந்தத்துக்கு இடையூறாயிருக்கிறதென்று அனுபோகத்தினால் அறிகிறோம். விதவைகள் விவாகஞ்செய்யக் கூடாதென்று அவர்களைத் தடுப்பது ஓர் குரூர ஏற்பாடு. இந்த விதவைகள் மோட்சம் பெறவேண்டுமானால் அனந்த தவசுகளும் தவங்களும் செய்யவேண்டும். மனச்சாட்சி என்று ஒன்றில்லாவிட்டாலும் நம்முடைய தேசத்தார் இந்த குரூர வழக்கத்திற்கு விரோதமாய் எழும்பவேண்டும். ஜாதிக்குள்ளேயே கலியாணம் பண்ணவேண்டுமென்றும், அதிலும் அந்தந்த உட்பிரிவுகளுக்குள்ளேயே தான் பண்ணவேண்டுமென்றும் விதித்திருக்கும் அனர்த்தமான சட்டங்கள், தன்னிலேயே கெடுதியான ஜாதி வித்தியாசத்தை ஸ்தாபிக்கிறதுமல்லாமல், ஜனப்பெருக்கையும் கெடுக்கிறது. இவ்வழக்கங்களை கொஞ்சமாய் நிறுத்திவிட்டு, இந்தியாவின் பற்பல ஜாதிக்காரரும் பாஷைக்காரரும் ஒருவரோடொருவர் கலந்து விவாகம் செய்துகொள்ளும் நிலைமைக்கு வந்தால்தான் குடும்பபாக்கியம் உண்டாகும்."

4. அந்தப்புரத்தில் சீர்திருத்தம்.—"இந்த விஷயத்தைப்பற்றி அதிகமாய்ச் சொல்லவேண்டியதில்லை; நீங்கள் உங்கள் பெண்சாதிமாரும் சகோதரிகளும் தாய்மாரும் பெண்மக்களும் இருக்கும் நிர்ப்பாக்கியத்தைப் பார்த்தும், உங்கள் வீடுகளிலிருக்கும் ஈனத்தைக் கவனித்தும் வருகிறீர்களே. நம்முடைய பெண்கள் வீட்டு அடிமைகளாய், அறிவீனத்துக்கும் விஷயத்திற்கும் உட்பட்டு ஒன்றுக்கும் உதவாதவர்களாய் இந்த இழிவான நிலைமையிலிருக்குமட்டும் நம்முடைய தேசத்தின் சீர்திருத்தம் நன்றாய் நடக்கமாட்டாது. பெண்களின் புத்தி நன்மை அல்லது தீமையைப் பரம்பச்செய்யப் பலமுள்ளது. எவ்வளவுதான் சீர்திருத்தம் செய்ய நாம் பிரயத்தனித்தும், அவர்கள் மனதில் தப்பிதங்களும் தவறுகளும் இருந்தால் அவைகள் தலைமுறை தலைமுறைக்கும் நிலைத்திருக்கும். ஆனால் அவர்களுக்குக் கல்வியும் நாகரீகமும் வந்தால், அவர்களைப்போலச் சத்தியத்தைப் பரவச்செய்யக் கூடியவர் ஒருவருமில்லை. தேசத்தை நாகரீகமுடையதாக்கப் பள்ளிக்கூடங்கள் வித்தியாசாலைகளில் செய்

யுக் பிரயத்தனங்களைவிட, கல்விகற்று, தங்கள் கடமையை நிறைவேற்றப் பிரயாசப்படும் தாய்மார் செய்யும் கிரியைகள் அதிக பலனுள்ளவையாயிருக்கும். நாம் சுயபிரயோஜனத்தைக் கருதாவிடினும், நமக்குக் கிடைத்த ஆசீர்வாதமாகிய கல்வியை நம்முடைய மனைவிகளுக்கும் சகோதரிகளுக்கும் பகிர்ந்துகொடுப்பது நீதியும் நியாயமுமாயிருக்கிறது. அவர்களைச் சமைக்கும் புறம்பானவர்கள் போல நடத்தவும், நம்மைப்போல அழியாத உத்தரவாதமுஞ் செய்யவேண்டிய ஆத்துமாக்களை உடைய கடவுளின் புத்திரிகளாகிய அவர்கள் பெற்றுக்கொள்ளவேண்டிய அருமையான கல்வியை மறுக்க உங்களுக்கு அதிகாரமேயில்லை. அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு நீதியைச் சரிக்கட்டி, அறியாமை வீணபக்தி என்னும் இவைகளையும் இவைகளைச்சேர்ந்த கேடுகளையும் அவைகளைவிட்டு நீக்கவேண்டும். உயர்ந்த கல்வியின் மூலமாய் அவர்கள் புத்தியைப் பிரகாசிப்பித்து, கற்று சன்மார்க்கராயிருக்கும் தோழரோடு அவர்கள் சகவாசஞ்செய்யப் பழக்குவியுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் காலேயும் ஒன்றான மெய்த்தேவனை நீங்கள் வணங்கும்போது உங்களோடு சேர்ந்து ஜெபம் செய்யச்சொல்லுங்கள். நம்முடைய தேசத்து ஆண்களும் பெண்களும் ஒருமித்து சன்மார்க்கத்திலும் கல்வியிலும் தேர்ச்சியடைவார்களென்றும், நம்முடைய தேசாசாரச் சடங்குகள் திருத்தியவுடன்போது, தேசத்தின் செல்வத்திற்கும் மேன்மைக்கும் ஆதாரமாய், கற்றுத் தேர்ந்து பாக்கியமுள்ள குடும்பங்கள் அதிகப்படும் என்றும் நம்புகிறேன்.”

1868-ம் வருஷம் பம்பாய் நகரத்தில் அவர் செய்த உபந்நியாசத்தில் சீர்திருத்தம் எங்கிருந்து ஆரம்பிக்கவேண்டுமென்று சொன்னார்.

“ இன்றைக்கு சாயங்காலம் நீங்கள் எவ்விதமான சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று சொல்லப்போகிறேன் என்று நினைக்கிறீர்கள்? அரைமணநேரத்தோடு செய்யும் கிரியைகளல்ல. இந்தக் கூட்டத்தாருக்குப்படிப்பிக்கவேண்டும் அல்லது அந்தக்கேட்டை விர்த்தியாக்கவேண்டுமென்று நான் சொல்லுகிறதில்லை. இப்படி செய்வதினால் இந்தியா முழுவதையும் விக்கிரகாராதனை முதலிய கேடுகளிலிருந்து நீக்கிவிடலாமென்றெண்ணுவது விருதா. இந்தத் தேசத்தை உயிர்ப்பிக்க விரும்பினீர்களானால் மார்க்கத்தை ஆதாரமாய்க்கொண்டு சீர்திருத்தம் செய்யவேண்டும். நான் இந்த தேசத்தைச் சீர்திருத்தத் தலைப்பட்டால் கொம்புகளை வெட்டாமல் விக்கிரகாராதனை என்னும் அடிமரத்தை வெட்டுவேன். இந்துதேசத்திலிருக்கும் கேடுகளில் நூற்றில் தொண்ணூற்றெட்டு விக்கிரகாராதனை வீணபக்தி என்னும் இவைகளிலிருந்து உண்டாகின்றன.

- 125 -

64



இத்தேசத்தில் சீர்திருத்தம் அடையவேண்டிய காரியங்களெல்லாம் மார்க்க சீர்திருத்தம் என்னும் பெரிய சீர்திருத்தத்தில் அடங்கியிருக்கிறது. அப்படிச் செய்தீர்களானால் தேசத்தில் நடக்கவேண்டிய சீர்திருத்தங்கள் நமக்கு பிரயோஜனத்தை உண்டாக்குமோ என்று நீங்கள் எண்ணாமல், இவைகள் சன்மார்க்கத்துக்கு மிகவும் அவசியமானவை என்றும், அப்படிச் சீர்திருத்தம் செய்வது உங்கள் மேல் விழுந்த கடமை என்றும் எண்ணுவீர்கள்.”

## 23. இந்தியாவை சீர்திருத்தம் செய்வதற்கு வழி வகைகள்.

இதைப்பற்றி சில காரியங்களை இங்கே சொல்லுவோம்.

சீர்திருத்தம் அவசியம் என்பதை நன்றாய் உணரவேண்டும்.— ஒரு காரியத்தை நன்றாய் அறியாதிருந்தால் அதின்மேல் நமக்கு நோக்கமிராது. இந்தியாவில் அவசியமாய் நடக்கவேண்டும் என்று கேசுப் சண்டர்சென் சொல்லிய காரியங்கள் மனதில் நன்றாய் பதியவேண்டும். அப்படிச் சீர்திருத்தம் செய்தால் அது எத்தனை பிரயோஜனங்களுக்கு நன்மையை உண்டாக்கும் என்று உணரவேண்டும். விசேஷமாய் இப்புஸ்தகத்தை வாசிக்கிறவர்கள் தங்களிலே தானே என்ன காரியங்களைச் சீர்திருத்தலாமென்று கண்டுபிடித்து அதைச் செய்யத்துவக்கவேண்டும்.

கடமைகளைச் செய்யப் பெலன்.—மனிதன் பலவீனனாயிருப்பதால் சோதனைக்குட்படுவது மிகவும் இயல்பு. சீர்திருத்தத்திற்கு விரோதமாய் அநேக பலத்த தடைகளிருக்கின்றன. ஒருகாலத்தில் தங்கள் தேசத்திற்கு நன்மைசெய்ய வேண்டுமென்றிருந்த அநேக வாலிபர், தங்களைச் சுற்றியிருக்கும் வஞ்சகங்களுக்குட்பட்டு ஏனோதானோ என்று கவலையற்றுப்போகிறார்கள். அவர்கள் மற்றவர்களுடைய எண்ணங்களுக்குத் தக்கதாய் செத்த மீன் மிதக்கிறதுபோல இங்குமங்கும் அலைந்து திரிகிறார்கள்.

கரடுமுரடான பாதையில் நடக்கும் குழந்தையைத் தகப்பன் கையைப் பிடித்து நடத்துவதுபோல நம்மையும் ஒருவர் நடத்தி ஆதரிக்கவேண்டும். அந்த ஆதரவை நாம் விட்டுவிட்டால் விழுந்துவிடுவோம். தேவனுடைய பிதாவானவர் நம்மை நேசித்து நம்மேல் பரிதாபப்படுகிறார். நமக்கு உதவிசெய்ய அவர் கரம் நீட்டப்பட்டிருக்கிறது. நாம் அதை எட்டிப்பிடித்து சுகபத்திரமாய் நடப்போமாக.

லூதரின் அநுபோகத்தை நாம் கவனித்ததில் அவருக்கு முதலாவது பாவ உணர்ச்சி உண்டாயிற்று என்று கண்டோம். பாவத்தி

லிருந்து விடுதலையாக அவர் அநேக தவங்களைச் செய்து, தன் சுய நீதியான கிரியைகளினால் ஜீவனை வெல்லலாமென்றிருந்தார். வேதாகமத்தை வாசித்ததினாலும், தம்முடைய பலவீனத்தை உணர்ந்ததினாலும் தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று கண்டார். அவ்விதமாய் அவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிடைக்கும் பாவமன்னிப்பைப் பெற்று அவரையே தம்முடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ள ஏவப்பட்டார். அவர் ஜீவியகாலமெல்லாம் வேதாகமத்தைக் கருத்தோடு வாசித்து ஜெபஞ்செய்துவருவார். ஒருநாளில் மூன்றுமணிநேரம் கடவுளுக்கென்று செலவழிப்பார் என்று பார்த்தோம்.

இப்புஸ்தகத்தை வாசிப்பவர்கள் தாங்கள் செய்த பாவங்களுக்காகப் பரம்பிதாவாகிய தேவனிடத்தில் பாவமன்னிப்புத்தேட, அவர் இரக்கமாய் இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க்கொடுக்கும் ஈவைப் பெற்று, தங்களுக்கு விரோதமாய் வரும் எந்த கெட்ட காரியங்களையும் கவனியாமல் தாங்கள் செல்லவேண்டிய பாதையில் செல்லப் பரிசுத்த ஆவியின் உதவியை நாடோறும் தேடவேண்டும்.

படிப்பு.—சரீராப்பியாசம் இளைப்பாறுதல் முதலியவற்றால் சுகத்தைப் பேணிவருவதோடு ஒவ்வொருநாளும் சில மணிநேரம் தங்கள் அறிவை விர்த்திசெய்ய அல்லது தங்கள் தொழிலை உத்தமமாய்ச் செய்ய ஏதுக்களாயிருக்கும் புஸ்தகங்கள் முதலியவற்றைப் படிக்க வேண்டும். இந்தியாவின் மார்க்க சரித்திரத்தை நன்றாய்ப் படிக்க வேண்டும். இந்தியாவில் நடந்திருக்கும் மார்க்க மாறுதல்களை அறிய வேண்டும். தேசத்தின் பொது நன்மைக்காக நடக்கவேண்டிய சீர்திருத்தங்கள் இன்னதென்று அறியவேண்டும். இவைகளைப்பற்றி அநேக பிரயோஜனமான புஸ்தகங்கள் இருக்கின்றன.

ஸ்மைல்ஸ் என்பவர் எழுதிய புஸ்தகங்களை வாசிப்பது பிரயோஜனமாயிருக்கும். சீர்திருத்தக்காரர் உபதேசிகள் இவர்களுடைய சரித்திரங்களை வாசிப்பதினால் நன்மைசெய்ய ஏதுவிருக்கும். ஆல்பிரட், மகாபேதுரு, கொலம்பஸ், ஆர்னல்ட் பண்டிதர், டப் பண்டிதர், லிவிங்ஸ்டன், ஜோர்ஜ் மூர் என்பவர்கள் சரித்திரங்களை வாசிக்கவேண்டும்.

எங்கே தொடங்குகிறது.—சீர்திருத்தக்காரன் தன்னையே சீர்திருத்திக்கொள்ள வேண்டுமென்று கண்டோம். ஆனால் மற்றவர்களை எப்படி சீர்திருத்த ஆரம்பிக்கிறது என்று பார்ப்போம்.

இப்புஸ்தகத்தை வாசிக்கும் அநேகர் கலியாணம் செய்தவர்களாயிருப்பார்கள். அவர்கள் தங்கள் மனைவிகளில் ஆரம்பிக்கவேண்டும். இந்தியாவிலிருக்கும் பெண்கள் புத்தியீனரும் வீண்பக்திக்காரருமாயிருந்தாலும் சில நல்ல இலட்சணங்களையுடையவர்களாயிருக்



கிறார்கள். அவைகளைச் சரியானபடி படிப்பித்தால் அவர்கள் சீர்திருத்தத்திற்கு எதிர்த்து நிற்காமல் அதற்கு உதவிசெய்யும் பலத்த சிநேகிதராவார்கள். சிறுவயதுமுதல் அவர்கள் தப்பிதமானவழியில் போதிக்கப்படுவதினாலேதான் கெடுதி உண்டாகிறது. பெண்கள் விக்கிரகவணக்கத்தை விட்டு மெய்யான கடவுளை வணங்கச் செய்வதற்குமுன் அவர்களை அன்புடன் போதிக்கவேண்டியதவசியம்.

இதை வாசிக்கிறவர்களுக்குப் பிள்ளைகள் இருந்தால் அவர்களைப்பற்றியும் கவலைப்படவேண்டும். சொந்தம் சொந்தமாய் மற்ற மற்ற இனத்தாரையும், சிநேகிதரையும், தான் சொன்னால் கேட்கத்தக்க யாவரையும் சீர்திருத்தப் பிரயாசப்படவேண்டும்.

இவர்களை சீர்திருத்துவதற்குச் சில வழி வகைகளுண்டு.

1. முன்மாதிரி.—இதுதான் முதலாவதும் முக்கியமுமானது. இதில் லாவிடில் மற்றப் பிரயத்தனங்களெல்லாம் வீண். பேச்சிலே மாத்திரம் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று போதிக்கும் அநேகம் சீர்திருத்தக்காரரைப் பார்த்து "வைத்தியனே! உன்னைத்தானே குணமாக்கிக்கொள்" என்று சொல்லத்தகும்.

2. பேச்சு.—சிலர் சாதுரியப் பிரசங்க வரம்பெற்றிருக்கிறார்கள். லூதரைப்போல் மிகுந்த வைராக்கியத்தோடு பிரசங்கஞ்செய்யத்தகும் கல்விமான்களான சீர்திருத்தக்காரர் இந்தியாவில் எழும்புவார்கள் என்று நம்பலாம். அப்படிப்பட்டவர்கள் இத்தேசத்திற்கு அனந்த நன்மைபுரிவார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் எல்லாரும் பேசினால் உதவிசெய்யலாம். பிரசங்கிக்க அல்லது உபந்நியாசஞ் செய்யக்கூடாதவர்கள் தங்கள் சம்பாஷணைகளினால் சீர்திருத்தத்தை பரவச்செய்யலாம்.

3. எழுத்து அச்சு முதலியவை.—சிநேகிதருக்குக் கடிதம் எழுதிச் சீர்திருத்தத்தை பரவச்செய்யலாம். இவ்விதமாய் நாம் பேசி சீர்திருத்தக்கூடாத அநேகருக்கு நம்முடைய எழுத்தின்மூலமாய் நன்மை செய்யலாம்.

லூதர் பலத்த பிரசங்கிதான். ஆனால் அவர் புஸ்தகங்களினாலும் அவர் அச்சிட்ட தாள்களினாலும் சீர்திருத்தம் பரவிற்று. தாங்களே சுயமாய்ப் புஸ்தகங்கள் தாள்கள் முதலியவற்றை எழுதக்கூடாத அநேகர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வேறு பாஷைகளிலிருந்து நல்ல புஸ்தகங்களை மொழிபெயர்த்து உதவிசெய்யலாம்.

தாங்கள் சுயமாய் எழுதவாவது மொழி பெயர்க்கவாவது ஏலாதவர்கள், புஸ்தகங்களை மற்றவர்களுக்கு அனுப்பி அவைகளைப் பரவச் செய்யலாம். இப்படிப் பலவிடமும் பரவத்தக்க அநேக சிறு புஸ்தகங்களிருக்கின்றன.

லூதருடைய பாட்டுகள் மிகவும் அருமையானவைகளாய் இருந்தன. இந்தத்தேசத்தார் சங்கீதம் பாட்டு முதலியவற்றில் அதிக பிரியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் பாடும் சாதாரண இராகங்களில் அவர்களுக்கு விளங்கத்தக்கதாய்ச் சத்திய வாசகங்களைப் பாட்டாய் அமைத்து சத்தியத்தைப் பரவச்செய்யலாம்.

4. பணம்.—இதற்கு "யுத்தத்தின் நரம்பு" என்று பெயர். இதுவும் சீர்திருத்தத்திற்கு மிகவும் அவசியமானது. பிரசங்கங்கள் முதலிய புஸ்தகங்களை அச்சிடுவதற்கும் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதற்கும் பணம் வேண்டும். இந்தியாவிலும் உலகத்தின் மற்ற பாகங்களிலுமிருக்கும் சிறந்த மிஷன்களெல்லாம் எளியவர்களாலேயே அதிகமாய் ஆதரிக்கப்படுகின்றன. லூதரானவர்களுக்குள்ள தனவான்களும் அதிகமாய்ப் பணச்சகாயஞ் செய்வதுண்டு.

5. அனுதாபம்.—சீர்திருத்தக்காரரை இவ்விதமாய் அவர்கள் ஊழியத்தில் தைரியப்படுத்தலாம். அவர்களுக்கு அநேக எதிராளிகளும் வருத்தங்களுமிருப்பதால் மனமும் சோர்ந்துபோகக்கூடும். சிநேகிதர் சொல்லும் தயவான வார்த்தைகள் அவர்களுக்குப் பெரிய உதவியாயிருக்கும். கூட்டங்களுக்கும் விதவைகளின் விவாகங்களுக்கும் போவது சீர்திருத்தக்காரரை உற்சாகப்படுத்தும் ஓர் வழி. இக்காலத்திலும் அப்படிப்பட்ட விவாகங்களுக்குப் போகிறவர்கள் சாப்பாட்டு வேளைக்குமுன் எழுந்து வந்துவிடுகிறார்கள்.

6. சத்தியத்துக்கு உண்மையாயிருத்தல்.—இது அதிலும் சிறந்த விசேஷ லட்சணம். சீர்திருத்தஞ்செய்யவேண்டுமானால் இதிருக்கவேண்டும். இதை வாசிக்கிறவர்களெல்லாம் லூதர் சொன்ன விசேஷித்த வார்த்தைகளை நினைத்து அவைகளைத் தங்கள் சீவிய மொழியாய்க் கொண்டால் நலம்:—"இதோ இங்கே நிற்கிறேன், வேறுவிதமாய் ஒன்றுஞ் செய்ய என்னால் கூடாது, கர்த்தர் எனக்குத் துணை நிற்பாராக ஆமேன்."

(19681)

---

Printed by Thompson & Co., Madras—1909.